**DJL31 : இலக்கணம் 6 - தொல்காப்பியம் (பொருளியல் நீங்கலாக)**

**அலகு - 1** தொல்காப்பியம் - அகத்திணையியல் , புறத்திணையியல்

**அலகு - 2** தொல்காப்பியம் - களவியல், கற்பியல்

**அலகு - 3** தொல்காப்பியம் - செய்யுளியல்

**அலகு - 4** தொல்காப்பியம் - மெய்ப்பாட்டியல், உவமையியல்

**அலகு - 5** தொல்காப்பியம் - மரபியல்

**பாட நூல்**

தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணர் உரை

கழக வெளியீடு, சென்னை.

# அலகு - 1

## அகத்திணையியல்

தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம் என்ற நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று பெரும் பகுப்புடையது. எழுத்து பிறந்து ஒ்னறொடொன்று இணைந்து மொழியாகும் இயல்புகளையெல்லாம் கூறுவது எழுத்ததிகாரம்.

அடுத்தாற் போல இவ்வெழுத்துக்களால் சொல்லாகி, அச் சொற்கள் அமையும் பாகுபாடுகள், அவற்றின் பெயர் வகைகள், மொழிக்குள் அவை வருகின்றபோது பெறும் தன்மைகள் சொற்களை மொழியில் வழங்கும் மரபுகள் அவற்றின் வழுக்கள், அமைதிகள் இவற்றையெல்லாம் பேசுவது சொல்லதிகாரம் எனப்படும்.

இச்சொற்களெல்லாம் சேர்ந்து உணர்த்தும் பொருள்களைப் பற்றிப் பேசுவது பொருளதிகாரம் என்று அழைக்கப் பெறும், ஒன்பது இயல்களைக் கொண்ட இந்த இறுதிப் பகுதியாகிய பொருளதிகாரம் பற்றிய செய்திகளை இங்கு விரிவாகக் காணலாம்.

தொல்காப்பியம் என்ற பெரிய நூலிற்குள்ள மூன்று பகுதிகட்கும் பல உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளார்கள். அவ்றறுள் பொருளதிகாரம் என்ற பகுதிக்கு இளம்பூரணர் என்று அழைக்கப் பெறும் உரையாசிரியர் எழுதிய உரையைத் துணையாக வைத்துக் கொண்டு விளக்கப்படுகின்றது.

பொருளதிகாரத்துத் தொடக்கமாகிய அகத்திணையியலைக் கூறும்போது ஏழு திணைகளைக் குறிப்பிடுகின்றார். அவை இன்ப ஒழுக்கங்கள் எனப்படும். அவை ஏழு வகைகளாகப் பாகுபடும் என்பது அவர் கொள்கை.

**கைக்கிளை முலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப (அகத்திணை)**

கைக்கிளை என்பது ஒருவரிடம் மட்டும் நிகழும் காதலைக் குறிப்பதாகும். ஆண் பெண் என்ற இருவருக்குள் ஒருவர் உள்ளத்தில் மட்டும் காதல் உண்டாகி மற்றவர்க்கு அது இல்லாது போனால் அதனைப் பெருமையில்லாத மக்கள் உறவு என்றும், ஒருதலை வேட்கை, ஒருதலைக் காமம் என்றும் அழைப்பர். இது சிறுமைபற்றி வருவது அஃதாவது பெருமையற்றது. கைக்குடை என்றால் வெண்கொற்றக்குடை போன்று பெருமைக்குரியது அல்லாது கையில் வைத்திருக்கும் சிறுகுடையைக் குறிப்பது போன்று கைக்கிளையும் சிறுமை பற்றி வருவது. கை என்பதற்குப் பக்கம் என்றும் கிளை என்பதற்கு உறவு என்றும் பொருள், அவ்விரண்டும் சேர்ந்தால் ஒரு பக்கம் விளங்கும் உறவு என்றாகிச் சிறப்பில்லாத உறவாய்ப் போய்விடுகின்றது. என்றாலும் இதுவும் ஆண் பெண் என்ற இரு பாலரின் உள்ளத்து நிகழும் காம உணர்வு ஆதலால் இதனையும் திணை என்றார்.

அதன்பிறகு ஆண் பெண் என்ற இருபாலாரிடத்தும் அன்பால் ஒத்து விளங்கும் காம உணர்வினை அன்பின் ஐந்திணை என்று கூறுவர் அதன் பின் ஐந்திணை என்றும் ஐந்து

விதமான அன்பொத்த அகவொழுக்கங்களைக் குறிப்பதாலும். இவைவைந்தும் ஐந்து வகைப்பட்ட நிலத்திற்கு உரியவாகி ஐந்து ஒழுக்கங்களாகத் தனித்தனியாகப் பேசப்பெறும்.

### திணைப் பெயர் விளக்கம்

ஐந்திணையில் குறிஞ்சி என்பது மலையையும் மலைசார்ந்த நிலத்தையும் குறிக்கும். அப்பகுதியில் நிகழுகின்ற ஒழுக்கத்திற்குக் குறிஞ்சி என்று கூறுவர். இதற்குரிய ஒழுக்கம் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆகும்.

குறிஞ்சி நிலத்தை அடுத்துக் காடும் காடு சார்ந்த நிலமும் முல்லை என்று அழைப்பர். இந்த நிலத்திற்குரிய ஒழுக்கம் ஆற்றியிருத்தல் ஆற்றியிருத்தல் என்றால் தன்னைக் கூடிய தலைவன் பிரிந்த போது மீண்டும் அவன் வருகாறும் அப்பிரிவுத் துன்பத்தை வெளிக்காட்டாது தாங்கிக் கொண்டிருத்தலாகும்.

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்பர். இங்கு நிகழ்கின்ற ஒழுக்கம் தலைவனோடு தலைவி பிணங்குகின்ற ஊடல் ஒழுக்கமாகும்.

அதன்பிறகு உடலும் கடலைச் சார்ந்த பகுதியும் நெய்தல் என்று அழைக்கப்பெறும். இங்கு தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றுத்துணையும் ஆற்றி, ஆற்றாது அவலத்தினை வெளிப்படுத்தி அழுதலும் புலம்பலும் போன்ற நிகழ்ச்சியாகும்.

தம் இயல்பு கெட்டுக் கொடுமை செய்வனாவாக மாறி அமைந்த போது அதனைப் பாலை என்று அழைப்பர். இதில் நிகழ்கின்ற ஒழுக்கம் பிரிவாகும். இது தலைவன், தலைவியைப் பிரிவதைக் குறிக்கும்.

இவ்வாறு அன்பொடுபட்ட ஐந்து திணைகளைக் கூறியவர் கைக்கிளையைப் போலச் சிறப்பில்லாத பெருந்திணையாகிய ஏழாவது திணையையும் பேசுவர்.

பெருந்திணை என்பது அன்பின் ஐந்திணையில் கூறப்பெறினும் அன்பும் பண்பும் குறைந்து வருவதாகும். அன்பின் ஐந்திணைக்குரிய ஒத்த காமம், ஒத்தகுடி, ஒத்தபண்பு, ஒத்த செலவம், ஒத்த இளமை, ஒத்த அன்பு இவை இல்லாமல் காமத்தின் மிக்கும் குறைந்தும் வருவது பெருந்திணையாகும். அன்றியும் எட்டு வகை மணத்தில் அஃதாவது பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், ஆசுரம், இராக்கதம், பைசாசம், கந்தர்வம் என்பனவற்றில் முதல் நான்கும் இப்பெருந்திணைக்குரியன. இந்நான்கு மணங்களும், முனிவாப் அரசர் போன்ற மேன் மக்கள்மாட்டு நிகழ்வதால் பெருந்திணை என்று அழைக்கப் பெற்றது. அல்லாமலும் இப்பெருந்திணை வழக்கே உலகில் பெரும்பான்மையான வழக்காகப் பயின்று வருவதாலும் இது பெருந்திணை ஆயிற்று. பெருவாரியாக வருகின்ற கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் யாண்டும் நிலமில்லை. எங்கும் நிகழும்.

ஐந்திணையில் ஒருவனும் ஒருத்தியும் நுகரும் காமத்திற்குக் குலம், குணம், செலவம், ஒழுக்கம், இளமை, அன்பு இவை ஒருங்கு ஒத்து அமைந்த இன்பம் உண்டாகுமேயன்றி இவற்றிறும்

எது குறைந்தாலும் இன்பக் குறை நிகழும். கைக்கிளையோ ஒரு தலை வேட்கையுடையது. பெருந்திணையோ ஒவ்வாக் கூட்டமாய் இன்பம் தரும் அருமையுடையது. அதனால் தொல்காப்பியர் முப்பாற்பட்ட திணைகளிலும் காமம் பயனற்றது என்பதை உய்த்துணர வைக்கின்றார் என்பவர் இளம் பூரணர். இதனால்தான் திருவள்ளுவர் கூட,

**மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்**

**செவ்லி தலைப்படு வார் (குறள் 1289)**

என்று காம இன்பத்தின் அருமையைக் கூறுவர். நுட்பமாகத் தொல்காப்பியர் கொண்ட இன்ப நிலையாமைக் கொள்கையை இளம் பூரண அடிகள் இங்கு அருமையாக விளக்கிக் காட்டுகின்றார்.

தொல்காப்பியர் ஐந்திணையைப் பகுத்துக் கூறும் முறையைக் காண்போம்.

தொல்காப்பியர் அகத்திணை இயலைக் கூறும்போது நேரே அகவொழுக்கத்தைக் குறிப்பிடாது அவ்றிற்குரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பனவெல்லாம் கூறி, அ.்.தாவது களவு, கற்பு என்ற இரண்டு ஒழுக்கங்களையும் அவற்றிற்குத் துணையாக வருகின்ற கருவிப் பகுதிகளையும் இவ்வகத்திணை இயலில் கூறுகின்றார். நாம் அகத்திணை என்னும்போது நினைக்கின்ற ஐந்திணை ஒழுக்கங்கள் இவ்வகத்திணை இயலில் பெயரளவிலே பொதுவாகக் குறிக்கப் பெறுகின்றனவேயன்றி இவற்றின் கூறுபாடுகளெல்லாம் இந்த இயலுக்குப் பின்னே வருகின்ற களவியலிலும் கூறப்படுகின்றன.

எழுதிணைகளைக் குறிப்பிட்ட தொல்காப்பியர் கைக்கிளையையும், பெருந்திணையையும் இங்கு கூறாமல் நடுவில் நின்ற ஐந்து திணைகளைப்பற்றிப் பேசுகின்றார். ஐந்திணை என்றால் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பவற்றைக் குறிக்கும். ஆனால் தொல்காப்பியர் இந்த உலகம் நானிலம் என்ற பெயரில் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட செய்தியை,

**அவற்றுள்**

**நடுவண்ஐந்திணை நடுவண தொழியப்**

**படுதிரை வையம் பாத்திய பண்பே (2)**

என்று கூறுவர்

உலகம் நான்கு நிலமாக அமைந்ததேயன்றிப் பாலையோடு சேர்ந்து ஐந்து நிலமாக அமையவில்லை. தமிழகத்துக் குறிஞ்சி, முல்லை நிலங்கள் தம் நிலை கெட்டுத் திரிந்த திரிபே, பாலை என்று வழங்குவர். அதனால் பாலைக்குத் தனித்த நிலம் கூறவில்லை. என்றாலும் இப்பாலை நிலத்தையும் இதற்குரிய ஒழுக்கத்தையும் அதன் கூறுபாடுகளையும் மற்ற நிலங்களைப் ப்றிறக் கூறுவது போலவே கூறுகின்றனர். ‘நடுவணது’ என்பது இங்குப் பாலையைக் குறிக்கும்.

**முப்பொருள் விளக்கம்**

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்றனுள் இந்த உலகமும், உலகத்துப் பொருள்களும் அடங்கி விடுவதைக் கண்டு அவற்றைப் பேசுகின்றபோது அகத்திணைக்குத் துணையாகும் முறையில்,

**முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங்காலை முறை சிறந்தனவே**
**பாடலுட் பயின்றவை நாடுங்காலை (3)**

என்கின்றார்.

முதல் கரு உரி என்ற மூன்று பொருளும் ஒரு செய்யுட்கண் வரின் முதற் பொருளால் திணை கூறவாமென்றும், முதற்பொருள் ஒழிய ஏனைய இரண்டு வரின் கருப்பொருளால் திணையாகும் என்றும், உரிப்பொருள் ஒன்றுமே வரின் அவ் உரிப்பொருளால் திணை கூறலாமென்றும் உரையாசிரியர் கூறியுள்ளார்.

**முதற்பொருள்**

முதற்பொருள் என்றால் நிலத்தையும், பொழுதையும் சுட்டும் என்பதைத் தொல்காப்பியர்.

**முதல் எனப்படுவது நிலம்பொழுதிரண்டின்**
**இயல்பென மொழிப இயல் புணர்ந்தோரே (4)**

என்பர்.

நிலத்தைக் கூறும்போது நிலத்தோடு தொடர்புடைய தெய்வங்களைச் சார்த்தி

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே (5)**

என்று கூறுகின்றார்.

முல்லை நிலத்தை. ''மாயோன் மேய காடுரை உலகம்'' என்பர். காடும் காடு சார்ந்த முல்லை நிலமும் திருமாலாகிய மாயோன் விரும்பி வாழும் இடம் என்பர்.

குறிஞ்சி நிலமாகிய மயலயம் மலை சார்ந்த இடமும் முருகப்பிரான் விரும்பி வாழும் இடம் என்பர்.

"வேந்தன் மேய தீம்புனல் உலகம்" வயலும் வயலைச் சார்ந்த இடமுமாகிய மருத நிலம். வேந்தன் என்றழைக்கப்பெறும் இந்திரன் விரும்பி வாழும் இடம் என்று கூறுவர்.

"வருணன் மேய பெருமணல் உலகமும்" நெய்தல் இடமாகிய கடலும் கடலைச் சார்ந்த இடத்தையும் வருணன் விரும்பி வாழும் இடம் என்று கூறுவர்.

நிலங்கட்குத் தெய்வங்கள் குறிப்பிட்டதுபோல அந்தந்த நிலத்திற்குரிய ஒழுக்கங்கட்கு உரிய பெரும்பொழுதுகளையும் சிறுபொழுதுகளையும் குறிப்பிடுகின்றார்.

பெரும்பொழுது என்பது ஓராண்டின் ஆறுபகுதிகளாய கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் முதலாயின.

சிறுபொழுது என்பது ஒருநாளின் ஆறுபகுதியாய வைகறை, விடியல், ஏற்பாடு, நண்பகல், மாலை, யாமம் என்பன.

முல்லை நிலத்தில் நிகழ்கின்ற, தலைவன் பிரிந்த பின் ஆற்றியிருத்தலாகிய முல்லை ஒழுக்கத்திற்குக் கார்காலம் என்ற பெரும்பொழுதும் மாலைக்காலம் என்ற சிறுபொழுதும் உரியனவாகும் என்பர்.

**காரும் மாலையும் முல்லை (6)**

என்பது நூற்பா.

தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு ஒன்றிக்கும் குறிஞ்சி நிலத்தின் கண் நிகழும் குறிஞ்சி நிலத்தின் கண் நிகழும் குறிஞ்சியொழுக்கத்திற்குக் கூதிர் காலமும், முன்பனிக்காலமும் ஆகிய பெரும்பொழுதுகளும் யாமமாகிய சிறுபொழுதும் உரிய என்பர்.

**குறிஞ்சி, கூதிர், யாமம் என்மனார் புலவர் (7)**

என்றும்,

**பனிஎதிர் பருவமும் உரித்தென மொழிப (8)**

என்று கூறுவர்.

வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதநிலத்தின் தலைவனோடு தலைவி பிணங்கி ஊடு:தலும் அதன் நிமித்தமாகிய ஒழுக்கங்களும் உரியன. மருத ஒழுக்கத்திற்குப் பெரும்பொழுது கூறவில்லை. சிறுபொழுதாக வைகறையும் விடியற்காலமும் கூறியுள்ளார்.

**வைகறை விடியல் மருதம்** **(9)**

கடலும் கடல் சார்ந்த பகுதியுமாய நெய்தல் நிலத்தில் இரங்கலாகிய நெய்தல் ஒழுக்கத்திற்கு

**ஏற்பாடு, நெய்தலாதல் மெய்பெறத் தோன்றும்** **(10)**

என்கின்றார்.

பிரிவைக் குறிக்கும் பாலைத்திணைக்குப் பெரும்பொழுது வேனிலும் பின் பனியும் சிறுபொழுது நண்பகலும் ஆகும். இதனை

**நடுவு நிலைத் திணையே நண்பகல்வேனிலோடு**

**முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே** **(11)**

என்றும்

**பின்பனிதானும் உரித்தென மொழிப** **(12)**

என்றுமி கூறுவர்.

பாலைத்திணை பிரிவைக் குறிப்பது, அது தலைவன், தலைவியைப் பெற்றோரினின்று பிரித்துச் செல்வது, தலைவியைப் பிரிந்து பொருள் வயிற்பிரிவது ஆகிய இருவகைப்படும். இதனை

**இருவகைப்பிரிவும் நிலைபெறத் தோன்றலும்**

**உரியதாகும் என்மனார் புலவர்** **(13)**

என்கின்றார்.

இனி அடுத்துத் திணை மயங்குதலையும் நிலம் மயங்காமையையும் பற்றிப் பேசுகின்றார். ஒரு திணைக்குரிய முதற்பொருள் மற்ற ஒரு திணைக்குரிய முதற்பொருளோடு ஒன்றாக நிற்கலாம். ஒரு ஒழுக்கத்திற்குரிய நிலம் மற்றொரு ஒழுக்கத்திற்குரிய நிலமாக இணைந்து நிற்றல் இல்லை. ஆனால் காலம் மயங்கி வரும்.

**உரிப்பொருள் அல்லாத கருப்பொருள்கள் திணைக்குத்**

**திணை மயக்கல் உண்டு என்று,** **(14)**

**உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே** **(15)**

என்றார்.

அடுத்து உரிப்பொருளைச் சொல்கின்றபோது புணர்தல், பிரிதல் (இருத்தல்) இரங்கள், ஊடல் இவற்றின் நிமித்தங்களை முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்ற நிலங்கட்கு உரியவாகக் குறிப்பிடுகின்றார்.

ஐவகை உரிப்பொருளும் எல்லாத் திணைக்கும் பொதுவாக வரும். "கொண்டு தலைக்கழிதல்" பாலைத்திணைக்கும் "பிரிந்தவன் இரங்கல்" பெருந்திணைக்கும் வரும். தலைவன் தலைவியை உடன் கொண்டு சேரலும் உண்டு.

**கொண்டு தலைக் கழிதலும் பிரிந்தவரி ரங்கலும்**

**உண்டென மொழிப வோரிடத்தான (17)**

என்பர்.

இதன் பிறகு மைக்கிளைக்கு உரியவாகச் சில செய்திகளைக் கூறுகின்றார். அன்பின் ஐந்திணையும் தலைவர் தலைமகளைக் காணும் போது மனமகிழ்ச்சி பிறக்கின்ற காலத்திலும் அவள் குறிப்பை அறியும் காலத்திலும் கைக்கிளை ஒழுக்கமாகக் கருதப்படுமேயன்றிப் புணர்தல் ஒழுக்கமாகக் கருத முடியாது. காரணம் தலைவிமாட்டு இருவயின் ஒத்த காமக்குறிப்பு உறுதியாக வெளிப்படாமையே. இதனைக்

**கலந்த பொழுதும் காட்சியும் அன்ன (18)**

என்ற நூற்பாவால் குறிப்பர்.

**கருப்பொருள்**

அடுத்த நூற்பாவில் முன்னர் கூறிய முதற்பொருளை மீண்டும் ஐயம் நீக்குதற்குக் கூறிப் பின்னர் கருப்பொருள் கூறுகின்றார்.

**தெய்வம் உணர்வே மாமரம் புட்பறை**

**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**

**அவ்வகை பிறவும் கருவென மொழிப (19)**

என்று கருப்பொருளை அந்தந்த நிலத்திற்குரிய தெய்வங்கள், உணவு வகைகள், விலங்கு வகைகள், மர வகைகள், புள்ளின வகைகள், பறை வகைகள், தொழில் வகைகள், யாழ் வகைகள் என்பன போன்ற பிற பொருள்களையெல்லாம் கருப்பொருள் என்பர்.

இதனை,

**எந்நில மருங்கிற்பூவும் புள்ளும்**

**அந்நிலம் பொழுதோடு வாராவாயினும்**

**வந்த நிலத்தின் பயத்தவாகும் (20)**

இந்தக் கருப்பொருளில் கூறப்பெறாது கருப்பொருளாகப் பகுதி என்ற விதப்புக் கிளவியால் முதல் நூற்பாவில் (20) தழுவிச் சொன்ன மக்களை ஒவ்வொரு நிலத்திற்கும் இன்னின்னவாறு இன்னின்னார் உரிமையுடையவர் என்று கூறுகின்றார். (22) அவருள் குலத்தானும் தொழிலானும்

பெயர் பெறும் இரு திறத்து மக்களைக் குறிப்பிடுகின்றார். எல்லா நிலத்திற்கும் உரியவர்களைச் சுட்டாமல்.

**ஆயர்வேட்டுவர் ஆடுஉத்திணைப்பெயர்**

**ஆவயின் வரூஉம் கிழவரு முளரே** (21)

என்று கூறி அதன்கண் முல்லை நிலத்திற்குரிய நிரை மேய்த்து வாழும் ஆயரையும் வேட்டை செய்து வாழும் வேடுவரையும் சுட்டி அடுத்த நூற்பாவால்

**ஏனோர் மருங்கினும் எண்ணுங்காலை**

**ஆனாவகைய திணை நிலைப் பெயரே** (22)

என்று முல்லை நிலம் ஒழிந்த, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலங்குட்குரிய மக்களைப் பாகுபடுத்திக் கூறுதல் எல்லைப்படாது போகும் என்று கூறிவிட்டு மேற் செல்கின்றார் தொல்காப்பியர். ஆனால் உரை எழுதவந்த இளம்பூரண அடிகள் இலக்கிய மேற்கோள்களைக் காட்டி இன்னின்ன நிலத்திற்கு இன்னின்னார் பெயரானும் வினையாலும் குறிக்கபெறுவோர் என்று காட்டுகின்றனார்.

**குறிஞ்சிக்கு மக்கட்பெயர் - குறவன், குறத்தி**

**தலைமக்கட்பெயர் - மலைநாடன், வெற்பன்**

**பாலைக்கு மக்கட்பெயர் - எயினர், எயிற்றியர்**

**தலைமக்கட்பெயர் - ஊரன், மகிழ்நன்**

**மருதத்துக்கு மக்கட்பெயர் - களமர், கடையர், கடைசியர்**

**தலைமக்கட்பெயர் - உழவர், உழத்தியர்**

**நெய்தலுக்கு மக்கட்பெயர் - நுளையர், நுவைச்சியர்**

**தலைமக்கட்பெயர் - சேர்ப்பன், துறைவன், கொண்கன்** (23)

**அடியோர் பாங்கினும் வனைவலர் பாங்கிலும்**

**கடிவரை இலபுறத் தென்மனார் புலவர்** (24)

என்ற நூற்பாவால் கைக்கிளை ஒழுத்திற்கும் பெருந்திணை ஒழுக்கத்திற்கும் உரியவர்கள் குற்றவேல் செய்கின்ற ஏவலர்கள் ஆவர் என்கின்றார்.

**நன்றெென உணரார் மாட்டும்**

**சென்றே நிற்கும் பெரும் பேதைமைத்தே** (25)

என்பதால் குற்றேவல் செய்யும் வினைவலர்க்கு அன்றித் தலைமைகளுக்கு ஒரோ வழி பெருந்திணைக்கு உரியவராவர். அவரும் அறம் பொருள் இன்பங்கள் வழுவ மகளிரைக் காதல் கொள்வதும் மருவுவதும் செய்வராதலின் , இதை

**ஏவலர் மரபின் ஏனோரும் உரியர்**

**ஆகிய நிலைமை அவரும் அன்னர்** **(26)**

என்ற நூற்பாவால் கூறுகின்றார்.

இவ்வாறு முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்றவற்றையெல்லாம் கூறி, கைக்கியை முதலிய ஏழுதிணைகளையும் கூறி, தெய்வம் மக்கள் முதலாயினரையும் கூறி, அவை ஒன்றோடொன்று கலந்து நிற்கும் மயக்க நிலைகளையும் கூறி, முடித்துள்ளார்.

பிரிவு என்பது ஓதல் காரணமாகவும் பகை காரணமாகவும் தூது காரணமாகவும் பிரிவதைக் குறிக்கும்.

ஓதல், தூது என்ற இரண்டு பிரிவுகளும் தலைமைக்கட்கே உரிய ஒழுக்கம், ஒழுக்கத்தாலும், குணத்தாலும் செல்வத்தாலும் உயர்ந்தோராதலின் அவர்கட்கு உரியவை இவை. இவற்றை,

**ஓதல் பகையே தூதிவை பிரிவே** **(27)**

என்றும்

**ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன** **(28)**

என்றும் நூற்பா கூறும்.

பகை காரணமாகப் பிரிவது என்பது தன் பகைக்குத் தானே சேரலும் நட்புக்கொண்டார்க்குத் துணையாகச் சேரலும் வேந்தர்க்கு உரியது. இதைத்

**தானே சேரலும் தன்னோடு சிவணி**

**ஏனோர் சேரலும் வேந்தன் மேற்றே** **(29)**

என்ற நூற்பா கூறுகின்றது.

இங்குக் குறிப்பிட்ட மூவகைப் பிரிவு அல்லாமலவ் வருவனவற்றை அடுத்துக் கூறுகின்றார்.

**மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய**

**முல்லை முலாச் சொல்லிய முறையால்**

**பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்**

**இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே** **(30)**

நால்வகை நிலத்து மக்களும் தெய்வ வழிபாடு காரணமாகவும் பொருள் ஈட்டல் காரணமாகவும் பிரிவதுண்டு.

இவ்வாறு ஓதற்பிரிவு, தூதிற் பிரிவு பகைவயிற் பிரிவு, தெய்வவழி பாட்டுப்பிரிவு, அறம் நிறுத்தற்பிரிவு, பொருள்வயிற் பிரிவு என்ற ஆறனையும் கூறிப் பாலைத்திணையின் பிரிவு வகைகளையெல்லாம் பகுத்துரைக்கின்றார்.

இவை தவிர பரத்தையிற் பிரிவு என்ற ஒன்றும் உண்டு. இது அத்துணை சிறப்பின்மையாலும், அறங்காரணமாகவோ பொருள் காரணமாகவோ பிரிதலின்றிப் பிரிதலானும் அது கற்பியலில் கூறப்படும் என்பர் இளம்பூரணர்.

தலைமக்கள் எப்பிரிவாயினும் மகளிரோடு கடல் கடந்து பிரிவத்திலை. இதனை

**முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை** **(31)**

என்பர்.

இவ்வாறு மகளிர்க்கு ஒரு சிறப்பு விதி வகுத்தவர் தொடர்ந்து ஏழு திணையுள்ளும் வருகின்ற மகளிர் காமம் காரணமாக மடல் ஏறி மணம் கொள்ளும் மரபும் இல்லை என்கின்றார். ஒரு தலைவன் தான் காதலித்த தலைவியை அடைவதற்கு அவளின் உடன்பாடு இருந்தாலும் பெற்றோர் முதலியோரால் தடை நிகழ்ந்த வழி அவன் மடல் ஏறுான். மடல் ஏறுதல் என்பது தான் காதலித்த காதலியின் வடிவத்தைப் படமாக வரைந்து அதன்கண் அவள் பெயரோடு தன் பெயரையும் இணைத்து எழுதிப் பனை மடலால் அமைத்த குதிரையில் இவர்ந்து ஊர் சுற்றி வருதலாகும். இவையெல்லாம் கைக்கிளை பெருந்திணைகளின்பாற்படும் செய்திகள். இதனை,

**எத்துணை மருங்கினும் மகடூஉ மடல் மேற்**

**பொற்புடை நெறிமை இன்மையான** **(32)**

என்பர் தொல்காப்பியர்.

**நற்றாய் கூற்று**

மகளிர் மணத்தடை நிகழும்போது மடல் ஏறி மணங்கொள்ளும் மரபில்லை என்று கூறி அடுத்து உடன் போக்கின் கண் நற்றாய் கூறும் கூற்றுக்கள் குறித்துக் கூறுகின்றார்.

**தன்னும் அவனும் அவளும் சுட்டி**

**மன்னும் நிமித்தம் மொழிப் பொருள் தெய்வம்**

**நன்மை தீமை அச்சம் சார்தலென்று**

**அன்னபிறவும் அவற்றோடு தொகைஇ**

**மன்னிய கால மூன்றோடு விளக்கித்**

**தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்**

**போகிய திறத்து நற்றாய் புலம்பலும்**

**ஆகிய கிளவி அவ்வழி உரிய (33)**

என்கின்றார்.

நற்றாய் தனக்குப் பல்லி சொன்னது, நிமித்தமாகக் கேட்டது. தெய்வம் இவர்ந்தோர் கூறிய குறிச்சொல், இவற்றைத் தன் மகள் உடன் போக்கோடு சார்த்தி நல்லவாகவும் அல்லவாகவும் கொள்ளுதலும் உண்டு. நல்லவாகக் கொள்ளுதல் அவர்கள் மீண்டும் தன்னகம் புகுதற்கும் அல்லவாகக் கொள்ளுதல் தலைவன் அவளை உடன் கொண்டே செல்லுவதற்கும் என்று நற்றாய் கூற்று நிகழ்தற்கு உரிய இடமென்பர்.

தெய்வக்குறி கேட்டபோது தலைவன் தலைவியற்கும் உளதாகும் நன்மையையும் தீமையையும் எண்ணுதல் உண்டு. தீமையாயின அஞ்சுதலும் மூன்று காலத்திற்கும் இவற்றையெல்லாம் சார்த்திச் சார்த்திக் கையுறுதலும் நற்றாய்க்குக் கூற்று நிகழும் இடங்கள். இவற்றோடு தோழியிடத்தும் கண்டோர் இடத்தும் நற்றாய்க்குக் கூற்று நிகழ்வதுண்டு.

இவ்வாறெல்லாம் தன்கண் பேதையாயிருந்த தன் மகள் இப்பொழுது முதுக்குறைந்தவளான (அறிவு வயப்பெற்ற) நிலைமை நோக்கிக் கூற்று நிகழ்வதுண்டு.

**செவிலி கூற்று**

இத்தகைய தாயர் போலவே செவிலித்தாயார் உடன்போக்கு மேற்கொண்ட தலைவியைத் தேடி அடுத்துள்ள பெரிய ஊரகத்துச் சேரலும், சுரத்தின் கண் அஃதாவது சென்ற காட்டு வழியிடைச் சென்று தேடுதலும், ஆண்டெல்லாம் கூற்று நிகழ்தலுமுண்டு.

**ஏமப் பேரூர்ச் சேரியுஞ் சுரத்தும்**

**மேதா செல்லுந் தாயரும் உளரே**

**அயலோர் ஆயினும் அகற்சி மேற்றே (34)**

என்பர் தொல்காப்பியர்.

இத்தாயரைப் போலவே தோழக்கும் கூற்று நிகழும் இடங்கள் உண்டு. தலைவன் தலைவியைக் களவிடை உடன்போக்கு மேற்கொள்ளாவிடின் (கொண்டு தலைக்கழியாவிடின்) தலைவிக்கு வரும் நோய் நிலையை எடுத்துக் கூறுமிடத்தும் தலைவனிடம் தலைவியை 'உடன் கொண்டு போ' என்று கூறுமிடத்தும் தோழிக்குக் கூற்று நிகழும்.

அதுகேட்ட தலைவன் தலைவியுடன் போதற்கு ஒருப்பட்டமையைத் தலைமைகட்குக் கூறி அவளை அவனுடன் விடுவிக்கும்போது கூற்று நிகழும் . தலைவி சுற்றம் நீங்குதலால் தமக்குற்ற வருத்தத்தை நீக்கக் கூறுமிடத்திலும் அவளது பின் சென்று முட்டதற்கு நினைந்த தாபயரது நிலைமை அறிந்து அதனால் துணிவு இதுவெனக் கூறிய காலத்தும், தாயரை மீட்டுக் கொள்ளும் இடத்தும், தோழக்குக் கூற்று நிகழும். தலைவனைப் பிரிந்த தலைவி வருந்தியபோது தலைமகன் பிரிவுக் காலத்து மொழிந்து கூறி ஆற்றுவிக்குமிடத்தும் தோழி கூற்று நிகழும் என்றும் கூறுகின்றார். இதனை,

**தலைவரும் விழும் நிலைஎடுத் துரைப்பினும்**

**போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்**

**நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்**

**வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர்ச் சுட்டித்**

**தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்**

**நோய்மிகப் பெருகித்தன் நெஞ்சுழகலுழ்ந் தோளை**

**அழிந்தது களைஇய ஒழிந்தது கூறி**

**வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோடு**

**என்று இவையெல்லாம் இயல்புற நாடின் (35)**

என்பர் தொல்காப்பியர்.

**கண்டோர் கூற்று**

அடுத்து கண்டோர் கூற்று நிகழும் இடம் கூறுகின்றார்.

தலைவனும் தலைவியும் புறப்பட்ட காலம், இயங்கும் நெறி, அதில் விலங்கு கள்வர் முதலியவற்றால் வரும் துன்பம் இவற்றையெல்லாம் எடுத்துக் காட்டி அவரிடம் நல்லதும் அல்லதுமாய கூற்றுகளை நிகழ்த்துவர். பின்னர் இடைச்சுரத்து நின்ற தலைவன் தலைவிக்கு அவர்கள் செல்லும் நெறிக்கண் அண்மையாக உள்ள ஊரையும் சேய்மையாக உள்ள ஊரையும் கூறும்போதெல்லாம் கண்டோர் கூற்று நிகழும்.

கண்டோர்க்குத் தலைவனும் தலைவியாகக் கூடிச் செல்வது கண்டு அவர்பால் இரக்கமுற்றுத் தாமும் அவரோடு சில கூறி அவர்களை அவர் போக்கிற்குச் செல்ல விடுக்கும் இடத்தும் கூற்று நிகழும். சில காலத்துத் தாயினுடைய நிலையைக் கண்டு அவர்கள் போகக் கருதிய இடத்துக்குப் போகாமல் தடுத்தலும், சிலபோது போக விடுத்தும் செய்யும்போது கூற்று நிகழும். இதனைப்

**பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி**

**வழுவின் ஆகிய குற்றம் சாட்டலும்,**

**ஊரது சார்வும் செல்லுந் தேயமும்**

**ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்,**

**புணர்ந்தோர் பாங்கின் புணர்ந்த நெஞ்சமொடு**

**அழந்தெதிர் கூறி விடுப்பினும், ஆங்குஅத்**

**தாய்நிலை கண்டு தடுப்பினும், விடுப்பினும்,**

**சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்,**

கண்டோர் மொழிதல் கண்டது என்ப (36)

என்று நூற்ப ாநற்றாயின் கூற்று நிகழும் இடங்களைக் கூறும்.

**தலைவன் கூற்று**

இனி தலைவனுக்குக் கூற்று நிகழும் இடங்களைக் கூறுகின்றார். தலைவனும் தலைவியும் களவு மேற்கொண்டு ஒழுகிய பின்னர் களவு வெளிப்பட்ட போது அவர்கள் மணங்கொள்வதற்கு உடன்படாத தமரிடத்திலும், களவு வெளிப்பட்டபின் தாய் இற்செறிப்பத் தலைவனோடு கலந்துரையாட வாய்ப்பற்ற காலத்தும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

தலைவியைத் தலைவன் உடன்கொண்டு செல்லுதற்குத் தடையாக நிற்கும் காட்டினது கொடுமை கூறித் தலைவியை இல்லின் கண் எடுத்துச் செல்லும்போது தலைவனுக்குக் கூற்று நிகழும்.

தலைமகனைக் களவிடை உடன்கொண்டு செல்லுகின்ற இடைச்சுரத்து அவளுக்கு உற்றவர்கள் எய்தி அவளை மீட்டுக் கொண்டு பெயர்வதும் உண்டாதலால் அப்பெயர்ச்சியை நினைந்த தலைவன் தலைமகளிடத்துடம் தோழியிடத்தும் கூற்று (பேச்சு) நிகழ்த்துவான்.

கற்புடைப் பொருள்வயிற் பிரியக் கருதிய காலத்து யாக்கை நிலையாது, இளமை நிலையாது என்பதை உணராத தலைவி தலைவனைப் பொருள்வயிற் பிரியாது தகைக்கக் கருதியபோது, அவன் தான் மேற்கொண்ட இல்லறத்தில் "நாளது சின்மையும் இளமையது அருமையும்" காரணம் காட்டி வற்புறுத்துழி வன்புரை என்னும் கூற்று நிகழும்.

ஆடவர்க்கு வினை உயிர் போன்றது என்பதை உணராமலும் தம்முடைய தகுதியை நினைக்காமலும் தலைவனைப் பொருள் வயிற் பிரியாது தகைக்கக் கருதியபோது தலைவன் அவற்றையே காரணமாக்கிப் பிரிவான். தலைவன் பொருள் இல்லாததால் இழிவையும் பொருள் அகத்தையும், பெருமையையும் அவன்பால் தான்கொண்ட தன் அன்பின் உரிமையையும் அவளை அகல்வதால் தனக்கு வரும் கையறவினையும் கூறித் தலைவன் கூற்று நிகழ்த்துவான்.

ஓதல், படைக்கலம் பயிறல், சிற்ப்க்கலை கற்றல், அறக் கூறுகளைப் பயிறல் ஆய காணரங்கள் பற்றித் தலைவன் பிரியக் கருதிக் கூற்று நிகழ்ந்துவான். தலைவன் தலைவியைப் பிரிந்து ஈட்டும் புகழையும் அவளைப் பிரியாதிருந்தால் வருகின்ற இழிவையும் கூறித் தான் விருந்துணையும் ஆற்றி இருக்க வேண்டும் என்று கூறும் போதெல்லாம் அவனுக்குக் கூற்று நிகழும்.

இருபெரு வேந்தர்கள் ஒருவரோடொருவர் பகைத்த காலத்து அவர்களைச் சந்து செய்வதற்குத் தூதாகச் செல்லும் தலைவன்பால் கூற்று நிகழும். தனக்கு நட்பாகித் தோன்றுவரிடத்தும் அது வேந்தனுக்கு உற்றுழி உதவப்போகும் போது கூற்று நிகழும்.

தலைவன் பகைவருடைய ஆற்றலை வியக்கும் போதும் பாசறையின் கண் தனிமையிலிருக்கும் போதும் கூற்று நிகழும்.

தலைவன் தூது சென்ற போதும், வேந்தற்கு உற்றுழி உதவிய காலத்தும் பகை தணித்தற்குரிய வினை செய்த ஞான்றும் பாசறைக் கண் கூற்று நிகழும்.

தலைவன் வினை முடிந்து மீளும்போது தன் தேர்ப்பாகனோடு தலைவியை நினைந்து கூற்று நிகழ்த்துவான். அக்கூற்றில் சில அவன் நெஞ்சிற்கே கூறுவனவாகவும் அமைவதுண்டு.

தலைவன் நாடு காத்தல், எல்லை காத்தல் போன் தொழில்புரிகின்ற காலத்தும் ஆண்டுக்கூற்று நிகழும்.

தலைவன் பரத்தையிற் பிரிந்த போது பிரியப்பட்ட 'தலைமகளை'க் குறுகி இரந்தும், தெரிவித்தும் பேசுனிற் பேச்சிலும் கூற்று நிகழும் இதனை,

**ஒன்றாத் தமரினும் பருவத்துஞ்சுரத்தும்**
**ஒன்றிய தோழியொடு வலிப்பினும் விடுப்பினும்**
**இடைச்சுர மருங்கில் அவள்தமர் எய்திக்**
**கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட**
**அபாற்பட்ட ஒரு திறத்தானும்**
**நாளது சின்மையும் இளமைய தமைதியம்**
**இன்மைய திளிவும் உடைமைய துயர்ச்சியும்**
**அன்பின தகலமும் அகற்சிய தருமையும்**
**ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்**
**வாயினும் கையினும் வகுத்த பக்கமோடு**
**ஊதியம் கருதிய ஒருதிறத் தானும்**
**புகழும் மானமும் எடுத்துவற் புறுத்தலும்**
**தூதிடையிட்ட வகையி னானும்**
**ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்**
**மூன்றன் பகுதியும் மண்டிலத் தருமையும்**
**தோன்றல் சகான்ற மாற்றார் மேன்மையும்**
**பாசறைப் புலம்பலும் முடிந்த காலத்துப்**
**பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்**
**காவற் பாங்கின் ஆங்கோர் பக்கமும்**
**பரத்தையின் அகற்சியிற் பிரிந்தோட் குறுகி**
**இரத்தலும் தெளித்தலும் எனஇரு வகையோடு**

**உரைத்திற நாட்டம் கிழவோன் மேன (37)**

என்பர்.

இங்குப் பிரிவின்கண் கூற்று நிகழ்தற்குரிய நற்றாயும் செவிலியும் தோழியம், கண்டோரும் தலைமகனும் நிகழ்த்தும் கூற்று நிகழ் இடங்களையெல்லாம் விரித்துரைத்து முடிக்கின்றார்.

இதுகாறும் தொல்காப்பியர் களவு, கற்பு ஆகிய இருபாற் கைக் கோள்களிலும் கூற்று நிகழ்த்தாதிருந்த தலைமகள், பாங்கன், பார்ப்பார், பாணர், கூத்தர், உழையோர் இவர்கள் வழிப் பிறக்கும் கூற்றுகளைக் குறிப்பிட்டதைக் கண்டோம்.

தலைமகள் கூற்று தனிச் சூத்திரமாக இல்லை என்றாலும் அது ஒன்று இருந்திருக்க வேண்டும் என்று உண்த்தணர்ந்து கூறுகிறார் உரையாசிரியர்.

தலைவன் தலைவியைப் பிரியக் கருதுகின்ற போதும் களவு கற்பு என்ற இரண்டு நிலைகளிலும் தலைவிக்குக் கூற்று நிகழும். தலைவன் தன் பிரிவைத் தோழிவழி உணர்திய காலை தலைமகட்குக் கூற்று நிகழும்.

தலைவன் பிரிகின்றான் என்றபோது கற்பில் தலைவி தானும் உடன் போவதாகக் கூறும் காலத்தும் தலைவிக்குக் கூற்று நிகழும்.

உடன்போக்கு மேற்கொண்ட காலத்து ஆயத்தாரோடு தலைவி கூற்று நிகழும்.

உடன்போக்குக் காலத்து இடைமறித்த சுற்றத்தாரிடமும் முணிடபோது ஆயத்தாரிடமும் கூற்று நிகழும்.

தலைவன் பிரிவுணர்த்திய காலத்து அவன் பிரிவை ஆற்றாது கூறும் போதும், தோழி ஆற்றாள் எனக் கவன்ற காலத்தும் தலைவியிடம் கூற்று நிகழும்.

தலைவன் குறித்த பருவத்து வராத காலத்துமன் தெய்வம் பரவும் போதும் அவட்குக் கூற்று நிகழும்.

தலைவன் தான் மேற்கொண்ட செலவின் இன்றியமையாமையைக் கூறும் காலத்து அதற்கு எதிரழிந்து கூறுகின்றபோது தலைவிக்குக் கூற்று நிகழும்.

அடுத்து தலைவன் பிரியக் கருதி அப்பிரிவு உணர்த்தமாட்டாமல் குறிப்பாக ஒழுகுகின்ற ஒழுக்கத்தை வேறுபாடாகக் கருதிய தலைமகள் அது நினையுங்கால் தலைவிக்கும் கூற்று நிகழும். அங்ஙனமே முன்னொரு ஞான்று நிகழந்த நிகழ்ச்சியையோ ஓர் ஊறுபாட்டையோ கூறித் தலைவனைப் பிரியா வகை தடுக்கின்ற காலத்தும் அவன்பால் கூற்று நிகழும். இவையெல்லாம் தலைவி கூற்று நிகழத்தற்குக் காரணமாக அமைவனவாம் என்பதை,

**எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே (38)**

என்று நூற்பாவிற்கு உரை கூறும்போது இளம்பூரண அடிகள் உணர்ந்து கூறுகின்றார்.

அடுத்து இக்கூற்று நிகழ் இடங்களைத் திணைப் பாகுபாட்டின் காணும் பகுத்துச் சுட்டுவர். பாலைத் திணைக்குரியனவாய் ஓதப் பற தலைமகன் பாசறைக் கண்ணிருந்து புலம்புதலும், வினை முடிந்து மீளும் தலைவன் தேர்பாகற்குக் கூறுதலும், முல்லைத் திணைக்குரிய காடும் காடு சார்ந்த இடமாகிய முதற் பொருளும் மாயோன், ஆவினம், குழல் போன்ற கருப்பொருளும் மரபு நெறி திரியாது விரவி வரும் என்பதை,

**நிகழந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்**

**நிகழ்ந்தது கூறிநிலையலும் திணையே**

**மரபு நிலை திரியா மாட்சிய ஆகி**

**விரவும் பொருளும் பிறவும் என்ப** **(39)**

என்ற நூற்பாக்களால் அடக்கிக் கூறுகின்றார்.

இத்தோடு பிரிவுப் பகுதியாகிய பாலைத்திணைக்குரிய எல்லாச் செய்திகளையும் கூறி முடிக்கின்றார்.

இனிமேல் அகத்திணைப் பகுதியைப் பாடல் சான்ற புலனெறி வழக்கம் செய்கின்றபோது வருகின்ற செய்யுள் அமைப்பு, உவமைக் குறு, மரபுநிலை போன்றவற்றைக் கூறி இவ்வியலை முடிப்பர்.

அதில் உள்ளுறை உவமம் பற்றி இங்கு விரிவாகப் பேசுகின்றார்.

தொல்காப்பியர் பின்னே உவமயியல் என்ற பகுதியில் உவமையின் பகுதிகளையெல்லாம் விரித்துக் கூறும்போது அந்த உவமத்தோடு தொடர்புடைய உள்ளுறை உவமத்தை அவ்விடத்தில் கூறாமல் அகத்திணையியலில் கூறுவானேன் என்ற வினா எழுவது யாவர்க்கம் இயல்பு.

உவமம் என்பது புலப்படாத ஒன்றைப் புலப்பட்ட ஒன்றால் விளக்கிக் காட்டுவது. நாட்டகத்து நம்மோடு ஒன்றால் விளக்கிக் காட்டுவது, நாட்டகத்து நம்மோடு வாழும் ‘ஆவினைப் போலக் காட்டகத்து வாழும் ‘ஆமா’ இருக்கும்’ என்று கூறினால் காட்டில் ‘ ‘ஆமா’ வைக் காண்பவன் நாட்டகத்துக் கண்ட ஆவை நினைவு கூர்ந்து விளங்கிக் கொள்ள முடியும். இவ்வாறு காணாப் பொருளைக் கண்ட பொருளால் விளக்க உவமம் பயன்படும்.

இந்த உவம வகையெல்லாம் மெய்ப்பாட்டோடு தொடர்புடையது. மெய்பாபடு பெரும்பாலும் அகத்திணைகள் ஏழோடு தொடர்புடையது. அதனால் அகத்திணைக்குத் தொடர்புடைய உள்ளுறை உவமத்தை அகத்திணையிலேயே கூறிவிடுகின்றார். இந்த உள்ளுறை உவமம் திணைக் கருப்பொருள்களோடு தொடர்புடையது. அதில் உள்ளுறை உவமம் அகத்துரைக்கே சிறந்து வரும்.

பொதுவாக உவமம் கூறும்போது எப்பொருளையும் விளக்கக் கருதி உவமிக்கலாம் எனினும் இழிந்த பொருள் கூடாது. அவ்வாறு உவமை கூறும்போது உள்ளுறை உவமத்தில் தெய்வத்தை அமைத்துக் கூறல் ஆகாது.

உள்ளுறை என்றால் ஒருவர் மனத்தில் கூறப்புகுந்த செய்தியை உணர்த்தற்குக் கருப் பொருள் களைத் துணையாக்கி அக்கருப் பொருள்களைப் பற்றிக் கூறுமுகத்தான் தாம் கருதிய பொருளை அதோடு ஒத்து முடியுமாறு உவமை கூறுவதாகும். உவம இயலில் வினையுவமம், பயனுவமம், உருவுவமம், வண்ணவுவமம் என்று நான்கு அடிப்படையில் அமைத்து விளக்குவது. உள்ளுறையுவமம் அகப்பொருளை உவமையாக அமைத்துக் கூறுவதால் அவற்றின் வேறாயிற்று. அதனால் உள்ளுறைவுவமம் அகத்திணையியலில் இடம் பெற்றது.

"வேறு சுரும்புகள் (வண்டுகள்) மூசாத தாமரையில் வாழ்ந்து அதன் கண் பிறக்கம் செவ்விய முழுத்தேனையுண்டு மகிழ்ந்திருக்க வண்டு அத்தாமரையின் தேனால் மனநிறைவு கொள்ளாது. பல மலர்களில் மூசும் பலதிறச் சுரும்புக்ள மொய்த்துத் தேன்குறையோடு செவ்வி குறையும் உடைய காவிமலர்களின் தேனை விரும்பி நாடும்" என்று வண்டினை வருணித்து உவமை கூறினால் இதில் பரத்தமை மேற்கொள்ளும் அடவர்கள் வண்டு போல்வார் என்று கூறுவது குறிப்பாக உள்ளே உறைந்த கருத்தாக இருக்கிறதே தவிர வெளிப்படைழயான உவமைப்பால் விறங்கவில்லை.

இங்கு காவிமலரும், தாமரை மலரும் பேசப்பெற்றுள்ளன. காவி மலர் பல திறப்பட்ட வண்டுகள் மொய்ப்பதற்கு இடம் தரும். ஆனால் தாமரையோ அவ்வாறின்றி ஒரு வகை வண்டே மொய்த்ததற்குரியதாகும். அதோடு செவ்விய நிறைந்த தேனைத் தரவல்லது. இருந்தாலும் தாமரையில் வாழ்ந்து தேனுண்டு மகிழ வேண்டிய வண்டு இதில் நிறைவு கொள்ளாது. பல வண்டு மொய்த்த காவிமலரை நாடிப் பல வண்டு மொய்த்துக் கழித்த தேனை நுகரக் கருதுகின்றது. இந்தக் கரும்புகளின் இயல்பினை உடையவர் ஆடவர் என்று நேரே கூறாமல் தாமரை, காவி, வண்டு என்று மருதத்திணைக் கருப்பொருள் துணையாகச் சொல்ல இந்த கருத்தை உள்ளுறுத்து வண்டோடு ஆடவர்க்குப் பொருள் ஒத்து கூடியமாறு அமைத்திருப்பதை,

**உள்ளுறுத்து இதனொடு ஒத்துப் பொருள் முடிகென**

**உள்ளுறுத்து இறுவது உள்ளுறை உவமம்** **(40)**

என்றார்.

இந்த நூற்பாவை விளக்க வேண்டி இளம்பூரண அடிகள் ஓர் எடுத்துக் காட்டைத் தருகின்றார்.

**வெறிகொள் இனச் சுரும்பு மேய்ந்ததோர் காவிக்**

**குறைபடுதேன் வேட்டுங்குறுகும் - நிறைமதுச்சேர்ந்**

**துண்டாடுந் தன் முகத்தே செவ்வி உடையதோர்**

**வண்டா மரை பிரிந்த வண்டு** **(41)**

என்று ஒரு வெண்பாவை எடுத்துக் காட்டுவர்.

இதனை மேலும் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டின் ஒரு நிகழ்ச்சியைக் கூறி விளக்கலாம்.

நளனைப் பிரிந்த தமயந்தி தன் தந்தை இல்லத்தில் இருந்தபோது, தனக்கு இரண்டாவது சுயம்பரமொன்று பொய்யாக அமைத்து உருமாறி மடையனாகப் பணிபுரிவோன் நளன் என்பதைப் பலவாறு அறிந்து, அவன் வேந்தன் வருமாறு நளனைத் தவிர வேறு யாரும் தேரோட்ட முடியாத காலக்குறுக்கத்தின் சுயம்வர ஓலையொன்றை அனுப்ப அது பெற்ற அவ்வேந்தன் நளன் உதவியால் தமயந்தியைச் சுயம்வரத்து வழி மணக்க வந்தபோது, இவனிடம் தமயந்தி சென்று பேசுவதாக ஒரு பாட்டு; இது உள்ளுறை அமைந்தது. அந்த மன்னன் மணம் புரிந்து மனைவியோடு இன்பமாக வாழ்பவன். தமயந்தியோ மணங்கொண்டு மகப்பயந்தவள். இழந்த தன் கணவனைப் பெற மறுமணம் கொள்ளப் பொய்ச் சுயம்வரம் கூட்டியுள்ளாள். அவளை மனைவியாகப் பெற வந்துள்ளான் வேந்தன். இவ்வாறு அவன் தன் மனைவியோடு வாழக்கைத் தவித்ததோடு பிறன் மனைவியை நயந்து வந்தது முறையாகுமோ என்று கேட்பது போல அவனிடம் பேசுகிறாள்.

இங்கு அவன் மனைவியைத் தாமரையாகவும் தமயந்தியை நெய்தல் மலராகவும் அவனை வண்டாகவும் அமைத்து உள்ளுறையாகப் புகழேந்திப் புலவர்.

**கன்னி நறுந்தேறல் மாந்திக் கமலத்தில்**

**துன்னித் துயின்ற வரிவண்டு - பின்னையும் போய்**

**நெய்தற் கவாவும் நெடுநாட நீயிவண்**

**எய்தற் கவாவியவா றென் (42)**

என்று பாடுவர். இது கொண்டு உள்ளுறை உவமத்தைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். இளம்பூரணர் மேற்காட்டியப ாட்டைத்தான் வேறு வகையில் புகழேந்தி ஒரு நிகழ்ச்சியோடு சார்த்தி விளக்கியுள்ளார்.

**கைக்கிளை**

இனிமேல் தொல்காப்பியர் கைக்கிறை என்ற ஒழுக்கத்தைப்பற்றி விளக்குகிறார். கைக்கிளை என்ற ஒழுக்கம் பாலைத்திணைக்குரியது. குறிஞ்சியொழுக்கத்திற்குரிய கைக்கிளையும் உண்டு. அது காமஞ் சான்ற தலைவி மாட்டு நிகழ்வது. இது அவ்வாறில்லாமல் காம நுகர்ச்சிக்குரிய செவ்வி பெறாத இளைய பெண்ணிடம் ஒருவன் அணுகி அவனுற்ற காம நோயைப் போக்கிக் கொள்ளுதற்குரிய வாய்ப்பில்லாத நிலையில் அவ்விளையோளைப் புகழ்தலும், பழித்தலும் ஆகிய இரு வேறுப்பட்ட மொழிகளைப் பிதற்றுவான். அப்பிதற்றலுள் தன்னோடும் அவளோடும் உறவுண்டாயது போலத் தருக்கி இணைத்துப் பேசி அம்மொழிகட்கு அவள்மாட்டு ஒரு மறுமொழி பெறாது வறிதே சில சொல்லிச் சொல்லி இன்புறுதலாகிய ஒருபால் உறவுக் குறிப்பினையே கைக்கிளை என்பர். இதனைக்

**காமஞ் சாலா இளமை யோள்வயின்**

**ஏமஞ் சாலா இடும்பை எய்தி**

**நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்**

**தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்**

**சொல் எதிர் பெறா அன் சொல்லி இன்புறல்**

**புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே (43)**

என்பர்.

**பெருந்திணை**

இவ்வாறு கைக்கிளையின் இயல்புணர்த்தியவர் அடுத்துப் பெருந்திணை பற்றிப் பேசுகின்றனர்.

**ஏறிய மடல்திறன் இளமை தீர்திறம்**

**தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்**

**மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்**

**செப்பிய நான்கம் பெருந்திணைக் குறிப்பே (44)**

என்பது பெருந்திணை நூற்பா.

இத்திணையிலவ் தலைவன் தலைவியைக் களவில் பெற்று அவளை மணந்து பெற முடியாத காலத்து அவளைப் பெறுதற்கு மடலேறுவதாகக் கூறுதலும், மடலேறி மணங்கொள்ளலும் அடங்கும்.

தலைமகன் காமத்திற்குரிய இளமை கழந்தபின் இளையாள்பால் காமம் கொள்ளக் கருதலும் தனக்கு ஆண்டாள் மிக்காளைக் காமுறுதலும், இருபாலரும் இளமை கெட்டபின் தெளிவு பெற்று அறுத்து வழி மனம் போக்காமல் காமமே நினைந்து அதன் வலிமையில் தலைப்பட்டு வாழ்வதும் உண்டு. இவையெல்லாம் பெருந்திணையாகும்.

இவற்றோடு மிக்க காமத்து மிடலை விளக்குவர். மிடல் என்பது காமத்தில் வலிமை. அது இருபாலாரிடையும் நின்று ஓரையும் நாளும் உள்ளிட்டு நெறிப்பட்டு நிற்கம் ஐந்திணைக் காமம் போலாது வரும். அன்றியம் ஐந்திணையுள்ளும் வற்புறுத்தித் துணையின்றிச் செலவழுங்குதலும் ஆற்றாமை கூறுதலும், இழிந்து இறந்து கூறுதலும், இடையூறு கிளத்தலும், அஞ்சிக் கூறுதலும், மனைவி விடுத்ததால் பிறவிடம் சேறலும் போன்றவை ஆண்பாலருக்கும் நிகழும். அங்ஙனமே, மன்னுறச் செப்பலும், பின்னிலை முயறலும், கணவன் உள்ள இடந்தேடி இரவுத் தலைச்சேறலும், பெண் பாற்கிளவிகளாகும்.

குற்றிசை குறுங்கலி போன்றவை ஒத்த அன்பின் மாறுபட்டு வருவனவும் பெருந்திணைப் பாலவாம்.

குற்றிசை என்பது பெருந்திணைத் துறையுள் ஒன்று. இதன்கண் அழகிய மாலை புனைந்த மார்புடைப் பெண்டிற்கு அற்று அறுதியிட்டு நடவாது அறத்தைக் கண்மறுக்கும் துறை.

குறுங்கலி என்பதும் பெருந்திணைத் துறையுள் ஒன்று. மறைமணமுடைய பெருங்குழலுடை மடவாரை விருமபி விகற்பித்த காதலைக் கெடச் சொல்வது,

இப்பெருந்திணைக்கும் கைக்கிளைக்கும் பொதுவாக நிற்கும் செய்தியைப் பெருந்திணை நூற்பாவில் மாட்டேற்றி

**முன்னைய நான்கும் முன்னதற்கென்ப** (45)

பெருந்திணை நூற்பாவில் கூறிய ஏறிய மடத்திறம் போல ஒரு மடற்றிறமும், இளமை தீர்திறம் போல இளமை தீராத் திறமும், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் போலாது, தேறுதல் ஒழிந்த காமத்து மிகாத்திறமும், மிக்க காமத்து மிடலொடுபட்ட காமம் போலாது மிக்க காமத்தில் மாறாகாத்திறமும் (அஃதாவது மிக்க காமத்தால் நயப்புறம் பண்பு) கைக்கிளைக்கு உரித்தா மென்பர் இளம்பூரண அடிகள்.

தொல்காப்பிய நூற்பாவைக் கொண்டு பார்க்கும் போது மேற்குறித்த நூற்பாவிலுள்ள ஏறிய மடற்றிறம், இளமை தீர்திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம், மிக்காமத்து மிடல் என்ற நான்கும் கைக்கிளைக் குரித்து என்பதுபோல் தோன்றம். ஆனால் அந்த நூற்பாவில் இந்த நான்கு செய்திகட்கு மேல் இல்லை. அதனால் முன்னைய நான்கும் என்பதற்கு நச்சினார்க்கினியர் வேறு உரை கூறுவர்.

**மூன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே** (46)

என்று களவியலுள் கூறும் சிறப்பில்லாக் கைக்கிளை போலன்றிக் காமஞ் சாலா இளமையோள்வயின் நிகழும் கைக்கிளை போல இவையும் சிறந்தன என எய்தாது எய்வித்தது என்பர்.

இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னிகழ்ந்த காட்சியும் ஐயமும், தெரிதலும் தேறலும் என்ற குறிப்பு நான்கும் நற்காமத்திற்கு இன்றியமையாது வருதலின் முன்கூறிய (முதல் திணையாக) சிறப்புடைக் கைக்கிளையாதற்க (அவை) உரிய வென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு என்பர்.

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த எழுதிணையுள் முன்னதாகக் கிளக்கப்பட்ட கைக்கிளை யொழுக்கம் ஐந்திணைக் காமத்துக் குறிஞ்சி ஒழுக்கத்திலும், ஒருதலைக் காமமாகத் தலைவன்மாட்டு காட்சி, ஐயம், தெளிதல், தேறல் போன்ற ஒழுக்க நிலைகளாக வருவதால் இந்த முன்னைய குறிப்புக்கள் நான்கும் முன்னே கூறிய கைக்கிளைக்கு உரிய என்பர்.

இளம்பூரணர் தம் உரையில் கைக்கிளை ஒருவாற்றான் இன்பம் தருவது என்றும் பெருந்திணை துன்பம் பயப்பது என்றும் கூறிக்

**கைக்கிளை செந்திறம் பெருந்திணை நோந்திறம்**

**அத்திற மிரண்டும் அகத்திணை மயங்கா**

**தத்திணை யானெ யாத்தனர் புலவர்** **(47)**

என்றதொரு நூற்பாவை மேற்கோள் காட்டுகின்றார். அதில் கைக்கிளை என்பது 'செந்திறம்' என்ற சொல்லால் இன்பத்திற்குரியது என்றம் பெருந்திணை என்பது 'நோந்திறம்' என்ற சொல்லால் துன்பத்திற்குரியது என்றும் குறிப்பதைக் காட்டுவர்.

அகத்திணைக்குரிய ஒழுக்கங்களின் பொது இயல்பு கூறி இறுதியாக அதற்கு இன்றியமையாதது அமைக்கப்பெறும் செய்யுள் வகை இன்னிசை என்றும் கூறுகின்றனர்.

நூல் தொடக்கமாகிய பாயிரத்தில் பனம்பாரனார் தொல்காப்பியர் கருத்தை மொழியும் முறையில்,

**தமிழ்கூறு நல்லுலகத்து**

**வழக்குஞ் செய்யுளும் ஆயிருமுதலின்**

என்று குறிப்பிட்டதைப் போன்று இங்கும்,

**நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**

**பாடல் சான்ற புலனெறி வழக்கங்**

**கலியே பரிபாட்டாயிரு பாவினும்**

**உரிய தாகும் என்மனார் புலவர்** **(56)**

என்று கூறுகின்றார்.

நாடக வழக்கு என்பது சுவை தோன்றவரும் செய்திகளையெல்லாமத் ஒரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதலாகும். அ∴தாவது செல்வம், குலம், ஒழுக்கம், அன்பு இவற்றால் ஒப்புடையர் இருவர் தம்மவரினின்றும் அகன்று தனித்த இடத்து எதிர்ப்பட்டார் என்றும் அங்கு ஒருவர்க்கு ஒருவரைக் கொடுப்பாரும் அடுப்பாரும் இல்லாது அவர்கட்குப் பிறக்கம் வேட்கை மிகுதியால் ஒன்றினார் என்றும், பின்னர் அவர் ஒருவரும் அறியாத வண்ணம் களவொழுக்கம் மேற்கொண்டு பின் முறைப்படி மணந்தார் என்றும் இதுபோலப் பிற செய்திகளைப் படைத்து மொழிந்து சுவைபட அமைப்பதைக் குறிக்கும்.

உலகில் வழக்கு என்பது உலகத்தார் எல்லோருக்கும் ஒத்து வழங்கும் வழக்கத்தைக் குறிக்கும்.

பாடல் சான்ற புலனெறி வழக்கம் என்றால் கலிப்பாவானும் பரிபாட்டானும் அமைந்த அகத்திணைக் கூறுகளாகவரும் கைக்கிறை முதலாகப் பெருந்திணை இறுதியாக உள்ள ஏழுதிணைகளைக் குறிக்கும். இவற்றிற்குக் கலிப்பாவும் பரிபாடலும் உரிய பாவகைகளாகும் என்று புலவர் கூறுவர். இவ்விரு பாடல்களைக் கூறியதால் ஒழிந்த வெண்பா, ஆசிரியம், வஞ்சி முதலியன அகத்திணைக்குரியவாய் வருவடீாபமு புறப்பொருட்கும் உரியவாய் வருவதால் மற்ற பாக்கள்

இவற்றிற்கு உரிமைபடைத்தவை என்று கூறினாரல்லர். புற்பொருளெல்லாம் உலக இயல்பாக அமையுமேயன்றி நாடக வழக்கிற்கு வாரா என்பர்.

புலனெறி வழக்கமென்னம் செய்யுள் புலவர்கள் ஐந்திணைச் செய்யுளின் கண் ஒருவன் ஒருத்தியின் இயற்பெயரைக் குறிக்கமாட்டார் என்று ஒரு மரபுரைக்கின்றார்.

அகத்திணையுள் கைக்கிளையும் பெருந்திணையும் நீங்கிய அன்பின் ஐந்திணைக்குரிய நிலமும் காலமும் கருப்பொருளும் இல்லாது மக்களைப் பற்றி வரும் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்ற ஐந்து பொருட் பண்புகளும் பற்றி வரும் ஐந்திணைக் கண்ணும் தலைமகன் ஒருவனைக் கொண்டு புலனெறி வழக்கம் செய்யவேண்டி வரும்போது இயற்பெயரைக் குறியாது திணைப் பெயராக நாடன், ஊரன், சேர்ப்பன் என்று கூறும் பொதுப் பெயரைச் சுட்டிப் பேசுவர் இதனை,

**மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்**

**சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்** (57)

என்பர். அதோடு ஒருவர் பெயர் கொள்ள வேண்டி வந்தால் புறத்திணைக் கண் சார்த்திப் பேசப் பெறுமேயன்றி அகத்திணைகளைச் சார்ந்து வாரதென்பதை,

**புறத்திணை மருங்கின் பொருந்தி னல்லது**

**அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே** (58)

என்பர்.

ஒருவர்க்கு உரிய பெயர் அகத்திணை சார்ந்து வரும் கைக்கிளை பெருந்திணையிலும் வாராது என்று உறுதிப்படுத்தவும், புறத்திணையில்தான் ஒருவன் பெயர் சுட்டி வரும் என்று தெளியவைக்கவும். ஆண்டும் பாடாண்பாட்டுக் காமப் பொருளாகவரின் அவ்வழி பெயர் சுட்டி வருதலும் உண்டென்றும் கூறுவர் இதனால் அகப்பொருள் என்பது நாடக வழக்கால் (புனைந்துரை) அமைவதால் புனைந்துரையியின்பாற் பட்டு எங்கெங்கோ உள்ள வழக்கம் ஒரு சேர நிகழ்வது போலச் செய்யுள் செய்வதால் ஒருவரைச் சாராது பொதுவாக வருமென்றார்.

இவ்வாறு அகத்திணைக்குரிய பொது இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன.

## வினாக்கள்

1. தொல்காப்பியர் ஐந்திணையைப் பகுத்துக் கூறும் முறையை விளக்குக.
2. "நடுவண் ஐந்திணை நடுவண தொழிப" - விவரிக்க
3. எழுதிணை மக்கள் பற்றித் தொல்காப்பியர் கூறும் கருத்தினைத் தொகுத்து வரைக.
4. முதற்பொருள் பற்றித் தொல்காப்பியம் கூறுவனவற்றை எழுதுக.
5. பிரிவின் வகைகளாக தொல்காப்பியர் கூறுவதைத் தொகுத்து எழுதுக.
6. அகத்திணைக் கூறும் நற்றாய் கூற்றினைக் குறிப்பிடுக.

7. தொல்காப்பியர் உள்ளுறை உவமத்தை உவமையியலில் கூறாமல் அகத்திணையியலில் கூறக் காரணம் என்ன?
8. கைக்கிளை, பெருந்திணை ஆகியவை பற்றி அகத்திணையியலுட் காணப்படும் செய்திகளைத் தொகுத்தொழுதுக.

# அலகு - 1

# புறத்திணையியல்

(அறம் பொருள் ஒழுக்கங்களது இயல்பை உணர்த்துவது)

அகத்திணையாகிய ஏழு திணையுஞ் சாற்றி, அவற்றின் புறத்து நிகழ்வன ஏழுதிணையும் உணர்த்துவது இப்பகுதி.

மலையாகிய குறிஞ்சித்திணைப் புறம் நிரைகோடலும் நிரைமீட்டலுமாகிய வேறுபாடு குறித்து வெட்சி எனவும் கரந்தை எனவும் இரண்டு குறி பெறும்.

காடுறையுலகாகிய முல்லைப்புறம் மண்நசை வேட்கையால் எடுத்துச் செலவுபுரிந்த வேந்தன்மேல், அடல்குறித்துச் செலவு புரிதலான் அவ்விரு பெருவேந்தரும் ஒருவினையாகிய செலவு புரிதலின் வஞ்சி என ஒரு குறி பெறும்.

புனலுலகாகிய மருதத்துப்புறம் எயில் அழித்தலும், எயில் காத்தலும் என்னும் வேறுபாடு குறித்து உழிஞை எனவும் நொச்சி எனவும் இரண்டு குறி பெறும்.

மணலுலகாகிய நெய்தற்புறமி, இருபெரு வேந்தரும் பொருதவாகிய ஒரு தொழிலே புரிதலால் தும்பை என ஒரு குறி பெறும்.

நடுநிலைத்திணையாகிய பாலைப்புறம், வேந்தரேயாயினம் ஏனையோராயினும் தமது வெற்றியாகிய மிகுதியைக் குறித்தலால் வாகை என ஒரு குறி பெறும்.

பெருந்திணைப்புறம் நிலையாமையாகிய நோம்திறப் பொருளே குறித்து வருதலின் காஞ்சி என ஒரு குறி பெறும்.

கைக்கிளைப் புறம் செந்நிறமாகிய ஒரு பொருளே குறித்து வருதலின் பாடாண் என ஒரு குறி பெறும்.

**வெட்சித் திணை**

**1. அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்**
**புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின்**
**வெட்சி தானே குறிஞ்சியது புறனே**
**உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே. (59)**

அகத்திணை இலக்கணத்தைத் தெளிவாக உணர்ந்தோர் புறத்திணை இலக்கணத்தைத் திறம்பட உணர்த்துங்கால், 'வெட்சி' என்னும் புறத்திணை 'குறிஞ்சி' என்னும் அகத்திணைப் புறனாக அமையும், அ∴து, பகைவர்கள் அஞ்சுமாறு தோன்றும் பதினான்கு துறைகளை உடையது என்பர்.

**வெட்சியின் இலக்கணம்**

**2. வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்**

**ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும். (60)**

வெட்சித்திணை என்பது, பகையரசர்கள் (மக்களுக்குப் பகையாவார்) மீது படையெடுத்துச் செல்லுதற்கு முன்னாலேயே, அரசனால் விடப்பட்ட முனை ஊரகத்துள்ளார் அப்பகை நாட்டுட் சென்று, அந்நனாட்டுப் பசுக்கூட்டங்களைப் பகைவர்கள் அறியாதபடி தம் ஊருக்கு ஒட்டிக்கொண்டு வந்து பாதுகாத்தல் என்பதாம்.

**வெட்சியின் துறைகள்**

**3. படையிலங்கு அரவம் பாக்கத்து விரிச்சி**
**புடைகெடப் போகிய செலவே புடைகெட**
**ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்**
**ஒற்றின் ஆகிய புறத்து இறை முற்றிய**
**ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே**
**நோயின்று உய்த்தல் நுவல்வழித் தோற்றம்**
**தந்துநிறை பாதீடு உண்டாட்டுக் கொடையென**
**வந்த ஈரேழ் வகையிற்று ஆகும். (61)**

1. படையியங்கு அரவம் - பகைவர் நாட்டு வாழும் ஆனிரைகளைக் களவிற் கொள்ளுவதற்குப் படை புறப்பட்டுச் செல்லும்போது அது வழிப் பிறக்கும் படைக்கல ஒலி முதலியன.
2. பாக்கத்து விருச்சி - படை செல்ல அப்படை கொள்ளும் வெற்றி தோல்விகளை அறியும் பொருட்டு ஊரின்கண் நற்சொல் போன்ற நிமித்தம் அறிதல்.
3. புடைகெட போகிய செலவே - மாற்றரசர் ஒற்றர்கள் தம் நாட்டகத்திருப்பினும் அவர் அறிவு கெடத் தம் திறமையால் மேற் கொண்ட போக்கு.
4. புடைகெட ஒற்றின் ஆகியவேயே - மாற்றரசர் பக்கத்துள்ளார் ஒற்றரும் அறியா வகைத் தம் ஒற்றரால் ஆனிரைகள் இருக்கும் இடத்தையும் அவற்றைக் கொள்ளுதற்குரிய வாய்ப்பையும் ஆராய்தல் (ஒற்றர்கள் என்பார் இருபுடையாக பாக்கத்தும் வாழ்வராதலின் அவர் திணை பலவற்றுள்ளும் இடம் பெறுவோர் ஆதலின் அவரைப் பேசும் போது இருதிறத்தராகக் கோடல் வேண்டுமென்பது தொல்காப்பியர் நோக்கம். ஆதலின் நூற்பா அமைப்பில் ஏற்று 'ஆதி விளக்காக' அமைத்தார் என்று இளம்பூரண அடிகள் விளக்குகின்றார்)
5. வேய்ப்புறம் முற்றின் ஆகிய புறத்து இதை - பகைப்புலத்து ஒற்றர் அறியாவகை ஒற்றராய்ந்த இடத்தினைத் தேர்ந்து அவ்விடத்தில் சூழ்ந்து விழிப்போடு ஊர்ப்புறத்துத் தங்கி இருத்தல்.
6. முற்றிய ஊர்க்கொள்ள - தாம் சூழ்ந்து நின்ற பகைப்புலத்தால் ஊர்கள் அழித்தல்.
7. ஆக்கோள் - ஆண்டுள்ள ஆனிரைகளைக் கவர்தல்
8. பூசல் மாற்று - பகைப்புலத்தார் தம் நாட்டகத்து ஊரழிவும் அதுவழிப் பிறந்த பூசலும் ஒற்று வழிச் செய்தியும் அறிந்தார். தம்படை போக்கி ஆ காத்து நின்று பொருபவர்க்கும், ஆ கவர்வோர்க்கும் நிகழும் போர்ப்பூசலை தாமேற்று மாற்றித் தம் நிரைகளை மீட்டல், அல்லது அந்நிலை பகையால் மிக்கவழி அது காலை அப்போர் ஒழிந்து போதல்.

9. நோயின்று உய்த்தல் - பகைப் புலத்தார் மாட்டுக் கவர்ந்த ஆனிரைகளை அவற்றிற்குரியார் மீட்கா வகை ஓரிடத்து உய்த்துத் தம் படைகொண்டு அவற்றிற்கு வேண்டும் நீர் உணவு முதலியவற்றால் ஊறுவாரா வகை காத்தல்.
10. நுவல்வழித் தோற்றம் - ஆக்கோள் மேற்கொண்ட வீரர்கள் தம் மூராங்கண் உரைத்த சூளுறவிற்றப்பாது ஆக்கொண்டு தோன்றுதல்.
11. தந்துநிரை - பகைவர் ஆனிரைகளைத் தம்மூரகத்துக் கொணர்ந்து நிறுத்திப் பெருமை காட்டல்.
12. பாதீடு - அவற்றை ஒற்றாராய்ந்தோர் தொடங்கி, கொணர்ந்ததோர் ஈறாகப் பகுத்துக் கோடல்.
13. உண்டாட்டு - ஆனிரைகளைப் பகுத்துக் கொண்ட மறவர் முதலாயினர் உண்பனவெல்லாம் உண்டு, ஆடுவனவெல்லாம் ஆடிக் களித்தல்.
14. கொடை - உண்டாட்டின்போது கொடை பெறப்போந்த இரவன் மாக்கட்குக் கொடுத்து மகிழ்தல் என்று வெட்சித் திணையின் துறைகள் பதினான்கு கூறுகளாக நிகழும். இவை ஒவ்வொன்றிற்கும் மேற்கோள் செய்யுள் புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை போன்ற நூல்களிலிருந்து உரையாசிரியர் காட்டியுள்ளார்.

**மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த**
**கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே (62)**

மறத்தொழிற்கு எல்லையில்லையாயினும் அதனை மறவர்களாகப் பிறந்த இருபாலரும் தாம் பிறந்த குடிச்சிறப்பினை நிலைபெறுத்தவும், வளர்க்கவும் வேண்டி அவ்வெல்லையைக் காட்டியதைச் சுட்டிக் குடிப் பெருமையைப் பிறர் பேசுதலும், மறவர்கட்குத் தெய்வமாய கொற்றவை அவர் இயற்றிய வழிபாட்டிற்கும் அதன்கண் நின்ற மெய்மைக்கும் தக வெற்றி வாய்ப்பை உளவாக்கும் அவளின் வீரம் மிடைந்த தெய்வ பண்பை வியத்தல் ஆய நிகழ்ச்சிகள் அகத்திணைக்குத் துறைகளாகும்.

இங்கு ஆடவர் விளைத்த வீரச்செய்தி இல் ஆண் முல்லை என்ற சொல்லானும் பெண்டிர் விளைத்த வீரச்செயல் மூது இல் முல்லை மூதின் முல்லை என்றும் அழைக்கப்பெறும்.

அகத்திணையியலில் ‘சேயோன் மேய மைவரை உலகம்’ என்புழிக் கருப்பொருளாகிய செய்"வம், குறிஞ்சிக்கு முருகன் என்றார். இங்குக் குறிஞ்சிக்குப் புறனாக வெட்சியைக் கூறி அதற்குக் கொற்றவையைத் தெய்வம் என்றதால் குறிஞ்சிக்கும், காற்றவை தெய்வம் ஆவள் என்பது போதரும். ஆண்டுக் கருப்பொருள் கருதுமிடத்துக் கொற்றவையையும் இணைத்துக் கருத வேண்டுமென்பர் உரையாசிரியர்.

**கரந்தையின் துறைகள்**

**வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
**வெறியாட்டு அயர்ந்த காந்தளும் உறுபகை**
**வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்**
**போந்தை வேம்பே ஆரென வரூஉம்**
**மாபெருந் தானையர் மலைந்த பூவும்**

**வாடா வள்ளி வயவர் ஏத்திய**

**ஓடாக் கழல்நிலை உளப்பட ஓடா**

**உடல்வேந்து அடுக்கிய உன்ன நிலையும்**

**மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்**

**தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்**

**ஆரமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்**

**சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தலும்**

**தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்**

**மனைக்குரி மரபினது கரத்தை அன்றியும்**

**வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தலென்று**

**இருவகைப் பட்ட பிள்ளை நிலையும்**

**வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க**

**நாடவற்கு அருளிய பிள்ளை யாட்டும்**

**காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்**

**சீர்த்த மரபில் பெரும்படை வாழ்த்தலென்று**

**இருமூன்று மரபிற் கல்லொடு புணரச்**

**சொல்லப்பட்ட எழு மூன்று துறைத்தே. (63)**

வெறியாடுதலைச் செய்யும் கடமைகளை அறியும் சிறப்பினையும் உயிர்க்கொலை செய்யுமாறு கூறுகின்ற கொடிய வாயினையும் உடைய வேலன், காந்தன் மாலையணிந்து தெய்வமேறி ஆடுகின்ற காந்தளும்; மிக்க பகையினையுடைய அரசன், பகைவர்களுக்கும் தன் படைக்கும் வேறுபாடு காணவேண்டி அடையாளமாக அணிந்த உயர்ந்த புகழையுடைய பனம்பூ, வேப்பம்பூ, ஆத்திப்பூ ஆகிய பூவும்; வாடுகின்ற கொடியல்லாத வள்ளியென்னும், கூத்தும்; வீரர்களால் புகழப்பட்ட கெடாத வீரக்கழல் நிலையும்; புறங்காட்டி ஓடாது வெகுண்டு நிற்கும் பகைமன்னனது எண்ணத்தை உன்னமரத்தொடு பொருத்திக் காண்கின்ற உன்ன நிலையும்; திருமாலுடைய காத்தற் புகழையும், ஏனோர்க்கும் உரியவாய்ப் பொருந்திய பெரிய தலைமையிற் குறையாத படைத்தல் அழித்தல் என்னும் புகழையும், அரசர் தொழிலுக்கு உவமையாகக் கூறப்படும் பூவை நிலையும்;

அரிய போரின் கண் பகைவரைப் புறங்காட்டி ஓடச் செய்தலும், வெட்சியார் கவர்ந்து சென்ற பசுக்கூட்டங்களை மீட்டலும்; சிறப்புப் பொருந்திய அரசன் மேம்பாட்டை எடுத்துக் கூறுதலும்; தன்னிடத்துள்ள போர்த்தொழிலின் முயற்சியாலே வஞ்சின மொழிகளைத் தன்னுடன் கூட்டிக் கூறுதலும், தன்மேல் வருகின்ற கொடிப்படையை எதிர்த்து நிற்றல் தன்னுடைய வாள்வன்மையால் பகைவரையும் வீழ்த்தித் தானும் வீழ்ந்துபடுதல் ஆகிய இரண்டு பாகுபாடுகளையுடைய போரில் மறவர்கள் தாமே செய்யும் அஞ்சாமையும்; வாட்போரால் பகைவரை வென்று மேம்பட்ட அரசிளங் குமரனை, அந்நாட்டு மக்கள் பாராட்டி அவனுக்குப் பறை முதலிய ஒலிக்கருவிகள் முழங்கத் துறக்க

மாகிய அரசைக் கொடுத்து, அப்பிள்ளைப் பருவத்தோனைக் கொண்டாடிய ஆட்டமும்; போர்களத்து இறந்துபட்ட வீரர்களின் நினைவும் கறியாகக் கல் நிறுத்தற் பொருட்டுக் கல்லைப் பார்த்தலும்; கண்ட கல்லை எடுத்துக் கொணர்தலும்; கொணர்ந்த கல்லை நீரினால் கழுவித் தூய்மைப் படுத்தலும்; பின்னர் அக் கல்லினை ஓரிடத்து நடுதலும்; நட்டபின் கோயிலாக எழுப்பி, அதில் அவன் பீடுகளைத் தீட்டி, அக் கல்லிற்குப் பெருஞ் சிறப்புக்களைச் செய்தலும்; பின்னர் நடப்பட்ட கல்லினைத் தெய்வமாக்கிப் போற்றி வாழ்த்துதலும் ஆகிய இருபத்தொன்றம் கரந்தைத் திணைக்கு உரிய துறைகளாம்.

**வஞ்சித் திணை**

**வஞ்சியின் இயல்பு**

**வஞ்சி தானே முல்லையது புறனே**
**எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்**
**அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே. (64)**

'வஞ்சி' என்னும் புறத்திணை, முல்லை என்னும் அகத்திணைக்குப் புறனாகும்; குறையாத மண்ணாசையினாலே மிக்கு விளங்கும் அரசுனுடன், மற்றோர் அரசன் சென்று அஞ்சும்படியான போர் செய்தலைக் கருதியது இது.

**வஞ்சியின் துறைகள்**

**இயங்குபடை அரவம் எரிபரந்து எடுத்தல்**
**வயங்கல் எய்திய பெருமை யானும்**
**அடுத்தூர்ந்து அட்ட கொற்றத் தானும்**
**மாராயம் பெற்ற நெடுமொழி யானும்**
**பொருளின்றி உய்த்த பேராண் பக்கமும்**
**வருசிறைப் புனலைக் கற்சிறை போல**
**ஒருவன் தாங்கிய பெருமை யானும்**
**பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்**
**வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்**
**குன்றாச் சிறப்பின் கொற்ற வள்ளையும்**
**அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇக்**
**கழிபெருஞ் சிறப்பின் துறைபதின் மூன்றே. (65)**

எழுகின்ற படையின் பேரொலியும் ; பகைவரது நாட்டைத் தீயிட்டு கொளுத்துதலும்; விளக்கம் எய்திய படைகளின் பெருமையும்; போர்மேற்செல்லும் அரசன் தன் வீரர்களுக்கும் ஏற்கும் பரிசிலருக்கும் கொடுத்தலும்; பகைவர் பலரையும் மேற்கென்று கொன்ற வெற்றியும்; வேந்தனால்

சிறப்பெய்திய வீரன் தானே புகழ்ந்து கொள்ளுதலும், பிறரால் புகழப்படுதலும்; பகை மன்னரை ஒருபொருட்டாக எண்ணாது தன் படையைச் செலுத்தின பேராண்மைப் பகுதியும்;

தன்னைச் சேர்ந்த படைவீரர்கள் பகைவர்முன் நிற்க முடியாமல் ஓடியவிடத்து, விரைந்து வரும் நீர்பபெருக்கை ஓர் கற்றூண் நின்று தடுக்குமாறுபோலத் தான் ஒருவனே எதிர் நின்று பகைவரை எதிர்த்தலும்; மிகுதியான சோற்றுத் திரளைத் தன் வீரர்களோடு இருந்து அவர்களுக்கு அளித்துத் தானும் உண்டலும்; வென்றோரிடத்து உளதாகிய விளக்கமும்; தோற்றோரிடத்து உளதாகிய குறைவைக் கூறுதலும்;

குறைவுறுதலைச் செய்யாத வெற்றிச்சிறப்பினை உடையவர்கள் பகைவர் நாடு அழிதலுக்கு வருத்தப்பட்டு விளங்கக் கூறும் வள்ளைப் பாட்டும்; வெற்றியும், தோல்வியும் கண்ட அரசர்கள், தம் படையாளர்களுள் போர் செய்த காலத்துப் பகைவரால் ஏவப்பட்ட அம்பு வேல் முதலியன பட்டு அழிந்தவர்களைத் தாம் நேரிற்சென்று பொருள் கொடுத்து வினாவியும் தழுவிக்கொள்ளுதலும் ஆகிய மிகப் பெருஞ் சிறப்பினையுடையவாகிய துறைகள் பதின்மூன்றும், வஞ்சித் திணைக்கு உரியனவாம்.

### உழிஞைத்திணை

**உழிஞை தானே மருதத்துப் புறனே**
**முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்**
**அனை நெறி மரபிற்று ஆகும் என்ப. (66)**

‘உழிஞை’ என்னும் புறத்திணை, மருதம் என்னம் அகத்திணைக்குப் புறனாகும். அது, முழுமையான தலைமையுடைய பகைவரின் மதிலைக் கைப்பற்றுதலும் அழித்தலுமாகிய வழக்கினை இலக்கணமாக உடையது.

**அதுவே தானும் இருநால் வகைத்தே. (67)**

அந்த உழிஞைத் திணைதான் எட்டுத் துறைகளை உடையது.

**கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்**
**உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்**
**தொல்எயிற்று இவர்தலும் தோலது பெருக்கமும்**
**அகத்தோன் செல்வமும் அன்றி முரணிய**
**புறத்தோன் அணங்கிய பக்கமும் திறற்பட**
**ஒருதான் மண்டிய குறுமையும் உடனறொர்**
**வருபகை பேணார் ஆரெயில் உளப்படச்**
**சொல்லப் பட்ட நாலிரு வகைத்தே (68)**

தன்னை அரசனென்று ஏற்றுக்கொள்ளாதாரும் தன் ஆணைவழி நில்லாதாருமாகிய பகைவரது நாட்டைக் குறித்த வெற்றியும்; நினைத்தவற்றை முடித்துக்காட்டும் அரசனது மேன்மையும்; பகைவரது பழமையான மதிலின்மீது ஏறிப் பரந்து நிற்றலும்; அங்ஙனம் மதில்மேல் நின்றவுடன் பகைவரால் எறியப்படுகின்ற அம்பு முதலியவற்றைத் தடுத்தற்குரிய கிடுகு கேடயம் முதலிய படைக்கருவிகளின் மிகுதியும் ;

மதிலின் உட்புறத்தே உள்ள அரசனது செல்வமிகுதியும்; மதிலகத்திருப்போன் புறத்தே உள்ளவனைத் தன் செல்வமிகுதியாலன்றிப் போர்தொழிலான் வருத்தியதைக் கூறலும்; மதிலின் உள்ளே இருந்தவன் தன் மதில் அழியத் தொடங்கியவிடத்துப் புறத்தே (வெளியே) உள்ளவனுடன் தான் ஒருவனேயாகிச் சென்று போர்செய்யும் குற்றுழிஞையும்; மதிலின் வெளியே உள்ளவன், உள்ளே உள்ளவன்மேல் வந்தவிடத்து, அவன் பகையினைப் பொருட்படுத்தாது, அக்தோன் இகழ்ந்திருத்தற்கு ஏதுவாகிய மதிலாகிய அரண் உளப்பட உழிஞைத் திணைத் துறைகள் எட்டு வகையினவாம்.

**குடையும் வாளும் நாள்கோள் அன்றி**
**மடையமை ஏணிமிசை மயக்கமும் கடைஇச்**
**சுற்றமர் ஒழிய வென்றுகைக் கொண்டு**
**முற்றிய முதிர்வும் அன்றி முற்றிய**
**அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் மற்றதன்**
**புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்**
**நீர்ச்செரு வீழ்ந்த பாசியும் அதா அன்று**
**ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறமும்**
**மதில்மிசைக் கிவர்ந்த மேலோர் பக்கமும்**
**இகல்மதிற் குடுமிகொண்ட மண்ணு மங்கலமும்**
**வென்ற வாளின் மண்ணோடு ஒன்றத்**
**தொகைநிலை என்னுந் துறையொடு தொகைஇ**
**வகைநான் மூன்றே துறையென மொழிப. (69)**

தன் நாட்டுமக்களைக் காத்தற்பொருட்டுக் குடையினை தன்னாளிற் புறப்படச் செய்தலன்றிப் பகைவரது கேட்டினைக் கருதி வாளையும் நன்னாளிலே புறப்படச் செய்தலும்; மதிலின் மீது நன்கு பொருந்துமாறு அமைந்த ஏணியின்மீது ஏறி நின்று, மதிலின் அகத்தோனும் புறத்தோனும் போர் செய்தலும்; புறத்தோன் தான் படையைச்செலுத்திப் புறத்திற் போரிடலன்றி, அகத்தோன் படையை வென்று புறமதிலைக் கைக்கொண்டு, உள்மதிலையும் வளைத்த வினைமுதிர்ச்சியும்; புறமதிலன்றி உள்மதிலிடத்தும் புறத்தோனால் கைக்கொள்ளப்பட்ட அகத்தோன் விரும்பின மதில் காவலும் ;

அகத்தோனால் காத்துநின்ற இடைமதிலைப் பின்னர் அம்மதிலின் புறத்திருந்தோன் விரும்பிக் கைக்கொண்ட புதுமையும்; மதிலைக்கொண்ட புறத்தொனம் மதிலைக் காத்த அகத்தோனும், அகழியின் இருகரைமதிலிலும் நின்று கொண்டு, நீரின்கண் பாசிபோற் கிடங்கினிடத்துப் போரிட்ட பாசியும், அவ்வகழியின் போரேயன்றி, ஊரின் நடுவே நடைபெறும் போரினை விரும்பிய பாசி மறனும ; ஊரின் நடுவண் அமைந்த மதிலும் புறத்தே அமைந்த மதிலுமன்றிக், கோயிலின் மதிலின்மேல் ஏறிநின்று; போர் செய்தற்குப் பரந்து சென்றோன் கூறுபாடும் ;

அங்ஙனம் போரிட்ட மதிலிடத்து, ஒருவனை ஒருவன் கொன்று, அவன் முடிக்கலம் முதலியன கொண்டு இறந்துபட்டவன் பெயராலே முடிபுனைந்து நீராடும் மங்கலமும்; இருபெரு வேந்தருள்ளும், வென்றவன் வாளினை வெற்றித் திருவின்மேல் நிறுத்தி நீராட்டுதலும்; வாளுக்கு நீராட்டியபின்னர், வென்றவன் படைகட்கெல்லாம் சிறப்புச் செய்தற் பொருட்டு ஒருங்கு வருகெனத் தொகுத்தல் என்னும் துறையுடன், உழிஞை பன்னிரண்டு துறைகளாம் என்று கூறுவர் புலவர்.

**தும்பைத்திணை**

**தும்பைதானே நெய்தலது புறனே**

**மைந்து பொருளாக வந்த வேந்தனைச்**

**சென்று தலையழிக்கும் சிறப்பிற்றென்ப** (70)

தும்பை என்னும் புறத்திணை நெய்தல் என்னும் அகத்திணைக்குப் புதன் அத்திணை வலிமையைப் பொருளாகக் கருதிப் பொருதற்கு வந்த அரசனிடம் எதிர்சென்று அவனைத் தலை தூக்க விடாது அழிக்கும் சிறப்பினை உடைத்து.

இருபெரு வேந்தரும் ஒருகளத்துப் பொருவர். அதற்கு இடம், காடு, மலை, கழனி முதலிய ஆகா. களரும், மணரும் பரந்த வெளி நிலமே பொருகளமாக அமையும். அவ்வாறு பொதற்குப் போதிய இடம் கடலைச் சார்ந்த நிலமாகும். கதிர் மறையும் காலம் போர் ஒழியுங் காலமாகமஅ். நெய்தலுக்கு நிலம் நெய்தலாதலாலும், மாலையும் அதற்குரிய பொழுதாதலாலும், பொரு தொழிலுடைய தும்பை நெய்தலுக்குப் புறமாயிற்று.

**கணையும் வேலும் துணையுற மொய்தலிற்**

**சென்ற உயிரின் நின்ற யாக்கை**

**இருநிலந்தீண்டா அருநிலை வகையொடு**

**இருபாற்பட்ட ஒரு சிறப்பின்றே** (71)

தும்பைத்திணையில் இருபெரு வேந்தரும் பொருவதாதலின் இருபடையும் அன்புக் கணையும், வேலும் படைக்குத் துணையாகக் கொண்டு பொருவதால்அம்பாலும் வேலாலும் தாக்குண்ட வீரர்களின் உயிர் அகன்ற யாக்கை முழுவதும் வேலாலும் அம்பாலும் தாக்கப் பெற்றதால் அவனுடம்பை அம்பும் வேலும் தாக்க வீழ்ந்து நிலந்தீண்டாது கிடக்கும் ஒரு அரிய வீர வகையும், கவந்தமாகிய முண்டங்கள்

ஒன்றோடு ஒன்று கை பிணைந்து குதித்து ஆடிநிலத்திடை வீழாத நிலையம் உண்டு (வீடுமன் போல தலை படாநிலை)

**தானையானை குதிரை**

**புல்லித் தோன்றும் பன்னிரு துறை த்தே (75)**

என்று தும்பைத்திணை பன்னிரண்டு துறைகளைக் கொள்ளும்.

நோனார் உட்கும் தானை, யானை, குதிரை என்ற மூவகை நிலையும் - இருபெரு வேந்தரும் தானை, யானை, குதிரை முதலியவற்றின் படைப்புடையரேனும் சிலபோது இம்மூன்று படையும் செய்யும் வீரத் தொழிலாலும் அவை விளக்கும் அழிவாலும் அச்சத்தை ஊறுவிக்கும் தன்மையும்.

வேல் மிகுவேந்தனை மொய்த்த வழி ஒருவன் தான் மீண்டெறிந்ததார் நிலையும் - வேலால் வெற்றி பெறுவதையே நோக்கமாகக் கொண்டு களம்புகுந்த வேந்தனை மாற்றார் சூழ்ந்து கொண்ட போது அது கண்ட வீரன் ஒருவன் தான்செய்யும் போரகன்று தன் வேந்தனுக்குத் துணையாகிக் காக்கப் போந்து மாற்றாரை எறிந்த தார்நிலை என்ற துறையும்.

அன்றி இருவர் தலைவர் தபுதிப்பக்கமும் - பகைகொண்டு பொருத இரண்டு வேந்தரும் சேரப்பொருது மடிதலும்.

ஒருவன் ஒருவனை உடைபடைபுக்கு கூழைதாங்கிய எருமையும் - படை இரண்டும் பெருங்காலை தம் பக்கல் படையுடையக் கண்ட மறவன் ஒருவன் தனியாகப் படைதாங்கி மேல்வரும் பகைவர் படையைப் புறக் கொடுக்கச் செய்யும் பெருமையும்

படையறுத்துப் பாழி கொள்ளும் ஏமமும் - தம் படைக்களங்களழியப் பகைவர் கைக்கொண்ட படைக்கலங்களைப் போக்கி மற்பேவார் புரிந்து தம் படையைப் பாதுகாத்தலும்

களிறு எறிந்து எதிந்தோர் பாடும் - களிறு எறிந்து எதிர்த்தோர் போர்களத்துப்பட்ட நிலையும்

களிற்றொடு பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலையும் - களிற்றோடு போந்து அதனோடு பட்ட வேந்தனைப் பகைத்த வேந்தன் வீரர்கள் சூழ்ந்து நின்று வெற்றிக் களிப்பில் ஆடிப் பாடும் ஆரவாரமும்

வாள் வேய்த்து இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும் ஒருவரும் ஒழியாத் தொகை நிலையும் - வாள் தொழில் முற்றி இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும் ஒருவரும் அழியாமல் பட்டபாடும்

செருவகத்து இறைவன் வீழ்வுறச்சினைஇ ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும் - பொருளகத்துத் தன் வேந்தன் பட அதுகண்டு படைத்தலைவன் வீரனொருவனை நெருங்கிப் பொருத ஒரு நற்புகழ் நிலைமையும்

பலபடை ஒருவற்கு உடைத்தலின் அவன் ஒள்வாள் வீசிய நூழிலும் - பல படை வருவதற்குக் கெடுதலின் அவன் ஒள்ளிய வாள் வீசிய நூழிலும்

என இவ்வாறு தும்பை பன்னிரு துறைகளை உடைத்து.

**காஞ்சிதானே பெருந்திணைப் புறனே**

**பாங்கருஞ்சிறப்பிற் பல்லாற் றானும்**

**நில்லாவுலகம் புல்லிய நெறித்தே (76)**

காஞ்சியென்னும் புறத்திணை பெருந்திணையென்னும் அகத்திணைக்குப் புறனாகும். உலக நெறிகளுள் அருஞ்சிறப்புடைய நெறியாகிய நில்லாவுலகம் என்னும் நிலையாப் பொருளுடைய உலகத்தைக் கருத்துட் கொண்டதாகும்.

இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை என்ற இவற்றைக் கருதியதாகும். இக்காஞ்சித்திணை பெருந்திணைக்குப் புறத்திணையாய் அமையுமாறு எங்ஙனமெனின் அகத்திணையியலில் கூறப்பெற்ற நோந்திறக் (பொறுத்துக் கொள்ளும்) காமப் பகுதியைக் கொள்வது போலத் துறவும் உள்ள நோய் நோன்று நீர் பலகால் மூழ்கி, நிலத்துறங்கி ஊன் துறந்து நோகும் திறமுடையது.

**மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமையும்**

**கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்**

**பண்புற வரூஉம் பகுதி நோக்கிப்**

**புண்கிழித்து முடியும் மறத்தி னாலும்**

**ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோன்**

**பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்**

**இன்னனென்னு இரங்கிய மன்னை யானும்**

**இன்னது பிழைப்பின் இதுவா கியரெனத்**

**துன்னரும் சிறப்பின் வஞ்சினத் தானும்**

**இன்னகை மனைவி பேஎய் புண்ணோன்**

**துன்னுதல் கடந்த தொடா அக் காஞ்சியும்**

**நீத்த கணவன் தீர்த்த வேலின்**

**பெயர்த்த மனைவி வஞ்சி யானும்**

**நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி**

**மகட்பாடு அஞ்சிய மகட்பா லானும்**

**முலையும் முகனும் சேர்த்திக் கொண்டான்**

**தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ**

**ஈரைந் தாகும் என்ப பேரிசை**

**மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்**

**மாய்ந்த பூசல் மயக்கத் தானும்**

**தாமே எய்திய தாங்கரும் பையுளும்**

**கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்**

**செல்வோர் செப்பிய மூதானந் தழும்**

**நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து**

**தனிமகள் புலம்பிய முதுபா லையும்**

**கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ**

**ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்**

**காதலி இழந்த தபுதார நிலையும்**

**காதலன் இழந்த தாபத நிலையும்**

**நல்லோள் கணவனொடு நளியழல் புகீஇச்**

**சொல்லிடை இட்ட மாலை நிலையும்**

**அரும்பெருஞ் சிறப்பிற் புதல்வன் பயந்த**

**தாய்தப வரூஉம் தலைப்பெயல் நிலையும்**

**மலர்தலை உலகத்து மரபுநன்கு அறியப்**

**பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு**

**நிறையருஞ் சிறப்பின் துறையிரண்டு உடைத்தே.** (77)

'எவராலும் தடுத்தற்கரிய எமன் வருவான்' என்று சொல்லப்பட்ட பெருங்காஞ்சியும்; அறிவுடையோர் அறிவில்லார்க்குக் கூறிய முதுகாஞ்சியும்; நற்குணம் பொருந்தி வருகின்ற பகுதியை நோக்கித் தன் மறப்பண்பினாலே புண்ணைக் கிழத்துக்கொண்டு இறந்துபடும் மறக்காஞ்சியும்; போர்களத்துப் பாதுகாக்குஞ் சுற்றம் இல்லாத புண்பட்ட மறவனைப் பேய்கள் காக்கின்ற பேய்க்காஞ்சியும்; 'இன்ன தன்மையை உடையான் இறந்துபட்டனன் கொல்' என்று உலகத்தார் இரங்கும் மன்னைக் காஞ்சியும்; இச் செயலைச் செய்யாது ஒழிவேனாயின் யான் இன்ன கேட்டினை அடையக் கடவேன்! என்று கூறிய ஒப்பிடற்கரிய சிறப்பினையுடைய வஞ்சினக் காஞ்சியும்;

இன்பம் பயக்கவல்ல நகைபொருந்திய மனைவி புண்பட்டுக் கிடக்கும் தன் கணவனைப் பேய்கள் நெருங்காதவாறு காத்த தொடா அக் காஞ்சியும்; தன் கணவர் உயிரைப் போக்கிய வேலினாலேயே தன் உயிரையும் நீத்த வஞ்சிக்காஞ்சியும்; பெண் கொள்ளுவதற்குரிய தகுதியனால் ஒத்திருந்தும் மறுத்தலின், பகைவனாய் வலிந்து பெண் கொண்டுவிடலாமென்று வந்த அரசனுக்கு, முதுகுடித் தலைவராகிய வணிகரும் வேளாளரும் தத்தம் மகளை மணம் செய்வித்தற்கு அஞ்சிய மகட்பாற் காஞ்சியும்; தன்னை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டோன் இறந்துபட்டவிடத்து அவன் தலையொடுதன் முலைகளையும் முகத்தையும் சேர்த்து இறந்த நிலையும் கூட்டிப் பத்தாகும் என்பர் சிலர்.

பெரிய புகழினை நிலைநிறுத்தி இறந்துபட்டவனைச் சுற்றிக் கூடிய உறவினர்கள், அவன் இறந்துபட்டமைக்கு அழுத மயக்கமும்; சுற்றத்தார் வருந்தியதேயன்றி மனைவியர் தாமே தத்தம் கணவரைக் கட்டிக் கொண்டு அழுதது கண்டோர் பொறுத்தற்குரிய வருத்தமும்;

கணவனோடு இறந்துபட்ட மனைவியின் இறப்பைக் குறித்துக் கண்டோர் பிறர்க்குணர்த்திய மூதானந்தமும் (ஒன்றுபட்ட அன்பினால் வந்த சாக்காடு); கொடுமைமிக்க பாலைநில வழியில் தன் கணவனை இழந்து தனியளாய் நின்று தலைவி வருந்திய முதுபாலையும்; இறந்தோரைக் குறித்து இனி இறக்குமவர் வருத்தமுற்றுப் புலம்பிய கையறுநிலையும், மனைவியை இழந்த கணவரது தபுதார நிலையம்; காதலனை இழந்த மனைவி தன் கணவன் இறந்துபட்டவிடத்து அவனோடு எரிபுக்கு மாய்வதற்கு எரிமூட்டிய விடத்து விலக்கினாரோடு மாறுபட்டுக் கூறிய புறங்காட்டு நிலையும்; போரிடத்து விழுப்புண்படாது புறமுதுகிட்டதால் இறந்துபடுகின்ற அரும்பெருஞ்சிறப்பினையுடைய மகனைப் பெற்ற தாய் அவனைத் தழுவிக்கொள்ளும் நிலையும்; இடம் அகன்ற உலகத்தின் நிலையாமைப் பண்பு நன்கு விளங்குமாறு தன் கண் தோன்றிய பலரும் இறந்துபடவும், தான் இறந்து படாது ஊரின் புறத்தவாகிய சுடுகாட்டை வாழ்த்துதல் ஆகிய துறையும்; அருஞ்சிறப்பு உடைய ஆண்பற்றி வருவனவும் பெண்பற்றி வருவனவும் ஆகிய இரண்டும் பகுதிகளை உடையவும் ஆகும்.

### பாடாண் திணை

**பாடாண் பகுதி கைக்கிளைப் பிறனெ**

**நாடுங் காலை நாலிரண்டு டுடைத்தே** **(78)**

'பாடாண் திணை' என்னும் புறத்திணை, 'கைக்கிளை' என்னும் அகத்திணைக்குப் புறனாகும். அ∴தாவது, ஆராயுமிடத்துக் கடவுள் வாழ்த்து வகை, வாழ்த்தியல் வகை மங்கல வகை, செவியறிவுறுத்தல், ஆற்றுப்படைவகை, பரிசிற்றுறை வகை, கைக்கிளைவகை வசைவகை என்னும் எட்டு வகையினை உடையதாம்.

**அமரர்கண் முடியும் அறுவகை யானும்**

**புரைதீர் காமம் புல்லிய வகையினும்**

**ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப.** **(79)**

கடவுளிடத்து (தேவர்களிடத்து) முடியும் கொடிநிலை கந்தழி வள்ளி புலவராற்றுப்படை, புகழ்தல், பரவல் என்பவற்றினும் குற்றந்தீர்ந்த காமத்தைப் பொருந்திய வகையினும்; அவையிற்றின் ஒரு கூற்றின் பாகுபாடு கடவுட் புகழ்ச்சியாய் வருதலேயேன்றிப் பாட்டுடைத் தலைவனைச் சார்த்திப் பாடாண் திணையாதற்கும் பொருந்தும் என்று சொல்லுவர் புலவர்.

**வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்**

**பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்**

**முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை**

**வண்ணப் பகுதி வரைவின் றாங்கே.** **(80)**

ஒரு தலைவன், தன்னைப் பிறர் வாழ்த்துதலும் புகழ்ந்துரைத்தலும் கருதிய பக்கத்திடத்தும், அறம் பொருள் இன்பங்களின் கூறுபாடு தோன்ற முன்னோர்கள் கூறிய குறிப்புப் பொருளிடத்தும், செம்மையாகக் கூறும் துறைநிலை பெற்று வழங்குதல் இயலுமிடத்து,

விவாரவகையின் அமரராகிச் செய்யும் கொடிநிலை முதலிய ஆறுவகை வாழ்த்தினைப் போலாது உலகினுள் இயற்கைவகையான் இயன்ற மக்களைப் பாடுதலும் வரையறுத்து நீக்கப்படாதனவாம்.

**காமப் பகுதி கடவுளும் வரையார்**

**ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்.**

காமப்பகுதி கடவுள் மாட்டும் வரையார், ஏனோர் பாங்கினும் வரையார் என்பர் புலவர். இதனால் கடவுள் மாட்டுத் தெய்வப் பெண்டிர் நயந்த பக்கமும், மானிடப் பெண்டிர் நயந்த பக்கமும் பாடப்படும் என்பதாம்.

**"அரிகொண்ட கண்சிவப்ப அல்லினென் ஆகம்**

**புரிகொண்ட நூல்வடுவாப் புல்லி - வரிவண்டு**

**பண்நலங்கூட் டுண்ணும் பனிமலர்ப் பாசூர்என்**

**உண்ணலங் கூட்டுண்டானூர் (81)**

இது மானிடப் பெண்டிர் விரும்பிய பகுதி.

**குழவி மருங்கினும் கிழவ தாகும். (82)**

குழவிப் பருவத்தும் காமப்பகுதி கூறப்படும். (அவர் விளையாட்டு மகளிருடன் கூடியவிடத்து) இம்முறைதான் பின்னர்ப் பிள்ளைத்தமிழ் நூற்கள் தோன்ற விதியாயிற்று என்பர்.

**ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப**

**வழக்கொடு சிவணிய வகைமை யான. (83)**

ஊரிடத்துக் காமப்பகுதி நிகழ்த்தலும் (உலாப்போதல்) உண்டு; அது நிகழுமிடத்து, வழக்குடன் பொருந்தி நடக்கும் வகைமையையும் உடைத்து என்ற சொல்லுவர் புலவர். 'ஊரொடு தோற்றம்' என்பது, பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறாக வருவது, 'வகை' என்பது, அவரவர் பருவத்திற்கு ஏற்பக் கூறும் வகைச் செய்யுள்.

**மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே. (84)**

மேற்கூறப்பட்டனவும், இனிக் கூறப்படுவனவும் காரணமாகி மெய்ப்பெயரான் வரும் பொதுப்பெயரானன்றி, இயற்பெயரின் பக்கத்து நெறிப்பட வைத்தனர்.

**கொடி நிலை கந்தழி வள்ளி என்ற**

**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**

**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே. (85)**

குற்றம் தீர்ந்த சிறப்பினையுடைய கொடி நிலை, கந்தழி, வள்ளி எனச் சொல்லப்படும் முற்பட்டவான மூன்றும், பாட்டுடைத் தலைவனைச் சார்த்திவருங் காலத்துக் கடவுள் வாழ்த்தோடு பொருந்தி வரும்.

**கொற்ற வள்ளை ஓரிடத் தான (86)**

கொற்றவள்ளையும், புகழ்தற் கருத்தாகுமிடத்துப் பாடாண் திணையாம். (துறை கூறுதற் கருத்தாயின் வஞ்சியாம்)

**கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்**
**அடுத்தூர்ந் தேத்திய இயன்மொழி வாழ்த்தும்**
**சேய்வரல் வருத்தம் வீட வாயில்**
**காவலர்க் குரைத்த கடைநிலை யானும்**
**கண்படை கண்ணிய கண்படை நிலையும்**
**கபிலை கண்ணி வேள்வி நிலையும்**
**வேலை நோக்கிய விளக்கு நிலையும்**
**வாயுறை வாழ்த்தும் செவியறி வுறூவும்**
**ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்**
**கைக்கிளை வகையொடு உளப்படத் தொகைஇத்**
**தொக்க நான்கும் உளவென மொழிப.** (87)

ஒன்றைக் கொடுத்தோரைப் புகழ்தலும் கொடுக்காதவரைப் பழித்தலும்; வெற்றியினாலும் குணச்சிறப்பினாலும் உயர்ந்து நிற்போரைப் புகழ்ந்துகூறும் இயன்மொழி வாழ்த்தும்; தூரத்திலிருந்து வருகின்ற வருத்தம் தீரும் பொருட்டு வாயிலைக் காத்து நிற்போருக்கு உரைத்த வாயில் நிலையும்; அரசன் இனிதாகத் துயின்றது (உறங்குவது) கூறிய கண்படை நிலையும்; கபிலநிறப் பசுவினைக் கொடுக்கக் கருதிய கொடையினைக் கூறுதலும்;

விளக்கு எரியும் திறத்திற்கேற்ப வேலின் வெற்றியைக் கூறுதலும்; கடுஞ்சொற்களை நீக்குதலின்றிப் பின்னால் விளையும் தன்மை கருதி வேப்பங்காயும், கடுக்காயும் தின்னுங்கால் கசப்பாய் இருப்பினும், உண்டபின்னர் நோய் நீக்கி இன்பம் தருமாறுபோல, நன்மையுண்டாதற்குப் பாதுகாவலான் சொற்களாலே உண்மையைக் கூறுதலும்; பெரியோர்களிடத்து அடங்கி நடக்கவேண்டுமென்று நன்னெறிகளை அறிவுத்தலாகிய செவியறிவுறூஉம்; அரசனிடத்தவாகி இனிது வாழ்வாயாக! என்று வரும் புறநிலை வாழ்த்தும்; ஆண்பாற் கூற்றுக் கைக்கிளையும், பெண்பாற் கூற்றுக் கைக்கிளையும் ஆகிய இவை நான்கும் உள்ளிட்ட யாவும் பாடாண் துறையாம்.

**தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்**
**சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்**
**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறா அர்க்கு அறிவுறீஇச்**
**சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்**
**சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப்**

**பிறந்த நாள்வயின் பெருமங் கலமும்**
**சிறந்த கீர்த்தி மண்ணு மங்கலமும்**
**நடைமிகுந்து ஏத்திய குடைநிழல் மரபும்**
**மாணார்ச் சுட்டிய வாள்மங் கலமும்**
**மன்எயில் அழித்த மண்ணுமங் கலமும்**
**பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்**
**பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி**
**நடைவயின் தோன்றிய இருவகை விடையும்**
**அச்சமும் உவகையும் எச்சம் இன்றி**
**நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்**
**காலங் கண்ணிய ஓம்படை உளப்பட**
**ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்**
**காலம் மூன்றொடு கண்ணிய வருமே. (88)**

உறங்கியவர்க்குக் கேடில்லாத நற்புகழை உண்டாக்கற் பொருட்டுச் சூதர் என்பார் துயிலெழுப்பிய துயிலெடை நிலையும் கூத்தர் பாணர் பொருநர் விறலி ஆகிய நால்வரும் தாங்கள் வருகின்ற வழியிலே கண்ட தங்களை ஒத்தோரிடம் தாம் பெற்ற பெருஞ்செல்வம் போல அவருக்கும் கிடைத்தற் பொருட்டு, இன்ன வழியே சென்று இன்னாணை அடைவீர்களாயின் எம்போன்று பெருஞ்செல்வம் பெறுவீர் என்று ஆற்றுப்படுத்துவதும் (இ்.து ஆற்றுப்படை இலக்கணம்); நாள்தோறும் செய்துவந்த பகைத்திறம் வளர்க்கும் செயல்களை நீக்கி, அரசன் பிறந்தநாள் விழாக் கொண்டாடுதலும்; ஆண்டுதோறும் முடிபுனையுங்கால் நிகழும் புண்ணிய நீராட்டு விழாவும் ;

ஒழுக்கத்தை மிகுத்துப் புகழப்பட்ட வெண்சொற்றக் குடை நிழல் மரபினைக் கூறுதலும் ; பகைவரைக் கருதிய வாள்மங்கல விழாவும் ; பகைவருடைய நிலைபெற்ற வன்மையான மதிலை அழித்து முடிபுனைந்து நீராடும் விழாவும் ; தன்பால் வந்த பரிசிலர்களை வினவி அவர்களுக்கு வேண்டும் சிறப்புச் செய்தலும் ; பரிசில் பெற்றொர் தாம் பெற்ற பெரும் பொருள் குறித்து மிகுத்துச் சொல்லித் தாம் போகல் வேண்டும் என்று விடை கேட்டலும் ; அரசன் விடுப்பப் போதலுமாகிய இருவகை விடையும் ;

அச்சமும் உவகையும் ஒழிவும் இன்றி, நன்னாள் தீ நாள் பறவை குறுக்கிடுதல் முதலிய சகுனங்களாலும், காலத்தைக் கருதிய காதுகாவலும் ஆகிய, இவை யாவும் அடங்கத் தோன்றும் வழக்கினது கருத்தினாலே, காலம் மூன்றனோடும் பொரத்திக் காணுமாற்றான், இதுகாறும் கூறிவருகின்ற பாடாண்திணை வரும்.

வினாக்கள்

1. எழுவகை திணைகள் யாவை?
2. அகத்திணைகளுக்கு புறம்மாக அமைந்த புறத்திணைகள் பற்றி சிறு குறிப்பு வரைக
3. வெட்சித்திணை என்றால் என்ன? அதன் துறைகளை விளக்குக
4. வஞ்சித்திணையின் துறைகளை விளக்குக
5. உழிஞைத்திணை என்றால் என்ன? வகைகளை விவரி.
6. தும்பைத்திணையின் துறை வகைகளை கட்டுரைக்க.
7. காஞ்சித்திணையின் புறன் யாது? வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

# அலகு - 2

## களவியல்

அகம், புறம் எனும் ஒரு பெறும் கூறுபாடுகளுக்குள் அடங்கி நிற்பது. இப்பாகுபாடு தமிழர் மன அறிவு சான்றவர் என்பதை எடுத்தியம்பும் இவ்விரண்டனுள் அகமாவது ஒருவனும் ஒருத்தியும் பெறும், புறத்தார்க்கு இத்தன்மைத்து என்று விளக்கிப் புலனாகும்படி கூறவியலாத இன்பமேயாகும். இந்த இன்ப உணர்ச்சி எல்லா உயிர்க்கும் பொதுவானது.

**எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**

**தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்**

அன்று தொல்காப்பியம் கூறும். உயிர்கள் அனைத்திற்கும் பொதுவாயினும் இவ்வின்ப நுகர்வினுக்குப் பல வரையறைகள் அமைத்துக்கொண்டு வாழ்பவர் மானிடரே பிற உயிர்களினின்றும் மேம்பட்டு விளங்குவது மனித இனத்தின் வாழ்வு நெறி. பிற இனத்தவரின் வாழ்வு நெறியினின்றும் சிறந்தோங்கி விளங்குவது தமிழ் மாந்தரின் அகவாழ்வு நெறி.

அகவாழ்வு, களவு, கற்பு என்ப பாகுபடும் இவற்றுள் களவு நெறி பாட்டுப்படையலுக்கு வாய்ப்பான நெறி, களவாவது, பிறர் நன்கு அறியாதபடி மறைவாக நிகழும் ஒழுக்கம், நல்லூழின் செயலால் அகவை, செல்வநிலை ஆகியவற்றில் ஒத்த தலைவனும், தலைவியும் ஓரிடத்தில் எதிர்ப்பட்டு நெஞ்சு கலந்து அன்பு நெறிப்படுவர். அக்காதலர் ஊரறிய மணவினை நிகழுமளவு களவும் நெறியில் ஒழுகுவர். களவுநெறியைக் கடியத்தகுவதாக எவரும் கருதிலர். காதலர் இப்பிறவியில் மட்டுமின்றி இனிவரும் பிறவிகளிலும் ஒன்றி வாழ்வர் என்பது நம்பிக்கை.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் மூன்றாவது இயலான களவியற் செய்திகள் இரண்டு பாடல்களில் தொகுத்துரைக்கப்படுகின்றன. முதற்பாடத்தில் களவு விளக்கம், களவு நிலை, களவில் தலைவன் கூற்று, களவில் தலைவி கூற்று நிகழுமிடங்கள், பற்றிய செய்திகளும் இரண்டாம் பாடத்தில் களவில் தோழி கூற்று நிகழுமிடங்கள், களவில் செவிலி கூற்று நிகழுமிடங்கள், தலைவன் இயல்பு, தலைவி இயல்பு, தோழி இயல்பு, செவிலி இயல்பு என்பனவும் விளக்கப்பெறுகின்றன.

**களவு விளக்கம்**

இனி, களவு பற்றிய விளக்கம் காண்போம். இக்களவியல் ஒழுக்கம் நால்வகையாகப் பகுத்துக் கூறப்படும். அவை, 1. காமப்புணர்ச்சி, 2. இடத்தலைப்பாடு, 3. பாங்கொடு தழாஅல், 4. தோழியிற் கூட்டம் என இந்நான்கு பொருளம் களவியலுள் உரைக்கப்படும் என்பர் இளம்பூரணர்.

**காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்**

**பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்**

**ராங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு**

**மறையென மொழிதல் மறையோர் ஆறே**

என்னும் செய்யுளியல் நூற்பா (178) நோக்கத்தக்கது.

**காமப் புணர்ச்சி**

இ.்.து அன்புடைய இருவர் நல்வினையால் எதிர்ப்பட்டுக் கூடும் கூட்டமாகும். வேட்கை மிகுதியால் உண்டாகும் நெஞ்சக்கலப்பாதலின் இப்பெயர் பெற்றது. நல்வினைப் பயனால் தன்னியல்பில் நிகழும் புணர்ச்சியாதலின் இயற்கைப் புணர்ச்.சி எனவும், தெய்வப் புணர்ச்சி எனவும் படும். முன்னுறு புணர்ச்சி என்ற பெயரானும் இது வழங்கப்படும்.

**இடந்தலைப்பாடு**

இயற்கைப் புணர்ச்சியில் கூடிய தலைமகன் பின்வரும் நாட்களிலும் தலைவியைக் கூட நிலைத்து எதிர்ப்ப்ட்டுச் சந்திப்பது இடந்தலைப்பாடு ஆகும். முதல்நாள் கூடிய அதே இடத்திற்குத் தலைவன் சென்று மீண்டும் கூடுவான்.

**பாங்கொடு தழாஅல்**

இடந்தலைப்பாடு இடையூறின்றி நிகழ்தல் அருமையாம். ஆதலின் தலைவியோடு தனக்குள்ள உறவினைப் பாங்கனுக்குக் கூறுவான். தலைவன், பிறகு அப்பாங்கன் கூறும் குறிவழிச் சென்று கூடுவான். இவ்வாறுதான் தளர்ந்த வழி உதவும் நண்பனிடம் தன் துயரைத் தலைவன் விளக்குவது பாங்கொடு தழாஅல் எனப்படும்.

**தோழியிற் புணர்வு**

தலைவியை நீண்ட நாட்களுக்குத் தொடர்ந்து கூட விழையும் தலைவனுக்குப் பாங்கற்கூட்டம் பயன்தராது. அதனால், தலைவியோடு பழகி வரும் உயிர்த்தோழியை இரந்து பின் நிற்பான். பிறகு அவள் வாயிலாகத் தலைவியைக் கூடுவதே தோழியிற் புணர்வாம்.

**காமப்புணர்ச்சி**

எல்லா உயிர்க்கும் இன்ப உணர்வு உரியது. ஆயினும், இன்ப வாழ்வில் வரையறைகள் செய்து வாழ்வது மக்கள் வாழ்வின் தனிச் சிறப்பாகும்.

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக் கூட்டங் காணும் காலை**
**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே.** (1)

கைக்கிளையும், பெருந்திணையும் ஒழிந்த நடுவண் ஐந்திணையே அன்பினால் நிகழ்வது. இவ்வைந்திணைக்கண் நிகழும் காமக் கூட்டத்தினை ஆராயுமிடத்து, ஆரியரிடத்து ஓதப்பட்ட எண்வகை மணங்களுள் ஒன்றாகிய துறையமை நல்யாழ்த் துணைமையோராகிய கந்தருவரது நெறியை ஒக்கும் என்பது இதன் பொருள். கந்தருவர் நல்ல யாழமைத்து இசை பாடுவதில் வல்லவர்.

எக்காலத்தும் ஆணும் பெண்ணுமாக இணைந்து செல்லும் இயல்பினர். எனவேதான் அவர்களைத் துறையமை நல்யாழ்த்துணைமையோர் என்றார் தொல்காப்பியர்.

அந்தணரது நூல்களில் கூறப்படுகிற மணம் எட்டாகும். அவை:

**பிரமம்:** பன்னிரண்டு வயது உடைய பெண்ணை நாற்பத்தெட்டு ஆண்டுகள் மணமாகாதிருந்து பிரம்மச்சரியம் காத்தவனுக்கு அணிகலன் அணிந்து கொடையாகக் கொடுப்பதாம்.

**பிரசாபத்யம்:** பெண் கொள்ளுவதற்குரிய கோத்திரத்தர் மகள் வேண்டிச் சென்றால் மறுக்காமல் கொடுப்பதாம்.

**ஆரிடம்:** தகுந்த ஒருவனுக்கு ஆவும் எருதும் பொன்னினாற் செய்து அவற்றிடை பெண்ணை நிறுத்தி அணிகலன்களை அணிவித்து நீவிரும் இவைபோலப் பொறிந்து வாழ்வீர் என நீர் பெய்து கொடுப்பது.

**தெய்வம்:** வேள்வி செய்பவர் பலருள்ளும் ஒத்த ஒருவனுக்கு வேள்வித்தீ முன் பெண்ணை தக்கிணையாகக் தருவது.

**காந்தருவம்:** கந்தர்வகுமாரரும், தேவருலகக் கன்னியரும் தம் முன் எதிர்பட்டுக் கூடினாற்போல் ஒத்த தலைவனும் தலைவியும் தாமே எதிர்ப்பட்டு கூடுவது.

**அசுரம்:** கொல்வேறு தழுவுதல், திரிபன்றி எய்தல், வில்லேற்றுதல் இவற்றில் வல்லான் இவளை மணத்தற்குரியவன் எனக்கூறி அவ்வாறு செய்தார்க்கு ஒருத்தியைக் கொடுப்பது.

**இராக்கதம்:** பெண் விரும்பாமலும், பெற்றோர் விரும்பாமலும் இருக்கும் நிலையில் தான் விரும்பிய பெண்ணை வலிதிற் கொண்டு சென்று மணத்தல்.

**பைசாசம்:** வயது மூத்தோர், கள்ளுண்டு களித்தோர், துயின்ரேறரைக் கூடுதல்.

இவற்றுள்காந்தருவ முறையே தமிழரின் காதல் முறைக்கு ஒத்தமைவதாகும். ஒருவனும் ஒருத்தியுமாக எதிர்ப்பட்ட இருவர் கூடி மகிழும் இயல்பே இந்நெறியாகும். இப்புணர்ச்சி தீர்ந்தவழி ஒருவரையொருவர் பிரியாது வாழ வேண்டிப் பலரறிய மணமுடித்தல் தமிழர் ஒழுகலாறாம்.

**காதல் உண்டாகும் விதம்**

காதல் எவ்வாறு உண்டாகும் என்பதைப் பின்வரும் நூற்பாவான் விளக்குகிறார் ஆசிரியர்.

**ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**

**ஒன்றி உயர்ந்த பால தாணையின்**

**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**

**மிக்கோ னாயினுங் கடிவரை இன்றே** (2)

ஒருவனும் ஒருத்தியும் கூடிவாழும் மனையறத்தின் பயனாய் அவ்விருவரையும் பிறப்புதோறும் சேர்த்தும் பிரித்தும் வைப்பதுமான இருவகை ஊழினும், ஒன்றி வாழ்வதற்கேற்ற நல்லூழின் ஆணையால் புணர்தற் குறிப்பபோடு தலைவனும் தலைவியும் நோக்கித் தலைவன் தலைவியுடன் ஒத்த பண்புடையனாகவோ தலைவியின் மிகுகோனாகவோ இருத்தல் வேண்டும்.

ஒத்த கிழவனும் கிழத்தியுமாவோர் பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, அழகு, அன்பு, நிறை, அருள், உணர்வு, திரு என்னும் இப்பத்துப் பண்புகளிலும் ஒத்தமைவோர். இவற்றை,

**பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ**

**டுருவு நிறுத்த காம வாயில்**

**நிறையே யருளே உணர்வொடு திருவென**

**முறையுறக் கிளந்தா ஒப்பினது வகையே**

எனும் மெய்ப்பாட்டியல் நூற்பா (25) சுட்டும்.

காட்சி ஐயம், தெளிதல், தேறல் என இயற்கைப் புணர்ச்சி நால் வகைப்படும்.

**காட்சி**

‘ஒன்றி உயர்ந்த பாலதாணையின் காண்ப’ (களவு 2) என்று கூறியது தனக்குச் சிறந்தாராக ஒருவரையொருவர் காணுதலை.

**ஐயம்**

தலைவி தன்னுடன் ஒத்த நலங்களால் சிறந்து தோன்றியவழி தலைவனுக்கு ‘இவள் தெய்வமகளோ’ என்று ஐயம் தோன்றும். அவ்வழி ஐயம் சிறந்தது. ஐயம் கொள்பவன் தலைவனே.

**சிறந்துழி ஐயஞ் சிறந்த தென்ப**

**இழிந்துழி இழிவே சுட்ட லான** (3)

**தெளிதல்**

ஐயம் தோன்றிய காலத்து அவள் கூந்தலில் அணிந்த மாலையிடத்தே மொய்த்த வண்டுகளும், அவள் அணிந்த அணிகலன்களும், நறுமலரும், அவள்பால் தோன்றும் தடுமாற்றமும்; கண்ணிமைப்பும் அச்சமும் பிறவும் ஐயம் களைவதற்குரிய கருவிகள் என்பர் ஆசிரியர் இந்த அடையாளங்களைக் கொண்டு அவள் மானிட மகளே என்று தெளிவான்.

**வண்டே இழையே வள்ளிப் பூவே**

**கண்ணே அலமரல்இமைப்பே அச்சமென்று**

**அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ**

**நின்றவை களையுங் கருவி என்ப** (4)

**தேறல்**

அவ்வாறு தெளிந்த தலைவன் தான் தெளிந்ததில் உறுதி கொண்டு புணர்ச்சி வேட்கையால் தலைவியைக் கூட முனைவான். இது தேறல் எனப்படும்.

காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என்னும் இந்நான்கும் கைக்கிளைக் குறிப்பாம்.

**நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்ததற்குக்**

**கூட்டி உரைக்கும் குறிப்புரை யாகும்** **(5)**

இவ்வாறு ஐயம் தெளிந்த தலைவன், தலைவியின் கருத்தறியாது அவளை அணுகுவானாயின் அச்செயல் பொருந்தா ஒழுக்கமாகிய பெருந்திணையால் முடியும் ஆக தலைவியது உள்ளக் கருத்தைத் தலைவன் உணர்ந்து கொள்வதே முதற்கண் வேண்டப்படுவது. அங்கு ஒருவரோடொருவர் உரையாடுதலும் முறையின்றாம். எனவே, காமக்குறிப்பை அறிதற்க அவர்களது கண்களே அவர்கட்குத் துணையாவன வேட்கையினால் அந்நான்கு கண்களும் ஒருவருக்கொருவர் காமக்குறிப்பு உரைக்கும்.

**குறிப்பே குறித்தது கொள்ளு மாயின்**

**ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்** **(6)**

இந்நூற்பா ஒருவரையொருவர் காணும்போது வேட்கை முந்துற்ற வழிதான் இங்ஙனமாயக் கண்ணின் குறிப்பு நிகழும். அல்லாக்கால் நிகழாது என உரைக்கிறது. கண்வழியே கருத்துக் கலந்தவர்கள் காதலராவர்.

**தலைவன் தலைவி பண்பு நிலைகள்**

**பெருமையும் உரனும் ஆடூஉ மேன** **(7)**

**அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**

**நிச்சமும் பெண்பாற் குரிய என்ப** **(8)**

இந்த நூற்பாக்கல் தலைவன், தலைவி இருவரின் பண்பைப் பகர்வன; தன்னைத்தான் கொண்டொழுகும் பெருமையும், சென்ற இடங்களில் மனத்தைத் தீமையின்பாற் செல்லவிடாது நீக்கி நன்றின்பால் உய்க்கும் நல்லறிவும் ஆடவர் இயல்பாம்.

அச்சம், மடம், நாணம் இம்மூன்றும் பெண்டிர்க்குரிய இயல்புகளாம். இப்பண்புகளால் புணர்ச்சிக்கு இசையாது நின்று வரைந்து எய்திய பின்னே தலைவனைக் கூடுவாள் தலைவி.

அச்சம் என்பது அன்பு காரணத்தினாற் தோன்றிய உட்கு.

நாணம் என்பது காமக்குறிப்பு நிகழ்ந்தவழிப் படுவதோர் உள்ள ஒடுக்கம்.

மடன் என்பது கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை.

**மெய்யுறு புணர்ச்சி நிகழும் காலம்**

**வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்**
**ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்**
**நோக்குவ எல்லாம் அவையே போறல்**
**மறத்தல் மயக்கஞ் சாக்காடு என்றிச்**
**சிறப்புடை மரவினை களவென மொழிப** (9)

ஒருவர் ஒருவரைக் காணும் முதற்காட்சியிலேயே மெய்யுறு புணர்ச்சிக்கு உடன்படாது, உள்ளப் புணர்ச்சியளவிலேயே ஒழுகி மணந்து கொண்ட பின்னரே கூடுவர் என்பது தொல்காப்பியர் கருத்தாகும். உள்ளப் புணர்ச்சியே மெய்யுறு புணர்ச்சிக்கு நிமித்தமாகும்.

வேட்கை முதல் சாக்காடு ஈறாக இங்குச் சொல்லப்பட்டவை நிகழ்ந்த பின்னரே மெய்யுறு புணர்ச்சி நிகழும்.

- வேட்கை: ஒருவரை ஒருவர் அடைய வேண்டும் என்ற உள்ள நிகழ்ச்சி
- ஒருதலை உள்ளுதல்: இடைவிடாது நினைத்தலாம்
- மெலிதல்: உணவு உண்ணாமையால் தோன்றும் உடல் மெலிவு.
- ஆக்கம் செப்பல்: 'இரவில் நானும் துயில் அறியேனே' என்பது போன்று உறய்காமையும்; பின் நடப்பவற்றையும் கூறுதல்.
- நாணுவரை யிறத்தல் : நாணம் நீங்குதல்.
- நோக்குவ எல்லாம் அவையே போறல்: காண்பனவெல்லாம் அன்புடையார் உருவாகவே காணுதல்.
- மறத்தல் : பித்தாதல்.
- மயக்கம்: மோகித்தல்.
- சாக்காடு : இறத்தற்கும் நினைவு கொள்ளுதல்.

"இவற்றை அவத்தை என்ப" என்பர் இளம்பூரணர். அவத்தைகள் பத்தாம். ஈண்டு

உரைக்கப்பட்டன ஒன்பதுதாமே எனின், வேட்கைக்கு முன் உரைக்கப்பட்ட காட்சியையும் சேர்த்துப் பத்தாம். இப்பத்துனுள் சாக்காடு ஒழிந்த பிற அவத்தைகளே களவு நிகழ்தற்குக் காரணமாவன.

**இயற்கைப் புணர்ச்சிக்குரிய திறன்**

**முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுத்தல்**
**நன்னயம் உரைத்தல் நகைநனி உறாஅ**
**அந்நிலை யறிதல் மெலிவுவிளக் குறுத்தல்**
**தன்னிலை யுரைத்தல் தெளிவகப் படுத்தலென்று**
**இன்னவை நிகழும் என்மனார் புலவர்** (10)

இந்நூற்பா இயற்கைப் புணர்ச்சிக்குரியதோர் திறன் உணர்த்திற்று.

தனிமையில் தலைவியை எதிர்ப்பட்ட தலைவன் தன் பண்புகளான பெருமை, அறிவு இவற்றினின்றும் நீங்கி ஆர்வம் மிகுதிப்பட புணர்ச்சி வேண்டினான். ஆயினும் தலைமகள் மாட்டுள்ள அச்சம், மடம், நாணம் முதலிய பண்புகள் நீங்கா. அவற்றை நீக்குதல் பொருட்டுத் தலைவியை முன்னிலைப்படுத்தித் தலைவன் சில கூறுவான். இவ்வாறு நிகழ்வதே பெரும்பான்மை. சிறுபான்மை, ஆர்வம் மிகுதியால் புணர்ச்சியில் முடிதலும் உண்டு.

**முன்னிலையாக்கல்**

காமக்குறிப்பு உள்ளதை அறிந்த தலைமகன் வேட்கையால் சேர நினைத்த வழித் தலைமகளும் வேட்கைக் குறிப்பு உடையவளாயினும் நாணமும், அச்சமும் மீதூர அவ்வாறு கூடுதல் தன் குலத்தின் வழிவந் இயற்கை அன்மையான் அக்காமக் குறிப்பு இல்லாதாள் போல நிற்பாள் அப்போது தலைவன் அவளை முன்னிலையாக்கிச் சில கூறுவான்.

**சொல்வழிப்படுத்துல்**

தான் சொல்லும் சொல்லின் வழி அவள் நிற்க சில கூறுதல்

**நன்னயம் உரைத்தல்**

அவள் நலத்தினை எடுத்துரைத்தல்

**நனை நனியுறாஅ அந்நிலையறிதல்**

தலைவன் நன்நலம் உரைத்தலைக்கேட்டல் தலைமகள்பால் முறுவற் குறிப்பு தோன்றி நிற்றலை அறிதல்.

**மெலிவு விளக்குறுதல்**

தலைவன் தன் அகத்தே நிகழும் நோயால் புறத்தே நிகழும் தளர்வினைக் குறிப்பால் எடுத்துரைத்தல்.

**தன்னிலையுரைத்தல்**

தலைவன் தன் உள்ள வேட்கை மீதூர்வினைத் தலைவிமாட்டுக் கூறுதல்.

**தெளிவு அகப்படுத்துதல்**

தலைவன் உள்ளப்பண்பைப் பற்றித் தான் அறிந்த தெளிவைத் தலைவி தன் மனத்தகத்தே தேர்ந்து வெளிப்படுத்துதல். தலைவன் முன்னிலையாக்கல் முதலியன கூறி விழைந்து நின்றானாக, அப்புணர்ச்சிக்கு ஒத்த நன்மை இருவர் மாட்டும் வேண்டுதலின் இது நிகழும்.

**தலைவன் கூற்று**

களவில் தலைவன் கூற்று நிகழ்த்துமிடங்கள் இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம் என்ற நான்குமாம்.

**இயற்கைப்புணர்ச்சி இடந்தலைப்பாடு இவற்றின்கண்**

**தலைவன் கூற்று**

முற்கூறப்பட்ட நான்கினும் இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப்பாடு எனும் இரண்டின்கண் நிகழும் தலைவனது கூற்றுகலைத் தொகுத்துரைக்கும் நூற்பா வருமாறு.

**மெய்தொட்டுப் பயிறல் பொய்பா ராட்டல்**
**இடம்பெற்றுத் தழாஅல் இடையூறு கிளத்தல்**
**நீடுநிலைத் திரங்கல் கூடுத லுறுதல்**
**சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்**
**தீராத் தோற்றம் உளப்படத் தொகைஇப்**
**பேராச் சிறப்பின் இருநான்கு கிளவியும்**
**பெற்றவழி மகிழ்ச்சியும் பிரிந்தவழிக் கலங்கலும்**
**நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்**
**குற்றம் காட்டிய வாயில் பெட்பினும்**
**பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுப்பினும்**
**ஊரும் பேரும் கெடுதியும் பிறவும்**
**நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித்**
**தோழியைக் குறையுறும் பகுதியும் தோழி**
**குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்**
**தண்டா திரப்பினும் மற்றைய வழியும்**
**சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகையினும்**
**அறிந்தோள் அயர்ப்பி னவ்வழி மருங்கில்**
**கேடும் பீடுங் கூறலும் தோழி**
**நீக்கலி னாகிய நிலைமையும் நோக்கி**
**மடல் மாகூறும் இடனுமா ருண்டே** (11)

இக்கூற்றுக்கள் இருபத்து நான்கனுள் மெய்தொட்டுப் பயிறல் முதல் தீராத்தோற்றம் ஈறாக உள்ள எட்டு இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப் பாட்டிற்கும், பெற்றவழி மகிழ்ச்சி முதலாக குற்றம் காட்டிய வாயில் பெட்பினும் வரையுற்ற ஐந்து பாங்கற் கூட்டத்திற்கும் பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுத்தல் முதல் அறிந்தோள் அயர்ப்பு வரையான பத்து பமதியுடம் பாட்டிற்கும் உரியன.

**பண்பிற் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினும்**

**அன்புற்று நகினும் அவட்பெற்று மலியினும்**

**ஆற்றிடையுறுதலும் அவ்வினைக் கியல்பே (12)**

இக்கூற்றுக்குளுஞ் ஐந்தனுள் பண்பிற் பெயர்த்தல் என்பது மதியுடம் பாட்டிற்கும் எஞ்சிய நான்கும் குறியிடத்திற்கும் உரியவனவாம்.

**மெய் தொட்டுப் பயிறல்**

உள்ளம் கலந்தபின் உடற்கலப்புக்கு ஆசைமிகும். அந்நேரத்து பெருமையும் உரனும் உடைய தலைமகன் தெளிவகப்படுத்தியது காரணமாகக் காதல் வெள்ளம் கரைபுரண்டோட தலைவியின் மெய்யை தீண்டிப் பயிறலாம். அவ்வழி தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**பொய் பாரட்டல்**

தலைவியின் ஐம்பால் முதலிய கடைகுழன்று சிதைவின்றேனும் அ∴து சிதைவுற்றதாக ஓர் காரணம் பொய்யாகப் படைத்து மருங்கு சென்று தொட்டான் உரைத்தல் வியர்க்காதிருந்தாலும் "நெற்றிலும் வியர்த்தது அதைத் துடைக்கிறேன்" எனவும், கூந்தல் கலையாதிருந்தாலும் 'கூந்தல் கலைந்து அதனைத் திருத்துகிறேன்' எனவும் ஒரு காரணம் படைத்து உரைத்தலைக் குறிக்கும்

**இடம் பெற்றுத்தழா அல்**

நாணமும், மடனும் நிலைக்களனாகக் கொண்ட தலைவி தன் அறிவு நலன் இழந்து ஒன்றும் அறியாது உயிர்ப்பாள். அதாவது புதிதாய்ப்புக்கார் உற்றுணர்வு என்றும் பயிலாத தம் மெல்லியல் மெய்பிற்பட இழப்பினும் உள்மனத்தே நெக்குயிர்ப்பாள், அதனால், புலையன் தொடு தீம்பால் போல காதல் மீக்கூரக் கொம்பானும், கொடியானும் சார்ந்து நிற்பாள். அப்போது அவளைக் காணும் தலைவன் இவ்ஊற்றின் பிறகு இடையூறாம் நின்மனத்தகத்து நிகழ்ந்தவை யாவை? என வினவுவான்.

**நீடு நினைந்திரங்கல்**

இவ்வாறு, இருவர் இயல்பும் ஒருங்கு இணைந்தும், தலைவி பெரு நாணால் 'விதி வழி உறுக' என எண்ணி மாற்றமும் குறியாது காட்டாது கண்புதைப்பாள். அது கண்ட தலைவன் அவள் அருகே நின்று பார்த்தும், அவளைக்கூட முடியாமைக்கு நினைத்து இரங்குவான்.

**கூடுதலுறுதல்**

இங்ஙனமாகக் காட்சி நிகழ்ந்தபின்னர் புணர்ச்சி நிகழும்.

**சொல்லிய நுகர்ச்சி வல்லே பெறுதல்**

இயற்கைப் புணர்ச்சிக்குக் களனாக மேற்கூறப்பட்டனவற்றுடன் அவ்வின்பம் திளைத்தலையும் விரைவாக ஒன்றாகப் பெற்றவிடத்துக் கூற்று நிகழும்.

**தீராத் தேற்றம்**

இயற்கைப் புணர்ச்சியுடன் முடியாத தெளிவு இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்தபின் தலைவியைத் தெளிவித்துத் தலைவன் ஆற்றும் தீராத்தேற்றவுரை.

**எம்மணல் கிளவே மகிழ்ந**

**எக்கூர் நண்ணிய எம்மூர் வியன்றுறை**

**நேரிறை முன்கை பற்றிச்**

**சூரர மகளிரோ டற்ற சூளே**

இல் எட்டில் முதல் ஆறும் இயற்கைப் புணர்ச்சிக்கே உரியன. பின் இரண்டும் இடந்தலைப்பாட்டிற்கும் உரிய துறைகள்.

**பாங்கற் கூட்டத்தின் கண் தலைவன் கூற்று**

பாங்கனின் உதவிகொண்டு தலைவன் தலைவியைக் கூடுவது பாங்கற் கூட்டமெனப்படும். இக்கூட்டத்தின்கண் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**பெற்றவழி மகிழ்ச்சி:**

இடந்தலைப்பாட்டை ஒட்டி நிகழும் இன்பினைப் பெற்றவழி உள்ளத்தில் உண்டாகும் பெருமகிழ்ச்சி அப்போது கூற்று நிகழும்.

**பிரிநிதவழி கலங்கல்:**

இவ்வாறு கூடிய தலைமகள் தன்னைவிட்டுப் பிரிந்து சென்றவழி இனி கூடுதல் அரிதென்று தலைவன் கலக்கம் அடைதல்.

**என்றும்இனிய ளாயினும் பிரிதல்**

**என்றும்இன்னாள் அன்றே நெஞ்சம்**

**பனிமருந்து விளக்கும் பரூஉக்கண் இளமுலைப்**

**படுசாந்து சிதைய முயக்குஞ்**

**சிறுகுடிச் கானவன் பெருமட மகளே**

**நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைத்தல்:**

காமநுகர்ச்சி ஒன்றனை மட்டும் நினையாது இவளாலே இல்லறம் இனிது நடக்கும் என்று உட்கோடல்.

இடிக்குங் கேளிர் நுங்குரை யாக

நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்ல

**குற்றம் காட்டிய வாயில்:**

தலைவன் மாட்டுச் சோர்வானும், காதல் மிகுதியானும் நோவுற்ற பழிபாவங்கலைப் பாங்கன் எடுத்துக் காட்டுதல்.

**பெட்பினும்:**

அது பண்டைய விதியால் வந்தது எனத் தலைவன் பதிலுரைக்க அதற்குப் பாங்கன் உடன்பட்டு நின்னால் காணப்பட்டாள் எவ்விடத்தாள்? எத்தன்தையாள்? என வினவித் தலைவியின் இடமும் உருவும் அறிந்து அவ்வழிப் பாங்கன் சென்று தலைவியைக் கண்டு மீண்டும் வந்து தலைமகனுக்கு அவள் நிலை உரைப்பான். பாங்கற் கூட்டத்தின்கண் தலைவன் வினாதலும், பாங்கன் வினாதலும் உண்டு.

**முலையே முகிழ்முகிழ்த் தனவே தலையே**

**பெருமுது செல்வன் ஒருமட மகளே**

இது நின்னை வருத்தியவள் எவ்விடத்தள், எத்தன்மையள் என வினவிய பாங்கனுக்குத் தலைமகன் உரைத்தது.

**தோழியிற் கூட்டத்தின் தலைவன் கூற்று**

தோழியிற் கூட்டத்தைத் தலைவன் அவாவுதற்குக் காரணம் தொடர்ந்து என்றும் வருத்தமின்றித் தலைவியைக் கூடக் கருதியதேயாகும். இதன் கண் நிகழும் கூற்றுக்கள் பதினான்காகும்.

**பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுத்தல்:**

முன்னர் கூறியவாறு பாங்கனால் தலைவியைக் கூடின் பின்னும் வரைந்து எய்துதல் ஆற்றாது, களவிற் புணர்ச்சி வேண்டித் தோழியை இரந்து நின்று அவள் கூட்டக்கூடுவன் என்ற உள்ளத்தனாய் அவ்விரத்தலை வலியுறுத்தல். அப்போது தலைவனுக்குக் கூற்று நிகழும் 'பெட்ட வாயில்' என்பதற்கு விருப்பமுள்ள தோழி என்று பொருள் கொள்ளலாம்.

**ஊர் வினாதல்:**

தோழி தனித்தோ, தலைவியுடன் இருக்கும்போதோ 'நும் ஊர் யாது? என வினாவல்.

**பேர் வினாதல்:**

தோழியைப் பெயர் கேட்டல்.

**கெடுதி வினாதல்:**

என்னால் கெடுதி செய்யப்பட்ட மான் இவண் வந்ததோ என வினாவல்

**நரைபரந்த சாந்தாம் அறிஎறிந்து நாளால்**

**.......தாம்குழலீர் காணீரோ**

**ஏமரை போந்தன ஈண்டு**

**பிறவாறு வினாதல்:**

தோழியிடம் தலைவன் 'யான் இங்குத் தங்கினும், எம்மொடு புணரினும் தீது உண்டோ? போல்வன கேட்டல்.

**குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறல்:**

தோழி, 'இவள் கிட்டுதற்கரியள்' எனக் கூறி விலக்குதல்.

**தண்டாது இரத்தல்:**

தலைமகன் பலகாலும் சென்று இரத்தல்

**மற்றைய வழி:**

பின்வா என்றல்.

**சொல்லவட் சார்த்தலிற் புல்லியவகை:**

'முன்னுறு புணர்ச்சி' நீங்காவிடாது தோழி உடன்பட்டுக் கூறிய போது தலைவன் கூற்று நிகழ்த்துவான்.

**அறிந்தோள் அயர்ப்பு:**

தோழி தான் அறியாள் போலக் கூறும்போது தலைவன் கூற்று நிகழும்.

**கேடு கூறுதல்:**

'உலகத்தார் மகட்கொள்ளுமாறு கொள்' எனத் தோழி கூறுவாள். அவ்விடத்துத் தலைவன் கூற்று நிகழும்.

**பீடு கூறுதல்:**

தலைவனின் பெருமையைக் கூறி அவனை நீக்க முயல்வாள் தோழி, அப்போது கூற்று நிகழும்.

**நீக்கலின் ஆக்கிய நிலைமை:**

தோழி தான் அஞ்சிய அவ்வச்சத்தைத் தலைவனுக்கு உணர்த்துகையில் தலைவன் கூற்று நிகழும்

'யாய் வருவாள்', காவலர் வருவர்' என்பன போல,

**மடன்மாக்கூறல்:**

மாவென மடலும் ஊர்ப! பூவென

குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப

எனத் தலைவன் கூறுவான். அதுகேட்ட தோழி மடலேறுதல் அறிவும், அருளும், நாணமும் உடையார் செய்யார் எனக் கூறுவாள். அப்போது தலைவன் கூற்று நிகழும். மடல் ஏறுவேன் எனக் கூறுதல் அகத்திணைக்கம் மடலேறுதல் பெருந்திணைக்கும் உரியவாம்.

**(அ) பண்பிற் பெயர்த்தல்:**

தலைமகள் இளமைப் பண்பு கூறித் தோழி மடன்மாக்கூறலை விளக்குவாள். அப்போது தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**குன்றக்குறவன் காதல் மடமகள்**

**வண்டுபடு கூந்தல் தண்தழைக் கொடிச்சி**

**வளையல் முறைவாள் எயிற்றள்**

**இளைய ளாயினும் ஆரணங் கினளே**

**(ஆ) பரிவுற்று மெலிதல்:**

பரிந்த உள்ளத்துடன் தோழி மெலிந்த காலத்துத் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**(இ) அன்பு நகுதல்:**

அன்பு தோன்றும் உள்ளத்துடன் தோழி நக்ககாலத்தும் தலைவன் கூற்று நிகழ்த்துவான்.

**நயனின் மையிற் பயனிது என்னாது**

**சேயரி பரந்த ஆயிழை மழைக்கண்**

**உறாஅ நோக்க முற்றவென்**

**பைதல் நெஞ்சம் உய்யுமாறே**

**(ஈ) அவட்பெற்று மலிதல்:**

தோழி உடம்பாட்டினைப் பெற்று மகிழும்போது தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**எமக்கு நயந் தருளினை யாயிற் பணைத்தோள்**

**நன்னுதல் அரிவையொடு மென்மெல இயலி**

**வந்திசின் வாழியோ மடந்தை**

**தொண்டி அன்னநின் பண்புபல கொண்டே**

**(உ) ஆற்றிடை உறுதல்:**

தான் செல்லும் வழியிடை இடையூறு உண்டாயவிடத்தும் கூற்று நிகழும். தலைவியும் தோழியும் தாம்வரும் வழி அருமை கூறியபோது கூற்று நிகழும். வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகைன்தான் செல்லும் வழியது அருமை கூறுதலும் உண்டு.

**குருதி வேட்கை உருகெழு வயமான்**

**வலிமிகு முன்பின் மழகளிறு பார்க்கும்**

**..........மலைச்சுர நீளிடை**

**தோழியிற் கூடிய தலைமகன் வரைந்தெய்துங்காறும் கூறும் கூற்று**

தோழி வாயிலாகத் தலைவியைக் கூடிய தலைமகன் வரைந் தெய்துங்காறும் சில கூற்றுக்கள் நிகழ்த்துவான். பின்வரும் நூற்பாப் பகுதி அவற்றைக் குறிப்பிடும்.

1. **இருவகைக் குறி பிழைப்பாகிய இடத்தும்:**

பகற்குறியும், இரவுக்குறியும் தவறியவிடத்துத் தலைவன் கூற்று நிகழும்.

**இல்லோன் இன்பங் காமுற் றாஅங்கு**

**அரிது வேட்டனையால் நெஞ்சே காதலி**

**நல்லா ளாகுதல் அறிந்தாங்கு**

**அரியா ளாகுதல் அறியா தோயே**

2. **காணாவகையிற் பொழுதுநனி இகப்பினும்:**

தலைமகளைக் காணா வகையில், பொழுது மிகவும் கடப்பினும் தலைவன் கூற்று

நிகழும்.

**உள்ளிக் காண்பென் போல்வல் முள்ளெயிற்று**

**அமிழ்தம் ஊறுஞ் செவ்வாய்க் கமழ**

**ஆரம் நாறும் அறல்போற் கூந்தற்**

**பேரமர் மழைக்கண் கொடிச்சி**

**மூரல் முறுவலொடு மதைஇய நோக்கே**

3. **தானகம் புகாஅன் யெர்தல்இன்மையிற் காட்சி ஆசையிற் களம்புக்குக் கலங்கி வேட்கையின் மயங்கிக் கையறு பொழுதினும்:**

தலைமகள் தலைவனைக் காணா வகையில் பொழுது மிகக் கடந்துழிக் காட்சி

ஆசையினால் குயியிடத்துச் சென்று ஆண்டு தலைவனைக் காணாது கலஙகுவாள். குறியிடத்திற்கு வந்து தலைவியைக் காணாமல் செல்லும் தலைவன் தான் வந்து சென்றதைத் தலைவி அறியவேண்டி, அதாவது அடையாளம் வைத்துச் செல்வான். தலைவி, அந்த அடையாளத்தைக்

கண்டு மனங்கலங்கி, அவனைக் காணும் வேட்கையாகிச் செய்வதறியாது மயக்கத்தோடு வருத்தமுற்றபோது கூற்று நிகழும்.

4. **புகாஅக் காலைப் புக்கு எதிர்பட்டுழி பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்:**

தான் புகுதற்குத் தகுதியில்லாத காலத்துக்கண் தலைவியின் அகம் புக்கு எதிர்ப்பட்டுழி நீக்கப்படாத விருந்தின் பகுதியனாகிய வழியும் கூற்று நிகழும். அதாவது, பகலுணவுண்ணும் உச்சிப் பொழுதின்கண் வந்த தலைவனைத் தலைவியின் சுற்றத்தார் வரவேற்று உணவிடும் போது கூற்று நிகழும்.

5. **வேளாண் விருப்பின் கண்ணும்:**

குறிவழிக் கண்டபோது கூற்று நிகழும் குறிவழிக் கண்டபோது தலைவி நாணிக் கண் புதைக்கிறாள் அப்போது, தலைவன் கூறுவது.

**சிலம்புகமழ் காந்தள் நறுங்குலை யன்ன**

**நலம்பெறு கையினென் கண்புதைத் தோயே**

**பாயல் இன் துணை யாகிய பணைத்தோள்**

**தோகை மாட்சிய மடந்தை**

**நீயல துளரோஎன் நெஞ்சமர்ந் தோரே**

6. **தாளாண் எதிரும் பிரிவினானும்:**

தாளாண்மை எதிரும் பிரிவின் கண்ணும் கூற்று நிகழும்

இன்றே சென்று வருவது நாளை.....

7. **நாணு நெஞ்சலைப்ப விடுத்தற்கண்ணும்:**

நாணம் தலைவி நெஞ்சினை வருத்துதலான் அ.்.து அலராகும் என்றஞ்சி நீக்சி நிலைநிறுத்தற்கண் கூற்று நிகழும். புனைந்துரை என்று கருதிக் கூறலும் உளவாம்.

**களித்தோறும் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்**

**வெளிப்படுந் தோறும் இனிது.**

8. **வரைதல் வேண்டித் தோழி செப்பிய புரைதீர் கிளவி புல்லிய எதிரும்:**

வரைந்துகோடல் வேண்டி தோழியால் சொல்லப்பட்ட குற்றம் தீர்ந்த சொல் பொருந்திய எதிர்ப்பாட்டுக்கண் கூற்று நிகழும் மேலும் களவொழுக்கம் வேண்டிக் கூறல் எனவும் கொள்ளலாம்.

**நல்லுரை இகந்து புல்லுரைத் தாஅய்...**

**அரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்**

**பெரிதால் அம்ம...**

9. **வரைவுடம் படுதல்:**

தோழி கூறிய சொல் கேட்டு வரைவுடம் படுத்தற்கண் கூற்று நிகழும்.

10. **ஆங்கதன் புறத்தும்:**

அவ்வரைவு நிகழ்ச்சிக் கண்ணும் கூற்று நிகழும்.

11. **புரைபட வந்த மறுத்தலொடு**

குற்றம்பட வந்த மறுத்தலின் கண் கூற்று நிகழும்.

**பொன் அடர்ந் தன்ன ஒள்ளிணர்ச் செருந்திப்**

**கானலம் பெருந்துறைப் பரதவன் நமக்கே**

'இந்நூற்பாவில் 'கிளவோன் மேன' எனப் பாடல் கொண்டு:

இவை தலைமகனுக்குரிய கூற்றுக்கள் என்று இளம்பூரணரும் மேனி' என்று பாடம் கொண்டு தலைமகளுக்குரியன என்ற நச்சினார்கினியரும் கூறுவர், இந்நூற்பாவின் அமைப்பு தலைவன், தலைவி இருவர்க்கும் பொதுவான உள்ளதெனக் கொளல் பொருந்தும்.

**இருவகைக் குறிகள்**

**குறிகள் பகற்குறி, இரவுக்குறி என இரண்டாம்.**

**குறியெனப் படுவ திரவினும் பகலினும்**

**அறியக் கிளந்த ஆற்ற தென்ப**

தலைவியைத் தோழி குறிப்பிட்ட ஓரிடத்து இருக்கச் செய்து, பின்னர் தலைவனிடம் சென்று தலைவி இருக்கும் அவ்விடத்தைக் குறிப்பிடுவாள். அதன்பின் தலைவன் அக்குறியிடம் சென்று தலைவியுடன் கூடுவான். இவ்வாறு தலைவனும் தலைவியும் கூடுமிடமாகிய அவ்விடத்தின்கண் இருவரும் இரவிலோ, பகலிலோ, கூடுவர், இரவில் அவர்கள் கூடுமிடம் 'இரவுக்குறி' என்றும் பகலில் கூடுமிடம் 'பகற்குறி, என்றும் அழைக்கப்பெறும்.

**இரவுக்குறி நிகழுமிடம்**

**இரவுக் குறியே இல்லகத் துள்ளும்**

**மனையோர் கிளவி கேட்கும்வழி யதுவே**

**மனையகம் புகாஅக் காலையான**

என்பது இரவுக்குறி நிகழிடம் கூறும் நூற்பா, புறமதிலுக்கும், உன் மனைக்கும் இடையே வீட்டிலுள்ளோர் பேசும் பேச்சு கேட்கக்கூடிய இடத்தில் இரவுக்குறி நிகழும்.

**பகற்புணர் களனே புறனென மொழிப**

**அவளறி வுணர வழிவழி யான**

பகற்குறி மதிலின் புறத்தே தலைவி காட்டிய குறியிடத்தே நிகழும். மதிற்புறத்தேயுள்ள சோலையும், பிறவிடங்களும் 'புறம்' எனப்படும்.

**அல்ல குறிப்படுதல்**

குறிக்கண் தடை நேர்ந்தால் அது அல்ல குறிப்படுதல் எனப்படும். தான் குறித்தது அல்லாது வேறுவகையால் குறி உண்டாதல், குறியிடத்துக்கூட தலைவன் புள் எழுப்புதல், புனல் ஒலிப்பித்தல் போல்வன செய்வான். அவ்வொலி கேட்டுத் தலைவி குறியிடத்திற்கு வந்து ஏமாற்றமாகச் சில பு, இலைகளைப் போட்டு வருவாள். பின்னர் தலைவன் வந்து பார்த்து வருந்துவான். இவ்வாறு தலைவன், தலைவி, தோழி மூவரும் அல்லகுறிப்படுவர்.

**அல்லகுறிப் படுதல் அவள்வயின் உரித்தே**

**அவன்குறி மயங்கிய அமைவொடு வரினே**

**அவன்வரம் பிறத்த லறந்தனக் கின்மையின்**

**களஞ்சுட்டுக் கிளவி கிழவிய தாகும்**

**தான்செலற் குரியவழி யாக லான**

இந்த நூற்பா, தலைவன் இயற்கைப் புணர்ச்சிப் புணர்ந்த பின்பு தலைவன் எல்லையை மறத்தல் தலைவிக்கு அறமாகல் இன்மையான் குறியிடம் கூறுதல் தலைமகளதாம். அதற்குக் காரணமாவது, அவள் சேரற்குரிய இடத்தை அவளே உணர்வாள் என்பதாம்.

**களவில் தலைவியின் கூற்று**

களவில் தலைவிக்குரிய கூற்றெல்லாம் தொகுத்துணர்த்துகின்றது.

**மறைந்தவற் காண்டல்:**

தன்னைத் தலைவன் காணாமல் தான் அவனைக் காணும் காட்சி.

**தற்காட்டுறுதல்:**

தன்னை அவன் காணுமாறு நிற்றல்

**நிறைந்த காதலிற் சொல்லெதி மழுங்கல்:**

நிரம்பிய வேட்கையால் தலைவன் கூறிய சொற்கேட்ட எதிர் மொழி கூறாது மடிந்து நிற்றல்.

**வழிபாடு மறுத்தல்:**

அதன்பின் இவள் வேட்கைக் குறிப்புக்கண்டு சாரலுற்றவழி அதற்கு உடம்படாது மறுத்தல். அது குறிப்பினாலும் கூற்றினாலும் வரும்.

**மறுத்தெதிர் கோடன்:**

முன் மறுத்தாங்கு மறாது பின் ஏற்றுக் கோடல்

**பழிதீர் முறுவல் சிறிதே தேற்றல்:**

குற்றந் தீர்ந்த முறுவல் சிறிதே தோற்றுவித்தல். அது புணர்தற்கு உடன்பாடு காட்டி நிற்கும்.

இவை ஆறு நிலையும் புணர்ச்சிக்கு முன் நிகழ்வன. முன் மூன்றிடத்தும் குறிப்பு நிகழ்ச்சியல்லது கூற்று நிகழாது.

**தலைமகள் தோழிக்குக் கூறும் கூற்றுகள்**

1. **கைப்பட்டுக் கலங்கல்:**

   கைப்பட்டுக் கலங்கினும் என்பது தலைவன் கையகப்பட்ட பின்பு ‘என் செய்தேம் ஆயினேம்’ எனக் கலக்கமுறுதல்.

2. **நாணுமிக வருதல்:**

   தலைவிக்கு முன்புள்ள நாணத்தினும் மிக நாணம் வந்துழி கூற்று நிகழும்.

   **நெய்பெய் தீம்பால் பெய்தனமன் வளர்த்து**
   **நும்மினும் சிறந்தது நுவ்வை யாருமென்**
   **றன்னை கூறினன் புன்னையது சிறப்பே**
   **அம்ம நாணுதும் நும்மோடு நகையே**
   **துறைகெழு கொண்கநீ நல்கின்**
   **நிறைபடு நிழல் பிறவுமா ருளவே**

3. **இட்டுப் பிரிவிரங்குதல்:**

   தலைவன் இட்டுவைத்துப் பிரிவன் என அஞ்சியதற்கு இரக்கமுற்ற வழி நிகழும்.

   **யானே யீண்டை யேனேயென் னலனே**
   **ஆனா நோயொடு கான ல.்.தே**
   **துறைவன் தம்மூ ரானே**
   **மறையல ராகி மன்ற ம.்.தே**

4. **அருமை செய்து அயர்த்தல்:**

   தலைவன் வருவதற்குக் காவலாகிய அருமை செய்ததனால் அவனும் வருதலைத் தவறியவிடத்துக் கூற்று நிகழும்.

   **செய்த குறிவழியம் பொய்யாயின் ஆயிழாய்**
   **ஐயகொல் ஆன்றார் தொடர்பு**

5. **வந்தவழி எள்ளல்:**

   தலைவன் வந்தவழி அலராகும் என்றஞ்சி இகழ்ந்த வழியும் கூற்று நிகழும்.

   **வெண்திரற் முத்தம் மயக்கும் இருண்மந்நீர்ப்**
   **பண்டங்கொள் நாவாய் வழங்குந் துறைவனை**

**முண்டகக் கானலுட் கண்டநாட் போலானாற்**
**செய்த குறிவழியும் பொய்யாயின் ஆயிழாய்**
**ஐயகொல் ஆன்றோர் தொடர்பு**

6. **விட்டுயிர்த் தழுங்கள்:**

மறையாது சொல்லி இரங்குதல் அப்போது கூற்று நிகழும்.

**மணிமலை நாடன் வருவன் கொல் தோழி.....**

7. **நொந்து தெளிவொழிதல்:**

தலைவன் தெளிவித்த தெளிவை நொந்து அதனை ஒழித்தல்

**மன்றத் ஏறுகற் கருங்கண் முகஉகளும்**
**குன்றக நாடன் தெளித்ததெளிவினை**
**நன்றென்று தேறித் தெளிந்தேன் தலையளி**
**ஒன்றுமற் றொன்றும் அனைத்து**

8. **அச்சம் நீடல்:**

தலைவன் வருகின்ற இடையீடாக அச்சம் நீளுதல்

**மென்தினை மேய்ந்த துறுகட் பன்றி**
**வன்கல் அடுக்கத்துத் துஞ்சு நாடன்**
**எந்தையறிதல் அஞ்சிக் கொல்**
**அதுவே மன்ற வாரா மையே**

9. **பிரிந்தவழிக் கலங்கல்:**

தலைவன் பிரிந்தவழி கலக்கமுறுவாள் தலைவி, அப்போது கூற்று நிகழும். தோழி அவளைத் தேற்றுவாள்.

வருவது கொல்லோ தானே வாரா
குன்றுகெழு நாடனொடு சென்றவென் நெஞ்சே.

10. **பெற்றவழி மலிதல்:**

தலைவனொடு கூட்டம் பெற்றவழி மகிழ்தல்

**அம்ம வாழி தோழி நலமிக**
**நல்ல வாயின அளியவென் தோள்கள்**
**மல்லல் இருங்கழி மலரும்**
**மெல்லம் புலம்பன் வந்த வாறே**

11. **வரும் தொழிற்கு அருமை வாயில் கூறுதல்**

தலைவன் வருவதற்கு இடையீடாகக் காவலர் கடுகுதலான் ஈண்டு வருதல்

அரிதெனத் தோழி தலைவிக்குச் சொல்லும்போது தலைவிக்குக் கூற்று நிகழும்.

**நள்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்**

**தினிநடங்கினளே மாக்கள் முனிவின்று**

**நனந்தலை யுலகமுஞ் துஞ்சும்**

**ஓர்யான் மன்ற துஞ்சாதேனே**

**12. கூறிய வாயில் கொள்ளாக் காலத்தில் கூறுதல்:**

தோழி இவ்வாறு கூறியதனை மனங்கொள்ளாக் காலத்தில் கூறுதல்.

**தெருவின்கண்,**
**காரணமின்றிக் கலங்குவார்க் கண்டுநீ**
**வாரண வாசிப் பதம்பெயர்த லேதில**
**நீ நின்மேற் கொள்வ தெவன்?**

**13. மனைபட்டுக் கலங்கிச் சிதைந்த வழித் தோழிக்கு நினைத்தல் சான்ற அருமைற உயிர்த்தல்:**

கனவு சிதைந்தவழி மனஞ் சிதைந்த தலைவி கூறுவது, காவல் மிகுதியால் இச்செறிக்கப்பட்டுக் கலங்கிய தலைவி தன் எண்ணத்தைத் தோழிக்கு உரைப்பாள்.

**பலவனி பழம்பெற்ற பைங்கண் கடுவன்**

**எலவென்று இணைபயிரும் ஏகல்சூழ் வெற்பன்**

**புலவுங்கொல் தோழி புணர்வழிந் தன்னை**

**செலவுங் கடிந்தாள் புனத்து**

இவையெல்லாம் (இப்பதின்மூன்றும்) இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின் நிகழ்வன. உள்ளப் புணர்ச்சியான் உரிமை பூண்டிருந்த வரும் இவ்வாறு கூறுவர்.

**உயிராக் காலத்து உயிர்த்தல் உயிர் சொல்**

இவ்வாறு கூறாக் காலத்தில் உயிர் சொல்லுமாறு சொல்லுதல், ஈண்டு உயிர்த்தல் என்பது சுவாதம் எனினும் அமையும். இந் நிகழ்ச்சியைத் தோழிக்கு நாணத்தால் உரையாளாயின், தலைவி நோயபட வருந்துவாள்.

**1. வேற்று வரைவு வரின் அது மாற்றுநர் கண்:**

இது பிறன் ஒருவன் வரையவரின் அதனை மாற்றுவதற்காகவும் தன்குறி தப்புவாள் தலைவி என்பதாம்.

**அன்னை வாழிவேண்டன்னை புன்னை**

**பொன் நிறம் விரியும் பூக்கெழு துறைவனை**

**என்னை என்றும் யாமே இவ்வூர்**

**பிறிதொன் றாகக் கூறும்**

**ஆங்கும் ஆக்குமோ வாழிய பாலே**

2. **நெறிப்படு நாட்டத்து நிகழ்த்தவை மறைத்தல்:**

தலைவனோடு கூட்டம் உண்மை ஆராயுமிடத்து மெய்வேறுபாடு நிகழ்ந்துழி, தோழி அறியாமலும், செவிலி அறியாமலும் தலைவி மறைத்தல்.

3. **பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கி, ஒருமைக்கேண்மையின் உறுகுறை தெளிந்தோள் அருமை சான்ற நாலிரண்டு வகையில் பெருமை சான்ற இயல்பின் நிற்றலாவது:**

ஊழாற் கூட்டப்பட்ட புணர்ச்சியைக் குறித்து ஒற்றுமைப்பட்ட நண்பினானே தலைவன் வரைதற்குக் குறையுறுகின்றதனைத் தெளிந்த தலைவி செய்தற்கு அருமையமைந்த எண் வகையினால் பெருமை இயைந்த இயல்பினள் ஆகி நிற்றலாம்.

எண் வகையாவது மெய்ப்பாட்டியலள் அழிவில் கூட்டமென ஓதப்படும்.

**முட்டுவயிற் கழறல் முனியுமெய்ந் நிறுத்தல்**

**அச்சத்தின் அகறல் அவன்புணர்வு மறுத்தல்**

**தூதுமுனி வின்மை துஞ்சித் சேர்தல்**

**காதல் கைம்மிகல் கட்டுரையின்மையென்**

**றாயிரு நான்கே அழிவில் கூட்டம்.**

அவைகளை விளக்கமாகக் காண்போம்.

(அ) **முட்டுவயிற் கழறல்:**

இது களவு ஒழுக்கம் நிகழா நின்றுழி நிலவு வெளிப்பாடு, காவலர் சுடுதல், தாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, தலைவன் குறி வருவதற்கு இடையீடுபடுதல் ஆகியவற்றால் களவொழுக்கம் பயின்றிப் போதலைக் கூறுதலாம். தலைவி அவ்வாறு கூறி, 'இனி இவ்வொழுக்கம் அமையும்' எனக் கூறி வரைந்தெய்துமன் வரை புணர்ச்சியை விரும்பாது கலக்கம் நீங்கித் தெளிவுடையளாதல்.

(ஆ) **முனிவு மெய்ந்நிறுத்தல்:**

இக்களவு ஒழுக்கத்தினால் வந்த துன்பத்தைப் பிறர்க்குப் புலனாகாமை மெய்யின் கண் நிறுத்தல்.

(இ) **அச்சத்தின் அகறல்:**

இதனைப் பிறர் அறிவர் என்ற அச்சத்தினால் குறிவழிச் செல்லாதிருத்தல்.

(ஈ) **அவன் புணர்வு மறுத்தல்:**

தலைவன் புணர்ச்சி இல்வழியும் குறிவழிச் செல்வாள்.

(உ) **தூது முனிவின்மை:**

அவ்வழித் தலைவன் மாட்டுத் தூதாகி வரும் சொற்கேட்டலை வெறுக்காமை.

(ஊ) **துஞ்சிச் சேர்தல்:**

உறங்காமையின்றி உறக்கம் நிகழல்.

(எ) **காதல் கைம்மிகல்:**

இவ்வாறு செய்யும் காதல் அன்பின்மையன்றிஅ ன்பு மிகுதல்.

(ஏ) **கட்டுரையின்மை:**

கூற்று நிகழ்தல் இன்மை.

4. **பொய்தலையடுத்த மடலின் கண்:**

பொய்மையால் மடலேறுவேனட எனத் தலைவன் கூறியவழி பெறுத்த உள்ளத்தாளாய் குறிவழிச் செல்லாதிருத்தல்.

5. **கையறு தோழி கண்ணீர் துடைத்தல்:**

தோழி கையினால் தலைவி கண்ணீர் துடைத்த வழியாகச் செல்லாள்.

6. **வெறியாட்டிடத்து வெருவின் கண்:**

தலைவியிடத்து எதனால் வேறுபாடு உண்டானது செவிலி வெறியாட்டுவிக்க வரும் அச்சத்தினாலும் குறிவழிச் செல்.

7. **குறியின் ஒப்புமை மருளற்கண்:**

தலைவன் செய்த குறியை ஒப்புமை பற்றிச் சென்று அல்வழி மருளுதற்கண்ணும் குறிவழிச் செல்லாள் தலைவி.

8. **வரைவு தலை வருதல்:**

தலைவன் வரைய வருகின்ற நாள் அணித்தாகவரினும் தலைவி குறி வழிச் செல்லாள்

9. **களவு அறிவுறுதல்:**

களவொழுக்கத்தினைப் பிறர் அறிந்தபோதும் குறிவழிச் செல்லாள்.

**10. தமர் தற்காத்த காரணமருங்கு:**

தன்னைத் தமர் ஐயமுற்றுக் காத்த காரணப்பத்தினும் என்றவாறு.

இனி, வழுவின்று நிலைஇய இயற்படு பொருண் முதலாக ஏமம் சான்ற உவகை ஈறாகச் சொல்லப்பட்ட இடங்களில் தலைவியிடத்து உரிமையும் தலைவனிடத்தும் பரத்தமையம் நிகழப்பெறும். இவ்வாறு எல்லோரிடத்தும் நிழகாது. தலைவனையன்றி மற்றவரை எண்ணாமை தன்வயின் உரிமை என்றும், தலைவன் தன்னை விட்டு வேறு மகளிரையும் காதலிக்கிறானென்று எண்ணுதல் அவன் வயின் பரத்தமை என்று குறிப்பிடப்படும்.

1. **வழுவின்று நிலைஇய இயற்படு பொருளினும்:**

இது தலைவனைத் தோழி குறைகூறியவழி, அவனைக் குற்றமில்லாதவன் எனத் தலைவி மொழியும்போது தன்வயின் உரிமை தோன்றவும் அவன் வயின் பரத்தமை தோன்றவும் கூறுவாள் தலைவி.

**வெண்மலர் விரிக்குந் தண்ணந் துறைவன்**
**கொடியவன் ஆயினும் ஆக**
**அவனே தோழிஎன் னுயிர்கா வலனே**

2. **பொழுதும் ஆறும் புரைவது அன்மையின் அழிவுதலைவந்த சிந்தைக் கண்:**

இது தலைவன் வரும் காலமும் இடமும் குற்றமுள்ளனவாதலான் ஆண்டு அழிவு வந்த சிந்தைக்கண்ணும் தமைலமகள் தன்வழி உரிமையும் அவன் வழி பரத்தமையம் தோன்றக் கூறுவாள்.

**கொடுவரி வேங்கை...**
**அஞ்சி ஒதுங்கும் அதர்**

3. **காமம் சிறத்தல்:**

இது தலைவன் மாட்டு வேட்கை மிகுதிப்பட்டாலும் தன்வயின் உரிமையும் அவன்வயின் பரத்தமையம் தோன்றக் கூறுதல்.

4. **அவன் அளி சிறத்தல்:**

தலைவனின் அன்பு மிக்கவழியும் தன் வழி உரிமையும், அவன் வழி பரத்தமையும் தோன்றக் கூறுதல்.

5. **ஏமம் சான்ற வகை:**

பாதுகாவல் பொருந்திய மகிழ்ச்சி அதாவது, இவன் வரைந்தல்லது நீங்கான் என்னும் உவவக வந்துழி தன்வயின் உரிமையும் அவன் வழி பரத்தமையும் தோன்றக் கூறுவாள்.

**தலைவி தானே கூறும் காலம்:**

தலைவி தானே கூறும் மூன்றிடங்களாவன:

**வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்**

**வரையா நாளிடை வந்தோன் முட்டினும்**

**உரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணும்**

**தானே கூறுங் காலமும் உளவே** (22)

1. **வரைவிடை வைத்த காலத்து வருந்துதல்:**

'இன்ன நாளில் உன்னை மணப்பேன்' எனக் கூறித் தலைவன் இயற்கைப் புணர்ச்சி புணர்த்து நீங்குகிறாள். அதனால், இனி தோழியிற் கூட்டத்திற்கு முயலாது தணப்பான். தோழி ஐயப்படாமலிருக்கத் தலைவி தலைவன் வரும் துணையும் ஆற்றாது வருத்த முறுவாள்.

**சூர்மலை நாடன் கேண்மை**

**நீர்மலிக் கண்ணொடு நினைப்பாகின்றே**

2. **வரையா நாளிடை வந்தோன் முட்டுதல்:**

வரையாத நாளின்கண் மறைந்தொழுகிவரும் தலைவன் செவிலி முதலானோரை எதிர்ப்பட்டவழி தலைவி மாட்டுச் சொல் நிகழும்.

**நுழையும் மடமகன் யார்கொலென் றன்னை**

**புழையும் அடைத்தாள் கதவு**

3. **உரை எனத் தோழிக்கு உரைத்தல்:**

இவ்வொழுகத்தினை நின் தோழிக்கு உரையெனத் தலைவன் கூறிய வழி தலைவி மாட்டுச் சொல் நிகழும்.

கூற்றினும் நாணமும் கற்பும் கடவாமை பற்றிக் கூறும் நூற்பா வருமாறு:

**உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**

**செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்**

**தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு**

**காமக் கிழவன் உளவழிப் படினும்**

**தாவிவ் நன்மொழி கிழவி கிளப்பினும்**

**ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே** (23)

உயிரினும் சிறந்தது நாணம். அதனினும் குற்றமற்ற காட்சியினை உடைய கற்பு சிறந்தது என முன்னோர் கூற்றை உட்கொண்டு தலைவன் உள்ள இடத்.துச் செல்லலும், வருத்தமில்லாச் சொல்லைத் தலைவி சொல்லுதலும் ஆகிய அவ்வகை பிறவும் தோன்றும். தலைவன் இருக்குமிடத்தே தானே செல்லுதல் நாணுடைமைக்கு இழுக்கன்றோ எனின் அற்றன்று நாணத்தை விடக் கற்பு சிறந்தது என்பதால் அக்கற்பைக் காத்தற் பொருட்டுச் செல்லலாம்.

**களவில் தோழி கூற்று நிகழும் இடங்கள்:**

**நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்**
**செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்**
**புணர்ச்சி எதிர்பாபடுள்ளுறுத்து வரூஉம்**
**உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை**
**மெய்யினும் பொய்யினும் வழிநிலை புழையாது**
**பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானுங்**
**குறையுறற் கெதிரிய கிழவனை மறையுறப்**
**பெருமையிற் பெயர்ப்பினும் உலககுரைத் தொழிப்பினும்**
**அருமையின் அகற்சியும் அவளறி வுறுத்துப்**
**பின்வா வென்றலும் பேதைமை யூட்டலும்**
**முன்னுறு புணர்ச்சி முறைநிறுத் துரைத்தலும்**
**அஞ்சியச் சுறுத்தலும் உரைத்துழக் கூட்டமொடு**
**எஞ்சாது கிளந்த இருநான்கு கிளவியும்**
**வந்த கிழவனை மாயம் செப்பிப்**
**பொறுத்த காரணம் குறித்த காலையும்**
**புணர்ந்தபின் அவன்வயின் வணங்கற் கண்ணுங்**
**குறைந்தவட் படரினும் மறைந்தவ ளருகத்**
**தன்னொடும் அவளொடும் முதன்மூன் றளைஇப்**
**பின்னிலை நிகழும் பல்வே மருங்கினும்**
**நன்னயம் பெற்றுழி நயம்புரி இடத்தினும்**
**என்னரும் பன்னகை கண்ணிய வகையினும்**
**புணர்ச்சி வேண்டினும் வேண்டாப் பிரிவினும்**
**வேளாண் பெறுநெறி வேண்டிய இடத்தினும்**
**புணர்ந்துழி உணர்ந்த அறிமடச் சிறப்பினும்**
**ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்**

**செங்கடு மொழியாற் சிதைவுடைத் தாயினும்**
**என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ**
**அன்புதலை யடுத்த வன்புறைக் கண்ணும்**
**ஆற்றதுதீமை அறிவுறு கலக்கமும்**
**காப்பீன் கடுமை கையற வரினும்**
**களனும் கொழுதும் வரைநிலை விலக்கிக்**
**காதல் மிகுதி உளப்படப் பிறவும்**
**நாடும் ஊரும் இல்லும் குடியும்**
**பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி**
**அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ**
**அனைநிலை வகையான் வரைதல் வேண்டினும்**
**ஐயச் செய்கை தாய்கெதிர் மறுத்துப்**
**பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்**
**அவள் விலங் குறினுங் களம்பெறக் காட்டினும்**
**பிறன் வரைவு ஆயினும் அவன் வரைவு மறுப்பினும்**
**முன்னிலை அறனெனப் படுதல் என் றிருவகைப்**
**புரைதீர் கிளவ தாயிடைப் புகுப்பினும்**
**வரைவுடன் பட்டோர்க் கடாவல் வேண்டினும்**
**ஆங்கதன் தன்மையின் வன்புறை உளப்படப்**
**பாங்குற வந்த நாலெட்டு வகையினும்**
**தாங்கருஞ் சிறப்பின் தோழி மேன.** **(24)**

இது களவொழுக்கத்தின் கண் தோழியின் கூற்றெல்லாம் தொகுத்து உணர்த்தும் நூற்பாவாகும்.

**நாற்றம்:** பூவினாலும் சாந்தினாலும் தலைவன் மாட்டு உளதாகிய களவியால் தலைவி மாட்டு உதாகிய மணம்.

**தோற்றம்:** புணர்ச்சியான் வரும் பொலிவு.

**ஒழுக்கம்:** ஆயத்தாரோடு வேண்டியவாறு ஒழுகாமல் விளையாட்டுகளைத் தவிர்த்துத் தன்னைப் பேணி ஒழுகல்.

**உண்டி:** உண்ணும் அளவில் குறைதல்.

**செய்வினை மறைத்தல்:** பூங்கொய்தலும், புனலாடலும் போன்ற வினைகளைத் தோழியை மறைத்துத் தனியாக நிகழ்த்துதல். தலைவனுடன் புணர்ந்த செயலைப் புலப்படவிடாது தோழியிடம் மறைத்தல் என்றும் கொள்ளலாம்.

**செலவினும்:** என்பது எத்திசையும் சென்று விளையாடுவாள் ஒரு திசையை நோக்கிச் சேறல்.

**பயில்வினும்:** என்பது ஓரிடத்துப் பயிலுதல்.

தலைவியது இத்தகைய வேறுபாடுகளால் கூட்டமுண்மையைத் தோழி அறிவாள்.

**புணர்ச்சி எதிர்ப்பாடு:** புணர்தற்கு முந்துற்ற காலம்.

**உள்ளுறுத்தல்:** உட்கோடல்.

**பல்வேறு கவர்பொருள் நாட்டம்:** ஒன்றொடு ஒன்று வேறுபட்டவனவாகி இருபொருள் பயக்கம் சொற்களாலே ஆராய்தல்.

தலைவனும், தலைவியும் தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்த நிகழ்ச்சியினை நாற்றம், தோற்றம், ஒழுக்கம் உண்டி, செய்வினை மறைத்தல் செலவு, பயில்வு எனும் ஏழு வகையான் அறிந்து இருவரிடத்தும் புணர்ச்சி உண்டு என்பதைத் தோழி அறிவாள். அதன் பிறகு தலைவிக்குக் குற்றேவல் செய்யும் தன்மையில் பல்வேறு கவர் பொருள்படக் கூறி ஆராய்வாள்.

1. **பெருமையிற் பெயர்த்தல்:**

தன்னிடம் குறையிரந்த தலைவனை அவனது பெருமை கூறி மாற்றுவது.

2. **உலகுரைத் தொழித்தல்:**

உலகத்தார் மகட்கொள்ளுமாறு போல நியும் கொள் என உரைத்தல்.

**கோடீர் எவ்வளைக் கொழுமடற் கூந்தல்**
**ஆய்தொடி மடவரல் வேண்டுதி யாயின்**
**தெண்கழச் சேயிறாற் படுஉந்**
**தண்டகடற் சேர்ப்ப விரைந்தனை கொண்மோ**

3. **அருமையின் அகற்சி:**

தலைவியை அடைவதற்கு அருமை கூறி அகற்றுதல்.

**நெடுநலும் முன்னா ளெல்லையம் ஒருசிறப்...**
**எம்பதத் தெளியள் அல்லள் எமக்கோர்**
**கட்காண் கடவுள் அல்லளோ பெரும...**
**மஞ்சூழ் மணிவரை மன்னவன் மகளே**

**4. அவளறிவுறுத்துப் பின்வாறென்றல்:**

நின்னால் காதலிக்க பட்டவளுக்குச் சென்று அறிவித்துப் பிறகு என் மாட்டு வா என்றல்

**5. பேதைமையூட்டல்:**

தலைவி நின் நோயையறியும் அறிவனள் அல்லள். அவள் பேதைப் பருவத்தினள் எனக் கூறி விலக்குதல்.

**........தங்கை பிறர் நோய்க்கு**

**நொந்தினைய வல்லளோ நோக்கு**

**6. முன்னுறு புணர்ச்சி முறை நிறுத்து உரைத்தல்:**

முன்பு கூடினாற்போல் இன்னும் கூட அமையம் என்று முன்னுறு புணர்ச்சி

நீங்கவிடாது கூறுதல்.

**7. அஞ்சிஅ ச்சுறுத்தல்:**

யாய் வருவள், தமையன் மார் வருவர், காவலர் வருவர் என்றஞ்சித் தான் அஞ்சின அத்தமையைத். தலைவனுக்குக் கூறுதல்.

**யானை உழலும் அணிகிளர் நீள்வரைக்**
**கானக வாழ்க்கைக் குறவர் மகளிரேம்**
**ஏனலுள் ஐய வரவுமற் றென்னைகொல்**
**காணினுங் காய்வர் எமர்**

**8. உரைத்துழிக் கூட்டம்:**

நின்னால் காதலிக்கப்பட்டாள் யாவள் என வினாயவழி இத்தன்மையாள் எனத்

தலைவன் சொல்லக் கேட்டத் தோழி அவளும் நுன் தன்மையாள் என அவனோடு கூட்டியுரைத்தல்.

**9. வந்த கிழவனை மாயம்செப்பிப் பொறுத்த காரணம் குறித்தல்:**

மாயம் செப்பி வந்த தலைவனைத் தலைவி பொறுத்த காரணம் குறித்தகாலை

தோழிக்குக் கூற்று நிகழும். மாயம் செப்புதலாவது யானை போந்ததோ? மான் போந்ததோ எனக் கூறுதல்.

**கடுங்களிறு காணீரோ என்றீர்**

**10. புணர்ந்தபின் அவன்வயின் வணங்கல்:**

இயற்றைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் எனும் மூவகையானும் புணர்ச்சியுண்மை பொருந்தியபின் தலைவன் கண் தாழறநிற்றற்கண் கூற்று நிகழும். 'நீ கருதியது முடிக்கற்பாலை' எனவும் 'நீ இவளைப் பாதுகாத்தல் வேண்டும' எனவும் உரைப்பாள்.

**இனி தீ..........**

**நெடிதுள்ளல் ஓம்புதல் வேண்டும் இவளே....**

**இழையணி அல்குல்என் தோழியது கவினே**

**11. குறைத்து அவட்படர்தல்:**

தலைவன் புணர்ச்சி உண்மையறிந்து பணிந்து நின்ற தோழி தானும் குறையுற்றுத்

தலைவிமாட்டு செல்லுதற்கண் கூற்று நிகழும்.

**12. மறைந்து அவள் அருகத் தன்னொடும் அவளொடும் முன்னம் முன் தளைஇப் பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கு:**

நாணம் மிகுதியால் தலைவி தன் வேட்கையை ஒளித்து, தோழி கூறுதற்கு உடன்படாது நிற்கவே தலைவன் தலைவி இருவரிடத்தும் முன்பு நிகழ்ந்த இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் ஆகிய மூன்றையும் தான் அறிந்தமை, கூற்றினால் அன்றிக் குறிப்பினால் உணர்த்திக் தலைவியை இரந்து பின் நிற்றல் எனப்படும் பலவகையிடத்தும் தோழி கூற்று நிகழும்.

**13. நன்னயம் பெற்றுழி நயம்புரி இடம்:**

தலைவி குறை நயந்தமையைத் தலைவனுக்கு கூறுமிடத்தும் கூற்று நிகழுன்.

**நெய்தற் பரப்பிற் பாவை கிடப்ப**

**நின்குறி வந்தனென் இயல்தேர்க் கொண்க**

களவொழுக்கம் நிகழும்போது தலைவன் வரும் எனவும், வந்தான் எனவும் கூறும் கூற்றும் இதன்பாற்படும்.

**நிலவு மறைந்தன்று இருளும் பட்டன்று**

**------------------------------**

**தமியன் வந்தோன் பணியலை நிலையே**

**14. எண்ணரும் பன்னகை கண்ணியவகை:**

எண்ணுதற்கரிய பல நகையாட்டுக்களைத் தலைவனிடம் குறித்த வகையும் கூற்று

நிகழும். நகையாட்டாவது, இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனாயின் அலர் தூற்றி நகைப்பர்.

**அன்னையும் அறிந்தனள் அலரு மாயின்று**

**15. புணர்ச்சி வேண்டல்:**

மேற்சொல்லப்பட்ட அனைத்தையும் தலைவனுக்கு அறிவுறுத்திய பின்னம் அவன்

புணர்ச்சி வேண்டினானாயின் அவ்வழியும் கூற்று நிகழும். இரவில் வருவானைப் பகல்வா என்றலும், பகல் வருவானை இரவு வா என்றலும் குறி பெயர்தலும் செய்வாள் தோழி.

**நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றாற் கௌவையாற்**

**காமம் நுதுப்பேம் எனல்**

**16. வேண்டாப்பிரிவு:**

புணர்ச்சி வேண்டாது பிரிவை வேண்டுமிடத்தும் கூற்று நிகழும். அலராகும்

என்றஞ்சி ஒருவழித் தணத்தல் போன்றவையால் பிரிவு நேரும், அப்பிரிவும் மெய்யாற் பிரிதலேயன்றி நெஞ்சினாந் பிரிதலன்றாம்.

**இறவுப்புறத் தன்ன ... ... சேர்ப்ப!**

**இனமணி நெடுந்தேர் பாகன் இயக்கச்**

**செலீஇய சேறி யாயின் இவளே**

**வருவை யாகிய சின்னாள்**

**வாழா ளாதல்நற் கறிந்தனை சென்மே**

**17. வேளாண் பெருநெறி வேண்டுதல்:**

தலைவனுக்குத் தலைவி மறைவாக விருந்தோம்புவதை விரும்பியவிடத்தும் தோழி

கூறுவள்.

**நெடுவேள் மார்பின் ஆரம்போலச்**

**சிறுகுரல் நெய்தலெம் பெருங்கழி நாட்டே**

**18. புணர்ந்துழி உயர்ந்த அறிமடச் சிறப்பு:**

தலைவனோடு தலைவி புணர்ந்தவழி ஆண்டுப் பொருந்திய அறிவு மடம்பட்ட சிறப்பின்கண் அ.்.தாவது, அல்குறிப்பிடுதலின் கண் கூற்று நிகழும்.

**கொடுமுள் மடல்தாழைக் கூம்பவிழ்ந்த ஒண்பூ**

**இடையள் இழுதொப்பத் தோன்றிப் .....படையெலாந்**

**தெய்வம் கமழுந் தெளிகடல் தண்சேர்ப்பன்**

**செய்தான் தெளியாக் குறி**

**19. ஓம்படைக் கிளவி பாங்கின் கண்:**

ஓம்படுத்துதற் பொருட்பகுதிக் கண்ணும் கூற்று நிகழும், ஓம்படை என்பது பாதுகாப்பு

ஒருவழித் தணக்கும்போதும், வரை விடைப் பிரிவின் போதும், புணர்ச்சி இன்றி நீங்கும்போதும் 'தலைவியைப் பாதுகாத்துக் கொள்' எனக் கூறுவாள் தோழி.

**20. செங்கடுமொழியால் சிதைவுடைத் தாயினும் என்பு நெகப் பிரிந்தோள் வழிச் சென்று கடைஇ அன்பு தலையெடுத்த வன்புறை அல்லது இயற்பழித்து வற்புறுத்தல்:**

செவ்விய கடிய சொல்லினானே, தலைவன் அன்பு சிதைவுடைத்தாயினும் என்பு

உருகுமாறு பிரியப்பட்டவளிடத்துச் சென்று தலைவன் அன்புடைமையின் அளிப்பன் என ஆற்றுவித்த வற்புறுத்தற்கண் தோழி கூற்று நிகழும். செங்கடு மொழி என்றது கொடிய கடுமொழியே அன்றி மனத்தினான் இனியளாகிக் கூறும் கூற்று. அ.். தாவது இயற்பழித்தல், அவ்வாறு இயற்பழித்த வழித் தலைவன் அன்பு சிதைவுடைத்தாயினும் என்றவாறு, அன்பு தலையடுத்த வன்புறையாவது தலைவன் இன்றியமையாள் என ஆற்றுதல்.

**மகிழ்நன் மார்பே வெய்யை எனநீ**

**அழியல் வாழி தோழி நன்னன்**

**நறுமா கொன்று நாட்டிற் போகிய**

**ஒன்றுமொழிக் கோசர் போல**

**வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே**

இது வன்புறைக்கு எடுத்துக்காட்டாகும்.

**21. ஆற்றது தீமை அறிவுறு கலக்கம்:**

தலைவன் வருநெறியினது தீமையைத் தாங்கள் அறிவுற்றதனாக் எய்திய கலக்கம்

**ஆரிருள் பெருகின் வாரல்**
**கோட்டுமா வழங்குங் காட்டக நெறியே**

**22. காப்பின் கடுமை கையற வருதல்:**

காவற்கடுமை வரையிகந்ததனால் வரும் கூற்று

**பல்லோர் துஞ்சு நள்ளென் யாமத்து**
**உரவுக் களிறு போல்வந் திரவுக் கதவ முயறல்**
**கேளேம் அல்லேங் கேட்டனம் பெரும**
**ஓரி முருங்கப் பீலி சாய**
**நன்மயில் வரைப்பட் டாங்குயாம்**
**முயங்தொறு முயங்கும் அறனில் யாயே**

**23. களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக் காதல் மிகுதி உளப்பட பிறவும் கூறல்:**

குறியிடமும் காலமுமாகத் தாங்கள் வரைந்த நிலைமையை விலக்கித் தலைவியின்

காதல் மிகுதி உட்படப் பிறவும் கூறுங்கால் கூற்று நிகழும்.

**சிறு கோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்**

**உயில் தவச் சிறிது காமமோ பெரிதே**

'பிறவும்' என்றதனால் தலைவனைப் பழித்தபோதும், புனக்காவல் இனி இல்லை என்றபோதும், குறவர் இயர்புணர்த்தி வரைக என்ற போதும் வெறி அச்சுறுத்திய போதும், அருளல் வேண்டும் என்ற போதும், தலை மகள் தன்னை அழிந்தமை கூறியபோதும், தலைவன் ஊறு அஞ்சிய போதும் ஆகிய இடங்களிலெல்லாம் தோழிக்குக் கூற்று நிகழும்.

**24. நாடும் ஊரும் இல்லும் குடியும் பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி அவன் வயின் தோன்றிய கிளவியொடு தொகை அனைநிலை யான் வரைதல் வேண்டல்:**

தலைவனது நாடும் ஊரும் இல்லும் குடியும் பிறப்பும் சிறப்பும் மிகுதியும் நோக்கித் தலைவன் மாட்டுக் கிளக்கும் கிளவியோடே கூட அத்தன்மைத்தாகிய நில வகையினாலே வரைதல் வேண்டியும் தோழி கூறுவாள். நாடு முதலாயின சுட்டித் தலைவன் மாட்டுத் தோன்றும் கிளவிகள், நீ இத்தன்மைத்தாகிய இல்லை உடையை: இத்தன்மைத்தாகிய குடிப்பிறப்பினை உடையை என்பன போலவாம். தலைவன் மாட்டுத் தோழி இவற்றைக் கூறுவாள்.

**கோழிலை வாழை**

**பல்வேறு விலங்கும் எய்து நாட**

**குறித்த இன்பம் நின்ககெவன் அரிய**

**25. ஐயச் செய்கைதாய்க் கெதிர் மறுத்துப் பொய்யென மாற்றி மேய் வழிக் கொடுப்பினும்:**

பிறரோடு கூட்டம் உண்டெனச் சொல்லி ஐயுற்றவழி அதனை மறுத்த தலைவி செய்த செய்கையைப் பொய்யென நீக்கிப் பிறிதோர் ஆற்றான் மெய்வழிக் கட்டுப்படும்போது கூற்று நிகழும்.

**உரும்உரது கருவிய பெருமழை தலைஇப்...**

**தாம்வேண் டுருவின் அணங்குமார் வருமே....**

**கனவு ஆண்டு மருட்டலும் உண்டே...**

**26. அவள் விலங்குறினும்:**

தலைவி காப்பு மிகுதியாயினும் காதல் மிகுதியானும், நொதுமலர் வரைவினானும், தமர் வரைவு மறுத்தததினானும் வேறுபட்டவழி இ∴து எதனால் ஆயிற்று எனச் செவிலி அறிவுரை வினாவுமிடத்துத் தோழிக்குக் கூற்று நிகழும்.

**27. களம் பெறக் காட்டினும்:**

குறிபார்க்கும் இடத்தில் கூற்று நிகழும்

**28. பிறன் வரைவு ஆயினும்:**

பிறர் வரைவு வந்துழி கூட்று நிகழும்

**29. அவன் வரைவு மறுப்பினும்:**

கூற்று நிகழும்.

**30. அறனெனப்படுதல் என்றிருவகை புரைதீர் கிளவி தாயிடைப் புகுதல்:**

முன்னிலை வகையானதால், அறத்தொடு நிலை வகையினானாதல் இவ்விரு வகையானும் தலைவற்கும் தலைவிக்கும் தனக்கும் குலத்திற்கும் குற்றம் தீர்ந்த கிளவியைத் தாய்மாட்டுப் புகலிடுத்தற்கண் கூற்று நிகழும்.

**31. வரைவுடன் பட்டோர்க் கடாவல் வேண்டியும்:**

என்பது தமர் வரைவுடன் பட்டமையைத் தலைவற்கு உரைக்க வேண்டியும் கூற்று நிகழும் என்பதாம்.

**32. ஆங்கதன் தன்மையின் வன்புறை:**

அவ்வாறு வரைவுடம்பட்ட தன்மையினால் தலைவியை வற்புறுத்தற் கண்ணும் கூற்று நிகழும்.

**அறத்தொடு நிற்றல்**

**எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்**

**கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு**

**உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇய**

**ஏழு வகைய என்மனார் புலவர்.**

இந்நூற்பாவான் அறத்தொடு நிற்றலின் பகுதி ஏழுவகை என உரைப்படும். அவற்றின் விளக்கம்.

(அ) **எளித்தல்:**

தலைவனை எளியனாகக் கூறல். காட்சிக்கெளியனாய்த் தலைமையின்றித் தன்னிடம் வந்து குறையிரக்கும் தலைவனைக் கூறுதல்.

**எல்லும் எல்லின் றசைவுபெரி துடையன்**

**மெல்லிசைப் பரப்பின் விருந்துணை வொருவன்**

**(ஆ) ஏத்தல்:**

தலைவனை உயர்த்திக் கூறுதல். மகளுடையதாயார் 'தலைவன் உயர்ந்தவன்' என்றவழி மனம் மகிழ்வராதலின் அவ்வாறு கூறப்பட்டது. உயர்த்துக்கூறி அறத்தொடு நிற்கப்பெறும் என்றவாறு.

**அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்...**

**அதனை வுண்டுகோள் மதிவல் லோர்க்கே**

**(இ) கூறுதல்:**

தலைவியைத் தலைவற்குக் கொடுக்க வேண்டும் என்பது படக் கூறுதல்.

**வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்**

**கோடாது நீர்கொடுப்பின் அல்லது ___ வாடா**

**எழிலும் முலையும் இரண்டிற்கு முந்நீர்ப்**

**பொழிலும் விலையாமோ போந்து**

**(ஈ) உசாவுதல்:**

வெறியாட்டும் கழங்கும் இட்டுரைத்துழி வேலனோடாதல் பிற ரோடாதல் தோழி உசாவுதல்.

**முருகயந்த வந்த முதுவாய் வேல**

**சினவல் ஓம்புமதி வினவுவ துடையேன்**

(உ) **ஏதீடு தலைப்பாடு:**

யாதானும் ஒரு ஏதுவை இடையிட்டுக் கொண்டு தலைப்பட்டமை கூறுதல் அதாவது 'புனலிடை உதவினான்' என்றும், 'களிற்றிடை உதவினான்' என்றும், 'தழையும் கண்ணியும் தந்தான் என்றும், வருவது.

**அன்னாய் வாழிவேண் டன்னை என்னை**

**தானு மலைந்தான் எமக்குந்தழை யாயின**

**பொன்வீ மணிஅரும் பினவே**

**என்ன மரங்கொலவர் சாரல் அவ்வே**

**(ஊ) உண்மை செப்பும் கிளவி:**

பட்டாங்கு கூறுதல்.

**களவில் செவில் கூற்று**

**களவல ராயினுங் காமேற் படுப்பினும்**

**அளவுமிகத் தோன்றினுந் தலைப் பெய்து காணினுங்**

**கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்**

**ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்**

**ஆடிய சென்றுனி அழிவுதலை வரினுங்**

**காதல் கைம்மிகக் கனவின் அரற்றலுந்**

**தோழியை வினாவலுந் தெய்வம் வாழ்த்தலும்**

**போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக்**

**கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்**

**பிரிவின் எச்சத்து மகள் நெஞ்சு வலிப்பினும்**

**இருபாற் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்**

**இன்ன வகையிற் பதின்மூன்று கிளவியொடு**

**அன்னவை பிறவுஞ் செவிலி மேன** **(28)**

1. **களவு அலர் ஆதல்:**

தலைவன் ஒழுகலாறு புறத்தார்க்குப் புலனாகி அலர் தூற்றப்பட்ட விடத்துத் தோழியைச் செவிலி வினவுவாள்.

2. **காமம் மேற்படுதல்:**

தலைவியிடத்து உண்டாகிய காமவேட்கை அளவு கடந்த போதும் செவிலி தோழியை வினவுவாள்.

**மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை**
**அணியில் திகழ்வதொன் றுண்டு**

3. **அளவுமிகத் தோன்றல்:**

பெதும்பைப் பருவத்தாளாகிய தலைவி புணர்ச்சியாற் கதிர்த்து வீங்குகின்ற முலையும் புதிதுற்ற கவினும் கண்டவிடத்தும் செவிலி தோழியை வினாவுவாள்.

4. **தலைப்பெய்து காணுதல்:**

தலைவனோடு தலைவியைத் தலைப்பெய்து (ஒன்றாகக்) காணினும் வினாவுவாள்.

5. **கட்டினும்:**

கட்டிவைப்பித்த வழியும் அவர் சொற்கேட்டுத் தோழியை வினாவுவாள்.

6. **கழங்கினும்:**

கழங்கு வைதர்துழியும் அவர் பொற்கேட்டுத் தோழியை வினவுவாள்.

7. **வெறியென இருவரும் ஒட்டிய திறத்தாற் செய்திகள்:**

குறி சொல்லும் கட்டுவிச்சியும் வேலனும் தெய்வத்திற்குச் சிறப்பு செய்யாவிட்டால் இந்நோய் தீராது என்னும் போது செவிலி கூற்று நிகழ்த்துவாள்.

8. **ஆடிய சென்றுழி அழிவுதலை வருதல்:**

வெறியாடச் சென்றவழி அதற்குத் தலைவி அழிவுறுத்துமிடத்து (வருந்துமிடத்து) வந்தபோது செவிலி வினவுவாள்.

**9. காதல் கைம்மிகக் கனவினரற்றல்:**

தலைவி காதல் மிகுதியால் தலைவனை உள்ளிக் கனவின் அரற்றுகிறபோது செவிலி கூற்று நிகழ்த்துவாள்.

**தோழியை வினாதல்**

களவு அலராதல் முதல் கனவின் அரற்றல் ஈறாகக் கூறப்பட்ட ஒன்பதும் தோழியை வினாதற் பகுதி. அவ்வொன்பதும் செயல்களும் நிகழாத வழி வினாதல் இல்லை. அதனால் தோழியை வினாதல் என்னும் இதனை ஒரு கூற்றாகக் கொள்ள வேண்டுவதில்லை.

**10. தெய்வம் வாழ்த்துதல்:**

இவ்வாறு பட்டதெனத் தோழி உரைத்தவழி இதனை நற்றாய்க்கும் தந்தைக்கும் கூறமுடியாமல் தெய்வத்தை வேண்டிக் கோடல்.

**11. போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக் கற்பின் ஆக்கத்து நிற்றல்:**

தானும் தோழியொடு கெழுமி இல்லறத்தின் கண் நிறுத்தும்போது செவிலிக்குக் கூற்று நிகழும்.

**12. பிரிவின் எச்சத்து மகள் நெஞ்சு வலித்தல்:**

தோழியால் தலைவி உடன் செல்லத் துணிந்ததை அறிந்த பின்னர்த் தலைவியின் இல்லறத்தை எண்ணி உவந்து கூறுவது, உடன் போயது தெரிந்து பின் செல்லாத் காத்தும் கூற்று நிகழ்த்துவாள் செவிலி.

**13. இருபாற் குடிப் பொருளியல்பின் கண்:**

தலைவனது குடிப்பெருமை தன் குடிப்பெருமையோடொக்கும் என ஆராய்தற்கண் செவிலி கூற்று நிகழும்.

நூற்பாவில் பிறவும் என்றதனான்,

**நாற்றம் பெற்று நிலைப்புக் காண்டல்**
**உண்டியிற் குறைதல் உடம்புநனி சுருங்கல்**
**கண்துயில் மறுத்தல் கோலஞ்செய் யாமை**

முதலாயினவற்றையும் கொள்ள வேண்டும். இவையும் வினாவுதற்கு ஏதுவாம்.

களவில் தோழி கூற்று நிகழ்த்துமிடங்களைப் பற்றி அறிந்தோம், இனி, தலைவன், தலைவி, தோழி, செவிலி ஆகியோரின் இயல்புகளை அறிவோம்.

**தலைவன் இயல்பு**

களவொழுக்கத்தின் கண் தலைவனின் இயல்புகளை எடுத்தியம்பும் தொல்காப்பிய நூற்பாக்கள் வருமாறு:

**மறைந்த ஒழுக்கத் தோரையும் நாளும்**

**துறந்த ஒழுக்கம் கிழவோற் கில்லை**

**ஆற்றின தருமையும் அழிவும் அச்சமும்**

**ஊறும் உளப்பட அதனோ ரன்ன**

**அம்பலும் அலரும் களவுவெளிப்படுத்தலின்**

**அங்கதன் முதல்வன் கிழவ னாகும்**

**இவற்றின் விளக்கம்**

களவொழுக்கத்தின் கண் முகூர்த்தமும் நாளும் துறந்து ஒழுகும் ஒழுக்கம் தலைவனுக்கு இல்லை. ஆண்டு, தலைவன் அறத்தின் வழுவினானல்லன்; தலைவி மாட்டு தலையளி குறைதலான் என்றவாறு என்பர் இளம்பூரணர்.

செல்லும் நெறியினது அருமையும் மனன் (விருப்பம்) அழிவும், அஞ்சுதலும், இடையூறும் தலைவன் மாட்டு நிகழாது.

அம்பல் அலர் இரண்டுக்கும் காரணமானவன் தலைவன், தலைவனை அறிந்தல்லது ஐயம் நிகழாது. தலைவியிடம் காணப்படும் வேறுபாட்டைக் கண்டு அலர் நிகழாதோ எனின் நிகழாது. அந்நேரத்து, எதனால் இந்த வேறுபாடு நிகழ்ந்தது என்று ஐயம் நிகழுமேயன்றி துணிவு பிறவாது. அதனால் தலைவனை அறிந்தன்றி அலரும் அம்பலும் நிகழாது என்பது உணரப்படும்.

**தலைவியின் இயல்பு**

**பன்னூறு வகையினும் தன்வயின் வரூஉம்**

**நன்னய மருங்கின் நாட்டம் வேண்டலின்**

**துணைச் சுட்டுக் கிளவி கழவிய தாகும்**

**துணையோர் கருமம்ஆக லான**

இந்நூற்பா களவில் தலைவிக்கு உரியதோர் இயல்புணர்த்திற்று.

தலைவியிடத்துக் காணப்படும் வேறுபாட்டைப் பலநூறு வகையாலும் தலைவியிடத்து அன்புமிகக்கொண்ட தோழியும் செவிலியும் ஆராய்ந்து வருதலால் தலைவி தனது துணையைச் சுட்டிக் கூறவேண்டியவளாகிறாள். அவ்வாறு கூட்டிக் கூறியபின் தோழியும், செவிலியும் முயன்று மணமுடித்து வைப்பார்கள். இதுரு தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல் எனப்படும். தலைவி தோழிக்கும் தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும் அறத்தொடு நிற்பர்.

**தோழியின் இயல்பு**

**தோழிதானே செவிலி மகளே**

**சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே**

**தோழியின் முடியும் இடனுமார் உண்டே**

தலைவன் தலைவியின் காதல் வாழ்வில் மிகப் பெரும் பங்கு வகிப்பவள் தோழியாவாள். தலைவி மாட்டு அன்புமிக உள்ளவளாதலின். இன்னல் மிகப்பட்டும் அவளுக்கு உதவி நிற்பாள். தலைவனின் பண்புகளை நன்கு ஆராய்ந்து தெளிந்து அதன் பின்னரே தலைவியிடம் கூட்டுவிப்பாள். தலைவிக்குத் தோழிகள் பலருண்டு. ஆயினும், செவிலியின் மகளான தோழியே உயிர்த் தோழியாவாள். பயின்றாரெல்லாம் தோழியாகார். அருமறை கிளத்துப்படுதலான், உடன் முலையுண்டு வளர்ந்த செவிலி மகளே தோழி எனப்படுவாள் என்பர் இளம்பூரணர்.

தலைவனும் தலைவியும் உசாவுதற்குத் துணையாகிய நிலையைமயினாலே இருவர்க்கும் புணர்ச்சியின்மையை நாற்றமத் முதலிய ஏழுவகையானும் ஆராய்தல் தோழிக்கு உரியது. எனவே செவிலி மகள் என்பதனால் அவளுக்குச் சிறப்பின்று, தலைவனின் குறையிரத் தலையும் தலைவியின் வரைதல் வேட்கையையும் சிறப்பாக முடித்து வைத்தலே அவள் கடனாம்.

தோழி குறித்த இடமும் தலைவி சென்று கூடுதற்குரிய இடமாம்.

**தோழியின் மரபு**

பின்வரும் மூன்று நூற்பாக்களும் களவில் தோழியின் மரபு உணர்த்த வந்தன.

**குறையுற உணர்தல் முன்னுற உணர்தல்**
**இருவரும் உள்வழி அவன்வர வுணர்தலென**
**மதியுடம் படுத்தல் ஒருமூ வகைத்தே**

**அன்ன வைகயான் உணர்ந்தபின் அல்லது**
**பின்னிலை முயற்சி பெறானென மொழிப**

**முயற்சிக் காலத்து அதற்பட நாடிப்**
**புணர்த்தல் ஆற்றலும் அவள்வயி னான**

**மதியுடம் படுத்தல்**

பாங்கற் கூட்டத்தின் பின் தலைவியைக் கூட முடியாமல் வருந்தும் தலைவன், தலைவியின் காதல் தோழியை அறிந்து குறையிரந்து தலைவியைக் கூட எண்ணுவான். அங்ஙனம் முயலும்போது தன் குறையை வெளிப்படையாக அப்படியே கூறாமல் கரந்த மொழியால் கூறுவான். நிலை உணர்ந்த தோழி இருவர் கருத்தையும் தன் அறிவோடு ஒன்றுபடுத்தி உணர்வாள். இம்மதியுடம்படுத்தல் மூவகைப்படும். அவையாவன:

1. குறையுற உணர்தல்
2. முன்னுற உணர்தல்
3. இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல்

மேற்சொன்ன கூறுபாட்டான், தலைவன் தலைவி இருவர் மாட்டும் அன்புடைமை உணர்ந்தபின் அல்லது அவர்கள் கூட்டத்திற்குத் தோழி முயற்சி மேற்கொள்ளப் பெறாள்.

தலைவியைக் கூறுதற்கு முயலுங்காலத்தே, நாடி தலைவி கூடுதற்கு முயலுதலை ஆராய்ந்து தலைவனிடம் கூட்டுதலும் தோழியிடத்துண்டான செயல்திறமாகும்.

**வினாக்கள்**

1. இயற்கையில் ஏற்படும் களவு ஒழுக்கங்களை குறிப்பிடு.
2. களவியல் ஒழுக்கத்தின் நால்வகைகளையும் விளக்குக.
3. அந்தணர் நூலில் கூறப்படும் மணங்கள் எட்டனையும் விளக்குக.
4. தோழியின் மரபும், செவிலியின் இயல்பும் பற்றிக் களவியலில் அறியப்படும் செய்திகள் யாவை?
5. மெய்யுறு புணர்ச்சி நிகழும் காலம் பற்றி விரித்தெழுதுக.
6. களவில் தலைவன் கூற்று நிகழும் இடங்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.
7. களவில் தலைவிக்குரிய கூற்று நிகழுமிடங்களை விளக்குக.
8. களவில் தோழி கூற்று நிகழிடங்களை வரைக.
9. அறத்தொடு நிற்றலை விளக்கி ஒரு கட்டுரை வரைக.
10. மதியுடம்படுத்தல் என்றால் என்ன?

# அலகு - 2

# கற்பியல்

கற்புக்கு இலக்கணம் உணர்த்துவதால் இவ்வியல் கற்பியல் எனப்பட்டது. கற்பிலக்கணம், கற்யில் தலைவன் கூற்று, கற்பில் தலைவி கூற்று என்பன கற்பில் தோழி கூற்று கற்பில் செவிலி கூற்று, கற்பில் தலைவன் மரபு, கற்பில் தலைவி இரபு கற்பில் தோழி மரபு, கற்பில் பிரிவு பிரிவின்கண் தலைமக்கள் மரபு என்பன இவ்வியலில் அமைந்திருக்கக் காணலாம்.

**கற்பிலக்கணம்**

தொல்காப்பியக் கற்பியலின் முதல் நூற்பா கற்பிலக்கணம் கூறும்.

**கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே** (1)

"கற்பு என்று சொல்லப்படுவது, கரணத்தோடு பொருந்தி கொள்ளுதற்குரிய மரபினை உடையார் கொடுப்பக் கொள்வது" என்பது இந்நூற்பாவின் பொருளாகும்.

களவின்கண் கூடிய ஒத்த தலைவனும் தலைவியும் மணம் புரியாது இல்லறம் நடத்துவது ஆகாது என வதுவைச் சடங்கு வலியுறுத்தப்பட்டது.

**கொடுப்போர் இன்றியும் கரண முண்டே**
**புணர்ந்துடன் போகிய காலை யான** (2)

எனக் குறிப்பிடுகிறார்.

தலைவி தலைவனொடு அவன் ஊர்க்குச் சென்று விட்டாளாயின் அவ்வாறு உடன்போக்கு நிகழ்ந்த காலத்து அங்குக் கொடுப்போராகிய தலைவியின் மரபினோர் இன்மையான். அக்கொடுப்போர் இல்லாமலும் மணவினை நிகழும்.

**மேலோர் மூவர்க்கும் புணர்த்த காரணங்**
**கீழோர்க் காகிகய காலமும் உண்டே** (3)

கற்பியலில் அமைந்த கரணம் பற்றிய இம்மூன்றாம் நூற்பாவின் பொருள் அரசர், வணிகர், உழவித்துண்ணும் வேளாளர் ஆகிய மூவர்க்கும் ஒன்றாகச் செய்யப்பட்ட மணவினையானது ஏனைய உழுதுண்ணும் வேளாளர்க்கும் முன்னைய மூவரோடு ஒன்றாக நடந்த காலமும் உண்டு என்பதாம்.

பண்டைக்காலத்தில் களவொழுக்கத்தில் ஈடுபட்ட ஒரு சிலர், அக்களவு வெளிப்பட்டபின் 'நான் இவளைக் காதலிக்கவில்லை' என்று பேசியும் காதல் மணம் கொண்டவளைக் கைவிட்டும் வந்தனர். இத்தவறான வழக்கம் பலரிடமும் பரவாதிருப்பதற்காக் களவொழுக்கம் ஒழுகிக் களவு

வெளிப்பட்டபின் பலர் அறியக் கொடுப்பக் கொண்டு அதன் பிறகே இல்லறம் நடத்தவேண்டும் என்று பெரியோர் கட்டுப்படத்தினர். அதனயே,

**பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்**

**ஐயர் யாத்தனர் கரணம் என்ப (4)**

என்னும் நூற்பா குறிப்பிடும்.

**கற்பில் தலைவன் கூற்றும் மரபும்**

இன்னின்ன முறையில் இன்னின்னாரோடு இன்னபடியே பேச வேண்டும் என்ற ஒழுங்கு முறைதான் கூற்று என வழங்கப்படும். கற்பில் தலைவனுக்கு உரியவாக முப்பத்து மூன்று கூற்றுக்கள்.

1. **கரணத்தின் அமைந்து முடிந்த காலை நெஞ்சு தளை அவிழ்ந்த புணர்ச்சி:**

   களவொழுக்கம் முதிர்ந்து பெரியோர் புணர்த்த கரணத்தினால் வதுவை முடிந்த பிறகு முதன் முதலில் தலைவன், தலைவியைக் கண்ணுற்ற நேரம் தலைவன்பால் உண்டான பெருமையும் உரனும் தலைவிபால் உண்டான அச்சமும், நாணும், மடனும் நீங்கி இருவரின் நெஞ்சமும் கட்டுவிடப்பட்டு இருவரும் கூடுவர். அப்போது தலைவன் கூற்று நிகழும்.

   **உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை...**
   **முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப**
   **அஞ்சினள் உயிர்த்த காலை யாழநின்...**
   **அகமலி உவகையள் ஆகிமுகன் இருந்து**
   **ஒய்யென இறைஞ்சி யோளே**

2. **எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவம்:**

   பின்னர், இவ்வாழ்க்கை இன்பத்தை இடையாறாது நுகர்கையில் கூற்று நிகழும்.

   **குனிகா யெருக்கின் குவிமுகிழ் விண்டடொடு...**
   **பலபா ராட்டவும் படுவ மாதோ**
   **கடைந்து கவித்தன்ன கால்வீங்கு கருங்கட்**
   **புடைதிரள் வனமுலை புலம்பல் அஞ்சிக்**
   **காமர் நுழைநுண் நுசப்பின்**
   **தாமரை முத்தியைத் தந்த பாலே**

3. **அஞ்சவந்த உரிமை**

   பிற பெண்டிர் கண்டு அஞ்சும்படி தலைவி இல்லறம் நடத்தும் போதும் கூற்று நிகழும்.

   **உள்ளத் துணர்வுடையா னோதிய நூலற்றால்**
   **வள்ளன்மை பூண்டான்கண் ஒன்பொருள் - தெள்ளிய**
   **ஆண்மகன் கையில் அயில்வா ளணைத்தரோ**
   **நாணுடையாள் பெற்ற நலம்**

**4. நன்னெறிப் படரும் தொன்னலப் பொருள்:**

அறம், பொருள், இன்பங்களை வழாமல் தன் குலத்திற்கேற்ற மனை வாழ்க்கையைத் தலைமகள் நடத்துதற்கண் தலைவன் கூற்று நிகழும்.

5. **பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலைஇக் குற்றஞ்சான்ற பொருள் எடுத்துரைத்தல்:**

தலைவியை வரைந்து பெற்றவழி அவள் இல்லறத் தலைமை தோன்ற நடந்து கொண்டவிடத்து அவளை அவ்வாறே தலைமை தாங்கும்படி பெருமைப் படுத்துதல். இங்ஙனம் சிறந்த இல்லறத்திற்கு முன்னர் ஒழுகிய களவொழுக்கம் ஏதுவாயிற்றென அதன் சிறப்புக் கூறி இல்லறத்தை வியத்தலாம். அவர் தூற்றலும் மறைந்தொழுகலும் பற்றியே களவு குற்றமெனப்பட்டது.

**6. நாமக் காலத்து உண்டெனத் தோழி ஏமுறுகடவுள் ஏத்திய மருங்கு:**

களவுக்காலத்தில் இடையூறு வராமல் காத்த தெய்வம் உண்டெனத் தோழி கூற அத்தெய்வத்திற்கும் பரவுக்கடன் செய்யப் பணிக்குமிடத்தும் தலைவன் கூற்று நிகழ்த்துவான்.

**நேரிழாய் நீயுநின் கேளும் புணர**
**வரயறை தெய்வம் உவப்பா உவந்து**
**குரவை தழீஇயாம் ஆடக் குரவையுட்**
**கொண்ட நிலைபாடிக் காண்**

**7. அல்லல் தீர ஆர்வமொடு அளைஇச் சொல்லுறு பொருள்:**

களவுக் காலத்து வருந்திய வருத்தம் தீரத் தலைவி தனது காதல் மிகுதி தோன்றச் சொல்லுங்காலத்துத் தலைவன் கூற்று நிகழும்.

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங் கலந்தனவே

**8. சொல்லென ஏனது சுவைப்பினும் நீ கைதொட்டது வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கு என அடிசிலும் பூவும் தொடுத்தற்கண்.**

யாதானும் ஒன்றை நுகரினும் நீ கையால் தொட்டது வானோர் அமிழ்தல் ஒக்கும் இதற்குக் காரணம் சொல்லுவாயாக என்று அடிசில் தொடுத்தற் கண்ணும் தலைவன் கூற்று நிகழும்.

**வேம்பின் பைங்காய்என் தோழி தரினே**

**யென்றனிர் தேம்பூங்கட்டி**

**9. அந்தணர் திறத்தும், சான்றோர் தேஎத்தும் அந்தமில் சிறப்பிற் பிறர் பிறர் திறத்தினும் ஒழுக்கம் காட்டிய குறிப்பு:**

பார்பார்க் கண்ணும், சான்றோர்க் கண்ணும் மிக்க சிறப்பினையுடைய பிறராகிய அவரவரிடத்தும் ஒழுக்கத்தைக் குறிப்பினாற் காட்டிய விடத்துத் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

10. **ஒழுக்கத்துக் களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி, அலமரல் உள்ளமொடு அளவிய இடம்:**

களவுக்காலத்தே தங்களைப் பார்க்கவம் தொடவும் கூட நாணம் அடைந்தேனே அதன் காரணம் என்ன என்று களவுக்காலத்து நிகழ்ந்த அருமையைத் தனித்துச் சுழந்ற உள்ளத்தோடே தலைவி உசாவிய இடத்து தலைவன் கூற்று நிகழும்.

11. **அந்தரத்து எழுதிய எழுத்தின் மானவந்த குற்றம் வழிகொட ஒழுகல்:**

கற்பில் தலைவன் தக்க நேரத்தில் அமைதியாகத் தலைவியைக் கூடுவான். களவிக்காலத்தில் பகலில் அச்சத்தோடும். விரைவோடும் கூடியதாகிய குற்றம் வானத்தில் எழுதிய எழுத்துப்போல கற்புக் காலத்தில் அழிந்துவிட்டதை வியந்து தலைவன் பேசுவான்.

12. **அழியல் அஞ்சல் என்று அயிருபொருளினும் தானவன் பிழைத்து பருவம்:**

தனக்கு இடர் வந்தபோது தலைவி வருந்தாமலும், தலைவனுக்கு இடர் வந்தபோது அவள் அஞ்சாமலும் இருக்க வேண்டுமென்பதற்காக 'வருந்தாதே' 'அஞ்சாதே' எனத் தலைவன் கூறுவான். தனக்கு என்றது தலைவியை.

13. **நோன்மையும் பெருமையும் மெய்கொள அருளிப் பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித் தன்னின் ஆகிய தகுதி:**

பொறைமையும் பெருமையும் மெய்யெனக் கொள்ளுமாறு அருளிப் பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித் தலைவன் தன்னாள் ஆகிய தகுதிக் கண் கூற்று நிகழும்.

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று.

14. **புதல்வற் பயந்த புனிறுதீர் பொழுதின் நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி ஐயர் பாங்கினும் அமரச் சுட்டியும் செய்பெரும் சிறப்பொடு சேர்தற்கண்:**

புதல்வனைப் பயந்த ஈன்றணிமை நீங்கின பொழுதின்கண் நெய்யணி மயக்கம் புரிந்தவளைக் குறித்து முனிவர் மாட்டும் அமரரைக் குறித்தும் செய்யா நிற்கும் பெரிய சிறப்பொடு சேர்தற்கண் கூற்று நிகழும்.

**வாராய் பாண நகுகம் நேரிழை...**
**நெய்யோ டிமைக்கும் ஐயவித் திரள்காழ்**
**விளங்குநகர் விளங்கக் கிடந்தோட் குறுகிப்**
**புதல்வனை யீன்றெனப் பெயர் பெயர்த்து...**

15. **பயங்கெழு துணையணைப் புல்லிப் புல்லாது உயங்குவனள் கிடந்த கிழத்தியைக் குறுகி அல்கல் முன்னிய நிறையழி பொழுதின் மெல்லென் சீறடி புல்லிய இரவு:**

தலைவி தலைவனைக் கூடப்பெறாத ஆற்றாமையால், தழுவற் பயன் பொருந்திய தலையணையைத் தழுவித் தலைவனைத் தழுவாது ஊடற்கருத் தினளாய் வருந்திக் கிடந்த

தலைவியை அணுகி, கூடுதற் கருத்தோடு அவளது மெல்லிய சிறிய அடியைத் தொட்டு இரக்கும்போது தலைவனின் கூற்று நிகழும்.

**16. உறலருங்குரைமையின் ஊடல் மிகுந்தோளைப் பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற்கண்:**

ஊடல் மிகுந்தோளை உறுதற்கருமையால் பிறபிற பெண்டிர் ஏதுவாக ஊடல் உணர்தற்கண் தலைவன் கூற்று நிகழும்.

ஒருத்தி, புலவியாற் புல்லா திருந்தாள் அலவுற்று
வண்டின மார்ப்ப இடைவிட்டுக் காதலன்
தண்டா ரகலம் புகும்
........ ............. .............................
...... ......... ......... ......... ............
......... .......... ....... ........
ஆனா விருப்போ டணியயர்பு காமற்கு
வேனில் விருந்தெதிர் கொண்டு

**17. பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப் பிரிவு நீக்கிய பகுதிக்கண்:**

பிரிவு நிமித்தமாக வருந்திய மனையாளையும் காமக்கிழத்தியையும் அவ்வருத்தத்தினின்று நீக்கிய பகுதி அஃதாவது, பிரியேன் என்று கூறுதல்.

**18. நின்று நளி பிரிளின் அஞ்சிய பையுள்:**

நிலைநிறக மிகப்பிரியும் பிரிவின்கண் அஞ்சிய நோய், அந்நோயின் கண்ணும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**ஏதப்பா டெண்ணிப் பரிசை வியலுள்ளோர்**
**கள்வரைக் காணாது கண்டேமென் பார்போலச்**
**சேய்நின்று செய்தாத சொல்லிச் சினவல்நின்**
**ஆணை கடக்கிற்பாற் யார்**

19. **சென்று கையிகந்து பெயர்த்துள்ளிய வழி:**

தலைவன் ஆற்றானாய்த் துனி தீர்த்தற்குத் தலைவியை அணுகச் சென்று தலைவி நீக்கி நிறுத்தவே மீட்டும் அணுகுவான். இக்குறையிரத்தலால் தவைி துனி நீங்சிக் கூடக் கருதுவள். அவ்விடத்துத் தலைவன் கூற்று நிகழும்.

**இருங்கழி முதலை மேந்தோல் அன்ன ...**
**புல்லிலை மராஅத்த அகன்சேண் அத்தங்**
**... .... ... ... ... ... ..... ...... .....**
**... .... ... ... ... ... ..... ...... .....**
**நெடுஞ்சேண் ஆரிடை விலங்கு ஞான்றே**

**20. காமத்தின வலி:**

'பொருளைக் காட்டிலும் காமம் வலிவுடைத்து' என உட்கொண்ட வழி தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**21. கைவிடின் அச்சம்:**

தலைவியைக் கைவிட்டவழி அவளது உயிர்ப்பொருட்டு அஞ்சுதற் கண் கூற்று நிகழும்.

**எவ்வி யிழைந்த வறுமையாழ்ப் பாணர்**
**பூவில் வறுந்தலை போலப் புல்லென்**
**றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்**
**தெல்லுறும் மௌவல் நாறும்**
**பல்லிருள் கூந்தல் யாரோ நமக்கே**

**22. தாளவட் பிழைத்த நிலை:**

தலைவன் தலைவியை 'நின்னிற் பிரியேன்' என்ற சொல்லில் தவறுபட்டபோதும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**வயங்குமணி பொருத வகையமை வளப்பிற் ...நாளைப்**
**பொருந்தாக் கண்ணேம் புகும்புவந் துறதரச்**
**... .... ... ... ... ... ..... ...... .....**
**போர்மடி நல்லிறைப் பொதியி லானே**

**23. உடன் சேறற் செய்கை:**

'உடன் போக வேண்டும்' எனச் சொல்லியவழியும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**எவ்வளை எம்மொடு நீவரின் யாழநின்**
**... .... ... ... ... ... ..... ...... .....**
**... .... ... ... ... ... ..... ...... .....**
**கல்லுறின் அவ்வடி கறுக்குந அல்லவோ**

**24. அன்னவை பிறவும் மடம்பட வந்த தோழி:**

மேற்சொல்லப்பட்டனவற்றுள் மடமைபட வந்த தோழியிடத்தும் கூற்று நிகழும்.

**இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்**
**துன்பந் துடைத்தூன்றுந் தூண்**

**25. வேற்றுநாட்டு அகல்வயின் விருப்பம்:**

வேற்று நாட்டுக்கு அகலும்வழி வரும் நோயின் கண் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**ஆண்ணா ழையின் உயங்கிய மருங்கின்...**
**இரந்துபொருள் தருதலும் ஆற்றாய் சிறந்த**
**... .... ... ... ... ... ..... ...... .....**
**... .... ... ... ... ... ..... ...... .....**
**ஒன்றிற் கொள்ளாய் சென்றுதரு பொருட்கே**

**26. மீட்டுவர வாய்ந்த வகை:**

பிரிந்த தலைவன் மீட்டுவர வாய்ந்த வகையின்கண்ணும் அவனுக்குக் கூற்று நிகழும். அதாவது, தலைவன் பிரிந்து செல்லும்போது, இடைவழியில் தலைவியின் உருவெளிப்பாடு தோன்றிய விடத்தும், மனம் வேறுபட்ட விடத்தும் தன் ஊர்க்கே திரும்பி வருதலை ஆராய்ந்த கூறுபாட்டின் கண் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

**தாழிருள் துமிய மின்னித் தண்ணென ...யாமே**

**... .... ... ... ... ... ... ..... ...... .....**

**இவளின் மேவினமாகிக் குவளைக்**

**குறுந்தாள் நாள்மலர் நாறும்**

**நறுமென் கூந்தல் மெல்லணை யேமே**

**27. அவ்வழி பெருகிய சிறப்பு:**

பிரிந்துழிப் பெருகிய சிறப்பின் கண்ணும் தலைவனுக்குக் கூற்று நிகழும். தலைவன் மேற்கொண்ட பகைவெல்லுதல், பொருள் தேடி முடித்தல், கற்றுத் தெளிதல் முதலிய காரியங்களில் பெற்ற வெற்றிச் சிறப்பைப் பாராட்டுமிடத்துக் கூற்று நிகழும்.

**கோடல் எதிர் முகைப் பசுவீ முல்லை**

**நாறிதழ்க் குவளையோ டிடைப்பட வுரைஇ**

**ஐதுதொடை மாண்ட கோதை போல**

**நறிய நல்லாள் மேனி**

**முறியினும் வாயது முயங்குகம் இனியே**

**28. பேரிசை ஊர்திப் பாகர் பாங்கு:**

தான் உற்ற இன்பத்தினைப் பாகனுக்குக் கூறும்போது கூற்று நிகழும்.

மறுத்தற் கரிதால் பாக பன்னாள்

அறத்தொடு பொருந்திய உலகுதொழிற் கொளீஇய...

மடமா அரிவை மகிழ்ந்தயர் நிலையே

**29. காமக் கிழத்தி மனையோள் என்றிவர் ஏழுறுகிளவி சொல்லிய எதிர்:**

காமக்கிழத்தியும், மனையாளும் தலைவனிடம், 'எவ்வழி வந்தீர்' எனவும் 'துன்பம் உற்றீரோ' எனவும் கூறுவர். அப்போது தலைவன் மறுமொழி கூறுவான். காமக்கிழத்தியும் மனையாளும் என்று சொல்லும் இருவரும் பாதுகாவலாகக் கூறிய கூற்றின் எதிர் தலைவன் கூற்று நிகழும்.

**எரிகவர்ந் துண்ட என்றூழ் நீளிடை**

**அரிய வாயினும் எளிய அன்றே**

**... .... ... ... ... ... ... ..... ...... .....**

**... .... ... ... ... ... ... ..... ...... .....**

**நெடுமா னோக்கிநின் உள்ளியாம் வரவே**

**30. சென்ற தேஎத்து உழைப்பு நனி விளக்கி, இன்றிச் சென்ற தம் நிலை கிளத்தல்:**

அங்ஙனம் கூறிய இருவர்க்கும் தான் சென்ற தேயத்து வருத்தத்தை மிகவும் விளக்கித் தலைவியை ஒழித்துச் சென்ற தன் நிலைமையைக் கிளக்கும்போது கூற்று நிகழும்.

**31. அருந்தொழில் முடித்த செம்மற்காலை விருந்தொடு நல்லவை வேண்டல்:**

அரிய வினைமுடித்து வந்த தலைமைக் காலத்து விருந்தினரோடு கூட நல்லவற்றைக் கிளத்தி விருப்பமுறுதற்கண் தலைவன் கூற்று நிகழும்.

**முரம்புதலை மணந்த நிரம்பா இயவின்**

**விருந்தயர் விரும்பினன் வருந்தும்**

**திருந்திழை யரிவை தேமொழி நிலையே**

**32. மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும் கேளிர் ஒழுக்கத்துப் புகற்சி:**

விலை முடிந்து வரும் தலைவனை எதிர்ப்பட்டு மங்கலாக மாலையேந்தி நின்ற மகளிரும், மக்களும் கேளிரும் ஒழுகும் ஒழுக்கத்து விருப்பத்தின் கண் தலைவன் கூற்று நிகழும்.

**33. ஏனைய வாயிலோர் எதிர்:**

பிரிந்து மீண்ட தலைவனைக் காலந் தாழ்த்தானெனத் தலைவி ஊடி விலக்கவே, அவ்வூடல் தீர்க்க விடும் வாயில்களிடம் தலைவன் தலைவியின் தன்மையைக் கூறுதல்.

நகுகம் வாராய் பாண! பகுவாய்...

யாரை யோ என் றிகந்துநின் றதுவே

**கற்பில் தலைவி கூற்று**

கற்பின்கண் தலைமகள் கூற்று நிகழுமிடங்கள் பத்தொன்பது என்பர்.

**அவனறி வாற்ற அறியும் ஆகலின்**

**ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்**

**உரிமை கொடுத்த கிழவோன் பாங்கில்**

**பெருமையின் திரியா வன்பின் கண்ணும்**

**கிழவனே மகடூஉப் புலம்பெரி தாகலின்**

**... .... ... ... ... ... ..... ...... .....**

**... .... ... ... ... ... ..... ...... .....**

**... .... ... ... ... ... ..... ...... .....**

**... .... ... ... ... ... ..... ...... .....**

**நளியினீக்கிய விளிவரு நிலையும்**

**காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்**

**ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்**

**வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇக்**

**கிழவோள் செப்பல் கிழ தென்ப**

**1. அவன் அறிவு ஆற்ற அறியும் ஆகலின் ஏற்றற்கண்**

தலைவனது நினைவைத் தலைவி மிக அறியுமாகலின் அவனை உயர்த்துக் கூறுதற்கண் தலைவியின் கூற்று நிகழும்.

**நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்**

**என்றும் என்தோள் பிரிபறி யலரே**

**தாமரைத் தண்தா தூதி மீமிசைச்**

**சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்**

**... .... ... ... ... ... ..... ...... .....**

... .... ... ... ... ... ..... ...... .....

... .... ... ... ... ... ..... ...... .....

**நறுநுதல் பசத்த லஞ்சிச்**

**சிறுமை உறுபவோ செய்பறி யலரே**

2. **நிறுத்தற்கண்:**

தலைவனது பண்பினைத் தோழி கூறியவற்றால் தான் நிறுத்துக் கூறுதற்கண் தலைவி கூற்று நிகழும். அதாவது, தோழியுடன் தலைவியும் உடன்பட்டு அப்பண்பினைப் போற்றல்.

**முடவு முதிர் பலவின் குடமருள் பெரும்பழம்...**

**இன்துணைப் பயிரும் குன்ற நாடன்**

**குடிநன் குடையன் கூடுநர்ப் பிரியலன்**

**கொடுநா மொழியவன் அன்பினன் என நீ**

**வல்லகூறி வாய்வதிற் புணர்த்தோய்....**

... .... ... ... ... ... ..... ...... .....

3. **உரிமை கொடுத்த கிழவோன் பாங்கில் பெருமையில் திரியா அன்பின் கண்:**

தலைவிக்கு உரிமையைக் கொடுத்த தலைவன் மாட்டுப் பெருமையினின்றும் திரியாத அன்பின்கண் கூற்று நிகழும்.

**நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**

**நீரினும் ஆரளவின்றே சாரற்**

**கருங்கோற் குறிஞ்சிப்புக் கொண்டு**

**பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே**

4. **கிளவனை மகடூஉப் புலம்பு பெரிது ஆகலவின் அலமரல் பெருகிய காமத்து மிகுதி:**

தலைவனைத் தலைவி நீங்கித் தனிமையுறுதல் பெரிதாகலின் ஆண்டு வருந்தம் பெருகிய மிகுதிக்கண் கூற்று நிகழும்.

**விழுநர் வீழப் படுவாாக் கமையுமே**

**வாழுதம் என்னுஞ் செருக்கு**

5. **இன்பமும் இடும்பையும் ஆகிய இடம்:**

தலைவிக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கு நிகழும் வழிக் கூற்று நிகழும்.

**இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்**

**புன்கண் உடைத்தால் புணர்வு**

6. **கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ நலியின் நீக்கிய பகுதி:**

யானைக்கன்று போன்று மகன் பிறந்தமையால் தலைவி எண்ணெய் அடுதலைக் காண விரும்பிய தலைவன் தன்நெஞ்சு புண்ணாகுமாறு பிரிந்தாள் என்ற காரணத்தால் அவளை இகழந்து கூறுவாள் தலைவி.

**கரும்புநடு பாத்திக் கலித்த ஆம்பல்**

**கடும்புபசி களையும் பெரும்புனல் ஊர**

**புதல்வனை ஈன்றஎம் மேனி**

**முயங்கல்மோ தெய்யநின் மார்பு சிதைப்பதுவே**

7. **புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு அகன்ற கிழவனைப் புலம்பு நனி காட்டி இயன்ற நெஞ்சம் தலைப்பெயர்த்தருக்கி எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கு:**

விருப்பமுடைய உள்ளத்தோடே புதுவோரது நலத்தின் பொருட்டு அகன்ற கிழவனைத் தனது தனிமை மிகவும் காட்டி அவன் மாட்டுச் செல்கின்ற நெஞ்சத்தை மீட்டு அருகப் பண்ணி அவன் காதலித்தாளை எதிர்ப்பெய்து கொண்டு புணர்ச்சியை மறுத்த ஈரத்தின்கண் தலைவியின் கூற்று நிகழும். அதாவது, பரத்தையிற் பிரிவுகொண்ட தலைவன் மீண்டும் தன் இல்லம் வந்தான். தனிமைத் துன்பத்தால் அவன்பால் சென்ற தன் மனத்தை அடக்கிய தலைவி அவளை வெறுத்துப் புணர்ச்சிக்கு மறுத்தாள். பின் அவன்பால் உள்ள ஊடல் தணிந்தாள் என்பது பொருள்.

**கடல்கண் டன்ன கண்ணகன் பரப்பின்**

**உடன்றனள் போலுநின் காதலி எப்போல்**

**... .... ... ... ... ... ..... ...... .....**

**... .... ... ... ... ... ..... ...... .....**

**என்ன கடத்தளோ...**

8. **தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி எங்கையர்க்கு உரை என இரத்தல்:**

பிறள் மாட்டுத் தங்கிய ஒழுக்கமுடைய தலைவனை நோக்கி 'நீ கூறும் பணிந்த மொழிகளை எம் தங்கையர்க்கு (பரத்தையர்) உரைப்பாயாக' என வேண்டுதல்.

**நினக்கோ அன்றஃ தெமக்குமார் இனிதே**

**நின்மார்பு நயந்த நன்னுதல் அரிவை**

**வேண்டிய குறிப்பினை ஆகி**

**ஈண்டுநீ யருளாது ஆண்டுரை தல்லே**

9. **செல்லாக்காலை செல்க என விடுத்தல்:**

தலைவன் பரத்தையர்பால் போகாத காலத்தும் போவெனக் கூறுதல்.

**பூங்கட் புதல்வனைப் பொய்பல பாராட்டி**

**நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி**

**ஆங்கே அவர்வயின் சென்றி அணிசிதைப்பான்**

**ஈங்கென் புதல்வனைத் தந்து**

10. **காமக்கிழத்தி தன் மகத் தழீஇ ஏமமுறு விளையாட்டு இறுதி:**

காமக்கிழத்தி தலைவி மகவைத் தழிஇ மகிழ்ச்சியுற்ற விளையாட்டின் கண் தலைவி கூற்று நிகழும்.

**நாயுடை முதுநீர்க் கலித்த தாமரை...**

**யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத்**

**தேர்வழங்கு தெருவில் தமியோற் கண்டே**

**கூரெயிற் றரிவை குறுகினள். .....**

**... .... ... ... ... ... ..... ...... .....**

**... .... ... ... ... ... ..... ...... .....**

11. **சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி அவம்பரி நெஞ்சமொடு தன் வரவு அறியாமை புறம்பெய்து பெயர்த்தல் வேண்டிடத்தான்:**

தலைவி தன் மகனைக் கொண்டு விளையாடிய அவ்விடத்துத் தலைவன் தோன்றி அறம்புரி நெஞ்சத் தோடே தனது வரவைத் தலைவி அறியாளாக நின்று தலைவியைப் புறம்செய்து அவள் மாட்டுளதாகிய ஊடலைப் பெயர்த்தல் வேண்டின இடத்துத் தலைவியின் கூற்று நிகழும்.

**உள்ளி உழையே ஒழுங்கு படைவிடக்**

**கள்வர் படர்தந் ததுபோலத் தாம் எம்மை**

**எள்ளுமார் வந்தாரோ ஈங்கு**

12. **தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால் அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்குதல்:**

தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால் அந்தமில் சிறப்பின் மக்களைப் பழித்தற்கண்ணும் கூற்று நிகழும். தெருவில் காமக்கிழத்தியோடு விளையாடும் மகனைப் பார்த்து 'நீயும் உன் தந்தை போல் தான் இருப்பாய்' என்று பழித்தல்.

**வனப்பெல்லாம் நுந்தையை ஒப்பினும் நுந்தை**

**நிலைப்பாலு ளொத்த குறியென்வாய்க் கேட்டொத்தி**

**கன்றிய தெவ்வர்க் கடந்து களங்கொள்ளும்**

**வென்றிமாட் டொத்தி பெருமற் றொவ்வாதி**

**ஒன்றினேம் யாமென் றுணர்ந்தாரை நுந்தைபோல்**

**மென்றோள் நெகிழ விடல்**

13. **கொடியார் கொடுமை சுடும் என ஒடியாது நல்லிசை நயந்தோர் சொல்லோடு தொகைஇப் பகுதியின் நீங்கிய தகுதிக்கண்:**

கொடியோராய்த் தலைவன் புகழைக் கூறுதற்கு வாயிலாக வந்த பாணன் முதலியோரிடம் கூறும் சொல்லோடே தானே வாயிலாக வந்த தலைவனிடத்தும் பரத்தையிற் பிரிந்த கொடுமை தவிராது நெஞ்சைச் சுடுகின்றதெனத் தலைவி கூறுவாள்.

**ஏந்தெழில் மார்பு எதிரல்ல நின்வாய்ச் சொல்**

**யாங்குச் சென்றீங்குவந் தீத்தாந்தாய்...**

14. **கொடுமை ஒழுக்கம் கோடல் வேண்டி அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக் காதல் எங்கையர் காணின் நன்று என மாதர் சான்ற வகையின:**

**நில்லாங்கு நில்லா....**

**நல்லாய், பொய்யெல்லாம் ஏற்றித் தவறு தலைப்பெய்து**

**கையொடு கண்டாய் பிழைத்தேன்; அருளினி;**

**அருளுகம் யாம்யாரே மெல்லா தெருள.....**

**நடலைப்பட் டெல்லா நின்புகழ்**

**15. தாயார் கண்ணிய நல்லணிப் புதல்வனை மாயப் பரத்தை உள்ளியவழி:**

தாயரைக் கட்டிய நல்ல அணியை உடைய புதல்வனை மாயப் பரத்தை குறித்தவழி கூற்று நிகழும்.

**உறுவளி தூக்கும் உயர்சினை மாவின்....**

**சிறுபட்டி ஏதிலார் கைஎம்மை எள்ளுபு நீ தொட்ட**

**மோதிரம் யாவோயாங் காண்கு....**

**தந்தை இறைத்தொடி மற்றவன் தன்கைக்கண்**

**தந்தாரியார் எல்லா இது....**

**16. தன்வயிற் சிறப்பினும் அவன்வயிற் பிரிப்பினும் இன்னாத் தொல்குள் எடுத்தற்கண்:**

தன்மாட்டு நின்ற மிகுதியானும் அவன் மாட்டு நின்ற வேறுபாட்டானும் இன்னாத பழைய சூளுறவைத் தலைவி எடுத்தவழி கூற்று நிகழும்.

**தேர்மயங்கி வந்த தெரிகோதை அந்நல்லார்**

**கார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர் மயங்கி**

**நீயுறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி**

**யார்மேல் விரியுமோ கூறு.**

**17. காமக் கிழத்தி நலம் பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின் கண்:**

காமக்கிழத்தியின் நலம் பாராட்டுவாள் தலைவி. அவள் இளமையால் தன்னை விரும்பான் எனத் தலைவன்மேல் குற்றமேற்றிக் கூறல்

**மடவள் அம்மநீ இனிக்கொண்டேனே**

**தன்னொடு நிகரா என்னொடு நிகரிப்**

**பெருநலந் தருக்கம் என்ப விரிமலர்த்**

**தாதுண் வண்டினும் பலர்நீ**

**ஓதி யொண்ணுதல் பசப்பித் தோரே**

**18. கொடுமை ஒழுக்கத்துத் தோழிக்கு உரியவை வடுஉறு சிறப்பின் திரியாமைக் காய்தலும் உவத்தலும் பெட்டலும் ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்:**

தலைவனின் கொடுமை ஒழுக்கத்தின் கண், தோழியிடத்துத் தலைவி கூறுவதற்குரியவை குற்றமற்ற சிறப்பினையுடைய கற்பின் கண் திரியாது தலைவனைக் காய்தலும் உவத்தலும் நீக்கி நிறுத்தலும், பேணிக் கோடலும் அவ்விடத்துப் பலவாய் வேறுபட்டு வரும் நிலை எனும் இவையே. எனவே, தோழிக்குத் தலைவன் மாட்டு நிகழும் கொடுமை ஒழுக்கங்கள் அனைத்தையும் தலவி கூறமாட்டாள், கூறத்தகாதனவும் உள.

**19. வாயிலின் வரூஉம் வகை:**

வாயில்கள் மாட்டு வரூஉம் கூற்றுவகை உளம்படத் தலைவி கூற்று நிகழும்

**அன்னாய் இவளோர் இளமாணாக்கன்...**

**விருந்தினன் ஊரும் பெருஞ்செம் மனைெ**

இவை தவிரவும், தலைமகட்குரிய கிளவிகள் சிலவற்றைத் தொல்காப்பியர் வேறுசில நூற்பாக்களில் கூறுகிறார்.

**புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்து**

**இடைச்சுரத்து இறைச்சியும் வினையும் சுட்டி**

**அன்புறு தக்க கிளத்தல் தானே**

**கிழவோன் செய்வினைக்கு அச்சமாகும்**

**இதன் பொருள்**

களவிற் புணர்ந்து உடன்போகிய தலைமகள் கற்புக்கடன் பூண்டு ஒழுகும் காலத்து மனைக்கண் இருந்து, தான் முன்னர் இடைச்சுரத்தில் தலைவனுடன் கண்ட கருப்பொருள் முதலியவற்றையும் அவற்றின் தொழிலையம் குறித்துக் கிழவன்அன்புறுதற்குத் தக்கவற்றைக் கூறுதலே தலைமகன் இயற்றும் தொழிலுக்கு அஞ்சும் அச்சமாகும். அதாவது, நம்மை நினைத்து வினை முடிக்காமல் திரும்பி விடுவானோ என அஞ்சுதல்.

**தோழியுள் குறுத்த வாயில் புகுப்பினும்**

**ஆவபின் நிகழும் என்மனார் புலவர்**

**பொருள்**

தோழி முதலிய வாயில்களைத் தன் தலைவன் பால் போகவிட்ட அக்காலத்தும் முற்கூறிய சுற்று நிகழும்.

**தாய்போற் கழறித் தழீஇக் கோடல்**

**ஆய்மனை கிழத்திக்கும் உரித்தென மொழிப**

**களவொடு மயங்கிய காலை யான**

**பொருள்**

காமக்கிழத்தி மாட்டுத் தாய்போல் கழறித் தழீஇக் கோடல் மனைக்கிழத்திக்கும் உரித்து அவன் மயக்கத்தால் மயங்கிய காலத்து

**அவன் சோர்வு காத்தல் கடனெனப் படுதலின்**

**மகன் தாயுயர்புந் தன்னுயர் பாகுஞ்**

**செல்லவன் பணிமொழி இயல்பாக லான**

தலைமகனது சோர்வு காத்தல் தலைமகள் கடன் தலைவன் பரத்தையிற் பிரிகிறான். அவன் ஒழுக்கத்தில் சோர்வு நிகழ்கிறது. தலைவனின் இச்சோர்வைப் பிறர்க்குத் தெரிவிக்கக் கூடியவளாகக் காமக்கிழத்தி இருப்பாள். அதனால் தலைவனுக்குக் குறைபாடு வரும்.

அக்குறைபாடு வரலாகாது எனக்கருதும் தலைவி தலைவனின் காமக்கிழத்தியையும் உயர்வாகக் கூறுவாள்.

**கற்பில் தோழி கூற்று**

களவு, கற்பு என்ற இரு நிலைகளிலும் தலைவன், தலைவி ஆகிய இருவருக்கும் உற்ற துணையாயிருந்து உதவுபவன் தோழியே ஆவாள். 'தலைவியின் உயர்வே தன் உயர்வு' என்னும் கருத்துடைய தோழியையே தலைவன் தன் எண்ணத்தை ஈடேற்றும் நல்ல துணையாகக் கொள்வாள். அகவாழ்வில் தோழியின் பங்கு மிகப் பெரியது. கற்பின் கண் தோழி கூற்று நிகழுமிடங்கள் பத்தொன்பதாகும்.

**பெறற்கரும் பெரும்பொருள் முடித்தபின் வந்த**
**தெறற்கரு மரபிற் சிறப்பின் கண்ணும்**
**அற்றமழி வுரைப்பினும் அற்றம் இல்லாக்**
**கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்தினுஞ்**
**சீருடைப் பெரும் பொருள் வைத்தவழி மறப்பினும்...........**
**பிரியுங் காலத் தெதிர் நின்று சாற்றிய**
**மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்**
**வகைபட வந்த கிளவி யெல்லாந்**
**தோழிக் குரிய என்மனார் புலவர்**

1. **பெறற்கரும் பொருள் முடிந்தபின் வந்த தெறற்கரு மரபிற் சிறப்பின் கண்:**

பெறுவதற்கரியதென நினைத்த பெரிய பொருளாகிய மணவினை முடிந்த பின்னர்த் தலைவன் தன்னைச் சிறப்பித்துக் கூறுமிடத்துத் தோழி கூற்று நிகழும்.

**அயிரை பரந்த அந்தண் பழனத்**
**தேந்தெழில்மலரத் தூம்படைத் தரள்தாள்**
**ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்கியவள்**
**இடைமார்பு கிடந்தும் நடுங்க லானீர்............**

2. **அற்றம் அழிவு உரைத்தல்:**

முதற்காலத்து (களவுக் காலத்து) உற்ற வருத்தம் நீங்கினமை கூறல்.

**எக்கர் ஞாழல் இகந்துபடு பெருஞ்சினை**
**வீயினிது கமழுந் துறைவனை**
**நீயினிது முழங்குமதிகாத லோயே**

3. **அற்றம் இல்லாக் கிழவோன் சுட்டிய தெய்வக்கடன்:**

தலைவியைத் தலைவன் வரைந்து கொள்ளுதல் குறித்துப் பரவிய தெய்வம் அதனை முடித்தலில், அத்தெய்வத்திற்குப் பரவுக்கடன் கொடுத்தல் வேண்டுமெனத் தலைவனிடத்துக் கூறுதல்.

**திண்தேர் நள்ளி கானத் தண்டர்**
**பல்ஆ பயந்த நெய்யில் தொண்டி**

**முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெண்சோறு**

**ஒருகலத் தேந்தினுஞ் சிறிதென் தோழி**

**பெருந்தோள் நெகிழ் சூழ்ந்த செல்லற்கு**

**விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே**

**4. சீருடைப் பெரும்பொருள் வைத்தவழி மறத்தல்:**

இற்கிழமைப் பொறுப்பைத் தலைமகளிடத்து வைத்த விடத்து அறத்தின் காரணமாகவோ, பொருளின் காரணமாகவோ தனக்குரிய இசையும் கூத்தும் முதலியவற்றான் அவளை மறந்து ஒழுகிய காலத்து கூற்று நிகழும்.

**கரும்பின் எந்திரங் களிற்றெதிர் பிளிற்றும்**

**தேர்வண் கொமான் தேனூர் அன்னவிவள்**

**நல்லணி நயந்துநீ துறத்தலின்**

**பல்லோ ரறியப் பசந்தன்று நுதலே**

**5. அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அறிந்தோளை, அடங்கக் காட்டுதற் பொருளின் கண்:**

அடங்கா ஒழுக்கத்தையுடை (புறத்தொழுக்கமுடைய) தலைவன் மாட்டு மனன் அழிந்தோளை அடங்கக் காட்டுதற்கு ஏதுவரின் பொருட்பக்கத்தினும் தோழி கூற்று நிகழும்.

**இதுமற் றெவனோ தோழி துனியிடை....**

**பாற்செய் பைம்பயிர் ஆகும் ஊரன்**

**திருமனைப் பல்கடம் பூண்ட**

**பெருமுது பெண்டிரே மாகிய நமக்கே**

**6. பிழைத்து இருந்த கிழவனை நெருங்கி இழைத்தாங்கு ஆக்கிக் கொடுத்தற்கண்:**

பிழைத்து வந்திருந்த (பரத்தை மனையிலிருந்து வந்திருந்த) தலை மகனை நெருங்கித் தலையளி செய்யுமாறு கூறித் தலைமகனிடத்து ஆக்கிக் கொடுத்தல், ஆக்கிக் கொடுத்தலாவது ஊடல் தணித்துக் கூட்டலாம்.

.......... ....... ..... ...... ....... .......... ...... ....

**இவள் நலம் புலம்பப் பிரிய**

**அனைநல முடையளோ மகிழ்நநின் பெண்டே**

**7. வணங்கிய மொழியால் வணங்கற்கண்:**

தாழ்ந்த இயல்பையுடைய மொழியினால் வணங்குதற்கான கூற்று நிகழும். அதாவது, பரத்தையிற் பிரிவு கூடாது எனப் பணிந்து வணங்கி உரைத்தல்.

**உண்டுறைப் பொய்கை வராஅ லினமிரியும்**

**திண்டுறை யூர தகுவகொல் - ஒண்டொடியைப்**

**பாராய் மனைத்துறந் தச்சேரி செல்வதனை**

**ஊராண்மை யாக்கிக் கொளல்**

**8. புறம்படு விளையாட்டினைப் புல்லிய புகர்ச்சிக்கண்**

புறம்பட்ட விளையாட்டினைத் தலைவன் பொருந்திய புகாச்சிக் கண் கூற்று நிகழும் (விளையாட்டு - பரத்தையொடு ஆடும் ஆட்டம், புகர்ச்சி - குற்றம்)

**காலை எழுந்து கடுந்தேர் பண்ணி**

**வாலிழை மகளிர் மரீஇய சென்ற**

**மல்ல லூரன் எல்லினன் பெரிதென**

**மறுவருஞ் சிறுவர் தாயே**

**தெறுவ தம்மவித் திணைப் பிறத் தல்லே**

**9. சிறந்த புதல்வனைத் தேராது புலம்பல்:**

இருவர்க்கும் சிறந்த புதல்வனை நினையாமல் தலைமகன் தனிமையுறுதற் கண்தோழி கூற்று நிகழும்.

.... ...... ... .... ..... ...... ... ....

**புனிறுநாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச**

**நள்ளென் கங்குற் கள்வன் போல**

**அகன் துறை ஊரனும் வந்தனன்**

**சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே**

**10. மாண் நலம் தா என வகுத்தற்கண்:**

நீ கொண்ட நலத்தினைத் தந்து போ எனக் கூறுதற்கண்ணும் கூற்று நிகழும்.

**விட்டென விடுக்குநாள் வருக அதுநீ**

**நொந்தனை யாயின் தந்தனை சென்மோ**

**குன்றத் தன்ன குவவுமணல் அடைகரை**

**நின் புன்னை நிலந்தோய் படுசினை**

**வம்ப நாரை சேக்குந்**

**தண்கடற் சேர்ப்பநீ உண்டவென் நலனே**

**11. பேணாவொழுக்கம் நாணிய பொருள்:**

தலைமகனைப் பேணாத, ஒழுக்கத்தினால் தலைமகள் நாணிய பொருண்மைக் கண் கூற்று நிகழும்.

**யாயா கியளே மா அ யோளே**

**மடைமாண் செப்பில் தமிய வைகிய**

**பொய்யாப் பூவின் மெய்சா யினளே**

**பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்**

**இனமீன் கருங்கழி யோதம் மல்குதொறும்**

**கயமூழ்கு மகளிர் கண்ணின் மானுந்....**

.... ...... ... .... ..... ...... ... ....

**12. சூள் நயன் திறத்தால் சோர்வு கண்டு அழிதல்:**

தலைமகன் சூளுற்ற சூளுறவிற் சோர்வு கண்டு அழிந்து கூறினும் கூற்று நிகழும்.

எம்மணங் கிளவே மகிழ்ந மூன்றில்

நனைமுது புன்கின் பூத்தாழ் வெண்மணல்

வேலன் புனைந்த வெறி அயர் களந்தொறுஞ்

செந்நெல் வாள்பொரி சிதறி அன்ன

எக்கர் நண்ணிய எமமூர் வியன்துறை

நேரிறை முன்கை பற்றிச்

சூரற மகளிரொ டுற்ற சூளே

13. **பெரியோர் ஒழுக்கம் பெரிது எனக் கிளந்து பெறுதகை இல்லாப் பிழைப்பு:**

பெரியோப பொய்யுரையார்; நீ பொய்யுரைத்தனை; ஆதலின் தலை மகளைப் பெறும் தகுதி இழந்தனை எனக் கூறும் கூற்று.

**வெள்ளி விழுதொடி மென்கரும் புலக்கை...**

**அனைய பெரியோரித் தெரரியுங் காலை**

**நும்மோர் அன்னோர் மாட்டும் இன்ன**

**பொய்யோடு மிடந்தவை தோன்றின்**

**மெய்யாண் டுளதோ இவ் உலகத் தானே**

14. **அவ்வழி உறுதகையில்லாப் புலவியின் மூழ்கிய கிழவோள் பால்நின்று கொடுத்தற்கண்:**

மேற்சொல்லியவற்றால் தலைவன் தவறு செய்தவழி அவனால் கூறும் தகைமை இல்லாத புலவியின் மூழ்கிய தலைவி பக்கத்தாளாகி நின்று அதனைக் கொடுதற்கண் கூற்று நிகழும்.

15. **உணர்ப்புவயின் வாரா ஊடல் உற்றோள்வயின் உணர்தல் வேண்டிய கிழவோன்பால் நின்று தான் வெகுண்டு ஆக்கிய தகுதிக்கண்:**

தலைவன் உணர்திறம் உணராது ஊடல் கொண்ட தலைவியிடத்துத் தலைவன் ஊடலைத் தீர்த்தற் பொருட்டு நிற்பான். அப்போது தலைவி சில வெகுண்டு உரைப்பாள். அக்காலை தோழி ஊடல் தீர்ப்பாள்.

உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது

மிக்கற்றால் நீள விடல்

16. **அருமைக் காலத்துப் பெருமை காட்டிய எளிமைக் காலத்து இரக்கம்:**

அரியளாய களவுக்காலத்துத் தலைவி பெருமையைக் காத்து, அவள் எளியளாய கற்புக் காலத்து அப்பெருமையைக் காவாததை எடுத்துக் கூறுமிடத்துக் கூற்று நிகழும்.

வேம்பின் பைங்காயென் றோழி தரினே

தேம்பூங்கட்டி என்றனிர், இனியே

பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்

தைஇத் திங்கட் டண்ணிய தரினும்

வெய்ய உவர்க்கும் என்றனிர்

ஐய வற்றால் அன்பின் பாலே

17. **பாணர், கூத்தர், விறலியர் என்றிவர் பேணிச் சொல்லிய குறைவினை எதிர்த்தல்:**

பாணராயினும், கூத்தாராயினும், விறலியராயினும் இத்தன்மையர் விரும்பிக் கூறி வாயில் வேண்டுமிடத்து வாயில் மறுத்தல், அப்போது கூற்று நிகழும்.

**புலைமகள் ஆதலிற் பொய்ந்நின் வாய்மொழி**

**நில்லல் பாண சொல்லினிப் பரியல்**

**பகல்எஞ் சேரிக் காணின்**

**அகல்வய லூரன் நாணவும் பெறுமே**

**18. நீத்த கிழவனை நிகழுமாறு படீஇயர் காத்த தன்வயிற்கண் நின்று பெயர்த்தல்:**

தலைவியை நீத்த தலைவனை அவளுடன் இல்லறத்தே இருக்கச் செய்ய வேண்டி அவளைப் பரத்தையின்பால் போகவிடாமல் பாதுகாத்திட வேண்டி அவனைப் புறங்காத்த தன்னிடத்து உற்ற தலைமகனைக் கண்ணோட்டமின்றிப் பெயர்தற்கண் கூற்று நிகழும்.

**19. பிரியுங் காலை எதிர் நின்று சாற்றிய மரபுடைய எதிர்:**

தலைவன் சேயிடைப் பிரியுங்காலத்து முன்னின்று சொல்லிய மரபுடை மாறுபடும் என்றவாறு.

**அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிதாற்றிப்**
**பின்னிருந்து வாழ்வார் பலர்.**

**காமக்கிழத்தியர் கூற்று**

காதல் மிகுந்து களவு கற்பாகி இல்வாழ்க்கையை ஏற்றுக் கொண்ட பின்னரும் காமக்கிழத்தியர் பால் புறத்தொழுக்கம் பூண்கிறான் தலைவன். சிலப்பதிகாரக் கோவலனை ஈண்டு நினையலாம். இக்காமக் கிழத்தியர்க்குக் கூற்று நிகழும் இடங்களாக எட்டினைக் கூறுவர் ஆசிரியர்.

காமக்கிழத்தியர் கூற்று நிகழ்த்துமிடங்கள் பற்றிய நூற்பா

**புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்**
**இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்**
**பல்வேறு புதல்வர்க் கண்டுநனி உவப்பினும்**
**மறையின் வந்த மனையோள் செய்வினை**
**பொறையின்று பெருகிய பருவரற் கண்ணும்**
**காதற் சோர்விற் கடப்பாட் டாண்மையில்**
**தாய்போற் கழறித் தழீஇய மனைவியைக்**
**காய்வின் றவன்வயிற் பொருத்தற் கண்ணும்**
**இன்னகை புதல்வனை தழீஇ இழையணிந்து**
**பின்னை வந்த வாயிற் கண்ணும்**
**மனையோ ளொத்தலின் தன்னோர் அன்னோர்**
**மிகையெனக் குறித்த கொள்கைக் கண்ணும்**
**எண்ணிய பண்ணையென் றிவற்றொடு பிறவும்**
**கண்ணிய காமக் கிழத்தியர் மேன**

தலைவன் தன்னிடத்துச் சிலநாளும் தலைவியிடத்துச் சிலநாளும் தங்குதலால் தலைவி வெகுளுமிடத்துக் காமக்கிழத்தியர் புலந்து கூறுதல்.

மனையோர் (தலைவனின் இல்லாத்தார்) செய்த வினையை இகழ்ந்து கூறுதற்கண் கூற்று நிகழும்.

பலவகைப் புதல்வரைக் கண்டு (தன் தலைவனின் புதல்வனை) மிகவும் உவந்து கூறியவழிக் கூற்று நிகழும்.

களவின் வருகின்ற தலைவர் செய்வினை பொறையின்றிப் பெருகிய துன்பத்தின் கண் கூற்று நிகழும். தலைவியோடு தலைவன் மகிழ்ந்திருத்தல் கண்டு பொறுமையின்றிப் பெகிய துன்பத்தின் கண் கூற்று நிகழும்.

காதலையம் இல்லறத்துச் செய்யும் கடமையையும் தலைவன் மறத்தலான் தலைவிக்குத் துனி உண்டானபோது, தான் செவிலி போலத் தலைமகளை உடன்படுத்திக் கொண்டு தலைமகளைக் கழறி, அத்தலைவியைத் துனி நீக்கித் தலைவனிடம் கூட்டுமிடத்துக் கூறுவாள்.

ஏனைய வாயில்களை மறுத்தபின்னர், இனிய நகையையுடைய புதல்வனைத் தழுவி, இழையணிந்து, தலைமகன் வாயிலாகக் கொண்டு புகுதல்.

தான் மனையாளை ஒத்தலால் தன் போல்வார் தலைவர்க்கு மிகையெனக் குறித்த கொள்கைக்கண் கூற்று நிகழும்.

எண்ணப்பட்ட விளையாட்டின்கண் - விளையாட்டாவது ஆறுங்குளனுங் காவும் ஆடுதல்.

**செவிலி கூற்று**

தோழியின் தாயே செவிலியாவாள், செவிலியின் கூற்றுக்கள் வருமாறு:

**கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும் வழிகொள்**

**நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்**

**செவிலிக் குரிய ஆகும் என்ப**

இறந்த காலத்தினும், நிகழ்காலத்தினும், எதிர்காலத்தினும் தன் குலத்தில் உள்ளோர் ஏற்றுக் கொள்ளுமாறு ‘கற்பு’ முதலிய நல்லவற்றைக் கூறுதலும், அல்லவை கடிதலும் செவிலித் தாய்க்கு உரியவாகும்.

**கொடுத்த தந்தை கொழுஞ்சோ றுள்ளாள்**

**ஒழுகுநீர் நுணங்கறல் போலப்**

**பொழுதுமறுத் துண்ணுஞ் சிறுமது கையளே**

**வாயில்கள்**

தலைவன் தலைவியிடையே அகவொழுக்கம் நிகழ்தற்கு வாயில் போறலின் வாயில்கள் எனப்பட்டனர். வாயில் என்பது தூதுப் பொருள் எனப்படும். கற்புக் காலத்து வாயிலாவோர் தோழி, தாய் பார்ப்பார், பாங்கன், செவிலி, பாணன், விறலி, இளையர், விருந்தினர், கூத்தர், அறிவர், கண்டோர் எனும் இப்பனிருவராவர்.

**தோழி தாயே பார்ப்பான் பாங்கன்**

**பாணன் பாட்டி இளையர் விருந்தினர்**

**கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்**

**யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப**

இப்பன்னிரு வாயில்களும் தலைவன், தலைவி இருவரிடத்தும் பொருந்திய மகிழ்ச்சியை உண்டாக்குதலைத் தமக்குப் பொருளாக உடையர். தலைவன் தலைவி நுகரும் இன்பத்திற்குத் துணையாவர் இவ்வாயில்கள் அன்பு நீக்கிய கடுஞ்சொல் கூறவேண்டின், தலைவன் சிறைப்புறத்தான் ஆகிய வழி கூறலாம். நேருக்கு நேர் கூறாது வேறொருவர் மீது கூறுவது போதும் கூறலாம். இது வாயில்களே சிறைப்புறமாகக் கூறுவதாம். தலைவி எவ்வளவு வருந்தினாலும் தலைவனின் கொடுமையைக் கூறுதல் வாயில்களுக்கு வழக்கில்லை. தலைவியைத் தலைவன் கூடுதற்குரிய வாய்ப்பிருந்தால் அவன் கொடுமை கூறலாம் என்பர் தொல்காப்பியர். தலைவன் வேண்டும்போது பன்னிரு வாயில்களும் தலைவனை நோக்கி முன்னிலைப் புறமொழி (முன்றிற்பாரைக் குறித்துப் பிறரைக் கூறுமாறு போலக் கூறுதல் கூறுவர்.

**பார்ப்பார் கூற்று**

வாயில்களும் பார்ப்பார் கூற்று ஆறு

**காமநிலை உரைத்தலும் தேர்நிலை உரைத்தலும்**

**கிழவோன்குறிப்பினை எடுத்தனர் மொழிதலும்**

**ஆவொடுபட்ட நிமித்தங் கூறலும்**

**செலவுறு கிளவியும் செலவழுங்கு கிளவியும்**

**அன்னவை பிறவும் பார்ப்பார்க்கு உரிய**

நீ பிரியின் இவள் காமம் மிகும் எனக் கூறுதல்.

ஆராய்ச்சி நிலையால் கூறுதல் அதாவது காரணம் காட்டிக் கூறுதல்.

தலைவன் குறிப்பினைத் தலைவிக்கு விளங்கக் கூறல்.

பசு கலம் நிறையப் பால் சொரிதலானும் குறைதலானும் உளதாய நிமித்தம் பற்றி நன்மை தீமை கூறல்.

தலைமகன் போயினான் எனக் கூறுதல்.

செலவழுங்கல் வேண்டுமெனக் கூறல்.

**பாங்கன் கூற்று**

களவில் பாங்கற்கூட்டம் முதலானவற்றின் போதும், கற்பில் பரத்தையிற் பிரிவின்போதும் தலைவன் கூறிய கூற்றுக்கு எதிர் கூறுதல் பாங்கனுக்கு உரியது.

**மொழியெதிர் மொழிதல் பாங்கற்கு உரித்தே**

**குறித்தெதிர் மொழிதல் அ஁கித் தோன்றும்**

**இளையோர் கூற்று**

எப்போதும் தலைவனுடன் இருக்கும் இளைஞர்களே இளையோராவர். அவர் கூற்று ஏழு என்பர் ஆசிரியர்.

**ஆற்றது பண்பும் கருமத்து வினையும்**

**ஏவல் முடிபும் வினாவுஞ் செப்பும்**

**ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியுந்**

**தோற்றஞ் சான்ற அன்னவை பிறவும்**

**இளையோர்க் குரிய கிளவி என்ப**

**உழைக்குறுந் தொழிலும் காப்பும் உயர்ந்தோர்க்கு**

**நடக்கை எல்லாம் அவர்கட் படுமே**

வழியதருமை கூறல்

பொருள் செயல்வகை முடிக்கும் திறமறிந்து கூறல்.

தலைவன் ஏவிய விவனயை முடித்து வருதல்

செய்வன யாவை? எனத் தலைவனை வினாவல்.

தலைவிக்கு வேண்டியவற்றைத் தலைவன்பால் கூறுதல்.

சுரத்திடை கண்ட நிமித்தம் கூறுதல்.

அச்சுரத்திடைப் புணர்ந்து விளையாடும் மா, புள் இவற்றைத் தலைவனுக்குச் சுட்டிக் கூறுதல் பிறவும் ஆம்.

**கூத்தர் கூற்று**

**தொல்லவை உரைத்தலும் நுகர்ச்சி ஏத்தலும்**

**பல்லாற் றானும் ஊடலின் தணித்தலும்**

**உறுதி காட்டலும் அறிவுமெய்ந் நிறுத்தலும்**

**ஏதுவின் உணர்த்தலும் துணிவு காட்டலும்**

**அணிநிலை உரைத்தலும் கூத்தர் மேன**

கூத்தர் கூற்று எடடாகும். எல்லா நெறியினாலும் புகழந்துரைக்க வல்லார் கூத்தர். அவர் கூற்று நிகழ்த்துமிடங்கள்.

முன்புள்ளார் இவ்வாறு செய்வர் எனக் கூறுதல்.

இன்ப நுகர்ச்சி இவ்வாறு இனியதெனக் கூறுதல்

பல நெறியானும் ஊடலினின்றும் தலைமகளை மீட்டல்.

இவ்ஊடல் தணிந்ததனால் பயனிது எனக் கூறல்

தான் துணிந்ததே மெய் எனக் கொண்ட தலைவிபால் இது தக்கதன்று என்று அறிவு கூறல்.

இவ்வாறு செய்யின் இவ்வாறு குற்றம் பயக்கும் என ஏதுவினால் கூறுதல். ஏதாவது பிறள் ஒருத்தி கெட்டபடி கூறுதல்.

அவள் துணியுமாறு காரணம் காட்டுதல்.

தொய்யில் எனும் அணியைப் புலரவிடுவதால் பயன் என்பனை எனக் கூறுதல்.

**கூத்தல் பாணர், கூற்று**

**நிலம் பெயர்ந்து உரைத்தல் வரைநிலை உரைத்தல்**

**கூத்தர் பாணர்க்கும் யாத்தவை உரிய**

என்பது. நூற்பா, தலைவன் பிரிந்தவிடத்து தலைவியிடம் சென்று கூறுதலும், தலைவி நின்ற நிலையைத் தலைவற்குக் கூறுதலும் ஆம்.

**அறிவர் கூற்று**

**சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய**

என்ற நூற்பா. செவிலிக்கு உரித்தாகச் சொல்லப்பட்ட கிளவிகளைச் சுட்டியதாகும்.

**கழிவினும் வரவினும் நிகழ்வினும் வழிகொள**

**நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்**

**செவிலிக்கு உரிய வாகும் என்ப**

என்பது நூற்பா. எனவே இறப்பினும், எதிர்வினும், நீகழ்வினும் ஆகிய முக்காலத்திற்கும் தலைவி தீய ஒழுக்கத்தைக் கைவிட்டு நல்லெழுக்கத்தைக் கொள்ளுமாறு கூறுதல்.

**பிரிவு**

வினையே ஆடவர்க்கு உயிரே என்பதற்குத் தக ஆடவன் மனைவியின்றும் நிங்கிச் செயல்களாற்றப் புற உலகம் செல்ல வேண்டியவனாகிறான்.

அகத்திணையியலில் அறுவகைப் பிரிவுக்ள பற்றிப் பேசப்பட்டுள்ளது. கற்பியலில் ஒவ்வொரு பிரிவிற்குமுரிய காலவரையறை சுட்டப்படுகிறது.

கல்வி கற்கப் பிரிவது ஓதற் பிரிவு எனப்படும். இப்பிரிவிற்குரிய காலம் மூன்றாண்டுகள்

**வேண்டிய கல்வி யாண்டு மூன்று இரவாது**

என்பது நூற்பா.

**வேந்துறு தொழிலே யாண்டின தகமே**

வேந்தனுக்கு உற்றவழி தூது. காவல் எனப் பிரியும் இப்பிரிவுக்கு ஓராண்டினது எல்லையே காலம்.

**ஏனைப் பிரிவும் அவ்வயின் நிலையும்**

என்றதனால் பொருள்வயிற் பிரிவு போன்ற பிற பிரிவுகட்கும் காலம் ஓராண்டாம்.

**பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்**

**நீத்தகன்று உரையார் என்மனார் புலவர்**

**பரத்தையிற் பிரிந்த காலை யான**

பரத்தையர் சேரியாயினும் பூத்தோன்றி மூன்றுநாள் கழிந்த பின்பு பன்னிரண்டு நாளும் நீங்குதல் அறமன்று. இதனால் பயன் என்னையெனின் அது கருத்தோன்றும் காலம் என்க. பூப்பு நிகழ்ந்த மூன்று நாளும் தவிர்த்து நான்காம் நாள் தொடங்கி பதினைந்தாம் நாள் வரையான பன்னிரண்டு நாளும் கருத்தோன்றும் காலம். அக்காலத்தே தலைவியை நீங்கி உறையாமல் அவளுடன் இணைந்து மகபேறு எய்த வேண்டும். அக்காலத்துப் பிரிதல் அறமாகாது என்பது பொருளாம் கருத்தரிக்கும் காலம் குறித்து இக்கால மருத்துவ அறிஞர்கள் கண்டறிந்துள்ள உண்மைகளோடு இச்செய்தி ஒத்து நடக்கக் காணலாம்.

**யாறும் குளனும் காவும் ஆடிப்**

**பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப**

விளையாடி இன்பம் நுகர்தல் தலைவன் தலைவிக்குரிய

**காமஞ் சான்ற கடைக்கோட் காலை**

**ஏமஞ் சான்ற மக்களோடு துவன்றி**

**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியம்**

**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே**

தலைவன் தலைவிக்கு உரியதோர் உயர்ந்த மரபை இந்நூற்பா விளக்கும். தலைவனும், தலைவியும்இல்லறம் புரிவதற்குத் துணையான தோழி முதலிய உரிமைச் சுற்றத்தோடும், காப்பமைந்த மக்களோடும் வாழ்ந்திருந்து, காமம் தீர்ந்த காலத்துத் தன் மக்களிடம் இல்லறப் பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு வீட்டின்பம் பெற வழி செய்தலே முன்னர் நடத்திய இல்லறத்தின் பயனாம்.

**கிழவி நிலையே வினையிடத் துரையார்**

**வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்**

தலைவன் தான் மேற்கொண்ட வினையில் ஈடுபடும் காலத்து ஆண்டுத் தன் மனையாளை நினைத்துப் புலம்பினான் என்று செய்யுள் செய்யப் பெறார். மேற்கொண்ட வினையில் அவன் வெற்றியடையின் தலைவியை நினைந்து இரங்கினானாகக் கூறலாம்.

**உணர்ப்பு வரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும்**

**புலத்தலும் ஊடலும் கிழவோற்கு உரிய**

தலைவன் தேற்றத் தேறாமல் தலைவியின் ஊடல் நீடினம், களவில் தலைவி செய்த குறியை அவளே தப்பினும் புலத்தலும் ஊடலும் (மனம் வேறுபடலும், அவ்வேறுபாடுமிக்கு நீளுதலும்) தலைவனுக்கு உரிய.

**காமம் கடப்பினுட் பணிந்த கிளவி**

**காணுங் காலைக் கிழவோற்கு உரித்தே**

**வழிபடு கிழமை அலட்சிய லான**

தலைவனை வழிபட்டொழுகல் தலைவியின் இயல்பாயினும், தலைவன் பால் காமம் மிகுந்தவிடத்துத் தன் தலைவியிடத்துப் பணிந்த மொழி கூறுதல் தலைவன் இயல்பாம்:

**கிழவோன் விளையாட் டாங்கும் அற்றே**

தலைவன் விளையாட்டும் காமத்தின் மிகுதியைக் காட்டும்.

**பின்முறை ஆக்கிய பெரும்பொருள் வதுவைத்**

**தொன்முறை மனைவி எதிர்ப்பா டாயினும்**

**மின்னிழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும்**

**இறந்து நினைஇக் கிழவோன் ஆங்கட்**

**கலங்கலும் உரியன் என்மனார் புலவர்**

இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் உரையெழுதவில்லை. இது தலைமகற்குரியதோர் மரபுணர்த்திற்று என்று மட்டுமே சுட்டிச் செல்கிறார்.

இரண்டாம் முறை மணந்து கொண்ட மனைவியை முதல் மனைவி எதிரேற்கினும், முதல் மனைவி தன் புதல்வனைக் கோலஞ் செய்து பின் முறை மனைவியிடம் வாயிலாகக் கொண்டு செல்லனம், தலைவன், அங்ஙனமாய இரு தலைவியரையும் கைவிட்டுப் பரத்தமை செய்து ஒழுகியதை நினைந்து அவ்வாசையை விட்டு நீங்கலும் உரியன் எனப் பொருள் கொள்வர் புலவர் குழந்தை.

**எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்**

நினைதர்தற்கரிய பாசறைக்கண் தலைமகளோடு தலைவர் புணரார் என்பது இந்நூற்பாவின் பொருளாகும்.

**புறத்தோ ராங்கண் புணர்வது ஆகும்**

பாசறைக்கண் தாதியர், கணிகையர் இவரோடு புணர்ச்சியிற் பொருந்துவர்.

**கிழவி முன்னர்த்தற்புகழ் கிளவி**

**கிழவோன் வினைவயின் உரிய என்ப**

பிரிவின் போது தலைவியின் முன்னர் தலைவன் தன்னைப் புகழும் கூற்று அதாவது, தான் செய்யும் வினைகளைப் பற்றிப் புகழ்ந்து கூறுதல்.

**துன்புறு பொழுதினும் எல்லாங் கிழவன்**

**வன்புறுத் தல்லத சேறல் இல்லை**

தலைவன் பிரியக் கருதின் அது கண்ட தலைவி ஆற்றாது வருந்திய பொழுதும் சுற்றுமும் தோழியும் ஆயமும் உள்ளார் நீ ஆற்றியிரு என்றும் நாணம், மடம், அச்சம் முதலிய குணங்கள் உள்ள நீ ஆற்றியிரு என்றும் வற்புறுத்திக் கூறியல்லது தலைவன் பிரிதல் இல்லை என்பது பொருள்.

**செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே**

**வன்புறை குறித்தல் தவிர்ச்சி யாகும்**

தலைவன் வினைவயிற் பிரியும் காலத்து தலைவி பொருள் எனப் பிரியாது இருத்தல் இல்லை. வற்புறுத்திப் பிரிவான் என்பது பொருள்.

**வினைவயின் பிரிந்தோன் மீண்டுவரு காலை**

**இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை**

**உள்ளம் போல உற்றுழி உதவும்**

**புள்ளியற் கலிமா உடைமை யான**

வினைமுற்றி மீளும் தலைவன் வழியிடைத் தங்குதல் இல்லை வரும் வழி எத்துணை தொலைவுடையதாயினும் தலைவியை அடையும் அவாவினால் விரைவான்.

**தலைவிக்குரிய மரபுகள்**

கற்பியலில் தலைவிக்குரிய மரபுகளும் கூறப்பட்டுள்ளன.

**அவன் குறிப் பறிதல் வேண்டியுங் கிழவி**

**மெலி யூடல் அகற்சிக் கண்ணும்**

**வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே**

தோழி 'அன்பிலை கொடியை' எனக் கேட்ட தலைவன் சினங்கொண்டானோ என ஐயுற்று, அவனுடைய குறிப்பை அறிதற்கும், தலைவி தனது மனதில் நிறைந்து நின்ற ஊடல் பெருகியவழி அத்துனி தலைவற்கு என்னாகுமோ என்று அஞ்சியும், தலைவி, 'நான் இறந்துபட்டாலும் சரி; அவரை அன்பிலை கொடியை என்னாதி' என்று தலைவனோடு தான் அயன்மையுடையள் போன்ற சொல்லைக் கூறவும் பெறுவள். அயன்மையாவது தன்னின் வேறல்லாத தலைவனை வேறாகக் கூறுதல்.

**தற்புகழ் கிளவி கிழவன் முற் கிளத்தல்**

**எத்திறத் தானம் கிழத்திக் கில்லை**

**முற்பட வகுத்த இரண்டலங் கடையே**

தலைவன் முன்னர்த் தன்னைப் புகழும் கூற்று எவ்வகையானும், கிழத்திற்கு இல்லை. முற்படக்கூறிய இரண்டிடம் அல்லாதவழி தலைவன் பரத்தையிற் பிரிந்து வந்த போது இரத்தலும் தெளிதலும் ஆகிய இரண்டிடத்தில் தலைவி தன்னைப் புகழ்வாள் என்பது பொருள்.

**அருள் முந்துறுத்த அன்புபொதி கிளவி**

**பொருள்பட மொழிதல் கிழவோட் குரித்தே**

அருள்பிறத்தற்கேதுவாகிய அன்போடு கூடிய சொல்லைப் பணிந்து கூறாது வேறோர் பொருள்படக் கூறுதல் தலைவிக்கும் உரித்து என்பதாம். 'யான் உன்னை விரும்பாவிடினும் என் நெஞ்சு விரும்புகிறது' எனத் தனது அன்பு தோன்றக் கூறுதல்.

**களவுங் கற்பும் அலர்வரை வின்றே**

**அலரில் தோன்றும் காமத்து மிகுதி**

களவினும் கற்பினும் அலர் எழுகின்றதென்று கூறுதல் தலைவிக்கும் தோழிக்கும் நீக்கும் நிலைமை அன்று. அதனால் இருவரது காமமும் சிறக்கும்.

**தோழி மரபு**

**புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்துஞ்**

**சொலத்தகு கிளவி தோழிக் குரிய**

தலைவன் தலைவியிடையே புலத்தலும் ஊடலும் உள்ளிவிடத்து தலைவனிடம் முறையோடு பணிந்து மொழிதல் தோழிற்குரியது.

**பரத்தை மறுத்தல் வேண்டியுங் கிழவி**

**மடத்தகு கிழமை உடைமையானும்**

**அன்பிலை கொடியை என்றலும் உரியள்**

தலைவனின் பரத்தமையைப் போக்குதல் வேண்டியும், தலைவியின் மடமைக் குணம் கருதியும் 'நீ எம் தலைவியிடத்து அன்பிலை' எனக்கூறி ஊடல் தணித்தற்கு உரியள் தோழி.

## வினாக்கள்

1. 'கற்பிலக்கணம்' - குறிப்பு வரைக
2. அக ஒழுக்க நிகழ்வில் வாயில்களின் பங்கை எழுதுக.
3. கற்பில் தலைவி கூற்று நிகழும் இடங்களை விளக்குக.
4. கற்பில் தலைவி கூற்று நிகழும் இடங்கள் யாவை?
5. கற்பில் தோழி கூற்று நிகழும் இடங்கள் யாவை?
6. செவிலிக் கூற்று பார்ப்பார் கூற்று விவரி?
7. தலைமக்கள் மரபாகத் தொல்காப்பியம் கூறுவன யாவை?

# அலகு - 3

# செய்யுளியல்

## செய்யுள் உறுப்புக்கள்

**மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ**
**யாத்த சீரே அடியாப் பெனாஅ**
**மரபே தூக்கே தொடைவகை எனாஅ**
**திணையே கைகோள் பொருள்வகை எனாஅ**
**கேட்போர் களனே காலவகை எனாஅ**
**பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ**
**முன்னம் பொருளே துறைவகை எனாஅ**
**மாட்டே வண்ணமோ டியாப்பியல் வகையின்**
**ஆறு தலையிட்ட அந்நா லைந்தும்**
**அம்மை அழகு தொன்மை தோலே**
**விருந்தே இயைபே புலனே இழைபெனாஅப்**
**பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ**
**நல்லிசைப் புலவர் செய்யுளு றுப்பென**
**வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே.**

'இங்குக் கூறப்பட்ட மாத்திரை முதலாக வரும் முப்பத்து நான்குஞ் செய்யுள் உறுப்புக்களாம்' என்று நல்ல புகழையுடைய புலவர்கள், அறிவு வன்மையால் வகுத்து உரைத்துள்ளார்கள்.

**மாத்திரையும் எழுத்தியலும்**

**அவற்றுள்,**
**மாத்திரை வகையும் எழுத்தியல் வகையும்**
**மேற்கிளந் தனவே என்மனார் புலவர்.**

மேற்கூறப்பட்டவற்றுள், மாத்திரை வகையும் எழுத்தியல்வகையும் எழுத்ததிகாரத்திற் கூறப்பட்டன என்று புலவர் கூறுவர். அதனால், இவ்விடத்து அவற்றுள் யாதும் வேறுபாடில்லை என்பதாம்.

**அசை**

**குறிலே நெடிலே குறிலிணை குறில்நெடில்**
**ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி**
**நேரும் நிரையும் என்றிசிற் பெயரே.**

குறிலும், நெடிலும், குறிலிணையும், குறில்நெடிலும், தனியே வரினும் ஒற்றொடு வரினும், ஆராயுங்காலத்து நேரசையும் நிரையசையுமாம்.

கோ - ழி - வேந் - தன்; இவை நான்கும் நேரசை.

நெறி - சுறா - நிறம் - குரல்; இவை நான்கும் நிரையசை.

**இருவகை உகரமோ டியைந்தவை வரினே**
**நேர்பும் நிரைபும் ஆகும் என்ப**

**குறிலிணை உகரம் அல்வழி யான.**

மேற்கூறப்பட்ட இரண்டையும் குற்றியலுகரமும் அல்லாத முற்றியலுகரமும் சேர்ந்துவரின், நேர்பசையும் நிரைபசையும் எனப் பெயராகும்; அவ்வழிக் குற்றெழுத்தோடு பொருந்தின உகரம் அல்லாத இடத்து என்றவாறு.

காது, காற்று, கன்று, காவு, சார்பு, கல்லு முதலியன

நேர்பசை. வரகு, அரக்கு, மலாடு, பனாட்டு, கதவு, புணர்வு, உருமு, வினாவு என்பன நிரைபசை. தொகுத்து நோக்குமிடத்து, நேர், நிரை, நேர்பு,

நிரைபு என்பன தாமே தமக்கு உதாரணமாம்.

**இயலசை முதலிரண் டேனவை உரியசை**

முதலிற் கூறப்பெற்ற நேரசையும் நிரைபசையும் இயலசை எனப் பெயர்பெறும்; நேர்பசையும் நிரைபசையும் உரியசை எனப் பெயர் பெறும்.

**தனிக்குறின் முதலசை மொழிசிசைந் தாகாது.**

தொடர்மொழிக்கண் மொழி சிதைந்து தனிக்குறில் நேரசை யாகாது என்பதாம்.

**ஒற்றெழுத் தியற்றே குற்றியலிகரம்**

குற்றுயலிகரம் ஒற்றெழுத்தின் தன்மையை உடையது.

**முற்றிய லுகரமும் மொழிசிதைத்துக் கொளாஅ**

**நிற்றல் இன்றே யீற்றடி மருங்கினும்.**

முற்றியலுகரமும், மொழிசிதைந்து நேர்பசை நிரைபசை என்று உரைக்கப்பட மாட்டாது. அஃது ஈற்றடி மருங்கில் தனியசையாகி நிற்றலும் இல்லை.

**குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்**

**ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே.**

குற்றியலுகரம் முற்றியலுகரம் என்னும் இருவகை உகரமும், ஒற்றொடு தோன்றித் தனிமையாகி நிற்கவும் பெறும்.

**முடிபு**

**அசையுஞ் சீரும் இசையொடு சேர்த்தி**

**வகுத்தனர் உணர்த்தல் வல்லோர் ஆறே**

அசையையும் சீரையும் ஓசையோடு சேர்த்துப் பாகுபாடு உணர்த்தல், வல்லார்களுடைய நெறி முறையாகும். அஃதாவது, பொருளோடு சொல்லை அறுத்தவிடத்துத் தளையும் சீரும் சிதைந்தால், அவ்வழி ஓசையை நோக்கி அதன்வழிச் சேர்த்துக என்பதாம்.

**சீர்**

**ஈரசை கொண்டு மூவசை புணர்ந்தும்**

**சீரியைந் திற்றது சீரெனப் படுமே.**

இரண்டசைகளைக் கொண்டு புணர்த்தும், மூன்றசைகளைக் கொண்டு புணர்த்தும், ஓசைபொருந்தி முடிந்தது '**சீர்**' என்று கூறப்பெறும்.

**அயற்சீரும் உரிச்சீரும்**

**இயலசை மயக்கம் இயற்சீ ரேனை**

**உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர்.**

மேற்கூறப்பட்ட அசைகளில் இயலசை மயங்கி வந்தன இயற்சீரெனப் பெறும்; உரியசை மயங்கி வந்தன ஆசிரிய உரிச்சீரெனப்படும். மயங்குதலாவது; ஒருங்கு வருவது.

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் - இவை இயற்சீர்; ஆற்றுநோக்கு, ஆற்றுவரவு வரகுசோறு, வரகு தவிடு - இவை உரிச்சீர்.

**முன்நிரை யுறினும் அன்ன வாகும்.**

நேர்பசை நிரைபசைப்பின் நிரை யிறுதியும் ஆசிரிய உரிச்சீராகும்

யாற்றுபடை, குளத்துமடை என வரும்.

**இயற்சீர்**

**நேரவண் நிற்பின் இயற்சீர்ப் பால**

உரியசையின் பின்னர் நேரசை வரின், அ.்து இயற்சீரின் தன்மையைப் பொருந்தி நிற்கும். (உ.ம்) ஆற்றுக்கால் குறத்துக்கால் என வரும்.

**இயலசை யீற்றுமுன் உரியசை வரினே**

**நிரையசை இயல வாகும் என்ப.**

இயலசை ஈற்றின் முன்னர் உரியசைவரின், நிரையசை வ்நதாற்போலக் கொள்க. எனவே, இவையும் இயற்சீர் என்பதம். (எ.டு) மாங்காடு, களங்காடு; பாய்குரங்கு, கடிகுரங்கு என வரும்.

**உயிரளபெடையின் நிலை**

**அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே**

உயிரளபெடை அசையாக நிற்கவும் பெறும்; உம்மை எதிர்மறை யாதலான் ஆகாமையே பெரும்பான்மை என்க.

**ஒற்றளபெடையின் நிலை**

**ஒற்றள பெடுப்பினும் அற்றென மொழிப.**

ஒற்று அளபு எடுத்தலும் அசைநிலையாக நிற்றலும் உரித்து. (எ.டு) "கண்ண டண்ணனெனக் கண்டுங் கேட்டும்" (மலைபடு) என வரும்.

**உரிச்சீர்**

**இயற்சீர் இறுதிமுன் நேர் அவண் நிற்பின்**

**உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப.**

இயற்சீரின் முடிவுக்குப்பின் அவ்விடத்தில் நேரசை நிற்குமானால், அங்ஙனம் வரும் மூவசைச்சீர் நான்கும் வெண்பா உரிச்சீர் ஆகும் என்று கூறுவார்கள். (எ.டு) மாவாழ்கான், மாவருகான், புலிவாழ்கான், புலிவருகான் என வரும்.

**வஞ்சீச் சீர்**

**வஞ்சிச் சீரென வகைபெற் றனவே**

**வெண்சீ ரல்லா மூவசை யான.**

**'வஞ்சீச் சீர்'** என்று வகுத்துக் கூறப்பட்டவை. மேற் சுறப்பட்ட வெண்சீர் அல்லாத மூவகைச்சீர் அறுபதும் ஆகும்.

**வஞ்சிப்பாவில் வஞ்சியுரிச்சீர் வருதல்**

**தன்பா அல்வழித் தான்நடை இன்றே**

வஞ்சியுரிச்சீர், வஞ்சிப் பாவைத் தவிர வேறு பாவகையினுள் நடைபெறாது.

**வஞ்சிப்பாவினுள் பிற சீர்களும் வரும்**

வஞ்சிப்பாவினுள் ஒழிந்த உரிச்சீர்களும் வரப்பெறும்.

**வெண்பாவிற்கு, ஒழுங்கு வராத சீர்கள்**

**வெண்பா உரிச்சீர் ஆசிரிய உரிச்சீர்**
**இன்பா நேரடிக் கொருங்குநிலை இலவே.**

வெண்பாவுரிச்சீரும் ஆசிரியவுரிச்சீரும் வெண்பாவினது நேரடிக்கண் ஒருங்கு நிற்றல் இல்லை.

**கலிப்பாவில், அவை மயங்கல்**

**கலித்தளை அடிவயின் நேரீற் றியசீர்**
**நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே.**

ஆராய்ந்து பார்ப்பவர்கட்குக் கலிப்பாவிற்குரிய கலத்தளைக்கண் நேரீற்றியற்சீர் நிற்றற்குரியதன்று என்பது விளங்கும்.

**வஞ்சிப்பாவின் இறுதியில் நேரீற்று இயற்சீர்**

**வஞ்சி மருங்கினும் இறுதிநில் லாது.**

வஞ்சிப்பாவினும் நேரீற்றியற்சீர் அடியின் முடிவிலே நிற்கமாட்டாது; எனவே, அடிமுதற்கண் நிற்கப்பெறும் என்பதாம்.

**ஓரசைச்சீர்**

**இசைநிலை நிறைய நிற்குவ வாயின்**
**அசைநிலை வரையார் சீர்நிலை பெறலே.**

இசை நிற்கின்றநிலை நிரம்பா நிற்குமாயின், அசையுஞ் சீராம் தன்மைபோல வரையார் ஆசிரியர் என்றவாறு. (எ.டு) நாள், மலர், காசு, பிறப்பு என வரும்.

**அது, செய்யுளிற் பயிலுதல்**

**இயற்சீர் பாற்படுத் தியற்றினர் கொளலே**
**தளைவகை சிதையாத் தன்மை யான.**

ஓரசைச் சீரைத் தளைவகை சிதையாத் தன்மை வேண்டும் இடத்து, இயற்சீர்போலக் கொள்க.

**வெண்சீர் ஈற்றசையின் ஓரியல்பு**

**வெண்சீர் ஈற்றசை நிரையசை யியற்றே.**

வெண்சீர் ஈற்றசை, தளைவழங்கு மிடத்து, இயற்சீரசை நிரையீற்றைப்போல் நிற்கும்.

**ஆசிரியப்பாவில் வெண்சீர்**

**இன்சீ ரியைய வருகுவ தாயின்**
**வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே.**

இனிய ஓசைபொருந்தி வருகுவதாயின், ஆசிரிய அடிக்கு வெண்பாவுரிச்சீரும் வரப்பெறும்.

**ஆசிரியப்பாவில் வஞ்சிச்சீர்**

**அந்நிலை மருங்கின் வஞ்சி யுரிச்சீர்**
**ஒன்றுத லுடைய ஓரோஒரு வழியே.**

இனிய ஓசை அமைய வந்தால், வஞ்சியுரிச்சீரும் ஓரோவோரிடத்து ஆசிரிய அடிக்கண் வரப்பெறும்.

**அடி**

**அடியின் அளவு**

**நாற்சீர் கொண்டது அடியெனப் படுமே.**

நான்குசீர் ஒன்றாகத் தொடுத்து வருவது அடியென்று கூறப்பெறும்.

**அடியினிடத்துத் தளையும் கொடையும்**

**அடியுள் எனவே தளையொடு தொடையே.**

முன்னர்க்கூறிய நாற்சீரடியுள், தளையும் தொடையும் உள்ளன.

**நாற்சீரடிக்கே உரிமையாதல்**

**அடியிறந்து வருதல் இல்லென மொழிப**

தளையுந் தொடையும் நான்குசீர் அடிகளில் வருமேயன்றி அடியின் நீங்கி வருதலில்லை.

**பாட்டுக்கு அடியின் சிறப்பு முதன்மை**

**அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே.**

அடியின் சிறப்பினாலே அது பாட்டென்று கூறப்பெறும். எனவே, பாட்அடன்னும் செய்யுட்கு 'அடி' இன்றியமையாததென்று கொள்க. பாட்டாவன, வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்பன.

**குறளடி**

**நாலெழுத் தாதி யாக ஆறெழுத்**

**தேறிய நிலத்தே குறளடி யென்ப.**

நாலெத்து முதலாக, ஆறெழுத்து இறுதியாக ஏறிய மூன்று நிலத்தை யுடைத்து குறளடி என்று கூறுவர்.

**சிந்தடி**

ஏழெழுத் **தென்ப சிந்தடிக் களவே**

**ஈரெழுத் தேற்றம் அல்வழி யான.**

சிந்தடிக்கு அளவு ஏழெழுத்து முதல் ஒன்பது எழுத்து வரை என்று கூறுவர்.

**அளவடி**

**பத்தெழுத் தென்ப நேரடிக் களவே**

**ஒத்த நாலெழுத் தேற்றலங் கடையே.**

பத்தெழுத்து முதலாகப் பதினான்கு எழுத்தளவும் அளவடிக்கு எல்லையென்று கூறுவர்.

**நெடிலடி**

**மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே**

**ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப.**

நெடிலடிக்கு அளவு பதினைந்து எழுத்தாம்; இரண்டு எழுத்துக்கள் மிகுதிப்படுதலும் இயற்கையே என்று கூறுவர். அ∴தாவது பதினாறும் பதினேழும் அமையும்.

**கழிநெடிலடி**

**மூவா றெழுத்தே கழிநெடிற் களவே**

**ஈரெழுத்து மிகதலும் இயல்பென மொழிப.**

கழிநெடில் அடிக்கு அளவு பதினெட்டு எழுத்து முதலாக இருபதெழுத்தளவும் என்பதாம்.

**சீர் நிலை**

**சீர் நிலை தானே ஐந்தெழுத் திறவாது**

**நேர்நிரை வஞ்சிக் காறு மாகும்.**

நேரசை இறுதியாகும் போது, சீர்நிலை ஐந்தெழுத்துக்கு மேற்படாது. நிரையசை இறுதியாகிய வஞ்சியுரிச்சீர்க்கு ஆறெழுத்தும் ஆகும்; எனவே, இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடி இல்லை என்பதாம்.

**சீரின் இயல்பு**

**எழுத்தள வெஞ்சினும் சீர்நிலை தானே**

**குன்றலும் மிகுதலும் இல்லென மொழிப.**

ஓரடிக்கு ஓரடி எழுத்தளவு குறைந்து வரினும், சீர்நிலை நான்கிற்கு மேற்படுதலும் குறைதலும் இல்லை.

**எண்ணப்படாத எழுத்துக்கள்**

**உயிரில் லெழுத்தும் எண்ணப் படாஅ**

**உயிர்த்திறம் இயக்கம் இன்மை யான.**

உயிர்போல இயங்காதபடியால், உயிரில்லாத எழுத்துக்கள் சீரின்கண் கணக்குச் செய்யப்பெற மாட்டா; குற்றியலிகரமும் உகரமும் எண்ணப்படுவதில்லை. எனவே, எண்ணப்படுவன ஒரு மாத்திரை ஒலியளவிற்குக் குறையாத உயிரும் உயர்மெய்யுமே என்க.

**வஞ்சியடிக்கு இரு சீர்**

**வஞ்சி யடியே இருசீர்த் தாகும்.**

வஞ்சிப்பாவிற்கு உரிய அடி இரண்டு சீரை உடைத்து.

**வஞ்சியடிச் சீர்**

**தன்சீ ரெழுத்தின் சின்மை மூன்றே.**

வஞ்சியுரிச்சீரின் சிறுமை மூன்றெழுத்தென்று கொள்ளப் பெறும். எனவே, மூன்றெழுத்தும் நான்கெழுத்தும் ஐந்தெழுத்தும் ஆறெழுத்தும் வஞ்சியுரிச்சீர் எழுத்து என்பதாம்.

**மூச்சீ ரானும் வருமிடனுடைத்தே**

வஞ்சியடி மூன்று சீர்களால் வருகின்ற இடமும் உண்டு. எனவே, வஞ்சியடி இருசீரடியானும் முச்சீரடியானும் வரும் என்பதாம்.

**அசை கூன் ஆதல்**

**அசைகூன் ஆகும் அவ்வயி னான.**

மேற்கூறப்பட்ட இருவகை அடியினும், அசை கூனாகி வரும்.

**சீர் கூன் ஆதல்**

**சீர்கூன் ஆதல் நேரடிக் குறித்தே.**

சீர் முழுவதும் கூனாகி வருதல் அளவடிக்கு உரியது; ‘நேரடி’ என்றதனால் வெண்பாவினும், ஆசிரியத்தினும், கலியினும் கொள்ளப்படும்.

**ஐவகையடியின் விரி**

**ஐவகை அடியும் விரிக்குங் காலை**

**மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்**

**எழுபது வகைமையின் வழுவில வாகி**

**அறுநூற் றிருபத் தைந்தாகும்மே.**

மேற்கூறிய ஐவகை அடியினையும் விரிக்கும் பொழுது, பொருள்வகை பொருந்திய பதினேழ் நிலத்தும், எழுபது வகைக் குற்றங்கள் நீங்கிஅ றுநூற்று இருபத்தைந்தாகும். அசைச்சீர் இயற்சீர், ஆசிரிய உரிச்சீர், வெண்சீர், வஞ்சயுரிச்சீர் என்னும் ஐந்தினையுஅம் நிறுத்தி, இவ்வைந்து சீரும் வருஞ்சீராக உறழும் வழி இருபத்தைந்து விகற்பமாம். அவ்விருபத்தைந்தின் கண்ணும் மூன்றாவது ஐந்து சீரையும் உறழ நூற்றிருபத்தைந்து விகற்பமாம் அந் நூற்றிருபத்தைந்துடனும் நான்காவது ஐந்து சீரையும் உறழ அறுநூற்றிருபத்தைந்தாகும் என்க.

**ஆங்கனம் விரிப்பின் அளவிறந் தனவே**

**பாங்குற உணர்ந்தோர் பன்னுங் காலை.**

நன்கு உணர்ந்தவர்கள் அவ்வாறு ஆராயும்போது எல்லையற்றனவாக அவை முடியும் என்பார்கள். அறநூற்றிருபத்தைந்துடனும், ஐந்தாவது வரும் ஐஞ்சீரையும் அறுசீர் முதலாயினவற்றையும் உறழ என மேற்கொண்டு விரித்துக் கொண்டே போக, அடிவகை எண்ணிறந்தனவாதல் காணப்படும்.

**ஐவகையடியின் மரபு**

**ஐவகை அடியும் ஆசிரியக் குரிய.**

நாற்சீரடிக்கண் வகுக்கப்பட்ட ஐவகை அடியும் ஆசிரியப் பாட்டிற்கு உரியனவாம்.

**விரா அய் வரினும் ஒரூஉநிலை இலவே.**

மேற்கூறப்பட்ட ஐந்தடியும் தனித்தனி ஆசிரியப்பாவிற்கு உரித்தாகி வருதலே யல்லாமற் கலந்து வரினம் நீக்கப்பட மாட்டாது.

**தளை**

**தன்சீர் வகையினும் தளைநிலை வகையினும்**

**இன்சீர் வகையின் ஐந்தடிக்கு முரிய**

**தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா.**

தத்தம் சீர்நிலை வகையானும் தளைநிலை வகையானும் இனிய ஓசை வேறுபாட்டினையுடைய ஐந்தடிக்கும் உரிய தன்னுடைய சீருள்ளவிடத்தில், தளைவேறுபாடு கொள்ளுதல் வேண்டியதின்று; எனவே, சீர் தானே ஓசையைத் தரும். என்பதாம்.

**ஆசிரியத் தளையின் வகை**

**சீரியன் மருங்கின் ஓசை யொப்பின்**

**ஆசிரியத் தளையென் றறியல் வேண்டும்.**

சீரானது பொருந்துகிற இடத்தில் ஓசை ஒத்துவருமானால், அதனை ஆசிரியத் தளையொன்று அறிந்து கொள்ளுதல் வேண்டும். நிலைமொழியாகிய இயற்சீரினின்றும் வருமொழியாகிய சீரின் முதலசையும் நேராய் ஒன்றின், நேரொன்றாசிரியத் தளையாம்; நிரையாய் ஒன்றின், நிரையொன்றாசிரியத் தளையாம்.

**வஞ்சித் தளை பற்றி ஒரு முடிபு**

**குறளடி முதலா அளவடி காறும்**

**உறழ்நிலை இலவே வஞ்சிக் கென்ப.**

குறளடி முதலாக அளவடியளவும் வஞ்சியுரிச்சீர் வந்து உறழுநிலையில் இவ்வடிகள் இயற்சீரும் ஆசிரியவுரிச்சீரும் ஆகும்.

**வெண்பாவின் அடியும் தளையும்**

**அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய**

**தளைவகை யொன்றாத் தன்மை யான.**

தளைவகை பொருந்தாத் தன்மைக்கண், அளவடியுஞ் சிந்தடியும் வெண்பாவுக்கு உரியனவாம் என்க; எனவே, ஒன்றுந் தன்கைம்கண் நெடிலடியும் சில வரும் என்க.

**கலிப்பாவிற்குரிய அடி**

**அளவடி மிகுதி உளப்படத் தோன்றி**

**இருநெடில் அடியுங் கலியிற்**

ஐவகை யடியினும் அளவடி மிகதியாகி, பதின்மூன்றெழுத்து முதலாக நெடிலடியும் கழிநெடிலடியுமாகிய இருபதெழுத்தின்காறும் வரும் அடி கலிப்பாவிற்கு உரியதாம்.

**கலிப்பாவிற்குத் தளை**

**நிரைமுதல் வெண்சீர் வந்துநிரை தட்டல்**

**வரைநிலை யின்றே அவ்வடிக் கென்ப.**

வெண்பாவுரிச்சீர் நிற்ப நிறைமுதல் வெண்சீர் வந்து அதன்கண் நிரையாய்த் தளைத்தல் கலியடிக்கு வரைநிலையில்லை.

**விராஅய தளையும் ஒரூஉநிலை இன்றே.**

பிறவாகிக் கலந்த தளையும் நீக்கப்படுதல்இல்லை; அ.்.தாவது வெண்டளையும் ஆசிரியத்தளையும் விரவுதல்.

**ஆசிரிய அடியும் வெண்பா அடியும்**

**இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்**

**நிலைக்குரி மரபின் நிற்பவும் பெறுமே.**

இயற்சீர் வெ்ணடளையால் ஆகிய வெ்ணபாவடி ஆசிரியப்பாவின்கண் நிற்றற்குரிய மரபோடு நிற்பனவும் உள.

**ஐஞ்சீர் அடி**

**வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்**

**ஐஞ்சீ ரடியும் உளவென மொழிப.**

இயற்சீர் வெண்டளை கலந்தும், ஆசிரியத்தளை கலந்தும், ஐஞ்சீரடியும் ஆசிரியப்பாவின்கண் வருவன உள; ‘ **உள** ’ என்றதனால், ஒரு பாட்டிற் பல வருதலும் கொள்க.

**அறு சீர் அடி**

**அறு சீ ரடியே ஆசிரியத் தளையொடு**

**நெறிபெற்று வரூஉம் நேரடி முன்னே.**

அறசீரடி, ஆசிரியத்தளையொடு பொருந்தி, நேரடிக்கு முன்னாக ஆசிரியப்பாவின்கண் நடைபெற்று வரும்.

**எழு சீர்அடி**

**எழுசீ ரடியே முடிகிய னடக்கும்.**

முடிகியலடி என்பது ஏழுசீர்களால் வரும்.

**முடுகியல்**

**முடுகியல் வரையார் முதலிரண் டடிக்கும்.**

ஐஞ்சீரடிக்கும், அறுசீரடிக்கும் மூடுகியலை நீக்கமாட்டார்கள்.

**ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும்**

**மூவகை அடியும் முன்னுதல் இலவே.**

முடுகியலாகி வரகிற மூவகை அடியும், ஆசிரியப்பாவிலும் வெண்பாவிலும் நிற்கமாட்டா; எனவே, கலிப்பாவினுள் நிற்கப் பெறும் என்பதாம்.

**ஈற்றயல் அடியே ஆசிரிய மருங்கில்**

**தோற்ற முச்சீர்த் தாகம் என்ப.**

நேரிசை ஆசிரியப்பாவின் ஈற்றயல் அடியின் தோற்றம் மூன்று சீரா முடியும் என்று கூறுவார்கள்.

(எ.டு) "முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே"

மலையன் ஒள்வேற் கண்ணி

முலையும் வாரா முதுக்குறைந் தனளே"

என்பதனுள் ஈற்றயலடி முச்சீரான் வந்தது.

**இடையும் வரையார் தொடையுணர்ந் தோரே**

தொடுக்கப்படும் தொடையியலை உணர்ந்தோர், இடையடி முச்சீரடியாக வருதலையும் நீக்கமாட்டார்கள்.

**கலிப்பாவிற்குச் சிந்தடி**

**முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும்.**

ஈற்றயலடி முச்சீரெனக் கூறப்பட்டது கலிப்பாவின் கண் நாற்சீராகியும் வரும்.

**வஞ்சிப்பாவின் ஈற்றடி**

**வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே.**

வஞ்சிப்பாவின் இறுதி ஆசிரியப்பாவின் தன்மையை உடையது ஆகும். ஈற்றயலடி முச்சீரான் வருதலும் நாற்சீரான் வருதலும் கொள்க என்பதாம்.

**வெண்பாவின் ஈற்றடி**

**வெண்பா ஈற்றடி முச்சீர்த் தாகும்**

**அசைச்சீர்த் தாகும்அவ்வழி யான.**

வெண்பாவின் இறுதியடி மூன்றுசீர் உடையதாகும். அதன்கண் இறுதிச்சீர் அசைச் சீராக வரும்.

**நேரசைச் சீர்**

**நேரீற் றியற்சீர் நிரையும் நிரையும்**

**சீரேற் றிறூஉம் இயற்கைய என்ப.**

வெண்பாவின் இறுதிச்சீரின் அயற்சீர் நேரீற்றியற்சீராயின் நிரையசையும் நிரைபு அசையும் சீராந்தன்மையைப் பெற்று முடியும் இயற்சையை உடைய என்று கூறுவர்.

**நிரையசைச் சீர்**

**நிரையவன் நிற்பின் நேரும் நேர்பும்**
**வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர்.**

வெண்பாவின் ஈற்றயற்சீர் நிறையீற்று இயற்சீராயின், நேரசையும் நேர்பசையும் முடிபாம். ‘வெண்சீரீற்றசை நிரையசை யியற்றே’ (செய்.27) என்பதனால் ஈற்றயற்சீர் முதலசையான் வரினும் நேரும் நேர்பும் முடிபாகக் கொள்ளப்படும்.

**கலிப்பாவின் ஈற்றடி**

**எழுசீர் இறுதி ஆசிரியங் கலியே.**

கலிப்பாவிற்கு ஈற்றயலடி முச்சீரான் வரும் ஆசிரிய முடிபாகும்.

**வெண்பா இயலினும் பண்புற முடியும்.**

கலிப்பா, வெண்பாச் சுரிதமாக முடியும்.

**யாப்பு**

**எழுத்து முதலா ஈண்டிய அடியில்**
**குறித்த பொருளை முடிய நாட்டல்**
**யாப்பென மொழிப யாப்பறி புலவர்.**

“எழுத்து முதலாக அசை சீர் அடி என்று இங்கு உரைக்கப்பட்ட அடியினால், தான் குறித்த பொருளை இறுதியடியளவும் முடிவுபுபெற நிறுத்துதல் யாப்பாகும்” என்று, அறிந்த புலவர்கள் உரைப்பார்கள்.

**யாப்பின் ஏழு பகுதிகள்**

**பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே**
**அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்**
**வண்புகழ் மூவர்தண்பொழில் வரைப்பின்**
**நாற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்**
**யாப்பின் வழிய தென்மனார் புலவர்.**

“பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், சொல் என்று சொல்லப்பெறும் ஏழிடத்தும், வளவிய புகழையுடைய சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூவரது தமிழ் நாட்டகத்தவர் வழங்கும் தொடர்மொழிக்கண் வரும் மொழி, யாப்பின்பாற் பட்டதாகும்” என்று புலவர்கள் கூறுவர். எனவே, யாப்பாவது - பாட்டுயாப்பு, நூலியாப்பு, மொழியாப்பு, பிசியாப்பு, அங்கதயாப்பு, பழமொழியாப்பு என ஏழுவகைப்படும் என்பதாம்.

**மரபு தூக்கும்**

**மரபே தானும்**
**நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன்று.**

மரபாவதுதான் இயற்சொல், திரிசொல், திகைச் சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொல்லின் இயற்கையால் யாப்பின் வழிபட்டதாகும். **இயற்சொல் மரபாவது** சொல்லதிகார இலக்கணத்தோடு பொருந்துதல்; **திரிசொல் மரபாவது** தமிழ் நாட்டகத்தும் பல்வகை நாட்டினும் தத்தமக்குரித்தாக வழங்கும் மரபு; **திசைச்சொல் மரபாவது** செந்தமிழ் சூழ்ந்த பன்னிரு நிலத்திலும் வழங்கும் மரபு, **வடசொல் மரபாவது** திரிந்த வகையாகிய வடசொல் மரபு.

**அகவ லோசை**

**அகவ லென்ப தாசிரி யம்மே.**

**‘அகவல்’** என்னும் ஓசை ஆசிரியத்துக்கு உரியதாகும்.

**செப்ப லோசை**

**அ.்.தன் றென்ப வெண்பா யாப்பே**

வெண்பாவாகச் செய்யப்பட்டது அகவலோசை யன்று. தூக்கு எனினும் ஓசை எனினும் ஒக்கும். அகவலற்ற ஓசையினைச் செப்பலோசை எனவும் உரைப்பார்கள்.

**துள்ள லோசை**

**துள்ள லோசை கலியென மொழிப**

துள்ளலோசை கலிப்பாவுக்காம்; அ.்.தாவது கன்று துள்ளிற்று என்னுமாறு போல, ஒழுகுநடைத்தன்றி இடையிடை உயர்ந்து வருதலாம்.

**தூங்கல் ஓசை**

**தூங்க லோசை வஞ்சி யாகும்**

**‘தூங்கல் என்னும்’** ஓசை வஞ்சிப்பாவில் வரும்; இ.்.து அறுதியற்ற ஓசைத்தாகி வருவதாம்.

**மருட்பா வேனை இருசா ரல்லது**

**தானிது என்னும் தனிநிலை யின்றே.**

மருட்பாவுக்கு ஓசை இ.்.து என்று கூறக்கூடியதாக ஒன்றும் இல்லை; அது வெண்பாவும் ஆசிரியப்பாவும் உறுப்பாக இரண்டின் ஓசையையும் பெறும்.

**அவ்வியல் பல்லது பாட்டாங்குக் கிளவார்**

மேற்கூறப்பட்ட ஓசை வகைகளைக் கொண்டல்லாமல் பாட்டியற்ற மாட்டார்கள், புலவர்.

**தூக்கியல் வகையே ஆங்கென மொழிப**

தூக்கென்று கூறப்பட்ட உறுப்பு நடக்கும் இடவகை சொல்லப்பட்ட நான்கு இடமுமாகும்.

**தொடை**

**தொடையின் வகை**

**மோனை எதுகை முரணே இயைபென**

**நானெறி மரபின தொடைவகை என்ப.**

தொடையினது பாகுபாடு, மோனை, எதுகை, முரண், இயைபு என்று நான்கு வகைப்படுவதாகும்.

**அளபெடை தலைப்பெய ஐந்தும் ஆகும்.**

அளபெடைத் தொடையைச் சேர்க்க அது ஐந்து என்று கூறவும் பெறும்.

**பொழிப்பும் ஒரூஉம் செந்தொடை மரபும்**

**அமைந்தவை தெரியின் அவையுமா ருளவே.**

பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை எனப் பொருந்தியவைகளையும் ஆராயுமிடத்து, அவையும் தொடைப் பாகுபாடாகவே அமையும்.

**நிரனிறுத் தமைத்தலும் இரட்டை யாப்பும்**

**மொழிந்தவற் றியலான் முற்றும் என்ப.**

வரிசையாக நிறுத்தி அமைத்துக் கொள்ளுதலும், இரட்டைத் தொடையும் முறகூறிய வழியினால் முடியவும் பெறும். நிரனிறைத் தொடையாவது பொருளைச் சேர நிறுத்திப் பயனையுஞ் சேர நிறுத்துதல்; இரட்டைத் தொடையாவது ஓரடி முழுவதும் ஒரு சொல்லே வருதல்.

**மோனைத் தொடை**

**அடிதொறும் தலையெழுத் தொப்பது மோனை.**

அடிதோறுந் தலையெழுத்து ஒத்துவருவது மோனைத் தொடையாகும்.

**எதுகைத் தொடை**

**அஃதொழித் தொன்றின் எதுகை யாகும்.**

அடிதோறும் முதலெழுத்து ஒன்றாமல், இரண்டாம் எழுத்து ஒன்றிவருமானால் அஃது எதுகையாகும் முதலெழுத்தும் ஒன்றி இரண்டாமெழுத்தும் ஒன்றில், மோனையாற் பெயரிட்டு வழங்கப்படும்.

**வருக்க எழுத்து இயைபு**

**ஆயிரு தொடைக்கும் கிளையெழுத் துரிய.**

மோனைத் தொடைக்கும், எதுகைத் தொடைக்கும், எடுத்த எழுத்தே வருதலின்றி வருக்க எழுத்தும் வருதற்கு உரியன.

**"பகலே பல்பூங் கானல் கிள்ளை யோப்பியும்**
**பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇய**
**பின்னுப்பிணி அவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்**
**பீரங்கப் பெய்து தேம்படக் கருதி"**

என்பது வருக்க மோனை.

**"ஆறறி அந்தணர்க் கருமறை பலபகர்ந்து**
**தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்துக்**
**கூறாமற் குறித்ததன்மேல் செல்லுங் கடுங்கூளி**
**மாறாப்போர் மணிமிடற் றெண்கையாய் கேளினி"**

என்பது வருக்க வெதுகை.

**முரண் தொடை**

**மொழியினம் பொருளினும் முரணுதல் முரணே.**

சொல்லாலாதல் பொருளாலாதல் மாறுபடத் தொடுத்தல் அடிமுரண்தொடை எனப் பெறும்.

**"இரும்பின், அன்ன கருங்கோட்டுப் புன்னை**
**பொன்னின் அன்ன நுண்தா துறைக்கும்"**

என்பது பொருள் முரண்.

"சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கண்ணும் உடையவால் அணங்கே" என்பது சொல் முரண்.

**இயைபுத் தொடை**

**இறுவாய் ஒப்பினஃ தியைபென மொழிப.**

அடிதோறும் ஈற்றெழுத்து ஒன்றிவரின் அஃது இயைபுத் தொடையாம் என்று கூறுவர்.

**அளபெடைத் தொடை**

**அளபெழின் அவையே அளபெடைத்தொடையே.**

அடிதோறும் அளபெழுமாறு தொடுப்பின், அஃது அளபெடை தொடையாம்.

"ஓ ஓ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்

**தாஅம்** இதற் பட்டது" என வரும்.

**பொழிப்புத் தொடை**

**ஒருசீ ரிடையிட் டெதுகை யாயின்**

**பொழிப்பென மொழிதல் புலவர் ஆறே.**

ஒரு சீர் இடையீட்டு எதுகை முதலியன வருமாறு தொடுப்பின் அதனைப் பொழிப்பென்று கூறுதல் புலவருடைய நெறியாகும்.

'**அரிக்குர**ற் கிண்கிண **அரற்றுஞ்** சீரடி' - இது

பொழிப்பு மோனை.

'**பன்னருங்** கோங்கின் **நன்னலங்** கவற்றி;- இது

பொழிப்பு எதுகை.

'**சுருங்கிய** நுசப்பில் பெருகுவடந் தாங்கி' - இது

பொழிப்பு முரண்.

'கடலே கானலங் கழியே **கைதையந்** துறையே' - இது

பொழிப்பு இயைபு.

'**பூ உங்** குவளைப் **போஒ** தருந்தி' இது

பொழிப்பு அளபெடை.

**ஒரூஉத் தொடை**

**இருசீர் இடையிடின் ஒரூஉஎன மொழிப**

இரண்டு சீர் இடையிட்டு மோனை முதலாயின வரத்தொடுப்பதனை ஒரூஉத்தொடை என்று கூறுவர்.

'**அம்பொற்** கொடுஞ்சி நெடுந்தேர் **அகற்றி'** - இஃது

ஒரூஉ மோனை.

'**மின்னிவ** ரொளிவடந் தாங்கி **மன்னிய'** - இஃது

ஒரூஉ எதுகை.

'**குவிந்து** சுணங்குரும்பி கொங்கை **விருந்து'** - இஃது

ஒரூஉ முரண்.

'**நிழலே** இனியத னயலது **கடலே'** - இஃது

ஒரூஉ இயைபு.

'**காஅய்ச்** செந்நெற் கறித்துப் **போஒய்**' - இஃது

ஒரூஉ அளபெடை.

**செந்தொடை**

**சொல்லிய தொடையொடு வேறுபட் டியலிற்**

**சொல்லியற் புலவர் அது செந்தொடை என்ப.**

மேற்கூறப்பட்ட தொடையும் தொடைவிகற்பமும் போல் அல்லாமல், வேறுபடத் தொடுப்பது செந்தொடையாம் என்று சொல்லிலக்கணங்களை அறிந்த புலவர்கள் கூறுவர்.

‘பூத்த வேங்கை வியன்சினை யேறி

மயிலினம் அகவும் நாடன்

நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே’

என வரும்.

**தொடைகளின் விரி**

**மெய்பெறு மரபின் தொடைவகை தாமே**

**ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு**

**தொண்டுதலை யிட்ட பத்துக்குறை எழுநூற்**

**றொன்ப∴. தென்ப உணர்ந்திசி னோரே.**

"வடிவுபெற்ற மரபினையுடைய தொடையின் வகைகள் எல்லாம் பதின்மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது" என்று, செய்யுள் இலக்கணங்களை அறிந்தவர்கள் உரைப்பார்கள்.

| | |
|---|---|
| மோனைத் தொடை | 1010 |
| எதுகைத் தொடை | 2473 |
| முரண் தொடை | 2 |
| இயைபுத் தொடை | 182 |
| அளபெடைத் தொடை | 159 |
| பொழிப்புத் தொடை | 654 |
| ஒரூஉத் தொடை | 654 |
| செந்தொடை | 8556 |
| ஆகத் தொகை விகற்பம் | 1,3699 ஆகும். |

**புறநடை**

**தெரிந்தனர் விரிப்பின் வரம்பில வாகும்.**

மேற்கூறப்பட்ட தொடையினை ஆராய்ந்து விரித்துரைக்கத் தொடங்கினால், மேலும் கணக்கில்லாமல் அவை விரியும்.

(எ.டு) "**அணிமலர் அசோகின்** தளிர் நலங் கவற்றி" இ∴து இணைமோனை, **பொன்னின் அன்ன** பொறிசுணங்கேந்தி’ இ∴து இணை எதுகை. ‘**சீரடிப் போகல்** அல்கல் ஒல்குபு’ இ∴து இணை முரண். **தாஅட்டாஅ**மரை மலர் உழக்கி அ∴து இணை அளபெடை. ‘**அகன்ற அல்குல் அந்நுண்** மருங்கல்’ இது கூழை மோனை. ‘**நன்னிற மென்முறை மின்னிடை** வருந்த’ இது கூழை எதுகை. ‘**சிறிய பெரிய நிகர்** மலர்க் கோதைகள் இது கூழை முரண். ‘**மாதர் நகிலே வல்பல** இயலே’ இது கூழை இயைபு. மாஅத் **தா அண் மோஒட்** டெருமை’ இது கூழை அளபெடை. ‘**அயில்வேல் அனுக்கிஅ ம்பலைத் தமர்ந்த**’ இது முற்று மோனை.

இப்படி பலவும் வரும்.

**தொடைநிலை வகையே ஆங்கென மொழிப.**

தொடை நிலைவகை மேற்கூறப்பட்ட பாகுபாட்டின என்று கூறுவர். எனவே, வகுத்துணர்த்துவார்க் கெல்லாம் இடனுடைத்து என்பதாம். அ∴தாவது, எழுத்தானும் சொல்லானும் பொருளானும் வேறுபடுதலுமாம்.

**நோக்கு**

**மாத்திரை முதலா அடிநிலை காறும்**

**நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே.**

மாத்திரை முதலாக அடிநிலையனவும் நோக்குதலாகிய கருவி நோக்கென்று சொல்லப்படும்.

அஃதாவது, யாதானும் ஒன்றைத் தொடுக்குங் காலத்துக் கருதிய பொருளை முடிக்குங்காறும் பிறிது நோக்காது அதுதன்னையே நோக்கிநிற்கும் நிலையே நோக்காம். 'அடி நிலைக்காறும்' என்றதனால், ஓரடிக்கண்ணும் பலவடிக்கண்ணும் நோக்குதலும் கொள்க. அஃது ஒரு நோக்காக ஓடுதலும், பல நோக்காக ஓடுதலும், இடையிட்டு நோக்குதலும் என மூன்று வகைப்படும்.

**பா வகை**

**ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென**

**நாலியற் றென்ப பாவகை விரியே.**

பாவினது வகையை விரிக்குங்காலத்தில், ஆசிரியம் எனவும், வஞ்சியெனவும், வெண்பா எனவும், கலியெனவும் அது நான்கு வகைப்படும் என்று கூறுவர். சிலர், வெண்பா ஆசிரியங் கலி வஞ்சி எனவும் சொல்வர்; அவரும் ஒரு பயன் நோக்கி ஓதினார் என்க.

**அந்நிலை மருங்கின் அறமுத லாகிய**

**மும்முதற் பொருட்கும் உரிய என்ப.**

அப்பாக்கள் நான்கும் பொதுவாக நின்றவிடத்து, அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று முதற்பொருட்கும் உரியன என்று கூறுவர். 'முதற்பொருள்' என்றது, பாகு பாடல்லாத பொதுமை குறித்த பொருள். சில பொருள்களை எடுத்து விலக்குனிறாராதலின், இவ்வாறு கூறப்பட்டது.

**பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்**

**ஆசிரி யப்பா வெண்பா என்றாங்**

**காயிறு பாவினுள் அடங்கும் என்ப.**

ஈற்றயலடி முச்சீரான் வருவதனை நேரிசை யாசிரியம் என்பர்இடையிடையே முச்சீர்வரின் இணைக்குறளாசியரியம் என்பர் எல்லா வடியும் ஒத்து வருவதனை நிலைமண்டின வாசிரியம் என்பர். எல்லாவடியும் ஒத்துவரும் பாட்டினையே, அதனுள் யாதானும் ஓரடியை முதலுமுடிவுமாக உச்சரித்தாலும், ஓசையும் பொருளும் வழுவாது வரின், அடிமறிமண்டில ஆசிரியம் என்பர். முச்சீரடி முதலாக அறுசீருடீயீறாக மயங்கியதனை அடிமயங்காசிரியம் எனவும், வெண்பாவடி மயங்கிய ஆசிரியத்தினை வெள்ளடி மயங்காசிரியம் எனவும், வஞ்சியடி மயங்கிய ஆசிரியத்தினை வஞ்சியடி மயங்காசிரியம் எனவும் வழங்குவர்.

**வெண்பாவின் வகைகள்**

**நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே**

**கைக்கிளை பரிபாட்ட டங்கதச் செய்யுளோ**

**டொத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின.**

நெடுவெண்பாட்டு குறுவெண்பாட்டு, கைக்கிளை, பரிபாடல், அங்கதச் செய்யுள் இவைகளைப் போன்றவை எல்லாம் வெண்பா யாப்பினை உடையன.

**வெண்பா** யாப்பாவத வெண்சீரானும் இயற்சீரானும் வெண்டளையானும் செப்பலோசையானும் அளவடியானும் முச்சீர்ற்றடியானும் வருவது. **நெடுவெண் பாட்டாவது** அளவடியின் நெடிய பாட்டு **குறுவெண் பாட்டாவது** அளவடியிற் குறிய பாட்டு. **கைக்கிளை** என்பதூஉம் **அங்கத** மென்பதூஉம்

பொருளானாகிய பெயர். **பரிபாட்டாவது** பரிந்த பாட்டாம்; அ∴தாவது ஒரு வெண்பாவாக வருதலின்றிப் பலவுறுப்புகளோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப் பெறுவது.

**கைக்கிளை தானே வெண்பா வாகி**

**ஆசிரிய இயலான் முடியும் என்ப.**

கைக்கிளைப் பாடல்வெண்பாவினால் முழுதும் வராமல், முதலிரண்டடியும் வெண்பாவாகிக் கடையிரண்டடியும் ஆசிரியமாகி, இருபாக்களினாலும் முடிவுபெறும். (இது மரட்பா எனப் பெறும்)

(எ.டு) **"உரவொலி முந்நீர் உலாய்நிமிர்ந் தன்ன**

**கரவரு காமங் கனல - இரவெதிர்**

**முள்ளெயி றிலங்கு முகிழ் நகை**

**வெள்வளை நல்காள் வீடும்என் உயிரே"**

என வரும்.

**பரிபாடல்**

**பரிபா டல்லே தொகைநிலை வகையின்**

**இதுபா என்னும் இயல்நெறி இன்றிப்**

**பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப.**

பரிபாடலாவது தொகைநிலை வகையால் பா இ∴து என்று சொல்லப்பெறும் இலக்கணம் இல்லாமல் எல்லாப் பாவிற்கும் பொதுவாக நிற்றற்கும் உரியதென்று கூறுவர்.

**பரிபாடலின் உறுப்புக்கள்**

**கொச்சகம் அராகஞ் சுரிதகம் எருத்தொடு**

**செப்பிய நான்கும் தனக்குறுப் பாகக்**

**காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.**

பரிபாடல், பாட்டுப் பொதுவாய் நிற்றலே யல்லாமல் கொச்சகமும் அராகமும் சுரிதகமும் எருத்தும் என்று சொல்லப்பட்ட நான்கும் தனக்கு உறுப்பாகக் காமப்பொருளைக் கூறும் தன்மையை உடையதாம். அது, அறத்தினும் பொருளினும் வராது. **கொச்சக** மென்பது ஐஞ்சீரடுக்கி வருவனவும் ஆசிரியவடி வெண்பாவடி வஞ்சியடி கலியடி சொற்சீரடி முடுகியலடி என்னும் அறுவகை அடியானும் அமைந்த பாக்களை உடைத்தாகி, வெண்பாவியலாற் புறப்படத் தோன்றுவதாம். **அராக** மென்பது ஈரடியானும் **பல வடி**யானுங் குற்றெழுத்து நெருங்கிவரத் தொடுப்பது; பெருமைக்கு எல்லை ஆறடி. **சுரிதகம்** என்பது ஆசிரியவியலானாதல் வெண்பாவியலானதல் பாட்டிற் கருதிய பொருளை முடித்த நிற்பது. **எருத்தென்பது** இரண்டடி யிழிபாகப் பத்தடிப் பெருமையாக வருவதோர் உறுப்பு.

**சொற்சீ ரடியும் முடுகியல்அடியும்**

**அப்பா நிலைமைக் குரியவாகும்.**

சொற்சீரடியும் முடுகியலடியும் பரிபாடற்கு உரியவாகும் முடுகியலடியாவது ஐந்தடியானும் ஆறடியானும் ஏழடியானும் குற்றெழுத்துப் பயிலத் தொடுப்பது.

**கட்டுரை வகையான் எண்ணொடு புனர்ந்து**
**முற்றடி யின்றிக் குறைவுசீர்த் தாகியும்**
**மொழியசை யாகியும் வழியசை புணர்ந்தும்**
**சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே.**

கட்டுரை வகையினால் எண்ணொடு சேர்ந்து, நாற்சீரடியின்றி முச்சீரடியானும் இருசீரடியானும் ஒழிந்த அசைவினையுடைத்தாகியும், ஒரு சீரின்கண்ணே பிறிதொரு சீர் வரத்தொடாது ஓரசைவரத் தொடுப்பதும், சொற்றானே சீராந் தன்மையைப் பெற்று நிற்பதும் ஆகிய இவ்வியல்போடு நடக்குமது சொற்சீரடியாம். கட்டுரையாவது பாட்டின்றித் தொடுக்கப்படுவது; எண்ணௌன்பது ஈரடியாற் பலவாகியும், ஓரடியாற் பலவாகியும் வருதல்.

**அங்கதந் தானே அரில்தபத் தெரியில்**

**செம்பொருள் கரந்த தென விரு வகைத்தே**

அங்கதமாவது, குற்றமற ஆராயின், செம்பொருளெனவும், கரந்ததெனவும் இருவகைப்படும்.

**செம்பொருள் அங்கதம்**

**செம்பொரு ளாயின வசையெனப் படுமே.**

செம்பொருள் அங்கதம் வசையென்று பெயர்பெறும்.

**பழிகரப்பு அங்கதம்**

**மொழிகரந்து மொழியினது பழிகரப் பாகம்.**

தான் மொழியும் மொழியை மறைத்து மொழியின், அது பழிகரப்பெனப் பெயர்பெறும்.

**செய்யுளின் வகை**

**செய்யுள் தாமே யிரண்டென மொழிப.**

சொல்லப்பட்ட செய்யுளுட்கள் இரண்டு வகையின என்று கூறுவர் புலவர்.

**புகழொடும் பொருளொடும் புணர்ந்தன் றாயின்**

**செவியுறைச் செய்யுள் என்மனார் புலவர்.**

புகழொடும் பொருளொடும் புணரவரின், செவியுறைச் செய்யுள் என்று கூறுவர் புலவர்.

**அங்கதச் செய்யுள்**

**வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்**

**அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்.**

வசையொடும் நசையொடும் சேர்ந்த செய்யுள், அங்கதச் செய்யுள் எனப் பெயர்பெறும்.

**கலிப்பாவின் வகை**

**ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே**

**கொச்சகம் உறழொடு கலிநால் வகைத்தே.**

கலிப்பா, ஒத்தாழிசைக் கலிப்பாவும் கல்வெண்பாட்டும், கொச்சகமும், உறழ்கலியும் என நான்கு வகைப்படும்.

**ஒத்தாழிசைக் கலி**

**அவற்றுள்,**

**ஒத்தா ழிசைக் கலி இருவகைத் தாகும்.**

அவற்றுள், ஒத்தாழிசைக் காலி இரண்டு வகைப்படும்.

**இடைநிலைப் பாட்டே தரவுபோக் கடையென**

**நடைந யின்றொழுகும் ஒன்றென மொழிப.**

ஒத்தாழிசைக் கலி, தாழிசையும் தரவும் சுரிதகமும் அடைநிலைக் கிளவியுமென நான்கு உறுப்பினை யுடையர்.

(இடைநிலைப்பாட்டு - ஒத்தாழிசைக் கலிப்பா)

**தரவே தானும் நாலடி இழிபாய்**

**ஆறிரண் டுயர்வும் பிறவும் பெறுமே.**

தரவு நாலடி யிழிபாகப் பன்னிரண்டடி உயர்பாக இடை வரும் அடி எல்லாவற்றானும் வரப்பெறும்.

**இடைநிலைப் பாட்டே**

**தாவகப் பட்ட மரபின தென்ப.**

தாழிசைகள் தரவில் சுருங்கிவரும் என்பர். 'தரவகப்பட்ட மரபின' என்றதனால், நான்கடியின் மிகாதென்பதூம், மூன்றடியானும் இரண்டடியானும் வரப்பெறூஉம் என்பதூஉம் கொள்க.

**அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்**

**நடைநவின் றொழுகும் ஆங்கென மொழிப**

அடைநிலைக் கிளவியாகிய தனிச்சொல், தாழிசைப் பின்னர் நடந்தலைப் பொருந்தி யொழுகும் என்று கூறுவர் புலவர். முன்னர் வருதலும் சிறுபான்மை உள.

**போக்கியல் வகையே வைப்பெனப் படுமே**

**தரவிய லொத்தல் அதனகப் படுமே**

**புரைதீர் இறுதி நிலையுரைத் தன்றே.**

'**சுரிதகம்**' என்பது வைப்பெனவும் படும். அது தரவோடொத்த அளவினை யுடையதாகியும் அதனிற் குறைந்த அளவினை உடையதாகியும், குற்றந்தீர்ந்த பாட்டினது இறுதிநிலையை உரைத்தது என்றவாறு. தரவியலொத்தாவது சிறுமை நான்கடியாகியும், பெரும பன்னிரண்டடியாகியும் வருதல். அதனகப்படுதலாவது சிறுமை மூன்றடியானும், இரண்டடியானும் வருதல் மேல். துள்ளலோசைத்தாகியும், நிரை முதலாகிய வெண்பாவுரிச்சீர் மிக்கும் சுரிதகம் ஆசிரியத்தானாதல் வெண்பாவானாதல் வருமெனக் கூறியவும் அறிந்து கொள்க.

**ஏனை யொன்றே**

**தேவர்ப் பராய முன்னிலைக் கண்ணே.**

சொல்லாது ஒழிந்த ஒத்தாழிசைக் கலிப்பா, முன்னிலையிடத்துத் தேவரைப் பராவும் பொருண்மையினை உடையது.

**அதுவே,**

**வண்ணகம் ஒருபோ கெனவிரு வகைத்தே.**

தேவரிடத்து முன்னிலைப் பரவலாகிய அது வண்ணகமெனவும், ஒருபோகு எனவும் இருவகைப்படும்.

**வண்ணக ஒத்தாழிசை**

**வண்ணகந் தானே**

**தரவே தாழிசை எண்ணே வாரமென்று**

**அந்நால வகையில் தோன்றும் என்ப.**

வண்ணக வொத்தாழிசையாவது, தரவும் தாழிசையும் எண்ணும் சுரிதகமும் என்று சொல்லப்பட்ட நான்கு உறுப்பினையும் உடையது ஆகும்.

**உறுப்புகளுள், தரவு**

**தரவே தானும்**

**நான்கும் ஆறும் எட்டும் என்ற**

**நேரடி பற்றிய நிலைமைத் தாகும்.**

வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவிற்குத் தரவு நான்கும் ஆறும் எட்டும் ஆகிய அளவடியினாலே வரும்.

**தாழிசை**

**ஒத்துமூன றாகும் ஒத்தா ழிசையே**

**தரவிற் சுருங்கித் தோன்றும் என்ப.**

தாழிசையும், தம்முள் அளவும் ஒத்து மூன்றாகி வரும் அவை தரவிற் சுருங்கித் தோன்றும் என்பதாம்.

**சுரிதகம்**

**அடக்கியல் வாரந் தரவோ டொக்கும்**

அடக்கியலாகிய சுரிதகம் தரவு என்பவற்றோடு ஒத்த இலக்கணத்தை உடையது ஆகும்.

**எண்**

**முதற்றொடை பெருகிச் சுருங்கும னெண்ணே.**

முதலில் தொடுத்த உறுப்புப் பெருகிப் பின்தொடுக்கும் உறுப்புச் சுருங்கி வரும்.

**ஒரு முடிபு**

**எண்ணிடை ஒழிதல் ஏதம் இன்றே**

**சின்னம் அல்லாக் காலை யான.**

தனிச்சொல் இல்லாதவிடத்து மேற்சொல்லப்பட்ட எண் ஒவ்வொன்றும் இடையொழிந்து வருதலும் குற்றமாகாது. இவ்வாறு வருவதனை, ஓர் ஆசிரியர் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவெனக் கூறுவர்.

**ஒருபோகின் இருவகை**

**ஒருபோ கியற்கையும் இருவகைத் தாகும்.**

‘ஒருபோகு’ என்னும் கலியும் இரண்டு வகைப்படும்.

**கொச்சக பொருபோ கம்போ தரங்க மென்**

**றொப்ப நாடி உணர்தல் வேண்டும்.**

‘ஒருபோகு’ என்னும் கலியினைக் கொச்சகவொரு போகு எனவும், அம்போதரங்கம் எனவும் பொருந்த நாடி அறிதல் வேண்டும்.

**கொச்சக ஒருபோகு**

**தரவின் றாகித் தாழிசை பெற்றும்**

**தாழிசை யின்றித் தரவுடைத் தாகியும்**

**எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியும்**

**மடக்கிய லின்றி அடிநிமிர்ந் தொழுகியும்**

**யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது**

**கொச்சக வொருபோ காகும் என்ப.**

தரவு முதலான உறுப்புகளுள், தரவின்றித் தாழிசை முதலிய உறுப்புக்கள் பெற்றும், தாழிசையின்றித் தரவு முதலிரன உடைத்தாகியும், எண்ணாகிய உறுப்புக்களை இடையிட்டுத் தனிச்சொல் வாராதொழியினும்; சுரிதகமின்றி தரவு தானே நிமிர்ந்தொழுகி முடியினும்; ஒத்தாழிசையின் யாக்கப்பட்ட யாப்பினும். அதற்குறித்தாக ஓதப்பட்ட கடவுள் வாழ்த்துப்பொருண்மையின்றிக் காமப்பொருளாக வரினும்; இவ்வகையாற் கூறப்பெற்றன, ‘கொச்சக ஒருபோகு’ என்று பெயர் பெறும்.

**அடி வரையறை**

**ஒருபான் சிறுமை யிரட்டியத னுயர்பே.**

மேற்கூறப்பட்ட கொச்சக ஒருபோகு பத்தடிச் சிறுமை யாகவும் இருபதடிப் பெருமையாகவும் வரும்.

**அம்போதரங்க ஒருபோகின் அடிவரையறை**

**அம்போ தரங்கம் அறுபதிற் றடிக்தே**

**செம்பால் வாரஞ் சிறுமைக் கெல்லை.**

அம்போதரங்க ஒருபோகுக்கு உயர்ந்த எல்லை அறுபதடியாம்; அதிற் பாதியாகிய முப்பதடி உரிமை சிறுமைக்கு எல்லையாம்.

**அம்போதரங்கத்துக்கு உறுப்புகள்**

**எருத்தே கொச்சகம் அராகஞ் சிற்றென**

**அடக்கியல் வாரமொ டந்நிலைக் குரித்தே.**

எழுத்தும், கொச்சகமும், அராகமும், சிற்றெண்ணும், அடக்கியல் வாரமும் என ஐந்து உறுப்புடையது. அம்போதரங்க ஒருபோகு ஆம்; எருத்து என்றது. இவ்விடத்துத் தரவினை.

**கலிவெண்பா**

**ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலான்**

**திரிபின்றி முடிவது கலிவெண் பாட்டே**

ஈற்றடியளவும் ஒரு பொருளைக் குறித்து, வெண்பா இலக்கணத்தைக் கொண்டு, மாறுபாடில்லாமல் முடிவது கலிவெண்பாவாகும். கலிவெண்பாட்டெனினும், வெண் கலிப் பாட்டெனினும் ஒக்கும். ‘வெள்ளடியியலான்’ என்றமையால், வெண்டளையான் வந்து ஈற்றடி முச்சீரான் வருவனவும், பிறதளையான் வந்து ஈற்றடி முச்சீரான் வருவனவும் கொள்க.

**கொச்சகக் கலி**

**தரவும் போக்கும் இடைஇடை மிடைந்தும்**

**ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெற்றும்**

**வெண்பா இயலான் வெளிப்படத் தோன்றும்**

**பாநிலை வகையே கொச்சகக் கலியென**

**நூல்நவில் புலவர் நுவன்றறைந் தனரே.**

தரவாகிய உறுப்பும் சுரிதமாகிய உறுப்பும் முதலும் முடிவும் வருதலில்லாமல் இடையிடை வந்து தோன்றியும் ஐஞ்சீரடி பல வந்தும் தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம் சொற்சீரடி முடுகியலடி என்னும் ஆறு உறுப்புக்களையும் பெற்றும் மேற்கூறப்பட்ட உறுப்புக்களை உடைத்தாகியும்,

இல்லாதாகியும், வெண்பாவின் இலக்கணத்தைக் கொண்டு வெளிப்படையாகத் தோன்றும் பாநிலை வகை, 'கொச்சகக் கலிப்பா' ஆகும் என்று நூலின் இலக்கணங்களை அறிந்த புலவர் கூறுவர்.

**உறழ் கலி**

**கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்**

**போக்கின் றாகல் உறழ்கலிக் கியல்பே.**

உறழ் கலிப்பாவிற்கு இலக்கணம், கூற்றும் மாற்றமும் கலந்து வந்து, சுரிதகம் இல்லாமல் முடிவதாம்.

**அளவியல்**

**ஆசிரியப் பாட்டின் அளவிற் கெல்லை**

**ஆயிரம் ஆகும் இழிபுமூன் றடியே.**

ஆசிரியப் பாடலின் உயர்ந்த அளவுக்கு எல்லை ஆயிரம் அடிகளாகும் குறைந்தது மூன்றடிகளாம். இடைப்பட்டன எல்லா அடிகளாலும், ஆசிரியப்பா வரப்பெறும், 'ஆசிரிய நடைத்தே வஞ்சி' என்ற விதியால், வஞ்சிப்பாவிற்கும் இந்த அடிவரையறை கொள்ளப்படும்.

**வெண்பாவின் அடியளவு**

**நெடுவெண் பாட்டே முந்நான் கடித்தே**

**குறுவெண் பாட்டிற் களவேழ் சீரே.**

நெடுவெண்பாட்டிற்கு எல்லை பன்னிரண்டடி குறுவெண்பாட்டிற்கு அடி அளவடியுஞ் சிந்தடியுமாகிய இரண்டடியுமாம். எனவே, இடையேயுள்ள அடிகளெல்லாம் உரிண.

**அங்கதப் பாட்டின் அடியளவு**

**அங்கதப் பாட்டன வவற்றோ டொக்கும்.**

அங்கதப் பாட்டாகிய வெண்பாவிற்கு எல்லை சிறுமை இரண்டடி பெருமை பன்னிரண்டடி.

**அடியளவு வரையறை இல்லாதன**

**கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்**

**செவியறி வாயுறை புறநிலை யென்றிவை**

**தொகைநிலை மரபின் அடியில வென்ப.**

கலிவெண்பா கைக்கிளைப் பொருளைப்பற்றிய பா, செவியுறை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, புறநிலை வாழ்த்து என்னும் பொருண்மைக்கண் வரும் வெண்பாக்கள் எல்லாம் அடியளவு வறையறுக்கப்படா; பொருள் முடிவு பெறும்வரை வேண்டிய அளவானே அடிகள் வரப்பெறும்.

**புறநிலை வாழ்த்து முதலாயவற்றிற்கு முடிபு**

**புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்**

**திறநிலை மூன்றுந் திண்ணிதில் தெரியின்**

**வெண்பா இயலினும் ஆசிரிய இயலினும்**

**பண்புற முடியும் பாவின மென்ப.**

புறநிலை வாழ்த்தும், வாயுறை வாழ்த்தும், செவியறிவுறூஉம், மருட்பாவினால் வரப்பெறும் என்பர்; எனவே, மருட்பா நான்கு பொருளினல்லது வரப்பெறாதாயிற்று.

**பரிபாடலின் அடியளவு**

**பரிபா டல்லே**

**நாலீ ரைம்ப துயர்படி யாக**

**ஐயைந் தாகும் இழிபடிக் கெல்லை.**

பரிபாடற் செய்யுள் நானூறடி உயர்வாகவும், இருபத்தைந்தடி இழிபாகவும் வரும். எனவே, இடைடெயல்லா அடிகளானும் வரப்பெறும் என்பதாம்.

**அளவியல் வகையே அனைவகைப் படுமே.**

இவ்வதிகாரத்துள் ஈண்டு அதிகரிக்கப்பட்ட அளவியல், ஈண்டுச் சொன்ன வகைபெறும்.

**எழுநிலத் தெழுந்த செய்யுட் டெரியின்**

**அடிவரை யில்லன ஆறென மொழிப.**

எழுநிலமாவன பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பன; அவற்றுள், பாட்டொழிந்த ஆறும் அடிவரை யிலவாம்.

**அவைதாம்,**

**நூலி னான உரையினான**

**நொடியொடு புணர்ந்த பிசிய னான**

**ஏது நுதலிய முதுமொழி யான**

**மறைமொழி கிளர்ந்த மந்திரத் தான**

**கூற்றிடை வைத்த குறிப்பி னான.**

அடிவரையில்லாதவை ஆறு என்று கூறப்பட்ட அவைதாம், நூலின் கண்ணவும், உரையின் கண்ணவும்; நொடித்தன் மாத்திரையாகிய பிசியின் கண்ணவும்; ஒரு மொழிக் கேதுவாகி வரும் முதுமொழிக் கண்ணவும்; மறைத்துச் சொல்லுஞ் சொல்லாற் கிளந்த மந்திரத்தின் கண்ணவும்; சொல்லுகின்ற பொருளை இடைகரந்து சொல்லும் குறிப்பின் கண்ணவும் என ஆறு வகைப்படும்.

**நூல்**

**அவற்றுள்,**

**நூலெனப் படுவது நுவலுங் காலை**

**முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்**

**தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி**

**உண்ணின் றகன்ற உரையொடு புணர்ந்து**

**நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே.**

அவற்றுள், நூலென்று கூறப்படுவது எடுத்துக்கொண்ட பொருளோடு முடிக்கும் பொருண்மை மாறுபடாமல், கருதிய பொருளைத் தொகையானும் வகையானும் காட்டி, அதன் அகத்து நின்றும் விரிந்த உரையோடு பொருத்தமுடைத்தாகி நுட்பமாக விளக்குவதாம்.

**அதுவே தானும் ஒருகால் வகைத்தே**

மேற்கூறப்பட்ட ‘நூல்’ தானும், நான்கு வகையினை உடைத்தாம்.

**பெயரும் இயல்பும்**

**ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்**

**இனமொழி கிளந்த ஓத்தி னானும்**

**பொதுமொழி கிளந்த படலத் தானும்**

**மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென்று**

**ஆங்கனை மரபின் இயலும் என்ப.**

ஆசிரியன், யாதானும் ஒரு பொருளைக் குறித்துக் கூறுஞ் சூத்திரத்தினாலும், இனமாகிய பொருள்கள் சொல்லப்ப்டும் ஒத்தினாலும், மேற்சொல்லப்பட்ட இனங்கள் பலவற்றையும் கூறப்படும் படலத்தினாலும் இம்மூன்றனையும் உறுப்பாக அடக்கிய பிண்டத்தினாலும் ஆகிய அம்மரபினால், நான்கு வகைப்பட நூல் நடக்கும் என்பர்.

**சூத்திரம்**

**அவற்றுள்**

**சூத்திரந் தானே**

**ஆடி நிழலின் அறியத் தோன்றி**

**நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க**

**யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே.**

அவற்றுள் சூத்திரமாவது. கண்ணாடியின் நிழலைப் போல் விளங்கத் தோன்றி, ஆராயாமற் பொருள் நன்றாக விளங்குமாறு பாட்டின்கண்ணே தோன்றப் பாடியமைப்பதாம்.

**'இயல்' என்னும் ஒத்து**

**நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு**

**ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது**

**ஒத்தென மொழிப உயர்மொழிப் புலவர்.**

ஒரே வகையான மணியை வரிசையாகக் கோத்து வைத்தாற்போல, ஒரேவகையான பொருளை ஓரிடத்தே அமைத்து வைத்தவை உயர்ந்த மொழிகளையுடைய புலவர் 'ஒத்து' என்று உரைப்பார்.

**படலம்**

**ஒருநெறி இன்றி விரவிப பொருளால்**

**பொதுமொழி தொடரின் அது படலம் ஆகும்.**

ஓரினமாகிய நெறியல்லாமல் பலவகையான பொருள்களும் கலந்து பொதுமொழியால் தொடர்புபடின், அது 'படலம்' என்னும் பெயரைப் பெறும்.

**பிண்டம்**

**மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயின்**

**தோன்றுமொழிப் புலவரது பிண்டம் என்ப.**

மூன்று உறுப்பினையும் அடக்கிய தன்மையுடைத்தாயின், அதனைப் புலவர் 'பிண்டம்' என்று கூறுவர். அவற்றுள், சூத்திரத்தாற் பிண்டமாயிற்று இறையனார் களவியல்; ஒத்தினாற் பிண்டமாயிற்று பன்னிருபடலம்; அதிகாரத்தாற் பிண்டமாயிற்று இத் தொல்காப்பியம் என்றறிக.

**உரையின் வகை**

**பாட்டிடை வைத்த குறிப்பி னானும்**

**பாவின் றெழுந்த கிளவி யானும்**

**பொருண்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்**

**பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்று**

**உரைவகை நடையே நான்கென மொழிப.**

பாட்டிடத்திலே வைக்கப்பட்ட பொருட்குறிப்பினாலும், பாக்களையொழியத் தோற்றிய சொல்வகையானும், பொருளியல்பில்லாத பொய்ம்மொழியினாலும் பொருளைப் பொருந்திய நகைமொழியினாலும் என்று உரையின்வகை நான்காக நடக்கும் என்று புலவர் கூறுவர்.

**உரை இருவகைப் படல்**

**அதுவே தானும் இருவகைத் தாகும்.**

மேற்கூறப்பட்ட உரைதானும் மைந்தர்க்கு உரைப்பனவும், மகளிர்க்கு உரைப்பனவும் என இரண்டு வகைப்படும்.

**இயல்பு**

**ஒன்றே மற்றுஞ் செவிலிக் குரித்தே**
**ஒன்றே யார்க்கும் வரைநிலை யின்றே.**

மகளிர்க்கு உரைக்கும் உரை செவிலிக்குரியது மைந்தர்க்கு உரைக்கும் உரை எல்லார்க்கும் உரியது.

**பிசி**

**ஒப்பொடு புணர்ந்த உவமத் தானும்**
**தோன்றுவது கிளந்த துணிவி னானும்**
**என்றிரு வகைத்தே பிசிநிலை வகையே.**

பிசியினுடைய வகையானது, ஒப்புமைக் குணத்தோடு பொருந்திவரும் உவமப்பொருளானும், ஒன்று சொல்ல ஒன்று தோன்றும் துணிவிற்றாகச் சொல்லும் சொல்லானும், என்று இருவகைப்படும். ‘அச்சுப்போலே பூப்பூக்கும்’ என்பது உவமைபற்றி வந்த பிசி; பிறவும் வருமிடத்துக் காண்க.

**முதுமொழி**

**நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்**
**மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்**
**குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்**
**ஏது நுதலிய முதுமொழி என்ப.**

நுண்மை விளங்கவும், சுருக்கம் விளங்கவும், ஒளியுடைமை விளங்கவும், மென்மை விளங்கவும் என்று, இத்தகையன விளங்குமாறு தோன்றிக், கருதின பொருளை முடித்தற்கு வரும் ஏதுவைக் குறித்தன, ‘முதுமொழி’ என்று கூறுவர் புலவர்.

**மந்திரம்**

**நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப.**

நிறைத்த மொழியினுடைய மாந்தர், தமது ஆணையால் சொல்லப்பட்ட மறைந்த மொழிதான் ‘மந்திரம்’ என்று அறிஞர்கள் கூறுவர். (மறைமொழி - இரகசியமாக உபதேசிப்பது)

**குறிப்பு மொழி**

**எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப்**
**பொருட்புறத் ததுவே குறிப்புமொழி யென்ப.**

எழுத்தோடுஞ் சொல்லோடுஞ் சேராதாகிச் சொல்லினால் உணரப்படும் பொருளின் புறத்ததுவே ‘குறிப்பு மொழி’ யாகும்.

**பண்ணத்தி**

**பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்**

**பாடடி னியல பண்ணத் திய்யே.**

பண்ணைத் தோற்றுவிக்கும் செய்யுட்கள், பாட்டினிடத்துக் கலந்த பொருளை உடையனவாகிப் பாட்டுக்களின் இயல்பை உடையனவாம் (பண்ணத்தி - பாலினம்) அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத் தமிழில் ஓதப்படுவன.

**அடியளவு**

**அதுவே தானும் பிசியொடு மானும்.**

மேற்கூறப்பட்ட பண்ணத்தி பிசியொடொத்த அளவினை உடையது ஆகும். பிசியென்பது இரண்டடி அளவின் கண்ணே வருவதாகலின், இதுவும் இரண்டடியான் வரும்.

(எ.டு) "கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை

என்று மேத்தித் தொழுவோம் நாமே"

இது பிசியொடு ஒத்தளவிற்றாகிப் பாலையாழென்னும் பண்ணிற்கு இலக்கணப்பாட்டாகி வந்தமையின், பண்ணத்தியாயிற்று.

**அடிநிமிர் கிளவி ஈரா றாகும்**

**அடியிகந்து வரினும் கடிவரை யின்றே.**

நாற்சீரடியின் மிக்குவரும் பாட்டுப் பன்னிரண்டும், அவ்வழி அவ்வடியின் வேறுபட்டு வருவனவும் கொள்ளப்படும். பன்னிரண்டாவன, ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியெனச் சொல்லப்பட்ட நான்கு பாவினோடும், தமிழிசை துறை விருத்த மென்னும் மூன்றினத்தையும் உறழ வருவனவாம்.

**கிளரியல் வகையிற் கிளந்தன தெரியின்**

**அளவியல் வகையே அனைவகைப் படுமே.**

இங்கு சொன்ன வகையினால் சொல்லப்பட்டவைகளை ஆராயுமிடத்து, அளவியல்வகை அத்துணை வகையாகப் பாகுபடுவதாகும் என்க.

**திணை**

**கைக்கிளை முதலா ஏழிபெருந் திணையும்**

**முற்கிளந் தனவே முறைவயி னான.**

திணையாவது, கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை என்பன; அவை முறைமையினால் மேலே கூறப்பட்டன.

**கைகோள்**

**காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்**

**பாங்கொடு தழாஅலும் தோழியிற் புணர்வுமென்று**

**ஆங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு**

**மறையென மொழிதல் மறையோர் ஆறே.**

இயற்கைப் புணர்ச்சியும், இடந்தலைப்படலும், பாங்கற் கூட்டமும், தோழியிற் கூட்டமும் என்று சொல்லப்பட்ட நான்கு வகையானும், அவற்றைச் சார்ந்து வருகின்ற மொழியானும் வருவன

களவென்று கூறுதல் மறையறிந்தோர் நெறியாம். களவென்னாது 'மறை' என்பது, அது தீமை பயக்கும் களவு அல்லாததனால் என்க.

**கற்பு**

**மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்**
**இவைமுத லாகிய வியனெறி திரியாது**
**மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்**
**பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே.**

களவொழுக்கம் வெளிப்படுதலும், களவொழுக்கமின்றி உறவினராலே பெறுதலும் என்று சொல்லப்பட்ட இவை முதலாகிய இயற்கை நெறியில் தப்பாது மகிழ்தலும், புலத்தலும், ஊடலும், ஊடல் தீர்தலும், பிரிதலும் என்று சொல்லப்பட்ட இவ்றொடுங் கூடிவருவது 'கற்பு' என்று சொல்லப்பெறும்.

**கைகோள்வகை**

**மெய்பெறும் அவையே கைகோள் வகையே.**

கைகோள் வகையாவன, பொருள்பெற வந்த மேற்கூறப்பட்ட களவு கற்பு என்னும் இருவகையே யாம்.

**கூற்று**

**களவிற் கூற்று நிகழ்த்தற்கு உரியோர்**

**பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி**
**சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியொடு**
**அளவியன் மரபின் அறுவகை யரொரும்**
**களவியற் கிளவிக் குரியர் என்ப.**

பார்ப்பான் பாங்கன், தோழி, செவிலி, மிகுந்த சிறப்பினையுடைய தலைவன், தலைவி என்று கூறப்பட்ட கலந்தொழுகும் தன்மையினையுடைய அறுவகையோரும், களவொழுக்கச் சொல் கூறுதற்கு உரியவராவர்.

**கற்பிற் கூற்று நிகழ்த்தற்கு உரியோர்**

**பாணன் கூத்தன் விறலி பரத்தை**
**யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்**
**பேணுதகு சிறப்பில் பார்ப்பான் முதலா**
**முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்**
**தொன்னெடு மரபிற் கற்பிற் குரியர்.**

பாணன், சுத்தன், விறலி, பரத்தை, அழகிய மேன்மையினையுடைய அறிஞர், கண்டோர் ஆகியோருடன் பேணத்தக்க சிறப்பினையுடைய பார்ப்பான் முதலாகச் சொல்லப்பட்ட அறுவருங்கூடப் பன்னிருவரும் கற்பின்கண் கூறுதற்குரியர்.

**எடுத்து மொழிதற்கு உரியோர்**

**ஊரும் அயலும் சேரி யோரும்**
**நோய்மருங் கறிநரும் தந்தையும் தன்னையும்**
**கொண்டெடுத்து மொழியப் படுதல் அல்லது**
**கூற்றவண் இன்மை யாப்புறத் தோன்றும்.**

ஊரில் உள்ளவர்களும். சேரியில் உள்ளவர்களும், பக்கத்து வீட்டில் உள்ளவர்களும், நோய்ப்பகுதியை அறிபவர்களும், தந்தையும் தமையனும் இருவகைக் கைகோளினும் பட்டதனை யுட்கொண்டு பிறிதொன்றினை எடுத்துக் கூறினல்லது, வேறு வகையின்மை பொருந்தத் தோன்றும்.

**நற்றாய் கூற்றின் இயல்பு**

**கிழவன் தன்னொடும் கிழத்தி தன்னொடும்**

**நற்றாய் கூறல் முற்றல் தோன்றாது.**

தலைவனொடும் தலைவியொடும் நற்றாய்கூற்று மிகதியாகத் தோன்றாது. எனவே, ஏனையோர்க்கே கூறும் என்றவாறாம்.

**கண்டோர் மொழிதல்**

**ஒண்டொடி மாதர் கிழவன் கிழத்தியோடு**

**கண்டோர் மொழிதல் கண்ட தென்ப.**

ஒண்டொடி மாதராவார், நற்றாயும் தோழியும் செவிலியும் இவரொடுந் தலைவனொடும் தலைவியொடுங் கண்டோர் கூறுதல் காணப்பட்டது. எனவே ஏனையோர் கேட்பக் கூற்றில்லை என்றவாறாம்.

**தலைவன் கூற்று - ஒரு கருத்து**

**இடைச்சுர மருங்கில் கிழவன் கிழத்தியொடு**

**வழக்கிய லாணையில் கிளத்தற்கும் உரியன்.**

தலைவியை உடன்கொண்டு போகும் இடைச்சுரத்தின் கண், தலைவியைத் தலைவன் வழக்குநெறி யாணையானே கூறுதற்கும் உரியவன். மெல்லிய மகளிர்முன் வன்மை கூறலாகாமையின், இது வழுவமைத்தவாறு.

**தலைமக்களல்லார் கூற்று - ஒரு கருத்து**

**ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு**

**மொழிந்தாங் குரியர் முன்னத்தின் எடுத்தே.**

தலைவனையும் தலைவியையும் ஒழிந்த பதின்மரும், அத்தலைவனொடும் தலைவியொடும் சொல்லிப்போந்த மரபினாலே சொல்லப்பெறுவர், இடமும் காலமும் குறித்து.

**கேட்போர்**

**தலைமக்கள் - கூற்றினைக் கேட்போர்**

**மனையோள் கிளவியும் கிழவன் கிளவியும்**

**நினையுங் காலைக் கேட்குநர் அவரே.**

தலைவனின் மொழியையும், தலைவியன் மொழியையும் நினைக்கும்போது கேட்பவர்கள் அவரே யாவர்; அ:்தாவது அப் பதின்மரும் ஆவர்.

**பார்ப்பார் அறிவர் கூற்றினைக் கேட்போர்**

**பார்ப்பார் அறிவர் என்றிவர் கிளவி**

**யாக்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே.**

பார்ப்பார் அறிவர் என்று சொல்லப்பட்ட இருவர் கூற்றையும், இயைபொடு பொருந்தி எல்லாருமே கேட்கப் பெறுவர்.

**பரத்தை வாயில் எனவிரு வீற்றும்**

**கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப் பயனிலவே.**

பரத்தை என்று சொல்லப்பெறும் வேறுபாட்டினும், வாயில் என்று சொல்லப்பெறும் வேறுபாட்டினும், தலைமகளைச் சுட்டாத கூற்றுப் பயனில்லை.

**வாயில்கள் கூற்றைக் கேட்போர்**

**வாயில் உசாவே தம்முள் உரிய**

வாயில்கள், உசாவுமிடத்துக் கிழத்தியைச் சுட்டாது தம்முள் உசாவுதலும் உரிமையாகும்.

**மக்களல்லாதார் கேட்பனவாகக் கூறுதல்**

**ஞாயிறு திங்கள் அறிவே நாணே**
**கடலே கானல் விலங்கே மரனே**
**புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே**
**அவையில் பிறவும் நுதலிய நெறியால்**
**சொல்லுந போலவும் கேட்குந போலவும்**
**சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்.**

ஞாயிறு, திங்கள், அறிவு, நாண், கடல், கானல், விலங்கு, மரன், புலம்பலையுடைய பொழுது, பறவை, நெஞ்சு முதலியனவாகச் சொல்லப்பட்ட பதிநொன்றும், அத் தன்மைய பிறவும்தாம் கருதிய நெறியினால் சொல்லுவன போலவும் கேட்குந போலவும் சொல்லி அமையப் பெறும் என்று கூறுவர் புலவர்.

**களன் முதலியன**

**களன்**

**ஒருநெறிப் பட்டாங் கோரியன் முடியும்**
**கரும நிகழ்ச்சி இடமென மொழிப.**

ஒருவழிப்பட்டு ஓரியல்பாக முடியும் வினைநிகழ்ச்சியை 'இடம்' என்று கூறுவர் புலவர்.

**ஒருநெறிப் படுதலாவது** - அகமாயினும் புறமாயினும் ஒரு பொருள்மேல் வருதல். **ஓரியல் முடிதலாவது** - அகத்தின்கட் களவென்றானும் கற்பென்றானும் அவற்றின் விரிவகையில் ஒன்றானும்பற்றி வருதல்; புறத்தின்கண் நிரைகோடலானும் மீட்டாலானும் மேற்செலவானும் எயில்வளைத்தலானும் யாதானுமோர் இயல்புபற்றி வருதல் **கருமநிகழ்வாவது**, அப்பொருளைப் பற்றி யாதானும் ஒருவினை நிகழுமிடம்; கருமநிகழ்ச்சி என்றதனால், தன்மை முன்னிலை படர்க்கையென்பனவும் கொள்ளப்படும்.

**காலம்**

**இறப்பே நிகழ்வே எதிர தென்னும்**
**திறத்தியன் மருங்கில் தெரிந்தனர் உணரப்**
**பொருள்நிகழ் வுரைப்பது கால மாகும்.**

இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்று கூறப்பட்டு இயலும் பக்கத்தில் ஆராய்ந்து நோக்குமாறு பொருள் நிகழ்ச்சியைக் கூறுவது காலமாகும்.

**பயன்**

**இதுநனி பயக்கும் இதன்மா றென்னும்**
**தொகுநிலைக் கிளவி பயனெனப் படுமே.**

யாதானும் ஒரு பொருளைக் கூறியவழி, இதன் பின்பும் இதனைப் பயக்குமென விரித்துக் கூறாது, முற்கூறிய சொல்லினானே தொகுத்துக் கூறுதல் ‘பயன்’ எனப்படும். இவ்வகையினால் யாதானுமொரு செய்யுளாயினும், பயன்படக் கூறல் வேண்டுமென்பது தெளிவாம்.

**மெய்ப்பாடு**

**உய்த்துணர் வின்றித் தலைவரும் பொருண்மையின்**

**மெய்ப்பட முடிப்பத மெய்ப்பாடாகும்.**

யாதானும் ஒன்றைக் கூறியவிடத்து அதன்கண் பொருண்மையை விசாரித்து உணர்தலலில்லாமல், அவ்விடத்தில் வரும் பொருட்டன்மையானே மெய்ப்பாடு தோன்ற முடிப்பது, ‘மெய்ப்பாடு’ என்னும் உறுப்பாம்; செய்யுள் செய்பவர் மெய்ப்பாடு தோன்றச் செய்தல் வேண்டும் என்பது கருத்து.

**மெய்ப்பாடு - அதன் முடிபு**

**எண்வகை இயல்நெறி பிடையா தாகி**

**மன்னுறக் கிளந்த முடிவின ததுவே**

அது, நகை முதலாகிய எட்டு மெய்ப்பாட்டு நெறியையும் பிழையாதாகி, மெய்ப்பாட்டியலள் சொல்லப்பட்ட இலக்கணத்தை உடையதாம்.

**எச்சம்**

**சொல்லொடுங் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை**
**புல்லிய கிளவி எச்ச மாகும்.**

பிறிதோர் சொல்லோடும், பிறிதோர் குறிப்போடும் முடிவைக் கொள்ளுகின்ற இயற்கை பொருந்திய செய்யுள் எச்சமாகும். எனவே, சொல்லெச்சம் குறிப்பெச்சம் என எச்சம் இருவகை ஆயின.

**முன்னம்**

**இவ்விடத்தில் திம்மொழி இவரிவர்க் குரியவனென்று**

**அவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்.**

இவ்விடத்தில் இம்மொழியை இவர்க்குச் சொல்லத் தகும் எனக் குறித்து, அவ்விடத்து, அம்மொழியை அவர்க்கு உரைப்பது முன்னமாகும். எனவே, இடமும் காலமும் உணர்ந்து கேட்பார்க்குத் தக்கவாறு மொழிதலுஞ் செய்யுள் உறுப்பாம்.

**பொருள்**

**இன்பமும் இடும்பையும் புணர்வம் பிரிவும்**

**ஒழுக்கமும் என்றிவை இழுக்க நெறி இன்றி**

**இதுவா கித்திணைக் குரிப்பொரு ளென்னாது**

**பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்ப.**

இன்பமும் துன்பமும் புணர்வும் பிரிவும் ஒழுக்கமும் என்று சொல்லப்பட்டவை வழுவு நெறியில்லாமல், இதத்திணைக்குரிய பொருள் இப்பொருள் என்னாது. எல்லாப் பொருட்கும் பொதுவாகி நிற்கும் பொருளே, 'பொருள் வகையாம்' என்று கூறுவர் புலவர்.

**துறை**

**அவ்வ மாக்களும் விலங்கும் அன்றிப்**

**பிறவவண் வரினுந் திறவதி னாடித்**

**தத்த மியலின் மரபொடு முடியின்**

**அத்திறந் தானே துறையெனப் படுமே**

ஐவகை நிலத்தில் உயிரெளப்பெறும் பல்வேறு வகைப்பட்ட மக்களும், மாவும், புள்ளும் ஓதிவந்தவாறல்லாமல் வேறுவகையாகச் செய்யினும், அவ்வத்திணைக்கேற்ற இலக்கணமும் வரலாற்று முறைமையம் மாறுபடாமற் செய்யின், அத்தகைய திறப்பாடு உடைத்தாய் வருவது ‘துறை’ என்று சொல்லப்படுவதாம்.

**மாட்டு**

**அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்**

**இயன்றுபொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்**

**மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்.**

பொருள் கொள்ளுங்கால், அகன்று பொருள் கிழப்பச் செய்யினும், அணுகிக் கிடப்பச் செய்யினும், இருவகையானுஞ் சென்று பொருள் முடியுமாற்றால் கொணர்ந்துரைப்பச் செய்தலைச் செய்யுள் வழக்கில், ‘மாட்டெ’ ன்னும் உறுப்பென்று கூறுவார்கள்.

**இவற்றிற் சிலவற்றிற்கு முடிப**

**மாட்டும் எச்சமும் நாட்டல் இன்றி**

**உடனிலை மொழியினும் தொடர்நிலை பெறுமே.**

மேற்சுறிய எச்சமும் மாட்டும் நிலைபெறுத்தல் இன்றியும், அச் செய்யுளுட் கிடந்தவாறே பொருள் அமையுமாறுஞ் செய்யுள் செய்யப்பெறும்.ள

**வண்ணம்**

**தொகை**

**வண்ணந் தாமே நாலைந் தென்ப.**

வண்ணமாவன இருபது என்று கூறுவுார்கள்.

அதன் பெயர்.

**அவைதாம்**

**பாஅ வண்ணம் தாஅ வண்ணம்**

**வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்**

**இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்**

**நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்**

**சித்திர வண்ணம் நலிபு வண்ணம்**

**அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்**

**ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்**

**எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்**

**தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம் என்(று)**

**ஆங்கென மொழிப அறிந்திசி னோரே.**

இவை இருபதும் வண்ணங்களின் பெயர்களாம்.

**பாஅ வண்ணம்**

**அவற்றுட்**

**பாஅ வண்ணம்**

**சொற்சீர்த் தாகி நூற்பாற் பயிலும்.**

பா அ வண்ணமாவது, சொற்சீரடியாகி நூலின்கண் பயின்று வருவதாம்.

**கா அ வண்ணம்**

**கா அ வண்ணம்**

**இடையிட்டு வந்த எதுகைத் தாகும்.**

தா அ வண்ணமாவது, இடையிட்டு எதுகையான் வரும்.

**வல்லிசை வண்ணம்**

**வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே.**

வல்லெழுத்து மிகுந்து வருவது, வல்லிசை வண்ணம் ஆகும்.

**மெல்லிசை வண்ணம்**

**மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே.**

மெல்லிசை வண்ணம், மெல்லெழுத்து மிகுந்த வருவதாம்.

**இயைபு வண்ணம்**

**இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே.**

இடையெழுத்து மிகுந்து வருவது, இயைபு வண்ணம் ஆகும்.

**அளபெடை வண்ணம்**

**அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்.**

அளபெடை பொருந்தி வருவது, அளபெடை வண்ணம் ஆகும்.

**நெடுஞ்சீர் வண்ணம்**

**நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்.**

நெட்டெழுத்து மிகுந்து வருவது, நெடுஞ்சீர் வண்ணமாகும்.

**குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும்.**

குற்றெழுத்துப் பயின்று வருவது, குறுஞ்சீர் வண்ணம் என்று பெயர் பெறும்.

**சித்திர வண்ணம்**

**நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வருமே.**

நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் சார்ந்து வருவது சித்திர வண்ணமாகும்.

**நலிபு வண்ணம்**

**நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்**

ஆய்தம் பயின்று வருவது, நலிபு வண்ணம் என்று பெயர் பெறும்.

**அகப்பாட்டு வண்ணம்**

**அகப்பாட்டு வண்ணம்**

**முடியாத் தன்மையுள் முடிந்ததன் மேற்றே.**

அகப்பாட்டு வண்ணமாவது, முடியாத் தன்மையான் முடித்ததன் மேலும் ஆகும்.

**புறப்பாட்டு வண்ணம்**

**புறப்பாட்டு வண்ணம்**

**முடிந்தது போன்று முடியா தாகும்.**

புறப்பாட்டு வண்ணமாவது, முடிந்ததுபோன்று முடியாதாகி வருவதாம்.

**ஒழுகு வண்ணம்**

**ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும்**

ஓசையால் ஒழுகிக்கிடப்பது, ஒழுகுவண்ணம் என்று கூறப்பெறும்.

**ஒரூஉ வண்ணம்**

**ஒரூஉ வண்ணம் ஒரூஉத்தொடை தொடுக்கும்.**

ஒரூஉ வண்ணமாவது, நீங்கின தொயாகித் தொடுப்பது; அது செந்தொடையாம்.

**எண்ணு வண்ணம்**

**எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்.**

எண்ணுப் பயின்று வருவதுர், எண்ணு வண்ணமாம்.

**அகைப்பு வண்ணம்**

**அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும்.**

அறுத்தறுத்தியலுவது. அகைப்பு வண்ணம் என்று பெயர் பெறும்.

**தூங்கல் வண்ணம்**

**தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்**

வஞ்சியுரிச்சீர் பயின்று வருவது, தூங்கல் வண்ணமாம்.

**ஏந்தல் வண்ணம்**

**ஏந்தல் வண்ணம்**

**சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்**

ஏந்தல் வண்ணமாவது, சொல்லிய சொல்லினானெ சொல்லப்பட்டது சிறக்க வருவதாம்.

**உருட்டு வண்ணம்**

**உருட்டு வண்ணம் அராகம் தொடுக்கும்.**

உருட்டு வண்ணமாவது, அராகந் தொடுத்து வருவதாம்.

**முடுகு வண்ணம்**

**முடுகு வண்ணம் முடிவறி யாமல்**
**அடிபிறந் தொழுகி அதனொ ரற்றே.**

முடுகு வண்ணமாவது, நாற்சீரடியின் மிகுந்து சென்று அராகத்தோடு ஒக்கும் தன்மையுடையதாம்.

**இவற்றின் முடிபு**

**வண்ணந் தாமே அவையென மொழிப**

மேற் கூறப்பட்டவைதாம் வண்ணங்களாவன என்று கூறுவர்.

**வனப்பு**

**அம்மை**

**சின்மென் மொழியால் சீர்புனைந் தியாப்பின்**
**அம்மை தானே அடிநிமிர் வின்றே.**

சிலவாகிய மெல்லியவான மொழியினானே தொடுக்கப்பட்ட அடிநிமிர்வில்லாத செய்யுள் ‘அம்மை’ யாம்.

(எ.டு) "அறிவுனா னாகுவ துண்டோ பிறிதினோய்

தன்னோய்போற் போற்றாக் கடை"

என வரும்.

**அழகு**

**செய்யுள் மொழியால் சீர்புனைந் தியாப்பின**

**அவ்வகை தானே அழகெனப் படுமே.**

செய்யுட்குரிய சொல்லினால் சீரைச் சேர்த்துத் தொடுப்பின், அவ்வகைப்பட்ட செய்யுள், 'அழகு' என்று கூறப் பெறும்.

**தொன்மை**

**தொன்மை தானே சொல்லுங் காலை**

**உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே.**

தொன்மையாவது, உரையோடு பொருந்திப் போந்த பழைமைத்தாகிய பொருள்மேல் வருவன; இவை இராமசரிதமும் பாண்டவ சரிதமும் முதலாகியவற்றின்மேல் வருஞ் செய்யுள்.

**தோல்**

**இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்**

**பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகினும்**

**தோலென மொழிப தொன்னெறிப் புலவர்.**

'இழும்' என்கின்ற மொழியினால் விழுமிய பொருளைக் கூறினும், பரந்த மொழடியினால் அடிநிமிர்ந்து ஒழுகினும், 'தோல்' என்னுஞ் செய்யுளாம்.

**விருந்து**

**விருந்தே தானும்**

**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே.**

விருந்தாவது, முன்புள்ளார் சொன்ன நெறிபோய்ப் புதிதாகச் சொன்ன யாப்பின் மேலதாம், புதிதாகப் புனைதலாவது ஒருவன் சொன்ன நிழல்வழியன்றித் தானே தோற்றுவித்தல்.

**இயைபு**

**ஞகார முதலா ளகார வீற்றுப்**

**புள்ளி யிறுதி யியைபெனப் படுமே.**

ஞண நமண யரல வழள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வருஞ் செய்யுள், 'இயைபு' என்று பெயர் பெறும்.

**புலன்**

**தெரிந்த மொழியால் செல்விதிற் கிளந்து**

**தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றில்**

**புலனென மொழிப புலனுணர்ந் தோரே.**

வழக்கச் சொல்லினாலே தொடுக்கப்பட்டு, ஆராய வேண்டாமல், பொருள் தோன்றி விளங்குவது 'புலன்' என்னுஞ் செய்யுளாம்.

**இழைபு**

**ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது**

**குறளடி முதலா ஐந்தடி யொப்பித்து**

**ஓங்கிய மொழியான் ஆங்கவண் மொழியின்**

**இழைபின் இலக்கணம் இயைந்த தாகும்.**

ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்து அடங்காது ஆசிரியம் பாவிற்கு ஓதப்பட்ட நாலெழுத்தாதியாக இருபதெழுத்தின் வரையும். உயர்ந்த பதினேழு நிலத்தும், ஐந்தடியும் முறையானே வரத் தொடுப்பது 'இயைபு' என்னுஞ் செய்யுளாகும்.

**புறனடை**

**செய்யுள் இருங்கின் மெய்பெற நாடி**

**இழைத்த இலக்கணம் பிழைத்தன போல**

**வருவவுள வெனினும் வந்தவற் றிறயலால்**

**திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே.**

செய்யுளிடத்திலே, பொருள் பெற ஆராய்ந்து நூல் செய்யப்பட்ட இலக்கண்த்தில் தவறினபோன்று பின் காணப்படுவனவும் இருக்குமானால், முன் கூறப்பட்ட இலக்கணத்தோடு மாறுபடாமல் முடித்துக் கொள்ளுதல் அறிவுடையோரது கடனாகும்.

**வினாக்கள்**

1. செய்யுள் உறுப்புக்கள் யாவை?
2. அசை, சீர், அடி வகைகளைத் தொகுத்து எழுதுக?
3. தொடை வகைகளை விவரி
4. மரபு, தூக்கு குறிப்பு வரைக.
5. 'பா' வகைகள் குறித்து கட்டுரை எழுதுக.
6. பின்வருவனவற்றை விளக்குக.

    1. படலம், 2. பிண்டம், 3. உரை, 4. பிசி, 5. முதுமொழி, 6. மந்திரம்.ஷ
7. கொச்சக கலி என்றால் என்ன?
8. 'வண்ணம்' குறித்து செய்யுளியலில் தொல்காப்பியர் கூறுவதை விளக்குக.
9. 'வனப்பு' கட்டுரை வரைக.

# அலகு - 4

# மெய்ப் பாட்டியல்

**மெய்ப்பாடு - பொருள் விளக்கம்:**

மெய்ப்பாடு மெய் + பாடு

மெய் + (இன் கண்) + படுதல்

மெய்யின்கண் படுதல்

உடம்பின்கண் தோன்றுதல்

அதாவது ‘மெய்ப்பாடு’ என்பது ‘உடம்பின்கண் தோன்றுதல்’ எனப் பொருள் தருகின்றது.

**மெய்ப்பாடுகளின் வகை:**

**பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்**

**கண்ணிய புறனே நானான் கென்ப.**

விளையாட்டு ஆயத்தின்கண் தோன்றி முப்பத்திரண்டு பொருளையுங் குறித்ததன் புறத்து நிகழும் பொருள் பதினாறு என்று கூறுவர்.

**நாலிரண் டாகும் பாலுமா ருண்டே**

மேற்குறுப்பட்ட பதினாறு பொருளும், எட்டாக வரும் இடமும் உண்டு; குறிப்புப் பதினெட்டனையும் சுவையுள் அடக்கிச் சுவை எட்டுமாக்கி நிகழ்த்தல்

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**

**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**

**அப்பா லெட்டாம் மெய்ப்பா டென்ப.**

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று கூறப்படுவன எட்டும் மெய்ப்பாடு என்று கூறுவர்.

**எண்வகை மெய்யப்பாடுகள்**

**எள்ளல் இளமை பேதைமை மடனென்று**

**உள்ளப் பட்ட நகைநான் கென்ப.**

இகழ்தல், இளமை, அறிவின்மை, மடமை என்று எண்ணப்பட்ட நான்கிடத்திலும் நகை தோன்றும். **எள்ளல்** என்பது தான் பிறரை எள்ளி நகுதலும், பிறரால் எள்ளப்பட்ட வழித் தான் நகுதலும் என இரண்டாம்.

**அழுகை**

**இழிவே இழவே அசைவே வறுமையென**

**விளிவில் கொள்கை அழுகை நான்கே.**

இழிவும், இழத்தலும், அசைதலும், வறுமையும் என்ற நான்கிடத்தும் அழுகை தோன்றம். அசைவு - தளர்ச்சி; தன்னிலையிற் றாழ்தல்.

**இளிவரல்**

**மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு**

**யாப்புற வந்த இளிவரல் நான்கே.**

மூப்பும், பிணியும் வருத்தமும் மென்மையும் என்னும் நான்கின் பொருட்டிலும் இளிவரல் தோன்றும்.

**மருட்கை**

**புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு**

**மதிமை சாலை மருட்கை நான்கே**

புதுமை, பெருமை, சிறுமை, ஆச்சம் என்னும் நான்கிடத்தும் அறிவு நிரம்பப்பெறாத வியப்புத் தோன்றும்.

**அச்சம்**

**அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்**
**பிணங்கல் சாலை அச்சம் நான்கே.**

தெய்வம், விலங்கு, கள்வர், அரசர் என்னும் நால்வகையாலும் அச்சம் உண்டாகும்.

**பெருமிதம்**

**கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்**
**சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே**

பெருமிதமானது கல்விச் சிறப்பு, தறுகண்மை, புகழ்மை, கொடைத்தன்மை என்று சொல்லப்பட்ட நான்கு வகையாலும் உண்டாகும்.

**வெகுளி**

**உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ன**
**வெறுப்பின் வந்த வெகுளி நான்கே.**

உறுப்புக்களைக் குறைத்தல், குடிப்பிறப்புக்குக் கேல் சூழ்தல், கோல்கொண்டலைத்தல், கொலைக்கு ஒருப்படுதடு என்னும் நால்வகையான வெறுக்கத்தக்க செல்களால் வெகுளி யுண்டாகும்.

**உவகை**

**செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென**
**அல்லல் நீத்த உவகை நான்கே.**

துன்பத்தை விலக்கிய உவகையானது செல்வ நுகர்ச்சி, ஐம்புலன்களான் நுகர்தல், காமநுகர்ச்சி, விளையாட்டு ஆகிய நான்கு வகைகளாலும் உண்டாகும்.

**அவத்தை**

**ஆங்கவை,**
**ஒருபாலாக ஒருகால்**
**உடைமை இன்புறல் நடுவுநிலை அருளல்**
**தன்மை அடக்கம் வரைதல்அன்பெனா அக்**
**கைம்மிகல் நலிதல் சூழ்ச்சிவ ாழ்த்தல்**
**நாணுதல் துஞ்சல் அரற்றுக் கனவெனாஅ**
**முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை**
**கருதல் ஆராய்ச்சி விரைவயிர்ப் பெனாஅக்**
**கையா றிடுக்கண் பொச்சப்புப் பொறாமை**
**வியர்த்தல் ஐயம் மிகைநடுக் கெனாஅ**
**அவையும் உளவே அவையலங் கடையே.**

மேற்சொல்லப்பட்டன முப்பத்திரண்டும் ஒருபக்கமாக, ஒருபக்கம் உடைமை முதலாகச் சொல்லப்பட்ட பொருளுடைமை, மகிழ்ச்சி, இன்புறுதல், நடுநிலைமையில் நிற்றல், எல்லாவுயிர்க்கும்

அருள் செய்தல், தன்மை பேணுதல், அடக்கம், நீக்க வேண்டியவைகளை நீக்கி யொழுகுதல், அன்பு அளவிற் குற்றமாயினும் குணமாயினும் மிகுதல், பிறரை வருத்தல், சூழ்ச்சி வாழ்த்துதல், நாணுதல், துஞ்சல், உறக்கத்தின்கண் வாய்ச்சோர்வு படல் சினத்தல், எண்ணுதல், அஞ்சுதல், சோம்பல், கருதுதல், ஆராய்ச்சி, காரியவிரைவு, உயிர்ப்பு, கையாறு, துன்பம், மறதி, பிறராக்கம் பொறாமை, வியர்த்தல், ஐயம், ஒருவனை நன்கு மதியாமை, நடுக்கம் என்று சொல்லப்பட்ட இவை முப்பத்திரண்டும் மெய்ப்பாட்டுள் வருவனவாம்.

**புணர்ச்சிக்குப் பின் நிகழ்வன:**

புணர்ச்சிக்குப்பின் களவு வெளிப்படும் வரை உள்ள மெய்ப்பாடுகள் பன்னிரண்டையும் மூன்று கூறுகளாக்கி உரைக்கின்றார் தொல்காப்பியர். அவற்றிற்குரிய நூற்பாக்கள் வருமாறு:

**'பாராட்டு எடுத்தல், மடந்தப உரைத்தல்,**
**ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல்,**
**கொடுப்பவை கோடலவ் உளப்படத் தொகைஇ**
**எடுத்த நான்கே நான்கென மொழிப'**

**'தெரிந்துடம் படுதல், தளைப்புவினை மறுத்தல்,**
**பரந்திடத் தொழிதல், கண்டவழி உவத்தலொடு**
**பொருந்திய நான்கே ஐந்தென மொழிப'**

**'புறஞ்செயச் சிதைதல், புலம்பித் தோன்றல்,**
**கலங்கி மொழிதல், கையறவு உரைத்தலொடு**
**புலம்பிய நான்கே ஆறென மொழிப;**

| | |
|---|---|
| **பாராட்டு எடுத்தல்:** | **புணர்ந்தபின் தலைமகள் தலைமகனின் இயல்புகளை வியத்தலும் மனத்துள் பாராட்டுதலும்;** |
| **மடந்தப உரைத்தல்:** | **முன்பிருந்த மடமை நீங்கப் பேசுதல் அதாவது, தலைவி தன் வேட்கை வெளிப்படப் பேசுதல்;** |
| **ஈரமில் கூற்றம் ஏற்றவர் நாணல்** | **தமர் கூறும் கடுஞ்சொற்களை ஏற்று ஊரார்க்கும் பிறர்க்கும் புலனாகுமோ என எண்ணி வெட்குதல்;** |
| **கொடுப்பவை கோடல்:** | **தலைமகன் தரும் கண்ணி, தழை போன்ற பரிசுப் பொருள்களை ஏற்றுக்கொள்ளல்;** |
| **தெரிந்துடம்படுதல்:** | **தன் குலத்திற்கும் ஒழுக்கத்திற்கும் பெண் தன்மைக்கும் ஏற்ற வகையான் வேண்டுவன தெரிந்து கொண்டு இன்னது நடந்தது என்று தோழிக்கு உடன் படுதல்;** |
| **திளைப்பு வினை மறுத்தல்:** | **தோழிக்கு உடன்படு நிலையிலும் தான் முன்பு தலைமகளோ பெற்ற திளைப்பை மறுத்தல்;** |
| **கரந்திடத் தொழிதல்:** | **இசிசெறிப்புண்ட காலத்துத் தலை மகனைக் காணும் விருப்பால் மறைந்திருத்தல்;** |
| **கண்டவழி உவத்தல்:** | **தலைமகனைக் கண்ட இடத்து மகிழ்தல்;** |
| **புறஞ்செயச் சிதைதல்:** | **புறத்தில் பூவும் சாந்தும் கொண்டு கோலஞ் செய்து கொண்ட போதும் அகத்தே மகிழ்வுறாமல் கலங்குதல்.** |

**புலம்பித் தோன்றல்:** **சுற்றம் சூழ இருப்பினும் தன்னைத் தனியளாகக் கருதிப் பொலிவு இழ9ந்து தோன்றுதல்;**

**கலங்கி மொழிதல்:** **சொல்லுவனவற்றைக் கலக்கத்தோடு (தடுமாற்றம் தோன்ற) சொல்லுதல்;**

**கையறவு உரைத்தல்:** **செயலற்ற நிலை தோன்றுமாறு சொல்லுதல்.**

களவுக்கால மெய்ப்பாடுகளை நான்கு நான்காகப் பகுத்துரைத்தற்கு என்ன காரணம் எனக் காண்பது தக்கது.

புகுமுகம் புரிதல் முதலாக உள்ள முதல் நான்கு மெய்ப்பாபடுகளும் தலைமகள் களவில் தோன்றிப் பிறர்க்குப் புகைப்படாது நிற்பன. ஆகவே ஒன்றாயின.

கூழை விரித்தல் முதலாயின தலைமகனைச் சந்திக்கும் நோக்கோடு காலம் நீட்டிக்கத் தலைமகள் மேற்கொள்ளும் செயல்களாதலின் நான்கும் ஒன்றாயின.

அல்குல் தைவரல் முதலான நான்கு மெய்ப்பாடுகளும் புணர்ந்து நீங்கியபின் தலைமகளிடத்து நிகழ்வன; ஆகவே, ஒன்றாயின.

புறஞ்செயச் சிதைதல் முதலான நான்கு மெய்ப்பாடுகளும் தலைமகளின் தனிமை விகற்பம் கூறுவன. ஆகவே ஒன்றாயின.

களவு ஒழுக்கத்தில் கையறவுரைத்தலுக்கு அடுத்து ஒரு மெய்ப்பாடு அமையுமெனின் அது கைக்கிளை அல்லது பெருந்திணைக்கே உரியதாகுமல்லாமல் அன்பின் ஐந்திணைக்கு உரியது ஆகாது. ஆகவே கையற்வுரைத்தலைக் கடைசியாக வைத்தார்.

இங்குக் கூறிய மெய்ப்பாடுகள் அனைத்தும் அன்பின் ஐந்திணைக்கே உரியவை.

இம்மெய்ப்பாடுகளின் வைப்புமுறை ஒரு நிகழ்ச்சிக் கோவைபோல் அமைந்துள்ளது. உளவியல் பாங்கோடும் அமைந்துள்ளது.

மேற்கூறப்பட்ட களவுக்கால மெய்ப்பாடுகள் இருபத்து நான்கும் அவை போல்வன பிறவும், கற்புக்கு ஆற்றுப்படுத்தும் நிமித்தங்களாக அமைவன என்பதை,

‘**அன்ன பிறவும் அவற்றொடு சிவணி**
**மன்னிய வினையே நிமித்தம் என்ப**’

என்னும் நூற்பா வழி வெளிப்படுத்துகின்றார் தொல்காப்பியர்.

புகுமுகம் புரிதற்கண் தலைமகன் தன்னை நோக்கியபோது, தலைமகள் மறைவிடத்து ஒழிதல்போ வருவன. அவை போல்வன வாம்.

கழிபெருங் காதலால் ஆற்றாது உயிர் வருந்தும்போது மேற்கூறப்பட்ட 24 மெய்ப்பாடுகளும் கூறப்பட்ட முறைப்படியோ அனைத்துமோ நிகழாது. ஒரு சில மெய்ப்பாடுகள் விடுபடுதலும் கூடும். மறைமாறி நிகழ்தலும் கூடும்.

இதனை,

‘**வினையுயிர் மெலிவிடத்து இன்மையும் உரித்தே**’

என்னும் நூற்பாவழி வெளிப்படுத்துகின்றார் தொல்காப்பியர்.

**களவிற்கும் கற்பிற்கும் உரிய மொய்ப்பாடுகள்**

களவிற்கும் கற்பிற்கும் உரிய மெய்ப்பாடுகளாகத் தொல்காப்பியர் 28 மெய்ப்பாடுகளைக் கூறுகின்றார்; அவற்றுள் இன்பத்தை வெறுத்தல் முதல் வரும் 20 மெய்ப்பாடுகள் **மனன் அழிந்த நிலையில் தோன்றுவன;** இவற்றைப் **பெருந்திணைக்குரிய** மெய்ப்பாடுகள் என்கிறார் இளம்பூரணர்.

முட்டுவயின் கழறல் முதலாக வரும் எட்டு மெய்ப்பாடுகள் மனம் அழியாத நிலையில் தோன்றுவன!

மனம் அழிந்த நிலையில் தோன்றும்மெ ய்யபாடுகளாகப் பின்வருவனவற்றைத் தெராகுத்துரைக்கின்றது தொல்காப்பியம்.

| | |
|---|---|
| **இன்பத்தை வெறுத்தல்** | **தம்மை ஒப்பனை செய்து கொள்வதையும் நிலவு தென்றல் போல்வனவற்றையம் வெறுத்தல்.** |
| **துன்பத்துப் புலம்பல்:** | **பிரிவாற்றாமல் துன்புறும் தலைமகள் அத்துன்பம் தனக்கேயாகியது எனக்கூறிப் புலம்பல்** |
| **எதிர்பெய்து பிரிதல்:** | **தலைமகனையும் அவனுடைய தேர் முதலியனவற்றையும் தன் எதிர் கற்பித்துக் கொண்டு இரங்குதல்.** |
| **ஏதம் ஆய்தல்:** | **கூட்டத்திற்கு வரும் இடையூறுகளை ஆராய்தல்.** |
| **பசியட நிற்றல்:** | **பசி வருத்தவும் அதற்கு வருந்தாது உணவு கொள்ள மறுத்தல்.** |
| **பசலை பாய்தல்:** | **காதல் நோயால் பசலை பரத்தல்.** |
| **உண்டியிற்குறைதல்:** | **உற்றார் ஊட்டும் உண்டியை மறுப்பின் கடுப்பர்! ஐயப்படுவர் எனக்கருதிச் சிறிது உணவ கொள்ளல்** |
| **உடம்புநனி சுருங்கல்:** | **காதல் நோயாலும் உணவு கொள்ளாமையாலும் உடல் நாளுக்குநாள் மெலிதல்** |
| **கண் துயில் மறுத்தல்:** | **இரவும் பகலும் துஞ்சாமை** |
| **கனவொடு மயங்கல்:** | **அரிதினில் துயில் எய்தியபோது தலைமகனைக் கனவில் கண்டு பின்னர் அவன் மறைய மயங்கும் மயக்கம்.** |
| **பொய்யாக் கோடல்:** | **மெய்யைப் பொய்யெனக் கொள்ளல்** |
| **மெய்யே என்றல்:** | **பொய்யை மெய்யெனத் திரியக்கோடல்** |
| **ஐயம் செய்தல்:** | **தலைமகன் இப்பிறப்பில் தன்னைப் பிரியக் கூடுமோ என ஐயுறுதல்; தலைமகனின் குறிப்பைக் கண்ட ஐயுறுதலுமாம்.** |
| **அவன் தமர் உவர்த்தல்:** | **தலைவி, தலைவனின் சுற்றத்தினரைக் கண்டு மகிழ்தல்** |
| **அறனளிந்துரைத்தல்:** | **அறக்கிழவனை அன்பு செய்தல்** |
| **(அறனழித்துரைத்தல்)** | **(பேரா) அறனழிய வெறுப்பது போல வெறுத்துக் கூறுதல்.** |
| **ஆங்குநெஞ்சு அழிதல்:** | **அறனழிந்து உரைக்கும்போது நெஞ்சழிந்து கூறுதல்.** |
| **எம்மெய்யாயினும் ஒப்புமை கோல்ட** | **ஏதேனும் ஒரு பொருள் கண்டால் அதனைத் தலைமகனோடு ஒப்பிட்டுக் காணல்** |
| **ஒப்புவழி உவத்தல்:** | **ஒப்புமை கண்டவழி மகிழ்தல்** |

**உறுபெயர் கேட்டல்:** **தலைமகனின் சிறப்புகளைப் பிறர் வாய்க் கேட்டு மகிழ்தல்.**

**லக்கம்:** **மனமயக்கம்**

மனக்கட்டுப்பாடு இல்லாத நிலையில் தோன்றும் மெய்ப்பாடுகளாக இருபதினை வரையறுத்துக் கூறும் தொல்காப்பியர், மனம் அழியாத நிலையில் - கட்டுப்பட்ட நிலையில் - தோன்றும் மெய்ப்பாடுகளாக எட்டினைத் தொகுத்துரைக்கின்றார்.

**'முட்டுவயின் கழறல், முனிவுமெய் நிறுத்தல்,**
**அச்சத்தின் அகறல், அவன்புணர்வு மறுத்தல்,**
**தூதுமுனி வின்மை, துஞ்சிச் சேர்தல்**
**காதல், கைம்மிகல், கட்டுரை இன்மை என்று**
**ஆயிரு நான்கே அழிவில் கூட்டம்'**

என்பது அதற்குரிய நூற்பா.

(இந்த எட்டினையும் வரைந்தெய்தும் கூட்டத்திற்கு ஏதுவாகிய மெய்ப்பாடுகள் எனக் கூறுகின்றார் பேராசிரியர்)

**முட்டுவயின்** - **களவு இடையீடு பட்டபோது வருந்தாமல் தலைமகனைக் கழறியுரைத்தல்**

**முனிவுமெய் நிறுத்தல்** - **தலைமகள் உள்ளத்து வெறுப்பு வெளிப்பட நிற்கும் நிலைமை (பேரா) வெறுப்பினை வெளிக்காட்டாமல் மெய்யின் கண்ணே நிறுத்தல் (இளம்)**

**அச்சத்தின் அகறல்** - **தலைமகனுக்கு வரும் துன்பத்திற்கு அஞ்சி அவனைச் சந்திப்பதை விலக்கல்**
**(அல்)**
- **களவு ஒழுக்கம் பிறர்க்குப் புலனாகும் என்று அஞ்சித் தலைமகன் சந்திப்பை விலக்கல்.**

**அவன் புணர்வு மறுத்தல்** - **தலைமகன் புணர்வுக்கு உடன்படாமை;**
**(அல்)**
- **தலைமகனுடனாய புணர்வை மறுத்தல்.**

**தூது முனிவின்மை** - **புள், மேகம் போல்வனவற்றைத் தூதிரந்து பன்முறையானும் சொல்லுதல்.**
**(அல்)**
- **தலைமகன் தூது விட்ட போது அதனை வெறுக்காமை.**

**துஞ்சிச் சேர்தல்** - **வீட்டில் பொய்த் துயிலோடு மடிந்து இருத்தல்.**
**(அல்)**
- **துயரம் நீங்கி உரிமை காரணமாக உறக்கம் கொள்ளுதல்.**

**காதல் கைம்மிகல்** - **காதல் எல்லை கடந்து செல்லல்**

**கட்டுரை இன்மை** - **உள்ளக் கருத்தினை வெளிப்படுத்தாமல் இருத்தல்.**

**கற்புக்கால மெய்ப்பாடுகள்:**

**'தெய்வம் அஞ்சல், புரையறம் தெளிதல்,**
**இல்லது காய்தல், உள்ளது உவர்த்தல்,**

**புணர்ந்துழி உண்மை, பொழுதுமறுப் பாக்கம்,**

**அருள்மிக உடைமை, அன்புதொக நிற்றல்,**

**பிரிவு ஆற்றாமை, மறைந்தவை உரைத்தல்,**

**புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇச்**

**சிறந்த பத்தும் செப்பிய பொருளே'**

என்பன தொல்காப்பியர் கூறும் கற்புக்கால மெய்ப்பாடுகள்.

| | | |
|---|---|---|
| **தெய்வம்அஞ்சல்** | - | **தெய்வத்தால் ஏதேனும் தீங்கு விளையுமோ என அஞ்சுதல்** |
| **புரையறம் தெளிதல்** | - | **தனக் உரிய இல்லறமன் இன்னது என்பதைத் தலைமகள்தெளிதல்** |
| **இல்லது காய்தல்** | - | **தலைமகனிடம் இல்லாத தவற்றை அவனிடம் இருப்பதாக ஏற்றிச் சினத்தல்.** |
| **உள்ளது உவர்த்தல்** | - | **தலைவன் தன்னிடம் மிகுந்த அன்புடையனாய் இருப்பினும் அதனை உண்மை என்று தெளியாமல் அருவருத்தல்.** |
| **புணர்ந்துழி உண்மை** | - | **ஊடல் இருப்பினும், தலைவனுடன் புணரக் கருதும் உள்ளத்தின் தன்மை.** |
| **பொழுது மறுப்பாக்கம்** | - | **பொழுதினை மறுத்தலாகிய மன நிகழ்வு.** |
| **அருள்மிக உடைமை** | - | **அருள்மிகத் தோன்றிய நெஞ்சினள் ஆதல்** |
| **அன்பு தொகை நிற்றல்** | - | **தலைவனிடத்துத் தன் அன்பு மிக்கு மையப்பட்டு நிற்றல்** |
| **பிரிவாற்றாமை** | - | **பிரிவினைப் பொறுத்துக் ெ காள்ளாத தன்மை** |
| **மறைந்தவை உரைத்தல்** | - | **களவுக்கால நிகழ்ச்சிகளை உரைத்தல்** |
| **புறஞ்சொல் மாணாக்கிழவி** | - | **தலைமகனைப் பற்றி வரும் புறஞ்சொற்கள் பற்றி எழும் சொற்கள்** |

இவ்வாறு பதினொன்றாகக் காண்பது பேராசிரியர் போக்கு

இளம்பூரணர் இறுதி இரண்டையும் ஒன்றாக்கிப் பத்தென்றே கொள்கிறார்.

இக்கற்புக்கால மெய்ப்பாடுகளை 'அழிவில் கூட்டம் நிகழ்ந்த பின்னர் வருவதற்குரிய மெய்ப்பாடுகள்' என்கிறார் பேராசிரியர்.

**தலைமக்களுக்குரிய ஒப்புமைப் பண்புகள்:**

அறம் பொருள் இன்பங்களில் வழுவாமல் வாழும் உயர் நெறியே இல்லற நெறி. அந்த இல்லற நெறி எல்லாராலும் போற்றப்படும் செம்மை நெறியாக வேண்டுமானாலும், தலைமக்களிடை நில வேண்டியப ண்புகள் இவை இவை எனவும், இருக்கவேண்டாத பண்புகள் இவை இவை எனவும் வரையறுத்துத் தருகின்றது தொல்காப்பியம்.

**'குடிமை பிறப்பே ஆண்மை ஆண்டோடு**

**உரு நிறுத்த காம வாயில்**

**நிறையே அருளே உணர்வொடு திருவென**

**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே'**

என்பது, இருவரிடையே அமையவேண்டிய ஒப்புமைப் பண்புகளைச் சுட்டும் நூற்பா.

| | | |
|---|---|---|
| **குடிமை** | - | **தோன்றிய குடி நிலை** |
| **பிறப்பு** | - | **குடிக்குத் தக ஒழுகும் ஒழுக்கம்** |
| | - | |
| **ஆண்மை** | - | **வினை ஆளும் தன்மை** |
| **ஆண்டு** | - | **வயது** |
| **உருவம்** | - | **வடிவம்** |
| **நிறுத்த காம வாயில்** | - | **நிலைத்த காதல்** |
| **நிறை** | - | **மன அடக்கம்** |
| **அருள்** | - | **பரிவுணர்வு** |
| **உணர்வு** | - | **அறிவு** |
| **திரு** | - | **செல்வம்** |

நாள், கோள் சாதி போன்ற பொருத்தங்கள் தலைமக்களுக்கு அமையவேண்டும் எனக் கூறாமல், இத்தகைய பத்து ஒப்புமைகளைக் கூறுவது பண்பட்ட தமிழன வாழ்க்கை முறையை - எதிர் பார்ப்பையே காட்டுகின்றது.

இந்தப் பத்து ஒப்புமைகளை மெய்ப்பாட்டியலில் கூறவேண்டிய காரணம் யாது?

உயர்ந்த பண்புகளை உடைய தலைமக்களிடந்தான் மெய்ப்பாடுகள் சிறந்து விளங்கும் என்பது கருதியே இவை இங்கே கூறப்பட்டன.

**‘நிம்பரி கொடுமை, வியப்பொடு, புறமொழி,**
**வன்சொல், பொச்சாப்பு, மடிமையொடு, குடிமை**
**இன்புறல், ஏழைமை, மறப்போடு, ஒப்புமை**
**என்றிவை இன்மை என்மனார் புலவர்’**

என்னும் நூற்பா தலைமக்களுக்கு வேண்டாத பண்புகள் இவை இவை எனப் பட்டியலிட்டுக் காட்டுகின்றது.

| | | |
|---|---|---|
| **நிம்பிரி** | - | **பொறாமை** |
| **கொடுமை** | - | **கேடு சூழ நினையும் தீயுள்ளம்** |
| **வியப்பு** | - | **தன்னை வியத்தல்** |
| **புறமொழி** | - | **புறங்கூற்று (கோள் சொல்லல்)** |
| **வன்சொல்** | - | **வருத்தமூட்டுங் கடுஞ்சொல்** |
| **பொச்சாப்பு** | - | **கடைப்பிடி இன்றி நெகிழ்தல்** |
| **மடிமை** | - | **சோம்பல்** |
| **குடிமை இன்புறல்** | - | **தன் குடியுயர்வை எண்ணி மகிழ்தல்** |
| **ஏழைமை** | - | **பேதைமை** |

| | | |
|---|---|---|
| **மறப்பு** | - | **மறதி** |
| **ஒப்புமை** | - | **ஒருவரைப் புறத்தாரோடு ஒப்பு நோக்குவது** |

இப்பண்புகள் இல்லாரிடத்தே மெய்ப்பாடுகள்ஒளிவு மறைவு இல்லாமல் வெளிப்படுமாகலான் இவற்றை இங்குக் கூறினார்.

'கண்ணினாலும் செவியினாலும் எதையும் தெளிவாக நுகரவல்ல ஆற்றல் உடையார்க்கே மெய்ப்பாடு தெளிவாகப் புலனாகும்; மற்றவர்க்கு அரிதாம். இதனை,

**'கண்ணினாலும் செவியினும் நுண்ணிதின் உணரும்**
**உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்**
**நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே**

என்னும் நூற்பா வெளிப்படுத்துகின்றது.

**வினாக்கள்**

1. மெய்ப்பாடு பொருள் விளக்கம் தருக.
2. மெய்ப்பாட்டைத் தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகக் கொண்டது ஏன்?
3. 'நாலிரண்டாகும் பாலுமா ருண்டே' – விளக்குக.
4. 'வினையுயிர் மெலிவிடத்து இன்மையும் உரித்தே' – விளக்குக.
5. 'ஆயிரு நான்கே அழிவில் கூட்டம்' – எவை?
6. 'சிறந்த பத்தும் செப்பிய பொருளே' – எவை?
7. தலைமக்களுக்குரிய ஒப்புமைப் பண்புகள் யாவை?
8. தலைமக்களிடம் இருக்கக்கூடாத பண்புகளாகத் தொல்காப்பியர் கூறுவன யாவை?
9. மனம் அழிந்த நிலையில் தலைமகளிடம் தோன்றம் மெய்ப்பாடுகளாகத் தொல்காப்பியர் கூறுவன யாவை?
10. மெய்ப்பாட்டியலின் அமைப்புமுறை நுட்பத்தை விளக்குக.
11. எண்வகை மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான நிலைக்களன்களை விளக்குக.
12. அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாக வரும் மெய்ப்பாடுகளை விளக்குக.
13. காட்சி தொடங்கிப் புணர்ச்சி முடிய உள்ள மெய்ப்பாடுகளை விளக்குக.
14. புணர்ச்சி முதல் களவு வெளிப்படும்வரை உள்ள மெய்ப்பாடுகளை விளக்குக.
15. களவுக் கால மெய்ப்பாடுகளை விளக்குக.
16. களவிற்கும் கற்பிற்கும் உரிய மெய்ப்பாடுகளாகத் தொல்காப்பியர் கூறுவன யாவை?

# அலகு - 4

# உவமையியல்

இரண்டு பொருள்களிடையே காணும் ஒப்புடைய கூறுகளை ஒப்பிட்டுக் காண்பது உவமை.

உவமை என்பது ‘உபமா’ என்னும் வடமொழிச் சொல்லின் திரிபு என்பர்; இது பொருந்தாக் கூற்று.

ஒப்புமை என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபே உவமை என்பது.

**வினைபயன் மெய்உரு என்ற நான்கே**

**வகைபெற வ்த உவமத் தோற்றம்**

என வரும் உவமவியலின் முதல் நூற்பா வெளிப்படுத்துகின்றது.

**வினை உவமம்:**

உவமையிலும் பொருளிலும் அமையும் பொதுத் தன்மை

வினை அடிப்படையில் அமையம் உவமம்.

**புலி போலப் பாய்ந்தான்.**

**பயன் உவமம்:**

உவமையினும் பொருளிலும் அமையும் பொதுத்தன்மை நன்மை தீமை போன்ற பயன்களின் அடிப்படையில் அமையம் உவமம்.

**மாரி அன்ன வண்கை**

**மெய் உவமம்:**

உவமையிலும் பொருளிலும் அமையும் பொதுத்தன்மை அளவு வடிவு போல்வனவற்றின் அடிப்படையில் அமையும் உவமம்.

**துடி இடை**

**உரு உவமம்:**

உவமையிலும் பொருளிலும் அமையும் பொதுத்தன்மை நிறம், பண்பு போல்வனவற்றின் அடிப்படையில் அமையும் உவமம்.

**பொன் மேனி**

எல்லா வகை உவமங்களும் இந்த நான்கு வகைக்களுக்குள்ளே அடங்கிவிடும் என்பது தொல்காப்பியர் துணிபு.

நான்குவகை உவமக் பாகுபாட்டுள், ஓர் உவமத்துள் ஒன்று மட்டும் இடம் பெறுவதே பெரு வழக்கு.

அருகிய வழக்காக, ஒரே உவமத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட உவம வகைகள் வருவதும் உண்டு. சான்றாக,

**‘இலங்கு பிறை அன்ன விளங்குவால் வை எயிறு’**

என்பதைக் கொள்ளலாம்.

இதில், பிறையின் வெண்மை நிறம் பல்லுக்கும், பிறையின் நுனியிலுள்ள கூர்மை பல்லின் கூர்மைக்கும் உவமைகளாக வந்து உள்ளன.

**முன்னது, நிறம் பற்றியது; அதாவது, உரு உவமம்,**

**பின்னது வடிவம் பற்றியது; அதாவது, மெய் உவமம்,**

இவ்வாறு, ஒரே உவமத்தில் ஒன்றிற்கும் மேற்பட்ட உவம வகைகள் வருவதை,

**‘விரவியும் வரூஉம் மரபின என்ப’**

என்னும் நூற்பா ஏற்றுரைக்கின்றது.

**உவமையின் நிலைக்களன்கள்:**

**‘சிறப்பே நலனே காதல் வலியொடு**
**அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப’**

**‘கிழக்கிடு பொருளோ டைந்தும் ஆகும்’**

என்பன, உவமையின் நிலைக்களன்களைச் சுட்டும் நூற்பாக்கள்.

அதாவது, சிறப்பு, நலன், காதல், வலி, கிழக்கிடு பொருள் என்னும் ஐந்தினையும் நிலைக்களன்களாக - அடிப்படைகளாகக் கொண்டு உவமைகள் தோன்றும் என்பது தொல்காப்பியம்.

சிறப்பு என்பது, உலகத்து இயல்பு வகையான் அல்லாமல், விகாரவகையான் பெறும் சிறப்பு; அதாவது, மதிப்பிற்குரிய, ஆனால் மிக அருகித் தோன்றும் நிகழ்ச்சிகள்.

**உவம உருபுகள்:**

**அவைதாம்**
**அன்ன ஏய்ப்பு உறழ ஒப்ப**
**என்ன மான என்றவை எனாஅ**
**ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க**
**என்ற விபப்ப என்றவை எனாஅ**
**எள்ள விழைய விறப்ப நிகர்ப்ப**
**கள்ள கடுப்ப ஆங்கவை எனாஅ**
**காய்ப்ப மதிப்ப தகைய மருள**
**மாற்ற மறுப்ப ஆங்கவை எனாஅ**
**புல்ல பொருவ பொற்ப போல**
**வெல்ல வீழ ஆங்கவை எனாஅ**
**நாட நளிய நடுங்க நந்த**
**ஓட புரைய என்றவை எனாஅ**
**ஆறா றுவமையும் அன்னவை பிறவும்**
**கூறும் காலைப் பல்குறிப் பினவே.**

இங்கு உரைக்கப்பட்டுள்ள இவை முப்பத்தாறு சொற்களும், இவைகளைப் போன்ற பிறவும், வழக்கிடத்திலும் செய்யுளிடத்திலும் வேறுபாடு குறிப்பனவாகி வருகின்ற உவமச் சொற்களாம்.

**வினையுவம உருபுகள்:**

**அன்ன ஆங்க மான இறப்ப**
**என்ன உறழத் தகைய நோக்கொடு**
**கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம்.**

அன்ன, ஆங்க மான, இறப்ப, என்ன, உறழ, தகைய நோக்கு என்று கருதப்பட்ட எட்டுச் சொற்களும் நியுைவமத்திற்குரிய சொற்களாம்.

**‘அன்ன’ என்னும் உருபு**

**அன்னவென் கிளவி பிறவொடுஞ் சிவணும்**

அவற்றுள், ‘அன்ன’ என்னுஞ் சொல், ஒழிந்த பொருளோடும் பொருந்தும்.

**பயனுவம உருபுகள்**

**எள்ள விழையப் புல்லப் பொருவக்**

**கள்ள மதிப்ப வெல்ல வீழ**

**என்றாங் கெட்டே பயனிலை உவமம்.**

எள்ள, விழைய, புல்ல, பொருவ, கள்ள, மதிப்பு, வெல்ல, வீழ என்னும் எட்டும் பயனிலை உவமைக்குச் சொற்களாம்.

**“எழிலி வானம் எள்ளினன் தரூஉம்**

**கவிகை வண்கைக் கடுமான் தோன்றல்”**

என ‘**எள்ள**’ வரும். பிறவும் வருமாறு காண்க.

**மெய்யுவம உருபுகள்**

**கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய**

**ஒட்ட ஒடுங்க ஓட்ட நிகர்ப்ப வென்று**

**அப்பா லெட்டே மெய்ப்பா லுவமம்.**

கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய, ஓட்ட, ஒடுங்க, ஒட்ட, நிகர்ப்ப என்று கூறப்படும் எட்டும் மெய்யுவமத்திற்குரிய சொற்களாம்.

**“விண்ணதி ரிமிழிசை கடுப்ப”**

எனக் ‘**கடுப்ப**’ வரும். பிறவும் வருமாறு காண்க.

**உருபுவம உருபுகள்**

**போல மறுப்ப ஒப்பக் காய்த்த**

**நேர வியப்ப நளிய நந்தவென்**

**றொத்துவரு கிளவி யுருவி னுவமம்.**

போல, மறுப்ப, ஒப்ப, காய்த்த, நேர, விளப்ப, நளிய, நந்த என்று வருகின்ற சொற்கள் எட்டும், உருபு உவமத்திற்கு உரிய சொற்களாம்.

**“தன்சொ லுணர்ந்தோர் மேனி**

**பொன்போற் செய்யும் ஊர்கிழ வோனே”**

எனப் ‘**போல**’ வரும் . பிறவும் வருமாறு காண்க.

**பொருள் மரபு**

**தத்தம் மரபில் தோன்றுமன் பொருளே**

மேற்பகுத்துணர்த்தப்பட்ட சொற்கள், கூறியவாற்றால் அல்லாமல், தத்தம் மரபில் தோன்றும் பொருளும் உளவாம்.

**உவமையை உணர்தல்**

**நாலிரண் டாகும் பாலுமா ருண்டே**

மேற் சொல்லப்பட்ட உவமை, நான்குவகை யாதலேயல்லாமல், எட்டாகின்ற பக்கமும் உண்டு.

**பெருமையும் சிறுமையும் மெய்ப்பா டெட்டன்**

**வழிமருங் கறியத் தோன்று மென்ப.**

பெருமை பற்றியம் சிறுமைபற்றியும் ஒப்புமை கொள்ளப்படும் உவமை, மேற்கூறிய மெய்ப்பாடு எட்டின்வழிப் பக்கம் புலப்படத் தோன்றுமென்று கூறுவர் புலவர்.

**உவமமும் பொருளும்**

**உவமப் பொருளின் உற்ற துணரும்**
**தெளிமருங் குளவே திறத்திய லான.**

உவமப் பொருளாலே சொல்லுவான் குறிக்கப்பட்ட பொருளை உணருந் தெளியும் பக்கமும் கூறுபாட்டியலான் உள்ளதாம்.

**உவமப் பொருளை உணருங் காலை**
**மருவிய மரபின் வழக்கொடு வருமே.**

உவமப் பொருளை உவமிக்கப்படும் பொருளாக உணரும் போது, பொருந்திய மரபினால் ஆகிய வழக்கோடு வரும்.

**இரட்டைக் கிளவியும் இரட்டை வழித்தே**

இரட்டைக் கிளவியாவது, உவமை இரண்டு சொல்லோடு அடுத்து வருவதனோடு, உவமிக்கப்படும் பொருளும் இரண்டு பொருளாகி வருதல் வேண்டும்.

**உள்ளுறை உவமம்**

**பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி**
**முன்ன மரபிற் கூறுங் காலைத்**
**துணிவொடு வரூஉம் துணிவினோர் கொளினே.**

உவமைப்பொருள் தானல்லாதபடியினால் உவமைப்பெ பாருளோடு படாது, பொருள் தோன்றிய இடத்தோடு நோக்கி, முன்ன மரபினால், சொல்லுயங்காலத்துத் துணிவுடையோர் கொளின், அவர் துணிந்த துணிபின்கண்ணே உள்ளுறை உவமை வரும்.

**உவமப் போலி ஐந்தென மொழிப**
**உவமப் போலி ஐந்து என்று கூறுவர்.**

**தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின்**
**வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்**
**பிறப்பினும் வரூஉம் திறத்த வென்க.**

கெடுதற்கரிய சிறப்பினையுடைய அதன் தன்மையை ஆராங்ந்தால், வினை, பயன், மெய், உரு என்னும் நான்கினாலும், பிறப்பினாலும் வருந்தன்மையை உடையன என்க.

**கிழவி சொல்லின் அவளறி கிளவி.**

உவமைப் பொருளைத் தலைமகள் கூறில், அவளறிந்த பொருட்கண்ணே உவமை கூறப்படும். எனவே தானறியாத பொருட்கண் கூறினாளாகச் செய்யுள் செய்தல்இல்லை.

**தோழிக் காயின் நிலம்பெயர்ந் துரையாது.**

தோழி உவமை சொல்லின், அந்நிலத்தில் உள்ளன அல்லாமல் பிறநில்தில் உள்ளவைகளைக் கூறப் பெறாள்.

**கிழவோற் காயின் உரனொடு கிளக்கும்.**

தலைவன் உவமை கூறுவானாயின், அறிவோடு கூறப்பெறும்.

**ஏனோர்க் கெல்லாம் இடம்வரை வின்றே.**

மேற்சொல்லப்பட்ட மூவரும் அல்லாத நற்றாய் செவிலி முதலாயினார்க்கு உவமை கூறுமிடம் வரையறுக்கப்படாது.

**உள்ளுறையுவமக் கூற்றுக்கள்**

**இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்**

**உவம மருங்கில் தோன்றும் என்ப**

மகிழ்ச்சியளிக்கும் கூற்றும், புலவி பயக்குங் கூற்றும் உவமப் பக்கத்தால் தோன்றும் என்பார்கள்.

**தலைமகள் கூற்றிற்குரிய இடம்**

**கிழவோட் குவமை ஈரிடத் துரித்தே**

தலைமகள் உவமை கூறுங்கால், மேற்சொல்லப்பட்ட இரண்டிடத்தும் உரித்தாம்; எனவே. இரண்டும் அல்லாவிடத்து உவமை கூறப்பெறாள் என்பதாம்.

**கிழவோற் காயின் இடம்வரை வின்றே**

தலைமகன் உவமை கூறுதல் எப்பொருட்கண்ணும் ஆகும்.

**தோழியுஞ் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்**

**கூறுதற் குரியர் கொள்வழி யான.**

தோழியுஞ் செவிலியும் உவமை கூறுங்கால், கேட்டோர் கொள்ளும் வகையாற், பொருந்துமிடம் பார்த்துக் கூறுதற்குரியர்.

**புறனடை**

**வேறுபட வந்த உவமைத் தோற்றம்**

**கூடிய மருங்கிற் கொள்வழிக் கொளா அல்**

இங்கு எடுத்தோதப்பட்ட இலக்கணத்தில் வேறுபட்டு வந்த உவமைத் தோற்றம், எடுத்தோதிய நெறியில் கொள்ளும் வழிக் கொள்க.

**ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே.**

உவமையை உவமிக்கப்படும் பொருளினின்று நீக்கிக் கூறுதலும் பொருந்திய இயல்பாகும்.

**உவமைத் தன்மையும் உரித்தென மொழிப**

**பயனிலை புரிந்த வழக்கத் தான.**

உவமிக்கப்படும் பொருளோடு உவமை தோன்ற வருதலேயல்லாமல், உவமையது தன்மை கூறுதலும், பயனிலை பொருந்திய வழக்கின்கண் உரியதாம்.

**தடுமாறு வரலுங் கடிவரை வின்றே.**

உவமைக்கண் தடுமாறுதல் வருதலும் விலக்கப்பட மாட்டாது. தடுமாறுதலாவது, ஐயமுறுதல்; எனவே, ஐயநிலை யுவமும் கண்டுகொள்க.

**அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே**

**நிரனிறுத் தமைத்தல் நிரனிறை சுண்ணம்**

**வரன்முறை வந்த மூன்றலங் கடையே.**

உவமை பலஅு டுக்கித் தோற்றுதல், ஒரு பொருளோடு தோற்றம் தொடரையுடையதாகப் பலஉவமை வருதல், வரிசை வரிசையாக அமைத்தல், உவமையையும் பொருளையும் துணித்து ஒட்டுதல் என்பவற்றுள், ஆமென்று வரையறுக்கப்பட்ட நிரல் நிறுத்தமைத்தல் முதலிய மூன்றும்அல்லாதவிடத்து, அடுக்கியல் உவமை கடியப்படும்.

**வினாக்கள்**

1. ‘உவமம் அணி அன்று; பொருள் புலப்பாட்டு நெறியே. என்பதற்குப் பேராசிரியர் கூறும் காரணங்கள் யாவை?
2. உவமத் தின் உறுப்புகளை விளக்கு.
3. உவமத் தின் வகைகளை விளக்கு.
4. ‘விரவியும் வரூஉம் மரபின என்ப’ - விளக்குக.
5. உவமையின் நிலைக்களன்கள் யாவை? விளக்குக.
6. ‘தத்தம் மரபில் தோன்றுமன் பொருளே’ - விளக்குக.
7. ‘நாலிரண் டாகும் பாலுமா ருண்டே’ - விளக்குக.
8. ‘இரட்டைக் கிளவி இரட்டை வழித்தே’ - விளக்குக.
9. உவமப் போலி என்றால் என்ன?
10. அகத்திணை மாந்தர்கள் உவமைபோலி உரைப்பதில் உள்ள வரையறைகள் யாவை?
11. பின்வரும் உவம வகைகளை விளக்குக.
    - சுட்டிக் கூறா உவமம்
    - ஓரீஇக் கூறுவமம்
    - தடுமாறுவமம்
    - அடுக்கிய தோற்ற உவமம்
    - வேறுபட வந்த உவமம்
12. உவமவியலின் அமைப்பு முறை நுட்பத்தை விளக்குக.
13. உவமப் போலியின் வகைகளைத் தக்க சான்றுகளுடன் விளக்குக.
14. உவம உருபுக்ள பற்றித் தொல்காப்பியர் தரும் வரையறைகளைத் தெளிவு செய்க.
15. தொல்காப்பியர் கூறும் உவம அமைப்புகளை விளக்கு
16. உவமைப் பொருள் தொடர்பு பற்றித் தொல்காப்பியம் கூறுவனவற்றைத் தொகுத்துக் கூறுக.

## அலகு - 5

# மரபியல்

மரபு என்பதற்குச் சான்றோர் சொல் வழக்கு, பரம்பரை, பழைமை, முறைமை, வழிமுறை போன்ற பொருள்கள் வழங்கப்படுகின்றன.

இப்பொருள்கள் எல்லாம் ஏதேனும் ஒன்று தொடர்ந்து வருவதை உள்ளடக்கியனவாக உள்ளன.

இலக்கிய உலகில் / இலக்கண உலகில் மரபு என்பது உயர்ந்தவர்களால் ஏதேனும் ஒன்று வழிவழியாக வழங்கப்பட்டு வருதலைச் சுட்டும்.

'வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே'

**உயிரினப் பாகுபாட்டு மரபு:**

உயிரினப் பாகுபாட்டிற்கான அளவுகோல் புலன்களின் எண்ணிக்கை: இது பழந்தமிழ் மரபு.

இவ்வகையில் உயிரினங்களை, ஓரறிவு உயிர்கள் முதல் ஆறறிவு உயிர்கள் வரை, ஆறாகப் பகுத்து அறிவு பெற முயன்றுள்ளனர்.

**'ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**
**இரண்டறி வதுவே அதனொடு நாவே**
**மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே**
**ஆறறி வதுவே அவற்றொடு மனனே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே'**

என்பது உயிரினங்களைப் புலன்களின் எண்ணிக்கை அடிப்படையில் வகைப்படுத்தும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஓரறிவு உயிர் | மெய் | உற்றறிதல் (தொடு உணர்வு) |
| 2 | ஈரறிவு உயிர் | மெய்வாய் | உற்றறிதல், சுவை அறிதல் |
| 3 | மூவறிவு உயிர் | மெய் வாய், மூக்கு | உற்றறிதல், சுவை அறிதல், மணம் உணர்தல் |
| 4 | நான்கறிவு உயிர் | மெய் வாய், மூக்கு, கண் | உற்றறிதல், சுவை அறிதல், மணம் அறிதல், காட்சி |
| 5 | ஐந்தறிவு உயிர் | மெய்வாய், மூக்கு, கண், காது | உற்றறிதல், சுவை அறிதல், மணம் அறிதல், காட்சி , கேள்வி |
| 6 | ஆறறிவு உயிர் | மெய்வாய், மூக்கு, கண், காது, மனம் | உற்றறிதல், சுவை அறிதல், மணம் அறிதல், காட்சி , கேள்வி, பகுத்தறிதல் |

**வகைப்பாடும் உயிர்களும்:**

உயிர்களை ஆறாக வகைப்படுத்திக் கூறிய தொல்காப்பியர் ஒவ்வோர் உயிரினத்திற்கும் இரண்டிரண்டு எடுத்தக் காட்டுகளைத் தந்து, அவை போல்வன பிறவும் உள எனக் கூறியுள்ளார்.

அவர் கூற்றை வெளிப்படுத்தும் நூற்பாக்கள் வருமாறு:

**'புல்லும் மரனும் ஓரறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'**

**'நந்தும் முரளும் ஈரறி வினவே**

**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே’**

**‘சிதலும் எறும்பும் மூவறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே’**

**‘நண்டும் தும்பியும் நான்கறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே’**

**‘மாவும் மாக்களும் ஐயறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே’**

**‘மக்கள் தாமே ஆறறி வுயிரே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே’**

இந்நூற்பாக்களின் கருத்துக்களையும், ‘பிற’ என்பதற்குப் பேராசிரியர் தரும் கருத்துகளையும் பின்வருமாறு அட்டவணைப் படுத்தலாம்:

| | | | |
|---|---|---|---|
| 1 | ஓரறிவு உயிர் | புல், மரம் | புதல், கொடி, எலும்பில் புழு, மக்களும் விலங்கும் என்ற குழவி ஓரறிவினவாகிய பருவம். |
| 2 | ஈரறிவு உயிர் | நந்து, முரள் | கிளிஞ்சல், முற்றிலும் (மட்டிச் சுண்ணாம்பு) மக்களும் விலங்கும் ஈன்ற குழவி ஈரறிவினவாகிய பருவம். |
| 3 | மூவறிவு உயிர் | சிதல், எறும்பு | ஈயென் மூதாய், மக்கட்குழவியும் விலங்கின் குழவியும் மூவறிவினவாகிய பருவம். |
| 4 | நான்கறிவு உயிர் | நண்டு, தும்பி | வண்டு, தேனீ, குழவி மக்கட்குழவியும் விலங்கின் குழவியும் நான் கறிவினவாகிய பருவம். |
| 5 | ஐந்தறிவு உயிர் | விலங்கு, பறவை | எண்கால் வருடை, குரங்கு, கிளி, பாம்பு |
| 6 | ஆறறிவு உயிர் | மக்கள் | குரங்கு முதலியனவற்றில் மன உணர்வு உடையவை. |

**ஓரறிவு உயிர்கள்**

மரம், செடி போன்றவற்றிற்கும் உயிருண்டு என அன்றே கூறியமை கருதத்தக்கதாகும்.

ஓரறிவு உயிர்களை இரண்டாகப் பகுத்துக் காணுகின்றார் தொல்காப்பியர்.

ஓரறிவு உயிர்களில் வெளியே வயிரம் (சதைப்பற்று) உடையனவாய் உள்ளே வயிரம் அற்றனவாய் உள்ளனவற்றைப் புறக்காழன அல்லது **‘புல்’** என்பர்.

**‘புறக்கா ழனவே புல்லெனமொழிப’**

என்பது தொல்காப்பியர் கூற்று

கமுகு, தென்னை, பனை, மூங்கில் போன்றவை இவ்வகையின.

அதே போல், ஓரறிவு உயிர்களில், உள்ளே வயிரம் உடையனவாய் வெளியே வயிரம் அற்றனவாய் உள்ளனவற்றை அகக்காழன அல்லது **‘மரம்’** என்பர்.

**‘அகக்கா ழனவே மரமென மொழிப’**

என்பது தொல்காப்பியர் கூற்று.

இருப்பை, புளி. ஆச்சா, மா போன்றவை இவ்வகையின.

இடையிடையே பொய்ப்பட்டு விளங்கும் அகில் போல்வனவும், பிடா, காயா முதலிய புதல்களும் இவ்வகையுள் அடங்கும் என்கிறார் பேராசிரியர்.

**புல்லின் உறுப்புகள்:**

புல்லின் உறுப்புகளாக இதழ், ஈர்க்கு, ஏடு, ஓலை, குலை, தோடு, பாளை, மடல் என்பனவற்றைத் தொல்காப்பியம் கூறுகின்றது.

இவற்றோடு குரும்பை, நுங்கு, நுகும்பு, போந்தை
முதலியனவற்றையும் புல்லின் உறுப்புகளாக் கொள்ளலாம் என்கிறார் பேராசிரியர்.

**மரத்தின் உறுப்புகள்:**

அரும்பு, இலை, குழை, கோடு, சினை, தளிர், நவை, பூ, முறி முதலியனவற்றை மரத்தின் உறுப்புகளாகக் கூறுகின்றது தொல்காப்பியம்.

**இரண்டிற்கும் பொதுவான உறுப்புகள்:**

புல், மரம் ஆகிய இரு வகைக்கும் பொதுவான உறுப்புகளாக் காய், பழம், தோல், செதிள், வீழ் ஆகியனவற்றை வரையறுக்கின்றார் தொல்காப்பியர்.

**இளமைப் பெயர்கள்:**

தொல்காப்பியம் மரபியலில் பதினொரு இளமைப் பெயர்களை முதற்கண் தொகுத்து வழங்குகின்றது.

**‘பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்**
**கன்றும் பிள்ளையும் மகவும் என்று**
**ஒன்பது குழவியோ(டு) இளமைப் பெயரே’**

என்பது அந்நூற்பா.

பின்னர் இன்னின்ன உயிரினங்களின் இனையனவற்றிற்கு இன்னின்ன இளமைப் பெயர்கள் உரியன என்னும் மரபை வரையறுத்துத் தருகின்றது. இவ்வரையறைகள் மொத்தம் 21 நூற்பாக்களில் இடம் பெற்றுள்ளன.

**ஆண்பாற் பெயர்கள்**

**‘களிறு’**

**வேழக் குரித்தே விதந்துகளி றென்றல்.**

‘களிறு’ என்று சிறப்பித்துக் கூறுதல் யானைக்கு உரியது.

**கேழற் கண்ணும் கடிவரை யின்றே.**

பன்றியின் கண்ணும் ஆண்பாலைக் களிறென்றல் விலக்கப்படாது.

**‘ஒருத்தல்’**

**புல்வாய் புலியுழை மரையே கவரி**
**சொல்லிய கராமோ டொருத்தல் ஒன்றும்.**

புல்வாய், புலி, உழை, மரை, கவரி, சொல்லப்பட்ட கராம் இவைகளின் ஆண், **‘ஒருத்தல்’** என்னும் பெயரைப் பெறும்.

**வார்கோட் டியானையும் பன்றியும் அன்ன**

நீண்ட கொம்புடைய யானையும் பன்றியும் **‘ஒருத்தல்’** என்னும் பெயரைப் பெறுவனவாம்.

**ஏற்புடைத் தென்ப எருமைக் கண்ணும்**

எருமையின் ஆணினையும் '**ஒருத்தல்**' என்று உரைத்தல் ஏற்புடையதே என்று கூறுவர்.

**'ஏறு'**

**பன்றி புல்வாய் உழையே கவரி**

**என்றிவை நான்கும் ஏறெனற் குரிய.**

பன்றி, புல்வாய், உழை, கவரி என்னும் இவை நான்கின் ஆணும், '**ஏறு**' என்று கூறுவதற்கு ரியனவாம்.

**எருமையும் மரையும் பெற்றமும் அன்ன**

எருமையும் மரையும் பெற்றமும் '**ஏறு**' என்று கூறற்கு உரியன.

**கடல்வாழ் சுறவும் ஏறெனப் படுமே.**

கடலிலே வாழுஞ் சுறாவின் ஆணும், '**ஏறு**' என்று கூறப்படும்.

**'போத்து'**

**பெற்றம் எருமை புலிமரை புல்வாய்**

**மற்றிவை யெல்லாம் போத்தெனப் படுமே.**

பெற்றம், எருமை, புலி, மரை, மான் ஆகிய ஐந்தின் ஆணும், '**போத்து**' என்று கூறப்படும்.

**நீர்வாழ் சாதியும் அது பெறற் குரிய.**

நீர் வாழ் உயிர்களுள் முதலை முதலியவற்றின் ஆணும், '**போத்து**' என்னும் பெயரைப் பெறுவதற்கு உரியன.

**மயிலும் எழாஅலும் பயிலத் தோன்றும்.**

மயிலுள்ளும் எழாலுள்ளும் ஆணினைப் போத்தென்றல் பெரும்பான்மையாகும்.

**'இரலை, கலை'**

**இரலையுங் கலையும் புல்வாய்க் குரிய.**

'**இரலை**' என்னும் பெயரும், '**கலை**' என்னும் பெயரும் மானின் ஆண்பாற்கு உரியனவாம்.

**கலையென் காட்சி உழைக்கும் உரித்தே**

**நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்.**

'**கலை**' என்னும் பெயர் உழைக்கும் முசுவிற்கும் உரியதாம்.

**'மோத்தை' 'தகர்' 'உதள்' 'அப்பர்'**

**மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்**

**யாத்த என்ப யாட்டின் கண்ணே.**

'**மோத்தை**' '**தகர்**' '**உதள்**' '**அப்பர்**' என்னும் பெயர்கள் யாட்டின் ஆண்பாலுக்கும் உரியனவாம்.

**'சேவல்'**

**சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்**

**மாயிருந் தூவி மயிலலங் கடையே.**

அழகிய பெரிய தூவிகளையுடைய மயில் அல்லாத பிற பறவைகளின் ஆண்பெயர் '**சேவல்**' என்று கூறப் பெறும்.

**'ஏற்றை'**

**ஆற்றலொடு புணர்ந்து ஆண்பாற் கெல்லாம்**

**ஏற்றைக் கிளவி உரித்தென மொழிப.**

ஆற்றல் பொருந்திய ஆண்பால்களுக்கெல்லாம் ‘**ஏற்றை**’ என்று கூறதுஞ் சொல் உரியதென்றும் கூறுவர்.

**‘முடிபு’**

**ஆண்பால் எல்லாம் ஆணெனற் குரிய**

**பெண்பால் எல்லாம் பெண்ணெனற் குரிய**

**காண்ப வவையவை அப்பா லான.**

ஆண்பால் உயிர் எல்லாம் ‘**ஆண்**’ என்னும் பெயர் பெறும்; பெண்பால் உயிரெல்லாம் ‘**பெண்**’ என்னும் பெயர் பெறும்; அவ்விருவகைக்கும் அறிகுறி, காண்டல் ஆகிய தன்மையே யாம்.

**பெண்பாற் பெயர்கள்**

**‘பிடி’**

‘**பிடி**’ என்னும் பெண் பெயர், பெண் யானையைக் குறிக்கும்.

**‘பெட்டை’**

**ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை**

**பெட்டை யென்னும் பெயர்க்கொடைக் குரிய**

ஒட்டகம், குதிரை, கழுதை, மரை இவை நான்கின் பெண்ணும், ‘**பெட்டை**’ என்னும் பெயரைப் பெறும்.

**புள்ளும் உரிய அப்பெயர்க் கென்ப.**

பெட்டையென்னும் பெயரைப் பெறுதற்குப் புட்களின் பெண்பால்களும் உரியனவாம்.

**‘பேடை’, ‘பெடை’**

‘**பேடை**’ என்னுஞ் சொல்லும், ‘**பெடை**’ என்னுஞ் சொல்லும் ஆராயுமிடத்துப் பெட்டை யென்பதனொடு பொருந்தும். (இவை பெரும்பாலும் பறவைக்கே வரும்)

**‘அளகு’**

**கோழி கூகை யாயிரண் டல்லவை**

**சூழுங் காலை அளகெனல் அமையா.**

கோழி கூகை ஆகிய இரண்டைத் தவிர, மற்றவை ஆராயுமிடத்து ‘**அளகு**’ என்று கூறப்பெறா.

**அப்பெயர்க் கிழமை மயிற்கும் உரித்தே**

‘**அளகு**’ என்னும் பெண்பாற் பெயரைப் பெறும் உரிமை மயிலுக்கும் உண்டு.

**‘பிணை’**

**புல்வாய் நவ்வி உழையே கவரி**

**சொல்வாய் நாடிற் பிணையெனப் படுமே**

புல்வாய், நவ்வி, உழை, கவரி என்னும் நான்கிற்கும் பெண்பாலிடத்திலே ‘**பிணை**’ என்னும் பெயர் வழங்கும்.

**‘பிணவு’**

**பன்றி புல்வாய் நாயென மூன்றும்**

**ஒன்றிய என்ப பிணவென் பெயர்க் கொடை.**

பன்றி, புல்வாய். நாய் ஆகிய மூன்றின் பெண்பாலும் '**பிணவு**' என்னும் பெயரைப் பெறும்.

**'பிணவல்'**

**பிணவல் எனினும் அவற்றின் மேற்றே**

'**பிணவல்**' என்று கூறினாலும், மேற்கூறப்பட்ட வகைகளின் பெண் மேலேயே செல்லும்.

**'ஆ'**

**பெற்றமும் எருமையும் மரையும் ஆவே.**

'**ஆ**' என்னும் பெண் பெயரைப் பெற்றம், எருமை, மரை என்னும் மூன்றும் பெறும்.

**'பெண்', 'பிணவு'**

**பெண்ணும் பிணவும் மக்கட் குரிய.**

'**பெண்**' என்னும் பெயரும் '**பிணவு**' என்னும் பெயரும் மக்களின் பெண்பாற்கு உரியவாம். '**பிணா**' என்பது பாட பேதம்.

**'நாகு'**

**எருமையும் மரையும் பெற்றமும் நாகே.**

எருமை முதலாகச் சொல்லப்பட்ட மூன்றிற்கும் '**நாகு**' என்னும் பெண்பாற் பெயர் உரியதாம்.

**நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே**

நீர்வாழ் சாதியுள் நந்தும், '**நாகு**' என்னும் பெண்பாற் பெயரைப் பெறும்.

**'மூடு', 'கடமை'**

**மூடுங் கடமையும் யாடல பெறா அ.**

'**மூடு**', '**கடமை**' என்னும் பெயர்களை ஆட்டின் பெண் பாலை யொழித்த ஏனைய விலங்குகள் பெறமாட்டா.

**'பாட்டி'**

**பாட்டி என்பது பன்றியும் நாயும்.**

'**பாட்டி**' என்னும் பெயர் பன்றியினதூஉம் நாயினதூஉம் பெண் பெயராகும்.

**நரியும் அற்றே நாடினர் கொளினே.**

பெண் நரியும், '**பாட்டி**' என்னும் பெயரைப் பெறும்.

**'மந்தி'**

**குரங்கும் முசுவும் ஊகமும் மந்தி**

குரங்கு, முசு, ஊகம், இவற்றின் பெண் பெயர் '**மந்தி**' யாகும்.

**மருவிய சில வழக்குகள்**

**குரங்கின் ஏற்றைக் கடுவன் என்றலும்**
**மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்**
**செவ்வாய்க் கிள்ளையைத் தத்தை என்றலும்**
**வெவ்வாய் பெருகினைப் பூசை என்றலும்**
**குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்**
**இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்**

**எருமை ஆணினைக் கண்டி என்றலும்**

**முடி யவந்த வழக்கின் உண்மையில்**

**கடிய லாகா கடனறிந் தோர்க்கே.**

குரங்கின் ஆணைக் '**கடுவன்**' எனவும், மரத்தில் வாழுங் கூகையைக் '**கோட்டான்**' எனவும், சிவந்த வாயினையுடைய கிளியைத் '**தத்தை**' எனவும், வெவ்விய வாயினையுடைய பூனையைப் '**பூசை**' எனவும், ஆண் குதிரையைச் '**சேவல்**' எனவும், கருநிறப் பன்றியை '**ஏனம்**' எனவும், ஆண் எருமையைக் '**கண்டி**' எனவும், முடிவாகக் கூறப்பட்ட உலகவழக்குச் சொற்கள் இருப்பதால், கடமையை உணர்ந்தவர்கள் இவைகளையும் விலக்கமாட்டார்கள்.

**முடிபு**

**பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே,**

பெண் ஆண் பிள்ளை என்பவைகளைப் பொருந்துமிடத்திற்குத் தக்கவாறு ஏற்றுக் கொள்க.

**அந்தணர்க்கு உரியவை**

**நூலே கரகம் முக்கோல் மணையே**

**ஆயுங் காலை அந்தணர்க் குரிய.**

நூல், கரகம், முக்கோல், மணை என்பவை, ஆராயுமிடத்து அந்தணர்க்கு உரியவையாம்.

**அரசர்க்கு உரியவை**

**படையுங் கொடியுங் குடியும் முரசும்**

**நடைநவில் புரவியும் களிறுந் தேரும்**

**தாரும் முடியும் நேர்வன பிறவும்**

**தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய.**

படை, கொடி, குடி, முரசு, குதிரை, களிறு, தேர், தார், முடி ஆகிய ஒன்பதும் ஆராயுமிடத்துச் செங்கோலையுடைய அரசர்க்கு உரியவைகளாம்.

**அந்தணர்க்குரியனவும் அரசர்க்குரியன**

**அந்த ணாளர்க் குரியவும் அரசர்க்கு**

**ஒன்றிய வரூஉம் பொருளுமா ருளவே.**

அந்தணாளர்களுக்கு உரியவென மேல் ஓதப்பட்டவற்றுள் முந்நூலும் மணையும் போல்வனவாக அரசர்களுக்கும் உரியவாகி வருகின்ற பொருள்களும் உள்ளன.

**அரசர்க்குரியன அந்தணர்க்கும்**

**பரிசில் பாடாண் திணைத்துறைக் கிழமைப் பெயர்**

**நெடுந்தகை செம்மல் என்றிவை பிறவும்**

**பொருந்தச் சொல்லுதல் அவர்க்குரித் தன்றே.**

பரிசில் கடாநிலையும் பரிசில் விடையும் போல்வன பாடாண் திணைக்குரிய கைக்கிளைப் பொருள் பற்றியும், கொடைத்தொழில் பற்றியும் பெறும் பெயர், நெடுந்தகை '**செல்வம்**' என்றாற் போன்றனவும் பிறவும் பொருந்தச் சொல்லுதல் அந்தணர்க்கும் உரித்தாம்.

**ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும்**

**யாருஞ் சார்த்தி அவைஅவை பெறுமே**

நகரும், தமது இயற்பெயரும் சிறப்புப் பெயரும், தத்தம் தொழிற்கேற்ற கருவியும், எல்லாரையுஞ் சார்த்தி அவையவை வருதல் பெறும்.

**தலைமைக் குணச்சொலும் தத்தமக் குரியதோர்**

**நிலைமைக் கேற்ப நிகழ்த்துப வென்ப.**

தலைமைக் குணம் உரையராகக் கூறுதலும், த்தமக்கேற்ற நிலைமைக்குப் பொருந்துமாறு நிகழ்த்துப என்று கூறுவார்கள்.

**இடையிரு வகையோர் அல்லது நாடில்**

**படைவகை பெறா அர் என்மனார் புலவர்.**

அரசரும் வணிகரும் அல்லாதோர்க்குப் படைக்கல வகை கூறப்பெறா.

**வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை**

வைசிகன் வாணிகத்தினாலே வாழும் வாழ்க்கையைப் பெறுவான்.

**மெய்திரி வகையின் எண்வகை உணவின்**

**செய்தி வரையார் அப்பா லான.**

பொருள் தெரிந்த வகையால் எண்வகைக் கூலமுஞ் செய்து விளைத்தலும் இவர் கடன் ஆம். எண்வகை உணவானவன; நெல்லு, காணம், வரகு, சிறுங்கு, தினை, சாமை, புல்லு, கோதுமை.

**கண்ணியும் தாரும் எண்ணினர் ஆண்டே.**

வைசிகருக்குக் கண்ணியுந் தாரும் சொல்லப்பெறும்.

**வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது**

**இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.**

வேளாளர்கட்கு உழுதூண் வாழ்க்கை அல்லது பிறவகையான வாழ்க்கை இல்லை என்று சொல்லுவர்.

**வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்**

**வாய்ந்தன ரென்ப வவர்பெறும் பொருளே.**

வேந்தரால் ஏவப்பட்ட தொழிலினானே படையுங் கண்ணியும் வேளாண் மாந்தர்க்கும் உரியவாகும்.

**அந்த ணாளர்க் கரசுவரை வின்றே.**

அந்தணாளர் அரசியல் பூண்டொழுகலும் விலக்கப்படாது; அ∴தாவது மந்திரி புரோகிதனாகியவழிக் கொடியும் குடையும் கவரியும் தாரும் முதலியன அரசராற்பெற்று, அவரோடு ஒருதந்மையராக இருத்தல்.

**வில்லும் வேலும் கழலும் கண்ணியும்**

**தாரும் ஆரமும் தேரும் மாவும்**

**மன்பெறு மரபின் ஏனோர்க்கு முரிய.**

வில், வேல், கழல், கண்ணி, தார், மாலை, தேர், மா என்று சொல்லப்பட்டன எல்லாம், மன்னாற் பெற்ற மரபினால் வணிகர்க்கும் வேளாளர்கட்கும் உரியனவாம்.

**அன்ன ராயினும் இழிந்தோர்க் கில்லை.**

அவர் அத்தகைய மரபுடையோர் ஆனாலும், அவர்களுள்ளும் இழிந்த நிலையினோர்க்கு அத் தகுதிகள் இல்லையாகும்.

**புறக்கா ழனவே புல்லெனப் படுமே.**

புறவயிர்ப்பு உடையனவற்றைப் புல்லென்று சொல்லுவர்; அவை தெங்கு, பனை, கமுகு, மூங்கில் முதலாயின.

**அகக்கா ழனவே மரனெனப் படுமே.**

உள்ளுறுதி உடையன மரமென்று கூறப்பெறும்.

தோழி முதலிய வாயில்களாவாரைத் தலைமகன் மாட்டுத் தூதாக அனுப்பியவிடத்தும், முற்சொல்லப்பட்ட அச்சமாகிய பண்பு நிகழும் என்று சொல்லுவர் புலவர்.

**தோழி கூற்று**

**பெறற்கரும் பெரும்பொருள் முடிந்தபின் வந்த**
**தெறற்கரு மரபிற் சிறப்பின் கண்ணும்**
**அற்றமழி வுரைப்பினும் அற்றம் இல்லாக்**
**கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்தினும்**
**சீருடைப் பெரும்பொருள் வைத்தவழி மறப்பினும்**
**அடங்கா ஒழுக்கத் தவன்வயின் அழிந்தோளை**
**அடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்**
**பிழைத்துவந் திருந்த கிழவனை நெருங்கி**
**இழைத்தாங் காக்கிக் கொடுத்தற் கண்ணும்...**

பெறுதற்கு இயலாத பெரும்பொருளை ஈட்டி வந்துள்ள தலைமகனை வெறுத்து நோக்காத வழக்கு ஏதுவாகச் சிறப்பித்துக் கூறுமிடத்தும்; முன்பு அனுபவித்து வாராநின்ற வருத்தம் நீக்கினமையைக் கூறுமிடத்தும்; குற்றமில்லாத் தலைமகன் நலன் கருதித் தெய்வக்கடன் புரியுமிடத்தும்; சிறப்புடைய இற்கிழமையினிடத்துத் தலைமகளை மறந்து பிறிதொன்றன் மாட்டுத் தாழ்ந்தொழுகும் தலைமகன் நிலையினிடத்தும்; தலைமகனது பெருமையிற் பிறழ்ந்த ஒழுக்கத்தின் காரணமாக உளமழிந்த தலைவியின்மாட்டு அவள்தன் பெருமை கூறுமுகத்தான் ஆற்ற உரைத்தற்கண்ணும்; பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டு சென்றுவந்த தலைமகனை நெருங்கித், தலைவியைத் தலையளி செய்யும் கடப்பாட்டை உணர்த்தித், தலைவியைத் தலைமகற்கு அளித்தற்கண்ணும்;

**வணங்கியல் மொழியின் வணங்கற் கண்ணும்**
**புறம்படு விளையாட்டுப் புல்லய புகர்ச்சியும்**
**சிறந்த புதல்வனைத் தேராது புலம்பினும்**
**மாணலந் தாவென வகுத்தற் கண்ணும்**
**பேணா ஒழுக்கம் நாணிய பொருளினும்**
**சூள்வயின் திறத்தால் சோர்வுகண் டழியினும்**
**காமக் கிழத்தி நலம்பா ராட்டிய**
**தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்**
**கொடுமை ஒழுக்கத்துத் தோழிக் குரியவை**
**வடுவறு சிறப்பிற் கற்பியல் திரியாமைக்**
**காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்**

**ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்**
**வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇக்**
**கிழவோள் செப்பல் கிழவ தென்ப.**

பரத்தையரால் அணியப்பெற்ற நல்ல அணிகளையுடைய தன் புதல்வனைக் கண்டு, மயக்குதல்வல்ல பரத்தையரின் செயலைக் குறிப்பிட்டவிடத்தும்; தன் மாட்டு உளதாகிய மேம்பாட்டினாலும், தலைவன் மாட்டுளதாகிய தகைப்பாட்டின்மையானும், முன்னர்க் கூறிய சூளுறவினைக் கூறுமிடத்தும்; காமக்கிழத்தியின் நலத்தினைப் பாராட்டித் தன்னை இழித்துக் கூறுக்கொள்ளுமிடத்தும்; தலைமகனது கொடுமை நிறைந்த ஒழுக்கத்தைத் தோழிக்குக் கூறுதற்குரியவாற்றைக் குற்றமற்ற சிறப்பினையுடைய கற்பில் மாறுபடாது தலைவனை வெறுத்துக் கூறலும், மகிழ்ந்து கூறலும், புலந்து விலக்கி ஒழுகுதலும், தழீஇக் கொள்ளுதலும் முதலியனவாக அவ்விடத்து வேறுபட்டு வருவனவாகிய பல நிகழ்ச்சிகளிடத்தும், வாயில்களாவாரிடத்து வரும் சொல் நிகழ்ச்சி உளப்பட, இன்ன பிற இடங்களில், தலைவிக்குக் கூற்று நிகழும் என்பர்.

**புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்து**
**இடைச்சுரத் திறைச்சியும் வினையுஞ் சுட்டி**
**அன்புறு தக்க கிளத்தல் தானே**
**கிழவோன் செய்வினைக்கு அச்ச மாகும்.**

களவுக் காலத்துக் தலைவனுடன் சேர்ந்து உடன் போக்குப் போகிய தலைமகள், கற்புக்காலத்து வீட்டின்கண் இருந்து கொண்டு, ‘தான் முன்னர்ப் பாலைவழியில் தலைவனுடன் கண்ட கருப்பொருள் முதலியவற்றையும், அவற்றின் தொழிலையும் குறித்துத் தலைவன் இன்புறுதற்குத் தக்கவற்றைக் கூறுதலே, தலைமகன் செய்யும் தொழிலுக்கு அஞ்சும் அச்சமாகும். எனவே, புணர்ந்துடன் போகாத தலைவி, அங்ஙனமிருந்து கூறுதல் தலைவனுக்கு அச்சமாகாது என்க.

**தோழியுள் உறுத்த வாயில் புகுப்பினும்**
**ஆவயின் நிகழும் என்மனார் புலவர்**

**புலவகையின் உறுப்புகள்**

**தோடே மடலே ஓலை என்றா**
**ஏடே இதழே பாளை என்றா**
**ஈர்க்கே குலையே சேந்தன பிறவும்**
**புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்.**

தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை என்பனவும், பிறவும், புறக்காழனவாகிய புல்லின்கண் பொருந்திய உறுப்புக்களாகும். எனவே, இருவகை வயிர்ப்பு மில்லாதன ஒருவாரண இவ்வகைப்பட்ட உறுப்புப் பெயருடையனவாகி, இவையும் புல்லெனப்படும். அவை வாழை, ஈந்து, தாமரை, கழுவநீர் என்னுந் தொடக்கத்தன.

**மாவகையின் உறுப்புகள்**

**இலையே முறியே தளிரே தோடே**
**சினையே குழையே பூவே அரும்பே**
**நனையே உள்ளுறுத் தனையவை யெல்லாம்**

**மரனொடு வரூஉம் கிளவி யென்ப.**

இலை, முறி, தளிர், தோடு, சினை, குழை, பூ, அரும்பு, நனை என்று கூறப்படுவை எல்லாம், மரத்தின்கண் வரும் உறுப்புச் சொற்களாம். இருவகை வயிர்ப்பும் இல்லாதனவற்றுள் இவ்வுறுப்புப் பெயர் பெறுவன ஒருவசாரன மரமெனப்படும் அவை முருக்கு தணக்கு முதலாயின.

**இரண்டிற்கும் பொது**

**காயே பழமே தோலே செதிளே**

**வீழோ டென்றாங் கவையு மன்ன.**

காய், பழம், தோல், செதிள், வீழ் என்பன மேற்கூறிய இருவகைக்கும் பொதுவாக வரும்.

**முடிபு**

**நிலம் தீ நீர்வளி விசும்போ டைந்தும்**

**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்**

**திரிவில் சொல்லொடு தழா அல் வேண்டும்.**

உலகு, நிலம் முதலாகிய ஐம்பெரும் பூதங்கலந்த மயக்கமாதலான், மேற்கூறப்பட்ட பொருள்களைத் திணையும் பாலும் வழுவுதலில்லாமல். திரிவுபடாத சொல்லோடே தழுவுதல் வேண்டும்.

**நூலின் மரபு**

**மரபின் முதன்மை**

**மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை**

**மரபுவழிப் பட்ட சொல்லி னான.**

மரபு வழிப்பட்ட சொல்லினாலேயே செய்யுள் செய்ய வேண்டுதலின், ஈண்டுச் சொல்லப்பட்ட மரபு நிலையில் திரிதல் செய்யுட்கில்லை.

**மரபுநிலை திரியின் பிறிதுபிறி தாகும்.**

மரபு நிலை மாறுபட்டு வரின் பொருள் வேறுவேறாகும்; எனவே அது வழுவாம்.

**மரபு தோன்றும் முறைமை**

**வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே**

**நிகழ்ச்சி அவர்கட் டாக லான.**

**'வழக்கென்று'** சொல்லப்பட்டது உயர்ந்தோர் மேலது; நூலின் நிகழ்ச்சி அவர்களிடத்ததாகலான்.

**அவற்றுள், இருவகை**

**மரபுநிலை திரியா மாட்சிய வாகி**

**உரைபடு நூல்தாம் இருவகை நிலைய**

**முதலும் வழியுமென நுதலிய நெறியின.**

வழிமுறையில் மாறுபடாத பெருமையினை உடையனவாய் உரைக்கப்பெறும் நூல்கள் இருவகை நிலைப்படும்; அவை முதலும் வழியும் என்று கூறப்பட்ட நெறியை உடையனவாம். சார்பு நூலும் இருவராசிரியர் கூறியதற்கு உடம்பட்டு வருதலின் வழிநூலாகும். **'எதிர்நூல்'** முனைவனாற் செய்யப்படின் முதல் நூலாகும்; பிறர் செய்யின் வழங்காது.

**முதனூல் இயல்பு**

**வினையின் நீங்கி விளங்கிய அறிவின்**

**முனைவன் கண்டது முதனூ லாகும்.**

இருவகை வினைகளின் நின்றும் நீங்கி விளக்கம் பெற்ற அறிவினையுடைய சான்றோன் செய்தது '**முதல்நூல்**' என்று கூறப்பெறும்.

**வழி நூல் இயல்பு**

**வழியெனப் படுவது அதன் வழித்தாகும்.**

'**வழி நூல்**' என்று கூறப்படுவது முனைவன் செய்த முதல் நூலின் வழியே, அதனை ஒட்டிச் செய்யப்படுவதாகும்.

**வழி நூலின் வகை**

**வழியின் நெறியே நால்வகைத் தாகும்.**

**தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்**

**ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே.**

முதல்நூல் ஆசிரியன் விரித்துச் செய்ததைத் தொகத்துச் செய்தலும்; அவன் தொகுத்துச் செய்ததை விரித்துச் செய்தலும்; அவ்விரு வகையினையும் தொகை விரியாகச் சொல்லுதலும்; பிறமொழி நூலை மொழிபெயர்த்துத் தமிழினாற் செய்தலும் என வழி நூல் நான்கு வகையாம்.

**பொதுவாக, நூலின் இயல்பு**

**ஒத்த சூத்திரம் உரைப்பிற் காண்டிகை**

**மெய்ப்படக் கிளந்த வகைய தாகி**

**ஈரைங் குற்றமும் இன்றி நேரிதின்**

**முப்பத் திருவகை உத்தியொடு புணரின்**

**நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்.**

ஒத்த சூத்திரத்தானும் காண்டிகையானும் பொருள் மேற்கூறிய வகையுடையதாகிப், பத்துக் குற்றமும் இல்லாமல், நுட்பமாகிய முப்பத்திரண்டு வகைப்பட்ட தந்திர உத்தியோடு பொருந்துமாயின், நுட்பமான அறிவினையுடைய புலவர். அதனை நூலென்று கூறுவர்.

**உரையெடுத் ததன்முன் யாப்பினுஞ் சூத்திரம்**

**புரைதப உடன்படக் காண்டிகை புணர்ப்பினம்**

**விதித்தலும் விலக்கலும் எனவிரு வகையொடு**

**புணர்ந்தவை நாடிப் புணர்க்கவும் பெறுமே.**

சூத்திரத்தின் முன்னர் உரையை விரித்துரைக்கு மிடத்தில் சூத்திரம் பொருள் விங்கக் காண்டிகை புணர்க்குமிடத்தும், ஆசிரியன் இப்பொருள் இவ்வாறு கூறுதல் வேண்டுமென வித்தலும், இப்பொருள் இவ்வாறு கூறுப்பெறாதென விலக்கலுமாகிய இருவகையோடு பொருந்தின வகையை ஆராய்ந்து சேர்க்கப்பெறும்.

**நூலின் சூத்திரம்**

**மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு**

**சில்வகை யெழுத்தின் செய்யுட் டாகிச்**

**சொல்லுங் காலை உரையகத் தடக்கி**

**நுண்மையொடு புணர்ந்த வொண்மைத் தாகித்**

**துளக்க லாகாத் துணைமை யெய்தி**

**அள்ள லாகா அரும்பொருட் டாகிப்**

**பல்வகை யானும் பயன்தெரி புடையது**

**சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்.**

மேல் தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழி பெயர்த்து நன்றாக அமைத்தல் என நால்வகையினோடும் சொல்லப்பட்ட பொருளோடு, சிலவெழுத்தினால் இயன்ற செய்யுளாகி, உரைக்குங் காலத்து அவ்வுரையிற் பொருளெல்லாம் தன்னகத்துட்கொண்டு, நுட்பமாகிய பொருட்டன்மையோடு பொருந்திய விளக்கமுடையதாகியும், கெடுக்க முடியாத துணைச் சூத்திரங்களை உடையதாகியம், வரையறுக்கப்படாத அரிய பொருளையுடையதாகியும் பல வகையானும் பயனைத் தருவது சூத்திரத்தின் தன்மையாகும் என்று புலவர் கூறினர்.

**காண்டிகை**

**பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பில்**

**கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்.**

குற்றமில்லாத சூத்திரஞ் சொன்ன முறையோடு சூத்திரப் பொருளை மறைப்பில்லாமல் விளக்கிக் கூறுவது காண்டிகை உரையாம்.

**விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்**

**சுட்டிய சூத்திரம் முடித்தற் பொருட்டா**

**ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்**

**மேவாங் கமைந்த மெய்நெறித் ததுவே.**

சூத்திரத்திலே படுகின்ற சொற்பொருளினை விட்டு விலகுதல் இல்லாமல், விரிவுடனே பொருந்திக், குறித்த சூத்திரம் முடித்தற்காக ஏதுநெறியானும் எடுத்துக் காட்டினாலும் பொருந்தியபடியாக அமைகின்ற பொருள் நெறியினை ஊடையது காண்டிகை என்பர்.

**உரை**

**சூத்திரத் துட்பொருள் அன்றியும் யாப்புற**

**இன்றி யமையா தியைபவை எல்லாம்**

**ஒன்ற உரைப்பது உரையெனப் படுமே.**

சூத்திரத்து உட்பொருள் அல்லாமலும், அந்நூலினிடத்து யாப்பிற்குப் பொறுந்த இன்றியமையாதன எல்லாம் கொணர்ந்து பொருந்துமாறு உரைப்பது உரையாகும் என்பர்.

**மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்**

**தன்னூ லானம் முடிந்தநூலானும்**

**ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்**

**தெற்றென பொருபொருள் ஒற்றுமை கொளீஇத்**

**துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்.**

மறுதலைக் கேள்வியும் மறுமொழியும் உடையதாய், ஐயப்படல் மருண்டு நிற்றல் ஆகியவைகளை நீக்கித், தன் நூலினாலாவது பிறநூலினாலாவது தெளிவாக ஒரு பொருளை ஒப்புடைப்படுத்தி, இதுவே இதற்கு முடியென்று நிற்றல் உரைக்கியல்பாம் என்று புலவர் உரைப்பர்.

**சொல்லப் பட்டன எல்லா மாண்பும்**

**மறுதலை யாயின் மற்றது சிதைவே.**

மேற் கூறப்பட்ட உரையிலக்கணம் முதலியன நன்கு அமைந்திருப்பினும், முதல் நூலோடு மாறுபடின், அதனால் எல்லாச் சிறப்பும் அழிந்து போகும்.

**சிதைவில என்ப முதல்வன் கண்ணே.**

முதல்வன் இயற்றிய முதனூலாதலின், அந்நூற்கண் அழிவு ஏற்படமாட்டாது.

**வழி நூலிற் குறைநேரும் வகை**

**முதல்வழி யாயினும் யாப்பினுட் சிதையும்**

**வல்லோன் புனையா வாரம் போன்றே.**

ஒருவன்; முதனூல் வழியாகவே நூல் செய்யினும், அறிவு மிக்கோன் செய்யாத கூறுபாட்டினைப் போன்று, அந்நூலும் யாப்பினுள்ளே சிதைவுறுதல் கூடும்.

**நூற் குற்றங்கள்**

**சிதைவெனப் படுபவை வசையற நாடில்**

**கூறியது கூறல் மாறுகொளக் கூறல்**

**குன்றக் கூறல் மிகைபடக் கூறல்**

**பொருளில கூறல் மயங்கக் கூறல்**

**கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்**

**பழித்த மொழியான் இழுக்கக் கூறல்**

**தன்னா னொருபொருள் கருதிக் கூறல்**

**என்ன வகையினும் மனங்கோ ளின்மை**

**அன்ன பிறவும் அவற்றுவிரி யாகும்.**

சிதைவென்று மேற்கூறப்பட்டன யாவையென்று குற்றமற ஆராய்ந்து பார்க்கில், சொன்னதைச் சொல்லுதல், முன் சொன்னதற்கு மாறுபாடாகக் கூறுதல், குறைவாகச் சொல்லுதல், மிகுதியாகச் சொல்லுதல், பொருளில்லாதவைகளைக் கூறுதல். மயக்க உணர்வு ஏற்படும்படியாகக் கூறுதல், கேட்போர்க்குத் துன்பம் தரும்படியான தன்மையில் அமைதல் பழிக்கப்பட்ட சொற்களோடு தாழ்வுண்டாகுமாறு கூறுதல், தானே ஒரு பொருளை எண்ணிக் கூறுதல், எவ்வகைப் பொருளையும் உறுதியாகப் பற்றாது உணர்த்தல் ஆகிய இவைகளும், இத்தன்மையவாகிய பிறவுமாம்.

**எதிர்மறுத் துணரின் அத் திறத்தவும் அவையே.**

எதிர்மறுத்து உணர்வாராயின், அத் திறத்தவும் குற்றமாம் என்க.

**நூலின் உத்திகள்**

**ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்**

**நுதலிய தறிதல் அதிகார முறையே**

**தொகுத்துக் கூறல் வகுத்து மெய்ந் நிறுத்தல்**

**மொழிந்த பொருளோ டென்ற வைத்தல்**

**மொழியா ததனை முட்டின்றி முடித்தல்**

**வாரா ததனான் வந்தது முடித்தல்**

**வந்தது கொண்டு வாராதது முடித்தல்**

**முந்து மொழிந்ததன் தலைதடு மாற்றே**
**ஒப்பக் கூறல் ஒருதலை மொழியே**
**தந்துபுணாந் துரைத்தல் ஞாபகம் கூறல்**
**உய்த்துக் கொண் டுணர்தலொடு மெய்ப்பட நாடிச்**
**சொல்லிய வகையால் சுருங்க நாடி**
**மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்து கொண்டு**
**இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்.**

ஒத்த அழகு பொருந்திய உத்திவகையை விரித்துக் கூறத் தொடங்கினால், கூறிய பொருளை அறிதல்; அதிகார முறை தொகுத்துக் கூறுதல்; தொகைபடக் கூறிய பொருளை வகைப்படக் கூறல்; சொன்ன பொருளோடு பொருந்துமாறு கூறுதல்; சொல்லப்படாத பொருளும் உரையில் அமையுமாறு நிறுத்தல்;

வாராததற்கு ஓதிய இலக்கணத்தை வந்ததுகொண்டு முடித்தல்; வந்தது கொண்டு வாராததை உணர்த்தல்; முற்பட அதிகரித்த பொருளை அவ்வகையினாற் கூறாது முறைபிறழக் கூறுதல்; ஒரு பொருளெடுத்து இலக்கணங் கூறிய விடத்து அதுபோல்வனவற்றை இலக்கணத்தால் கூறி முடித்தல்; உறுதிபெறச் சொல்லுதல்; தன்னுடைய கொள்கையைக் கூறுதல்; கூறவேண்டிய முறையில் தவறாமை;

பிறர் ஒத்துக் கொண்டதைத் தானும் ஒத்துக்கொள்ளுதல் கூறப்பட்ட சூத்திரத்தால் கூறப்படாத பொருளைக் காத்தல்; முன் கூறப்பட்ட சூத்திரத்தினால் வருகின்ற சூத்திரத்தின் பொருளையும் பாதுகாத்தல்; மேலே கூறுவோம் என்பது தோன்றக் கூறாது விடுதல்; முன் கூறியதைப் பிறகு கூறாது விடுதல்; தானே பெயரமைத்தல்; ஒருதலைப் பக்கமாகக் கூறாமை; கூறப்பட்ட இலக்கணத்தை எடுத்துக் காட்டுதல்; தான் உறுதியாகச் சொல்லுதல்;

ஒரு சூத்திரம் பல பொருட்கு ஏற்குமாயின், அவற்றுள் நல்லதனைப் பொருளாகக் கொள்ளுதல்; தொகுத்துச் சுட்டிய மொழியால் வகுத்துக் கொள்ளுதல் மற்றவர்கள் கூற்றை மறுத்துத் தன்னுடைய முடிபை உரைத்தல்; பிறனுடைய கொள்கையைச் சொல்லுதல்; தானறியாதவைகைளைப் பிறர் கூறியிருந்தால் உடம்பட்டுக் கொள்ளுதல்; பொருளைச் சேரக் கூறாது இடையீடுபடக் கூறுதல் இனி மேற்கூற வேண்டுவது இதுவென உணர்த்தல்;

சொல்லப்பட்ட எச்சங்களைக் கண்டு சொல்லியவற்றாற் பொருள் கொள்ளுதல்; முன்னாவது பின்னாவது நின்ற சூதர்திரத்தின் சொல்லை இடைநின்ற சூத்திரத்தினுங் கொணர்ந்து சேர்த்தல்; இரட்டுற மொழிந்து இரண்டு சொல்லுக்கம் பொருள் கொள்ளுதல்; பொருந்தாமை உளவாகத் தோன்றின் பொருந்துமாறு விசாரித்து உணர்த்தல்;

ஆகியவைகளோடு உண்மைபெற ஆராய்ந்து சொல்லாத பிறபொருள் அங்கு வந்தாலும், சொல்லிய வகையால் சுருங்குமாறு செய்து, உள்ளத்தில் எண்ணிக் குற்றமறத் தெரிந்துகொண்டு, சொல்லிய இனத்தோடு சேர்த்து, நுண்ணுணர்வினையுடைய புலவர்கள் தங்களுடைய நூலினைச் செய்து உணர்த்துதல் வேண்டும், இவையே உத்திவகைகள் ஆம்.

## வினாக்கள்

1. மரபியியல் என்றால் என்ன?
2. மக்கள் தாமே ஆறறி வுயிரே சிறு குறிப்பு வரைக
3. முதல் நூல், வழி நூல் என்றால் என்ன
4. நூலின் இயல்புகள் யாவை?
5. நூற்குற்றங்களாக தொல்காப்பியர் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.
6. நூற்சூத்திரம் என்பது யாது?
7. தொல்காப்பியர் மரபியியல் குறித்து கூறும் செய்திகளை தொகுத்து கட்டுரை வரைக.

## B.Lit I Year Examination

## இலக்கணம் - 6 - தொல்காப்பியம்

**Time : Three Hours** **Maximum : 80 Marks**

### பகுதி அ - (5 x 4 = 20 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.**

1. முற்படக் கிளந்த எழுதிணை என்ப விளக்கம் தருக.
2. பிரிவின் வகைகளாக தொல்காப்பியர் கூறுவன யாவை?
3. களவியலில் வாயில்களின் பங்கை எழுதுக.
4. "மறையோர் தேயத்து மன்றல் எட்ட னுல்" - குறிப்பு வரைக.
5. கற்பில் செவிலிக் கூற்றினைப் புலப்படுத்துக.
6. செய்யுளின் உறுப்புக்கள் யாவை?
7. உவமப் போலி என்றால் என்ன? விளக்கம் தருக.
8. நூலின் இயல்புகள் யாவை?

### பகுதி ஆ - (5 x 12 = 60 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்தனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.**

1. தொல்காப்பியர் கூறும் முதல் கரு உரிப்பொருள்கள் குறித்து கட்டுரை வரைக.
2. களவியிலில் தோழிக் கூற்றினை விவரிக்க.
3. கற்பியிலில் அகமாந்தர்களின் மரபாக தொல்காப்பியர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.
4. வண்ணம் குறித்து செய்யுலியல் கூறும் கருத்துக்களை எடுத்துரைக்க.
5. செய்யுலியலில் வெண்பாவின் இலக்கணம் கூறி விளக்குக.
6. எண்வகை மெய்பாடுகள் குறித்து தொல்காப்பியர் கூறும் செய்திகளை விளக்கி வரைக.
7. உவம உருபுகளாக தொல்காப்பியம் பொருளாதிகாரம் கூறும் கருத்துக்களைப் புலப்படுத்துக.
8. மரபியியலில் இடம் செய்திகளை தொல்காப்பியம் வழி நின்று விளக்குக.